www.padippakam.com

புதிய
செப்டம்பர்
2004
ரூ.15

# கோடாங்கி



## யானைகள் எங்கள் மூதாதையர்

- மலை மக்கள்

- தனியார்துறை - வளங்கள் பொதுவில் வை
- மத்திய பட்ஜெட் - ஓர் அலசல்
- பூனா ஒப்பந்தம் ஒழிய வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com

# புதிய கோடாங்கி வாசகர் வட்டம்

திருச்சியை அடுத்துள்ள பெரம்பலூரில் கோடாங்கி வாசகர்கள் மற்றும் ஆர்வலர்கள் 18.8.2004 அன்று புதிய கோடாங்கியின் விழிப்புணர்ச்சி முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தினர். நிகழ்ச்சியின் உருவாக்கப் பணியை புதிய கோடாங்கியின் வாசகர்கள் செய்திருந்தனர். பார்வையாளராக அமெரிக்க மாணவர் ஒருவரும், மாணவி ஒருவரும் வந்திருந்தனர்.

வழக்கமான நிகழ்வு போலவே, பகுதியைச் சேர்ந்தவர்கள் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி பட்டியல் தயாரித்தனர். கோமதி நாயகம் அய்யா அவர்கள் தலைமை தாங்கினார். தன்னுடைய தலைமை உரையில், தான் முதன் முதலாக கோடாங்கிக்கு எழுதி அனுப்பியிருந்த கட்டுரையான திராவிட மாயையை சிறிதும் தணிக்கையோ, வெட்டோ செய்யாமல் முழுமையாக வெளியிட்ட எழுத்தாளர் சிவகாமி அவர்களைப் பாராட்டினார். மற்றவர்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கும் அவரை மனமாரப் பாராட்டுவதாகத் தெரிவித்தார். 'நான் பல பத்திரிக்கைக்கு கட்டுரை அனுப்பியிருக்கிறேன். அப்பத்திரிக்கைகள் தங்களுக்குச் சாதகமாக செய்திகளை மட்டுமே எடுத்துக் கொண்டு, தங்கள் கருத்துக்கு மாறான கருத்துக்களை பிரசுரிப்பதில்லை. ஆனால் கோடாங்கிக்கு நான் அனுப்பிய கட்டுரையை ஒரு புள்ளி, ஒரு கமா கூட நீக்காமல் முழுமையாக பிரசுரித்திருந்தனர். நான் அவர்களின் ஜனநாயக உணர்வை பாராட்டுகிறேன்' எனக் குறிப்பிட்டார்.

பின்னர் வந்திருந்தவர்கள் தங்களை சிறு அறிமுகம் செய்து கொண்டனர். தலைவர் முதலில் குடியரசனை பேசுமாறு அழைத்தார்.

அவர் சாதியின் தோற்றமும் அதன் சிதைவும் என்ற தலைப்பில் பேசினார். அம்பேத்கர் களங்கள் பற்றி உணர்ச்சி பொங்கப் பேசினார். வர்ணம் சாதியானது, சாதி இன்றைக்கு இந்துமதமாக உள்ளது என்றார். அவரைத் தொடர்ந்து, ப்ரதிபா ஜெயச்சந்திரன் நிலம், வரி, சாமி பற்றி பேசினார். சாதி இந்துக்களுக்கு இன்றைய நிலம் நமது நிலம் என்று அதற்கான ஆதாரங்களை தொகுத்துத் தந்தார். நாம் வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றது உண்மையாக உள்ளபோது நிலம் மட்டும் எப்படி சாதி இந்துக்களிடம் தங்கியிருந்திருக்கும்? என்ற கொக்கி போட்டார். கூட்டத்தினர் ஆர்வத்துடன் அவர் உரையின் மீது வினாக்களை தூவினர். பதிலுக்கு நமது நிலம் பஞ்சமி நிலம் என்றும் அதன் துவக்கம் வெள்ளையர்கள் காலம் என்றும் விளக்கினார். ராபத்வாரி பற்றி விரிவாகப் பேசினார். சரவணன் உட்சாதி உணர்வுகள் மங்கும் என முடித்தார்.

தொடர்ந்து சிவகாமி பேசும்போது தனக்கு முன்னால் பேசியவர்களின் உரைகளை தெளிவாக்கி Point by point-ஆக வடிவம் தந்தார். Special Component Plan பற்றியும் அதன் மூலம் நாம் பெற வேண்டிய நலன்கள் பற்றியும் விவரித்தார். குறிப்பாக மாநில பட்ஜெட்டில் நமக்கு ஒதுக்க வேண்டிய ரூ. 1500 கோடிக்குப் பதில் வெறும் 300 கோடி மட்டுமே ஒதுக்கப்படுவதை தெரிவித்தார். நமக்கு மறுக்கப்படும் ரூ. 1500 கோடியை பெறுவதற்கான திட்டத்தினை தெளிவாக விவரித்தார்.

தலித்துகள் தமது முழுத்தேவையான அரசியல் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்வதிலிருந்து விலகி, தம்மில் உட்சாதி ரீதியாக, சிறுசிறு நலன்சார் குழுக்களாக, தேவையைச் சரியாக புரிந்து கொள்ளாமல் தமக்குள் முடிவெடுக்கும் செயலாக பிரிந்துள்ளனர். நம்முள் ஒற்றுமை உள்ளது. நாம் அனைவரும் அம்பேத்கரை ஏற்றுக் கொள்கிறோம். சாதி ஒழிய வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். தலித் விடுதலை என்பதில் மிகவும் முனைப்பாக உள்ளோம். இவ்வாறு இருக்கும்போது நம் முன்னேற்றம் ஏன் இவ்வளவு தூரம் தள்ளிப்போடப்படுகிறது?

காரணம், நாம் சாதி இந்துக்களை பல்வேறு வகைகளில் சார்ந்து இருப்பதுதான். நமக்கு தெளிவான விடுதலை என்பதை தளையறுத்தல் என்ற அப்னா பஞ்சாயத்தில் பிறகு விவரித்தார். (அப்னா பஞ்சாயத்து தனி நூலாக வெளிவந்துள்ளது)

மக்கள் 200 பேர் வரை ஆர்வமுடன் திரண்டிருந்தனர். மதிய உணவிற்குப் பின்னரும் மக்கள் அக்கறையுடன் நிகழ்வில் பங்கெடுத்தனர்.

அன்றைய மாலை அகவியின் 'சும்மாடு' என்ற கவிதை நூலை சிவகாமி அவர்கள் வெளியிட்டு சிறப்புரை ஆற்ற முகாமின் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

படிப்பகம்

www.padippakam.com

புதிய

கோடாங்கி

மலர் 4 - இதழ் 3
செப்டம்பர்- 2004

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு, உள் ஓவியங்கள்*
சந்ரு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்.- ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204
kodangi@hotmail.com



மத்திய கூட்டணி அரசு சப்தமில்லாமல் அடித்தள மக்களுக்கு பிரயோசனமில்லாத இடைக்கால பட்ஜெட்டை நிறைவேற்றியுள்ளது. தமிழக அரசோ பல வாபஸ் அறிக்கைகளை வெளியிட்டு ஓய்ந்துவிட்டது.

பத்திரிக்கைகள் சிபு சோரன் கைது - ராஜினாமாவை வெளியிட்டுக் கொண்டாடி, இப்போது உமாபாரதி கைது - ராஜினாமாவை கலர் போட்டோவுடன் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. பத்திரிக்கை உலகம் இத்தகைய பல்லுக்குப் பல், பழிக்குப்பழி செய்திகளால் நிரம்பிப் போயிருக்கிறது.

தமிழக அரசியலில், அதிமுக உள்ளே களையெடுப்பது போல் சிலரை வெளித் தள்ளி, சிலரைச் சேர்த்து இயக்கமற்ற, தேங்கிப் போயிருக்கும் தமது நிலைமையை மூடி மறைக்க நாடகம் நடத்துகின்றது. திமுக, நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கூட்டணிக்காரர்களைப் பகைத்துக் கொள்ளாது பிரம்மாண்டமான மாநாடுகள் நடத்துவது மூலம் செய்தியில் இருந்து வருகிறது. சமூக மாற்றத்துக்கான எந்தவித புதிய திட்டமும் இல்லாமல், மாநாட்டு அரசியல் நடத்திக் கொண்டு வருகிறது.

மதிமுக வைகோ, தனது நடைப்பயணமும், ஏற்கனவே அனுபவித்த சிறைவாசமும் தேர்தலுக்குப் பயன்படலாம் என்ற நம்பிக்கையில் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். நடைப் பயணத்தின் போது ஆற்றும் உரைகளில் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் பற்றியோ, பெரும்பான்மை மக்களின் பிரச்சினைகள் பற்றியோ உருப்படியாக இதுவரை எதுவும் வெளிப்படவில்லை.

ராமதாஸ் - திருமாவளவன் அவ்வப்போது செய்திகளில் அடிபடுகிறார்கள். மறப்பதும் - மன்னிப்பதும், அண்ணன் - தம்பி என்ற வார்த்தை உறவுகளும், தமிழ் மொழி வசனங்களும் என அமர்க்களப் படுத்துகிறார்கள். தலித்துகள் நிலைமை பற்றி ஒன்றும் தெரியவில்லை.

ஆக, அரசுகள், பத்திரிகைகள், அரசியல் கட்சிகள் சமூக மாற்றம் தவிர்த்த விதவிதமான வார்த்தையாடல்களிலும் வர்ணப் படங்களிலும், மாறிமாறி வைக்கும் உறவுகளிலும் காலம் கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் இத்தகையப் போக்குகளை மிகக் கூர்மையுடனும் கவனத்துடனும் பரிசீலித்து, இப்போக்குகளை சமூக மாற்றத்துக்கான போக்குகளாக மடைதிருப்ப வேண்டியுள்ளது.

எந்த அரசும், எந்த அரசியல் கட்சியும் சரியில்லை என்று தீர்ப்பு எழுதுவதைவிட, அவர்களை உபயோகமான இயக்கங்களாக மாற்ற மக்கள் அவர்களை கண்மூடித்தனமாக, சாதி அபிமானத்துடன் பின்பற்றுவதைத் தவிர்க்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


தனியார் துறையில் - வளங்கள் பொதுவில் வை............................சிவகாமி 3

சாதியம் காக்கும் கருவி............................ஆ. வெங்கடேஷ் 12

ஹைக்கூ ............................பொன். குமார் 13

முரன் ஒலிநாடா - விமர்சனம்............................K.A.G. 14

புரிதல் - கவிதை............................வானதி சிவம் 16

மத்திய பட்ஜெட் ஓர் அலசல்............................இன்பகுமார் 17

தனியார் துறையில் இட ஒதுக்கீடு............................கு.மு. ஜவஹர் 20

பூனா ஒப்பந்தம் ஒழிய வேண்டும்............................பாரி. செழியன் 22

தொடரும் தீவினைகள் - கவிதை............................தேவதேவன் 23

பார்ப்பனியம் பெரியாரியம்............................வேலுசாமி 24

கணிதம் நம் உடைமை............................குடியரசன் 27

கேள்வி-பதில்............................முனிமா 30

கலைக்கப்பட்ட கனவுகள் - மொழிபெயர்ப்புக் கட்டுரை.................. 32

என்னைப் பெத்த அம்மா - சிறுகதை............................புதிய மாதவி 38

களவு - சிறுகதை............................ஸ்ரீதர கணேசன் 41

தாய் - சிறுகதை............................ஹரிகிருஷ்ணன் 45

மிச்சப்படும் வாழ்வு - கவிதை............................அகவி 47

நாய்க்குட்டிகள் - சிறுகதை............................நீலவன் 48

அதிகாரம் - சிறுகதை............................சிவக்குமார் 51

இடிமுரசாக அமையட்டுமே -கவிதை............................கோ. பாக்கியராஜ் 54

பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும்............................பு. ஜார்ஜ் 55

தலித் தேசியம் - தொடர்............................கௌதம சன்னா 58

இறைவா நீ என்ன சாதி - கவிதை............................சுடலைமாடன் 60

மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர்............................குடியரசன் 61

முகத்தில் முகம்............................ 63

நிலாமுற்ற வீடு - கவிதை ............................எம். சிவகுமார் 64

www.padippakam.com

# தனியார் துறை – வளங்கள் பொதுவில் வை

■ சிவகாமி

அரசியலமைப்புச்சட்ட முன்வரைவு விவாதிக்கப்பட்டபோது 315 - வது திருத்தத்தை முன்மொழிந்த தாஹிர் என்பவருக்கு அம்பேத்கர் கூறிய பதில்:

"......... இன்னல்களையே அனுபவித்து வந்த தாழ்த்தப்பட்ட இனம் மற்றெவரையும் போல அதிகாரத்தில் பங்குபெற வேண்டும் என்பதற்காகவே, எவரும் குறுக்கிட்டு தடைசெய்யாத வகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது பிரிவில் வைக்கப்பட்டுள்ளது......" (Dr. Baba Saheb Ambedkar - Writings and Speeches - Volume 13 Page 382-383)

அம்பேத்கரின் சிந்தனைப் போக்கை ஒட்டி தனியார் துறையில் ஒதுக்கீடு குறித்த விவாதம் வைப்பது அவசியமாகிறது. தனியார் துறையில் ஒதுக்கீடு என்னும் கோட்பாட்டை வலியுறுத்தும் பிரச்சாரங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில், இக்கோட்பாட்டுக்கு முன்னோடியான, தற்போதைய ஒதுக்கீடு கொள்கையையும் நடைமுறைகளையும் ஆய்வு செய்வது அவசியமாகிறது.

## வரலாறு

அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே, அம்பேத்கர் அவர்களின் தொடர்ந்த கோரிக்கைகளாலும், போராட்டத்தினாலும் பிரிட்டிஷ் அரசு முதன் முதலில் 1934-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து சிறிய அளவு தாழ்த்தப்பட்ட இனத்திற்கு ஒதுக்கீட்டை ஏற்படுத்தியது. முஸ்லீம், கிறித்துவ சிறுபான்மையினருக்கு உள்ள ஒதுக்கீட்டைக் காட்டிலும் இது மிகக் குறைவாக இருந்தது. 1943-இல் வெளியான பிரிட்டிஷ் அரசின் ஆணை ஒதுக்கீட்டை 8.33 சதவிகிதமாகவும், 1946-இல் வெளியான ஆணை 12.5 சதவிகிதமாகவும் உயர்த்தியது. 25.3.1970-இலிருந்து இது தாழ்த்தப்பட்டோருக்கு 15 சதவிகிதமாகவும், பழங்குடியினருக்கு 7.5 சதவிகிதமாகவும் உயர்த்தப்பட்டது. பதவி உயர்வில் ஒதுக்கீடு என்பது 1957-இல் துவங்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 16(4), 16 (4) (A), 46 மற்றும் 335 போன்றவை முறையே ஒதுக்கீடு, பதவி உயர்வில் ஒதுக்கீடு, ஒடுக்கு முறைக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள், நிர்வாகத் தகுதியைக் கருத்தில் கொண்டு உரிய நியமனங்கள் வழங்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டன. இந்தப் பிரிவுகளின் அடிப்படையில் மத்திய அரசும் மாநில அரசுகளும் அவ்வப்போது ஆணைகளும் விதிகளும் பிறப்பித்து ஒதுக்கீட்டின் நடைமுறையை நெறிப்படுத்தி வருகின்றன.

## ஒதுக்கீடு செயல்படுத்தப்படும் விதம்

ஒதுக்கீடு கோட்பாட்டுக்கு பாதுகாப்பு அளிப்பவை அரசியலமைப்பு சட்டமெனில், அரசு ஆணைகளும் விதிகளும் அவை நடைமுறைப்படுத்தும் வழிகளை வகுக்கின்றன. இதற்காக மத்திய அரசில் தனி நிர்வாகத் துறையும், அதையொட்டி மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் இத்துறைகள் இயங்குகின்றன. உதாரணமாக, கர்நாடகாவில் 'இது சமூக நலத்துறை' என்றும் தமிழ்நாட்டில் 'ஆதி திராவிட நலத்துறை' என்றும், மத்திய அரசில் 'சமூக நீதித்துறை' என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இவ்வகையான பிரத்யேகத் துறைகள், இதரத் துறைகள் ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட நடைமுறைகளை சரியாகக் கடைப்பிடிக்கின்றனவா என்று ஆய்வு செய்து ஒருங்கிணைப்புச் செய்கின்றன. மற்ற எல்லா அரசுத் துறைகளும், அரசின் வியாபார நோக்கில் அமைந்த துறைகளும் (Public Sector Undertakings) தங்கள் துறையில் ஒரு பொறுப்பு அலுவலரை (Liaison Officer) நியமித்து தாழ்த்தப்பட்ட அலுவலர்கள் தொடர்பான பிரச்சினைகள், ஒதுக்கீடு அமலாக்கம் மற்றும் தொடர்பான கோரிக்கைகளை பரிசீலிக்கின்றன.

எப்போதெல்லாம் 'C' மற்றும் 'D' பிரிவில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் வேலைக்காகத் தேர்வு செய்யப்படுகின்றனரோ அப்போதெல்லாம் தேர்வுக்குழுவில் தாழ்த்தப்பட்ட /பழங்குடி வகுப்பைச் சார்ந்த ஒருவர் தேர்வு அலுவலராக நியமிக்கப்படுதல் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

பதவி உயர்வைப் பொறுத்த வரையில் DPC எனப்படும் துறைசார்ந்த 'பதவி உயர்வு குழு' தாழ்த்தப்பட்ட வகுப்பு அங்கத்தினர் ஒருவரை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பதும் விதி.

இதுவன்றி நிர்வாகம் சாராத, எஸ்சி/எஸ்டி-க்கான தேசிய ஆணையம் உள்ளது. இதன் தலைவர் அமைச்சர் அந்தஸ்து உள்ளவர். அவருக்குக் கீழ் உப தலைவர், உறுப்பினர்கள், உயரதிகாரிகள் பலர் பதவியமர்த்தப்பட்டு நாடு முழுவதும் ஒதுக்கீடு கோட்பாடு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா எனக் கண்காணித்து, வருடம் ஒருமுறை பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஆணையத்தின் கிளை அலுவலகங்கள் பல மாநிலங்களின் தலைமையிடங்களில் நிறுவப்பட்டு உயரதிகாரிகள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

மேற்கண்ட நிர்வாகம் சார்ந்த மற்றும் நிர்வாகம் சாராத-அமைப்புகள் அல்லாது, ஒதுக்கீடு கோட்பாட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது நடைமுறைகளில் உள்ள குறைகளை கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலம் மக்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்கள். பத்திரிக்கைகள் இச்செய்திகளைப் பிரசுரித்து வருகின்றன.

தவிரவும், ஒவ்வொரு துறையிலும் அனுமதிக்கப்பட்ட எஸ்சி/எஸ்டி நலச் சங்கங்கள் போலிச் சான்றிதழ் பெற்று ஒதுக்கீட்டின் பயனை அனுபவித்து வருபவர்கள் குறித்தும், ஒதுக்கீடு சரிவர பின்பற்றாதது குறித்தும் துறையின் கவனத்திற்கும், நீதிமன்றங்களின் கவனத்திற்கும் கொண்டு வருகின்றன.

இவையன்றி தலித் அரசியல் இயக்கங்களும், பொதுசேவை நிறுவனங்களும் ஒதுக்கீட்டின் அமலாக்கத்தில் கணிசமான பங்கு வகித்து வருகின்றன. தலித் இயக்கங்கள் பத்திரிக்கை வாயிலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு குறித்த விழிப்புணர்வை ஊட்டி வருகின்றன.

இந்நிலையில் அரசுத் துறையில் இட ஒதுக்கீட்டின் நிலவரம் என்ன?

## இதயத்தில் இடமில்லை

மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பிரிவு 'A' எனப்படும் முதல்நிலை நியமனங்கள் 15 சதவிகிதத்திற்குப் பதிலாக வருடம் 2000-த்தில் 11.21 சதவிகிதமே உள்ளது. இதன்படி அப்பிரிவில் 3712 இடங்கள் தாழ்த்தப்பட்டோருக்கு மறுக்கப்பட்டுள்ளன. பிரிவு 'B' எனப்படும் இரண்டாம் நிலை நியமனங்களில், 15 சதவிகிதத்திற்குப் பதிலாக 12.43 சதவிகிதமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 3706 இடங்கள் மறுக்கப்பட்டுள்ளன. அரசின் வியாபார நோக்கில் அமைந்த நிறுவனங்களில் 2000 ஆண்டின்படி முதல்நிலை 'A' பிரிவில் 8611 இடங்களும், இரண்டாம் நிலை 'B' பிரிவில் 6667 இடங்களும் தாழ்த்தப்பட்டோருக்கு மறுக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே ஆண்டில் கீழ் நிலையிலுள்ள அதிகாரம் குறைந்த பொறுப்புகள் எனப்படும் CD பிரிவில் 16.24 சதவிகிதமும், 17.55 சதவிகிதமும் முறையே தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் துப்புரவுப் பணியாளர் பொறுப்பில் 60.45 விழுக்காடு பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதே நிலையே அரசின் வியாபார நோக்கிலான நிறுவனங்களிலும் நிலவுகின்றது.

மத்திய அரசுப் பணியில் எஸ்சி/எஸ்டி ஊழியர்களின் ஒதுக்கீடு (2000 - 2001)

மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் எஸ்சி/எஸ்டி ஊழியர்களின் ஒதுக்கீடு (2000-2001)

இந்த விவரங்கள், அம்பேத்கர் எந்த சிந்தனையின் அடிப்படையில் தலித்துகளுக்கு ஒதுக்கீட்டுக்கு வகை செய்தாரோ அதற்கு விரோதமாக இருப்பதையே குறிக்கின்றன. தலித்துகள் அதிகாரம் பெறும் இடங்கள் காலியாக வைக்கப்பட்டு வயிற்றுப் பசி போக்கும் குறைந்த சம்பளத்திலான பதவிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதானது, ஒதுக்கீடு என்பது தலித்துகள் அதிகாரத்தில் பங்கு பெறுவதன்றி வேலைவாய்ப்பு என்பதாகவே மத்திய அரசாலும் மாநில அரசுகளாலும்

| Groups | Total | S.C. | |
|---|---|---|---|
| | | Nos. | % |
| A | 98066 | 10998 | 11.21 |
| B | 144145 | 17915 | 12.43 |
| C | 2377895 | 386142 | 16.24 |
| D (Excluding Sweepers) | 956947 | 167947 | 17.55 |
| Sweepers | 132102 | 79850 | 60.45 |

அவதானிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. மேலும், துப்புரவுப் பணியாளராகப் பணியாற்ற பிற

| Groups | Total | S.C. | |
|---|---|---|---|
| | | Nos. | % |
| A | 203329 | 21888 | 10.77 |
| B | 191715 | 22090 | 11.53 |
| C | 942496 | 178523 | 18.95 |
| D (Excluding Sweepers) | 388116 | 88836 | 22.89 |

சமூகத்தினர் முன்வருவதில்லை என்ற சமூகப் பழக்கம் அரசினால் அங்கீகரிக்கப்படுகிறது என்பதையும் காட்டுகிறது. தமிழகத்தில் மட்டும் இவ்வகையில் 6000 இடங்கள் மறுக்கப்பட்டுள்ளதை கிறித்துதாஸ் காந்தி, ஆதி திராவிட நலச் செயலராக இருந்தபோது வெளியிட்ட அரசு வெள்ளை அறிக்கை அறிவிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## காரணங்கள்

தகுதியான நபர்கள் கிடைக்காதது ஒரு காரணமாகத் தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. ஆனால், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், அனைத்துப் பிரிவுகளிலும், ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் த்குதியான நபர்கள் உருவாகியிருப்பார்கள். தலித் மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளிலும், தொழில்நுட்பப் பிரிவுகளிலும் இடமளிக்காது தமிழ் மற்றும் கலைத்துறைப் பாடங்களை வற்புறுத்தித் திணித்து வருவதை வழக்கமாக்கிக் கொண்ட நிலையில், தகுதியான நபர்கள் கிடைக்கவில்லை என மத்திய மாநில அரசுகள் வாளாவிருப்பது ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அரசுகளின் போதிய ஒத்துழைப்பின்மையையும், பொறுப்பின்மையையுமே குறிக்கும். தமிழக அரசு, ஆறாயிரம் மறுக்கப்பட்ட இடங்களில் தலித்துகளைப் பணியமர்த்துவோம் என அறிவித்து ஆண்டுகள் மூன்றாகியும் இதுவரை ஒரு இடம் கூட நிரப்பப் படவில்லை. நீதி மன்றங்களின் தாமதப்போக்கும், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் தலித்தல்லாதாரின் ஒதுக்கீடு கொள்கைக்கு எதிரான செயல்பாடுகளும் காரணங்கள்.

எஸ்சி/எஸ்டி தேசிய ஆணையத்தில் பணிபுரிந்த கு.செல்லப்பன், இ.ஆ.ப. அவர்கள் கருத்துப்படி, அத்துறைகளில் ஒதுக்கீடு கொள்கையைக் கண்காணிக்க நியமிக்கப்படும் பொறுப்பு அதிகாரிகள், தான் சார்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இழைக்கப்படும் அநீதிக்கு குரலெழுப்புவதற்குப் பதிலாக மேலதிகாரிகளுக்கும் பணிந்தும், பயந்தும் அவ்வதிகாரிகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் அளவிலும் நடந்து கொள்கிறார்கள் என்று கூறுகிறார். தேசிய ஆணையத்தில் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் என்பது போதுமானதல்ல. மேலும் பல உறுப்பினர்கள் ஒதுக்கீடு கொள்கையைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர் என்கிறார்.

## புதிய ரொட்டித்துண்டுகள்

இப்படி பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், ஒதுக்கீடு குறித்த பலவகையான போராட்டங்கள் யாவும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் போக்கை மாற்றியமைக்கவில்லை.

தற்போதைய மத்திய கூட்டாட்சி, பதவி உயர்வில் ஒதுக்கீடு கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாகவும், ஒதுக்கீடு குறித்த சட்டம் கொண்டு வரப்போவதாகவும், தலித்துகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தி தலித்துகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாக தனியார் துறையில் ஒதுக்கீடு குறித்த விவாதம் துவங்கப் போவதாகவும் அறிவிப்புச் செய்துள்ளது.

மத்தியப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சரான திக் விஜய்சிங் தலைமையில் நாடு முழுவதிலுமிருந்த தலித் அறிஞர்கள் ஒன்று கூடி தயாரித்த போபால் பிரகடனத்தில் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது இவ்வறிவிப்புகள். நில உச்சவரம்பு சட்டத்திற்கு உட்பட்டு பெறப்பட்ட நிலங்களை தலித்துகளுக்கு பகிர்ந்தளிக்கப் போவதாகவும் அறிவிப்புச் செய்துள்ளார்கள். நில உச்சவரம்பு சட்டமே முறையாக அமல்படுத்தாத நிலையில் நிலங்கள் வழங்குவதென்பது வெறும் கண்துடைப்பே.

புதிய கூட்டாட்சியின் புதிய அறிவிப்புகள் எதுவும் தலித்துகளுக்கு புதிதான நன்மைகள் எதையும் வழங்கிவிட முடியாது என்பதை தனியார் துறையில் தலித்துகளுக்கு ஒதுக்கீடு என்ற கோட்பாட்டை விரிவாக ஆய்வதின் மூலம் உணரலாம்.

## அடிப்படை நியாயங்கள்

தனியார் துறையில் தலித்துகளுக்கு ஒதுக்கீடு என்பதற்கான அடிப்படை நியாயங்கள் என்ன?

அரசுதான் நம் நாட்டின் எல்லா வளங்களுக்குமான அதிபதி (The Sovereign Power). நிலம், நீர், இயற்கைக் கனிம வளங்கள் யாவும் நாட்டுக்குச் சொந்தமானவை. தனியார் துறைக்கு இவை வழங்கப்படுவது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கேயன்றி சில தனி நபர்களோ அல்லது அவர்களைச் சார்ந்த சிறுகூட்டமோ அனுபவிப்பதற்கல்ல. அவ்வகையில் அனைத்துப்பிரிவு மக்களும் இவ்வளங்களைப் பகிர்ந்து கொள்ள உரிமை கொண்டவர்கள். அவ்வகையில் ஏறக்குறைய முப்பது சதவிகிதத்தினரான தலித்துகளும், பழங்குடிகளும் அவர்களுக்கான பங்கைப் பெற்றேயாக வேண்டும் என்பதே மூலாதாரமான நியாயம்.

இவ்வளங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டங்கள், ஒப்பந்தங்கள் மூலம் தனியார் துறைகளுக்கு வழங்கப்படுகின்றன. அவ்வகையில் விசேஷ சட்டங்கள் பிறப்பித்து விதிமுறைகளில் மாறுதல் செய்வதன் மூலம் தலித்துகளுக்கும் பழங்குடிகளுக்கும் பகிர்ந்தளிக்க முடியும்.

அமெரிக்காவில் வேலைவாய்ப்பில் சமத்துவச் சட்டம் (1998), சமத்துவத்தை ஊக்குவிக்கும், அநியாய பாகுபாட்டை தடைசெய்யும் சட்டம் (2000) மற்றும் உறுதிப்பாட்டு நடவடிக்கைகள் அதாவது Affirmative action மூலம் வளங்கள் பிரித்தளிக்கப்படுகின்றன. ஆகையால் இந்தியாவிலும் இது சாத்தியம்.

சந்திரபான் பிரசாத் அவர்கள் எழுதிய Dalit Diary, தமிழில் தலித் காலம் என்னும் நூலாக வெளிவந்துள்ளது. போபால் பிரகடனத்திலும் அதிலுள்ள கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. தலித்துகளுக்கு தனியார் துறையில் ஒதுக்கீடு என்பதும், சந்திரபான் பிரசாத் கூறும் 'வளங்களைப் பகிர்தல்' என்பதும் ஒன்றுதானா அல்லது வேறு வேறா?

இரண்டும் வெவ்வேறானவை. எனினும் இரண்டுமே அடிப்படையில் தனியார் மயத்தை ஏற்றுக் கொண்டவை. ஏற்கனவே நிறுவனப்படுத்தப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

தனியார்துறையில் அரசுத்துறையில் உள்ளது போலவே வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு கோருவது ஒருவகை எனில், தனியார் துறையில் தலித்துகளும் நுழைய ஏதுவாக தனியார்மயமாக்கலில் வளங்களைப் பகிர்ந்து கொடுப்பது என்பது பிறிதொரு வகை.

பொருளியல் விவரக்குறிப்புகள்

தனியார் துறையில் தலித்துகளுக்கு ஒதுக்கீடு எனும் கொள்கையை ஆதரிப்பதும், பிரச்சாரம் செய்வதும் சில பொருளியல் விவரக்குறிப்புகளின் துணைகொண்டே. ஆகவே தலித் காலம் எனும் நூலில் காணப்பட்ட சில விவரங்களையும், போபால் ஆவணத்தில் கூறப்பட்ட விவரங்களையும் துணையாகக் கொண்டு அவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவோம்.

மிக மிகச் சுருக்கமாகச் சொல்வதென்றால், பொருளியல் கீழ்க்கண்ட முக்கியமான மூன்று துறைகளை உள்ளடக்கியது.

- உழவுத் தொழில் (Primary Sector)
- பொருள் உற்பத்தி (Secondary Sector)
- மூன்றாம் நிலையான வணிகம் மற்றும் 'பணித்துறை (Tertiary Sector)

மேற்கண்டவற்றில் முதன்மையாக உள்ளது உழவுத்துறை. உழவுத்துறை முதன்மையாக இருப்பதற்குக் காரணம், உணவு உற்பத்தியோ அல்லது அது ஈட்டித் தருகின்ற வருமானமோ அல்ல. மாறாக அத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் தொகை பொறுத்தே அது முதன்மையாகக் கருதப்படுகிறது. அப்படிப்பட்ட உழவுத் தொழில் எந்த நிலையிலிருக்கிறது?

- உழவுத் தொழிலுக்கு மதிப்பு குறைவு
- இத்தொழிலில் உள்ளவர்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 15039 மட்டுமே. மாத வருமானம் ரூ. 1261 மட்டுமே.
- தலித்துகளில் 63.54% பேர் மதிப்பற்ற உழவுத் தொழிலைச் சார்ந்திருக்கின்றனர் (1991 கணக்குப்படி)
- 1971 கணக்குப்படி 62.72% தலித் மக்கள் இத்தொழிலில் இருந்திருக்கின்றனர்.
- உலகெங்கிலும் உழவுத்தொழில் உள்ளவர்கள் எண்ணிக்கை குறைந்து வரும்போது தலித்துகளின் எண்ணிக்கை இருபதாண்டுகளில் கூடியுள்ளது.
- தலித்தல்லாதவர்களில் நிலமில்லா உழவுத் தொழிலில் 31.62% பேர் மட்டுமே உள்ளனர்.
- தலித்துகளில் நிலம் வைத்திருக்கும் சிலரிலும் 86.6% பேர் சிறு, குறு மற்றும் பயனற்ற நிலங்களையே வைத்துள்ளனர்.
- தமிழகத்தில் தலித்துகளில் 7% பேர் மட்டுமே நிலம் வைத்துள்ளனர்.
- நிலமில்லாதவர், மதிப்பு குறைவான உழவுத் தொழிலில் உள்ளவர் மட்டுமே அதிகம் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர்.

முதன்மைத் தொழிலான உழவுத் தொழில் உணர்த்தும் கருத்தாவது, தலித்துகளின் முன்னேற்றம் என்பது நிலமில்லா கூலித் தொழிலாளிகளின் முன்னேற்றம் பற்றியதே என்பதே.

தொழில் துறை

இரண்டாம் நிலையான தொழில் துறை சற்றே மதிப்பு கூடியது

- இத்துறையில் ஈடுபட்டுள்ளோரின் சராசரி ஆண்டு வருமானம் 69,827, சராசரி மாத வருமானம் ரூ. 5819.
- தொழில் துறையில் தலித்துகளின் பங்கேற்பு 9.83% மட்டுமே.
- அதுவும் தொழிலாளர் சட்டம் நடைமுறைப் படுத்தப்படாத கட்டுமானத் துறையிலும், திறனற்ற (unskilled labour) தொழிலிலும், அதாவது மதிப்புள்ள தொழில் துறையிலும் மதிப்புக் குறைந்த இடங்களிலேயே தலித்துகள் உள்ளனர்.
- இப்பிரிவில் பங்குதாரர்களாகவன்றி வெறுமனே தொழிலாளர் நிலையில் மட்டுமே தலித்துகள் உள்ளனர்.

அடுத்து சர்வீஸ் இன்டஸ்ட்ரி எனப்படும் மூன்றாம் நிலைத் துறை.

- மதிப்பு மிகுந்த இந்தப் பிரிவில் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 94,609. மாதவருமானம் ரூ. 7,884.
- இதில் வணிகம், போக்குவரத்து இவற்றில் தலித்துகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு
- நாற்காலியில் அமர்ந்து பணி செய்பவர்கள் பெரும்பான்மையினர் தலித்தல்லாதார்.

இப்பொருளியல் விவரக்குறிப்புகள் தலித்துகளின் பொருளாதார நிலையை விளக்குகின்றன. அவர்களது நிலை உயர அல்லது பிறரளவு சமத்துவம் பெற ஒவ்வொரு பொருளியல் பிரிவிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை எனத் தீர்மானிக்கக் கோருகின்றன. தனியார் துறையில் ஒதுக்கீடு என்பது இவற்றிற்குத் தீர்வாகுமா?

தனியார் துறையில், (அமைப்பு மற்றும் அமைப்பு சாராத தொழில்கள் அனைத்தும்) அரசுத்துறையில் இருப்பது போலவே ஒதுக்கீடு பெற்றாலும், 60 சதவிகிதமான 15 கோடி மக்களில் 45 லட்சம் பேர் மட்டுமே வாய்ப்புப் பெறுவர். இதன் நன்மை அவர்களது குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்து 2¼ கோடியைத் தாண்டாது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவில், அனைத்துப்பிரிவிலும் உள்ள மொத்த அடிப்படைத் தொழிலாளர் எண்ணிக்கையில் 8 சதவிகிதம் மட்டுமே அமைப்பாக்கப்பட்ட (Organised Sector) அல்லது தொழிலாளர் நலன்கள் ஓரளவு பாதுகாக்கப்பட்ட துறைகளில் உள்ளார்கள். மிகுதி பேர் அமைப்பாக்கப்படாத தொழிலில் உள்ளனர். அமைப்பாக்கப்படாத தொழில்களில் முதலாளிய விதிகளே செல்லுபடியாகும்.

தலித்துகளில் வாய்ப்புப் பெறும் 45 லட்சம் பேர்களில், எவ்வளவு பேர்அமைப்பாக்கப்பட்ட தனியார் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற முடியும் என்பது கேள்விக்குறி.

15 கோடி தலித்துகளை இப்போதுள்ள தொழில் நிலவரப்படிப் பார்த்தால், உழவுத் தொழிலிருந்து நிலைமாற்றம் செய்து தொழில்மயப்படுத்துவது சாத்தியமல்ல. அதற்கான பெரும் மூலதனம், அடிப்படை வசதிகள், இதர வகையிலான வளங்களை உருவாக்கித்தர இயலாது.

சமீபத்தில் மத்தியில் உள்ள கூட்டாட்சி அரசு தனியார் துறையில் ஒதுக்கீடு குறித்த விவாதம் துவங்கப் பெறும் என அறிவித்த உடனேயே புது டில்லியில், முதலாளிகள் அடங்கிய இந்திய வர்த்தகக் கழக (Confederation of Indian Industries) உறுப்பினர்கள் ஒன்று கூடி விவாதித்து இது சாத்தியமில்லை என முடிவெடுத்துள்ளனர்.

இந்நிலையில் ஐம்பது சதவிகிதத்திற்கு மேல் வறுமையில் உழலும் தலித்துகளுக்கு என்னதான் வழி? இக்கேள்விக்கு பதில் காண முயன்ற நவீன சிந்தனையாளர்கள் அமெரிக்காவைப் பின்பற்றி பொருளாதாரத்தில் பன்மைத் தன்மையை சட்டப் பூர்வமாக்க வேண்டும் என்பதை முன்வைக்கின்றனர். இது போபால் பிரகடனத்திலும் உள்ளது.

## அமெரிக்க மாதிரி

அமெரிக்க மாதிரி குறித்து, மராத்தி சிந்தனையாளரான ஆனந்த் டெல்டும்டே சந்தேகம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் உள்ள தனியார் துறைகள் தாமாகவே முன்வந்து பன்மைத் தன்மையை ஆதரிக்கின்றன. இதற்கு அங்குள்ள பன்மைத் தன்மையிலான சந்தை நிலவரமும் ஒரு காரணம். அரசு வற்புறுத்தலினாலோ அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் மூலமாக பன்மைத் தன்மை பின்பற்றப்படுவது அபூர்வம் என்கிறார்.

ஆனந்த் டெல்டும்டே கருத்து கவனத்துக்குரியது. உதாரணத்திற்கு அமெரிக்காவில் பெரிய விற்பனைக் கூடங்களான வால்மார்ட், ப்ளுமிங் டேல்ஸ் போன்றவை ஆப்பிரிக்க அமெரிக்கர்கள், இஸ்பேனிக்ஸ் மற்றும் ஆசிய அமெரிக்கர்களின் பண்பாட்டுத் தேவைகளுக்கேற்ப பொருட்களை விற்கின்றன. அதே போல் பிரபல உற்பத்தி நிறுவனங்களும் அதற்கான உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. பல நாட்டு மக்கள், வேறுபட்ட கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வாழ்வதால் இந்த நிலை உள்ளது. ஆனால் இந்தியாவில் பெருந்தேசியம், இந்துத்துவம், தேச ஒற்றுமை, பன்மையில் ஒருமை என்ற பெயரில் பழைய, சிறிய கலாச்சாரங்கள் தாக்கி அழிக்கப்பட்டு, பெரும்பான்மை இந்துப் பழக்கவழக்கங்களை அனுசரிக்கும்படி வற்புறுத்தப்படுகின்றனர். பசுவின் புனிதம் மாட்டுக்கறி உண்பதை வெறுத்தொதுக்குகிறது. பசுமைப் புரட்சி சிறு தானிய வகைகளான கம்பு, கேழ்வரகு, வரகு, சோளம், திணை இவற்றை ஒழித்துவிட்டது. உயிரணு மாற்றங்கள் (Genetic modification) மூலம் அதிக விளைச்சலைத் தரும் பழவகைகள் இலந்தை, கிளா, வீரப்பழம், நாவல், இண்டு போன்ற சிறு பழவகைகளை (Wild berries) அழித்துவிட்டன. அரிசிச் சோறு சாப்பிடுவதும், ஆப்பிள் உண்பதும் நாகரீகச் சின்னங்களாகி விட்டன. கலைகளிலும் இதன் ஆக்கிரமணம் (அக்கிரமம்) பெருமளவில் உள்ளது. தலித் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் மதிக்கப்படாது பரத நாட்டியம் ஆட்சிபீடம் ஏறியுள்ளது. ஓவியங்களில் நவீன ஓவியம் என்ற பெயரில் பல குப்பைகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. பழங்குடிகளின் வாழ்வியல் முற்றிலுமாக சிதைக்கப்பட்டுள்ளது.

> **தற்போது அரசு என்பது மதம் - சாதியோடு இணைந்த அமைப்பு. தலித்துகள் அவற்றிடம் அமெரிக்க மாதிரியிலான உரிமைகளை,கருணையை எதிர்பார்க்க முடியுமா?**

ஜெர்மனியில் நடந்த இந்திய ஆதிவாசி - பழங்குடிகளின் ஓவியக் கண்காட்சி பற்றிய கலந்துரையாடலில் (2003 ஆகஸ்டு) கலந்துகொண்ட இந்தியர்களும், ஜெர்மானிய ஓவிய விமரிசகர்களும் பழங்குடிகள் ஓவியம் வியாபாரமாக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்தார்கள். அத்தோடு பழங்குடி ஓவியங்கள் மிகவும் சாதாரணமாக (Simple) அக உலகமற்றதாக இருப்பதாகக் கருத்துத் தெரிவித்தார்கள். வான்கோவின் கலைப்படைப்பையோ, பிக்காஸோவின் கலைப் படைப்பையோ பல நூறு ஆயிரம் டாலர்கள் கொடுத்து தம் வீட்டு படுக்கை அறையில் தொங்க விடும்போது ஓவியங்கள் வியாபாரமாக்கப்படுவது குறித்து கவலை தெரிவிக்காதவர்கள், பழங்குடி ஓவியங்கள் சில ஆயிரம் ரூபாய் மதிப்புப் பெறும் போது எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஒரு ஆட்டின் வயிற்றுக்குள் செரிக்கப்படாத இலையும், சுற்றிலும் இழை தழை கொடிகள் படர்ந்திருப்பதுமான ஒரு ஓவியத்தை சாதாரணமானது என்கிறார்கள். செரிக்கப்படாத இலையொன்று ஆற்றின் வயிற்றுக்குள் புகுந்ததன் மர்மம் என்ன என்று சற்றும் சிந்தித்துப் பார்க்காது அவர்களுக்கு அக உலகமே இல்லை என்கிறார்கள். இவை சில உதாரணங்களே. தொடர்ந்து சிற்றுலகங் களைப் புறக்கணிக்கும் அல்லது இந்துத்துவத்தோடு ஜீரணிக்கும்


படிப்பகம்

www.padippakam.com

போக்கு இப்போதும் உள்ளபோது பன்மைத் தன்மைக்கு வழியில்லை. எனவே இல்லாத சந்தை நில வரங்களை அனுசரிப்பது சாத்தியமில்லை. அடுத்து, பன்மைத் தன்மையை ஆதரிக்காததும், அமெரிக் காவைப் போல் இங்கே பெரிய குற்றமாகக் கருதப் படாது. ஏனெனில் ஒருமைத் தன்மையிலான இந்துச் சந்தை காரணமாக தலித்துகளும் பழங்குடிகளும் இந்து மயமாக்கப்பட்டு வருகின்றனர். சிறு தெய்வ வழிபாட்டை இழிவுபடுத்தும் வகையில் தொடர்ந்து பத்திரிக்கைகள் செய்திகளைப் பிரசுரித்து இத்தகைய கலாச்சார வன்முறை சரிதான் என ஆதரித்து வரு கின்றனர்.

அமெரிக்க பன்மைத் தன்மை என்பது இந்தியா வின் ஒதுக்கீட்டைக் காட்டிலும் பழமையானது. ஒரு வருட காலத்திற்கும் மேலாக வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப் போருக்குப் பிறகு 1862-இல் கருப்பு அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.

"எந்த ஓர் அடிமையையும் விடுதலை செய்யாமல் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும் என்றால் அதை நான் செய்வேன். எல்லா அடிமைகளையும் விடுதலை செய்து நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும் என்றால் அதையும் நான் செய்வேன். சிலரை விடுதலை செய்து சிலரை அப்படியே வைப்பதன் மூலம் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும் என்றால் அதையும் நான் செய்வேன்."

கருப்பின அடிமை முறைக்கும், நாட்டின் ஒற்று மைக்கும் உள்ள உறவு குறித்த அதிபர் ஆபிரகாம் லிங்க னின் கருத்துக்கள் இவை. லிங்கன் கருத்துக்கு விமர்சனங் கள் இருப்பினும், கருப்பர்களை விடுதலை செய்வதன் மூலம்தான் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும் என முடிவெடுத்த லிங்கன், விடுதலையை அறிவித்தார். கருப்பர் விடுதலையை கடுமையாக எதிர்த்த தென்மாநிலத்தைச் சேர்ந்த 'தெற்கத்தியனால்' அதே வருடம் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன்பின், ஏறக்குறைய நூறு வருடங்களுக்குப் பிறகு, மார்ட்டின் லூதர் கிங்கின் சிநேகிதரும் அமெரிக் காவின் 35-வது அதிபருமான (1961-63) ஜான் எஃப் கென்னடி புதிய எல்லைகள் (New Frontier) என்ற திட்டம் வகுத்து அனைவருக்குமான மனித உரிமை கள், கல்வி, மருத்துவம் இவற்றில் அதிக ஈடுபாடு காட்டியதின் விளைவாக 1963-ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். (மாறுபட்ட கருத்துக்களும் உண்டு) ஜான் எஃப் கென்னடியின் சகோதரர் ராபர்ட் கென்னடி என்பவர் அமெரிக்காவின் அட்டார்னி ஜெனரலாக (1961-64) இருந்து சிவில் உரிமைச் சட்டத்தை அமலாக்க தீவிரம் காட்டி வந்தார். அவரது தனயன் இறந்ததும், இவர் அதிபர் பதவிக்கு போட்டியிடக்கூடும், பதவிக்கு வந்தால் சிவில் உரிமைகள் செயலாக்கம் பெற பாடுபடுவார் என்ற காரணத்திற்காக 1964-ஆம் ஆண்டே சுட்டுக்கொல்லப் பட்டார். இப்படி மரணமடைந்த மூவரும் வெள்ளை யர்கள். இது எந்தவகையிலும் கருப்பர்களின் போராட்டங்களைக் குறைவாக மதிப்பீடு செய்வது ஆகாது. அமெரிக்காவின் பன்மைத் தன்மை என்பது வரலாற்று நெடுக்க கருப்பர்களின் தொடர் போராட் டங்களினால் மட்டுமே என்றால் அது மிகையாகாது. எனினும் உயர் பதவிகளிலிருந்த வெள்ளையர்களில் சிலரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

இந்தியாவில் தலித்தல்லாதோரில் இத்தகைய தலைவர்கள் யாரேனும் உள்ளனரா? மாறாக தாழ்த்தப் பட்டோர் அதிகாரம் பெறும் வகையில் இரட்டை வாக்குரிமை தர பிரிட்டிஷ் அரங்கம் தீர்மானம் செய்யும் தருவாயில், தனிநபர் உண்ணாவிரதப் போராட்டம் (சாகும் வரையில்) செய்த காந்தி போன்ற 'மகாத்மா'க்களே இருந்திருக்கின்றனர். பகிரங்கமாக தலித் ஆதரவு நிலை எடுத்த எந்தப் பிரதமரும் அல்லது அரசியல் கட்சித் தலைவரும் தலித்தல்லாதவர்களில் இல்லை. இப்போதும் தலித் நேச சக்திகள் ஆளும் வர்க்கத்தில் இல்லை. நேச சக்திகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இருந்தாலும் அவர்களால் பெரிதான நன்மைகள் எதுவும் விளைந்திடவில்லை. ஆகவே அமெரிக்க மாதிரி என்பது வெறும் சட்டங்களால் உருவானவை அல்ல. அதற்கு வரலாற்றுப் பின்னணி உண்டு. நமது இந்திய வரலாற்றில் அனுகூல நிலைமை பிரிட்டிஷ் அரசாண்ட காலத்தில் இருந்தது. அம்பேத் கரின் போராட்டங்களுக்கு ஓரளவு செவி சாய்த்தது அது. தற்போது அரசு என்பது மதம்-சாதியோடு இணைந்த அமைப்பு. தலித்துகள் அவற்றிடம் அமெரிக்க மாதிரியிலான உரிமைகளை/கருணையை எதிர்பார்க்க முடியுமா?

மேலும் தற்போதுள்ள அமெரிக்க மாதிரியை ஒரேயடியாக நவீனமானதாக சமத்துவமானதாகக் கொள்ள வேண்டியதில்லை. இன்னும் ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் வாழ்விடங்கள் (Harlem) நம்மூர் குடிசைமாற்று வாரியப்பகுதி (Slum) போல புறக் கணிக்கப்பட்டுள்ளன பல இடங்களில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் விஸ்வநாதன், எனது அமெரிக்கப் பயணத்தின்போது சிக்காகோ நகரின் இப்புறநகர்ப் பகுதிக்கு அழைத்துச் சென்று காட்டி னார். வெள்ளையர் வசிக்கும் பகுதியை ஒப்பிடும் போது இது மோசமான நிலையிலிருந்ததை ஊகிக்க முடிந்தது.

மேலும் அமெரிக்காவில், தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு என்பது நிரந்தரமான ஒன்றல்ல. சமீப காலத்தில் ஆட்குறைப்பும், ப்ராஜக்ட் நிறைவுறும் தருவாயில் அவர்கள் வெளியே அனுப்பப்படுவதும் தொடர்கிறது. தொழில் நிரந்தரமின்மை என்பது பரவலாகிக் கொண்டிருக்கிறது. உள்ளூர் தொழி லாளிக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதைத் தவிர்க்க வும், நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்தவும், அமெரிக்கா மற்றும் மேலைத் தனியார் நிறுவனங்கள் பல இந்தியா போன்ற நாடுகளில் தங்கள் பின்புல அலுவலகங்களையும், தொழிற்சாலைகளையும் நிறுவி வருவதைக் காண்கிறோம்.

தொழிலாளர்கள் அதிக வேலை நேரத்தைக்



படிப்பகம்

www.padippakam.com

கண்டித்து போராட்டத்தில் இறங்கியபோது எட்டு மணி வேலைத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த நாள் மே தினமாகவும், தொழிலாளர் தினமாகவும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால், போராட்டம் நடந்த சிக்காகோ நகரின் ஹே மார்க்கெட் பகுதியில், அதன் நினைவுச் சின்னமாக நமக்கு காணக் கிடைப்பது சாக்கடை மூடிபோல நடைபாதையில் எல்லாரும் மிதித்துச் செல்லும்படியான ஒரு இரும்புத் தகடே.

இப்படிப்பட்ட பல விசயங்கள் அமெரிக்க மாதிரியில் இருப்பதை சிந்தனையாளர்கள் காணத் தவறக் கூடாது. எனினும் ஒப்பீட்டளவில், ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் நிலை, இந்தியாவில் உள்ள தலித்துகளைவிட உயர்வான நிலையில் இருப்பதை ஏற்றுக் கொள்வோமெனில், அமெரிக்க மாதிரியிலிருந்து நாம் பெறவேண்டியது தொடர் போராட்டத்துக்கான உத்வேகமும் எழுச்சியுமேயன்றி, அதை அப்படியே இறக்குமதி செய்வதல்ல.

## என்ன நடக்கிறது?

உலகமயம், தாராளவாதம், தனியார்மயம் என்ற முக்கூட்டை இதுகாறும் எதிர்த்து வந்த தலித்துகள், தனியார் துறையில் ஒதுக்கீடு கேட்டு நிற்பது இவற்றை நேரடியாக ஆதரிக்கும் தோல்வி நிலையைக் காட்டுகிறது. எதிர்ப்புப் பிரச்சாரங்கள் மழுங்கி ஆதரவுப் பிரச்சாரங்கள் தலை தூக்குகின்றன.

வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், ஒதுக்கீடு கோட்பாடு வேலை வாய்ப்பு என்றளவில் சுருக்கப்படுகிறது. பஞ்சமி நில மீட்புப் போராட்டங்கள் பின்னடைவை சந்திக்கின்றன. இரட்டை வாக்குரிமை கைவிடப்படுகிறது. ஒதுக்கீடு என்ற சோளப் பொறியே போதுமானது என ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆக மொத்தத்தில் தலித்துகளின் போராட்ட நடவடிக்கைகள் முடக்கப்படுகின்றன. அமெரிக்க மாதிரியின் படிப்பினைகளுடன் இந்திய கிராமங்களுக்குத் திரும்புவோம்.

## உள்ளூர் சரக்கு

தலித்துகளின் வாழ்நிலையைக் கருத்திக் கொண்டும், பொருளியல் தன்மைகளைக் கவனத்தில் கொண்டும் கீழ்க்கண்ட வளப்பகிர்வு நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை.

- பெரும்பான்மையான தலித்துகள் உழவுத் தொழிலில் உள்ள நிலையில், அவர்களனை வரையும் தொழில் மயப்படுத்துவது சாத்தியமில்லை எனும் பட்சத்தில், நிலப்பகிர்வு நடந்தே தீரவேண்டியது கட்டாயம்.

இங்கே நிலம் என்பதை விவசாயம் என்றளவில் மட்டும் கருதாமல், தலித்துகளுக்கு சொத்து, அடிப்படையான நம்பிக்கை எனப் பார்க்க வேண்டும். (விவசாயம் இந்நாட்டில் யாருக்குமே லாபகரமானதல்ல) சொத்தின் பேரில் கடன் வாங்குவதோ, மூலதனமாகக் கருதி முதலீடு செய்வதோ ஆகிய எல்லாப் பொருளியல் நடவடிக்கைகளுக்கும் ஆதாரமாக விளங்குவதால் நிலத்திற்கான போராட்டத்தை கைவிட முடியாது. மேலும் நீராதாரம் கொண்ட நிலப்பகுதியில் மாமூலான நெல்சாகுபடி என்றிருக்க, சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க உதவுவதுடன், தலித்துகளுக்கு உணவு பாதுகாப்பாகவும் நிலம் விளங்குகிறது. பஞ்சமி நிலமீட்புப் போராட்டத்தை தீவிரப்படுத்தி, நிலங்களை மீட்பதோ அல்லது இழப்புத் தொகை பெறுவதோ சாத்தியம்தான். ஒதுக்கீடு, தலித்துகளில் படித்த சிறுபான்மையினர் நடவடிக்கையாக அதிகக் கவனம் பெறுகிறது. ஒதுக்கீடு குறித்த போராட்டங்களுடன், பெரும்பான்மை மக்களை மய்யப்படுத்தி அதிக அளவில் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

- வளப்பகிர்வு நடவடிக்கையாக, அரசு பட்ஜெட்டில் தலித் மக்கள் தொகைக் கேற்ற தொகை ஒதுக்கீட்டை தனியே ஆதி-திராவிடர் நலத்துறைக்கு பகிர்ந்தளிக்க கோருதல்.

இது புரட்சிகர நடவடிக்கை அல்ல. ஏற்கனவே 6-வது ஐந்தாண்டு திட்டத்தின்போது அறிவிக்கப்பட்டு, இருபதாண்டுகளாக பல மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படாத திட்டம். இந்தியாவில் மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் மாநிலங்கள் மட்டுமே மத்திய அரசின் அறிவுரையை ஓரளவு பின்பற்றியுள்ளன. தமிழக அரசு பின்பற்றினால் 2004-2005 மொத்த திட்ட மதிப்பீட்டின் ரூ. 8001.08 கோடியிலிருந்து ரூ.1728.36 கோடியை தலித் மக்கள் தொகைக் கேற்ப ஏறக்குறைய கோடி தலித்துகளுக்கு தனியாக ஒதுக்க வேண்டியிருக்கும். ஆனால் வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் (Link Book) காட்டும் நிதியளவு தலித்துகளுக்கு ரூ. 354.71 கோடி மட்டுமே. தற்போதைய நடைமுறையில் இத்தொகை பல்வேறு துறைகளுக்குப் பிரித்தளிக்கப்பட்டு, அதன் மூலம் தலித் மேம்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கணக்கு காட்டப்படுகிறது. ஆனால் தலித் மேம்பாட்டுக்கான எந்தத் தனித் திட்டமும் இத்துறைகளில் இல்லை. உதாரணமாக விவசாயத்துறையில் முக்கிய நடவடிக்கை உரம், பூச்சிக் கொல்லி மற்றும் விதைகள் அடங்கிய சிறு பைகளை விவசாயிகளுக்கு வழங்குவது தான். இது பெரும்பாலும் நெல் மற்றும் நீராதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பயிர்களுக்கே. தமிழக தலித்துகளில் 7% மட்டுமே நிலம் வைத்துள்ளனர். அதுவும் சிறு, குறு விவசாயிகள். நீராதாரமுள்ள நிலமுள்ளவர் தொகை இன்னமும் குறைவு. மானாவாரி பயிர் செய்யும் பெரும்பாலான தலித்துகளுக்கு இதனால் எந்த நன்மையும் இல்லை. உரம், பூச்சிக் கொல்லி, விதை அடங்கிய பைகள் தலித்துகளுக்குத் தான் கொடுக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய அந்தத் துறையில் இதுவரை யாரும் தனியாக நியமிக்கப்படவில்லை.

கால்நடை மற்றும் மீன்வளத்துறையில் மற்றொரு உதாரணத்தைப் பார்ப்போம். இத்துறையில் குதிரை வளர்ப்பு, செல்லப் பிராணிகள் (நாய், பூனை) வளர்ப்பு



படிப்பகம்

www.padippakam.com

என்ற திட்டங்கள் உண்டு. இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் முப்பது சதவிகிதம் தலித்துகளுக்கு செலவிடப்பட்டுள்ளதாக 1999-2000ஆம் ஆண்டில் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. இம்மாதிரி பல்வேறு துறைகளையும் நாம் ஆய்வு செய்தால் தலித்துகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையானது எவ்வாறு செலவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடியும். இப்போதுள்ள நடைமுறையை மாற்றி மொத்தத் தொகையையும் ஆதி-திராவிடர் நலத்துறைக்கு ஒப்படைத்தால், தலித்துகளின் தேவைகளை ஒட்டி திட்டங்கள் தயாரித்து, நிலம் வாங்கவும், கல்வி - உயர்கல்விக்கு முன்னுரிமை அளிக்கவும், உரிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியும். இவ்வாறு செய்ய மாநில அரசுகள் தயக்கம் காட்டி வருவது தலித்துகள் மத்தியில் பெருத்த சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் கிளப்பி வருகிறது.

- தலித்துகளுக்கு தனிப்பஞ்சாயத்து கோருதல்

*(காண்க: புதிய கோடாங்கி வெளியிட்டுள்ள சிவகாமியின் 'அப்னா பஞ்சாயத்து' நூல்)*

தற்போதுள்ள பஞ்சாயத்து அமைப்பு முறையில் ஒரு ஊர் பஞ்சாயத்து என்பது கிராமமும் சேரியும் அடங்கிய பகுதி. 500 ஜனத்தொகை இருந்தாலே போதுமானது அதை ஊர்ப்பஞ்சாயத்து என ஏற்றுக் கொள்ள. தற்போது 500 ஜனத்தொகை தொடங்கி பத்தாயிரம் ஜனத்தொகை வரை ஊர்ப்பஞ்சாயத்துகள் உள்ளன. ஒவ்வொரு ஊர்ப்பஞ்சாயத்தும் 29 இனங்களில் அரசிடம் இருந்து நிதி பெறுகின்றது. விவசாயம், நீர்ப்பாசனம், குடிநீர், வீட்டுவசதி, சமூகக்காடு, கால்நடை, மருத்துவம், கல்வி, பொதுச்சொத்து பராமரிப்பென பல்வேறு இனங்களில் நிதி பெற்றாலும், தலித்துகளோடு சம்பந்தப்பட்டவை நான்கு அல்லது ஐந்து இனங்கள் மட்டுமே. இதனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பெரும்பாலும் தலித்தல்லாதோருக்கே சென்று சேர்கிறது. தலித்துகள் இவ்வமைப்பில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தாலும் சாதியம் காரணமாக அவர்கள் செயல்பாடுகள் ஒடுக்கப்படுகின்றன. ஆகவே, ஊரிலிருந்து தனியே பிரித்து வைக்கப்பட்டுள்ள சேரி, 500 ஜனத்தொகையை கொண்டிருக்கும் பட்சத்தில் அது தனி கிராமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், விதிகளுக்கு உட்பட்டு அரசு 29 இனங்களுக்கும் நிதி ஒதுக்கவேண்டும். அப்படி நிதி பெறும் பட்சத்தில், தலித்துகள் தங்கள் தேவைகளை ஒட்டி திட்டங்கள் வகுத்து செயல்படமுடியும். பொதுச் சொத்து உருவாக்குதல், தனிநபர் அடிப்படையில் வசதிகள் செய்து கொடுத்தல் இதில் சாத்தியம். இத்தொகை மாநில அரசுகளின் இடையூறு இன்றி நேரடியாக மத்திய அரசிலிருந்து பெறப்படுமெனில், தலித்துகளின் படிப்படியான வளர்ச்சியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. இப்பஞ்சாயத்துக்கென, புதிய சட்டங்கள் உருவாக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது நடைமுறையிலுள்ள சட்டங்களே போதுமானது. வேண்டுமானால் சில திருத்தங்கள் செய்து கொள்ளலாம். இப்புதிய பஞ்சாயத்துகளுக்கு வர

**பஞ்சமி நில மீட்புப் போராட்டங்கள் பின்னடைவை சந்திக்கின்றன.**

**இரட்டை வாக்குரிமை கைவிடப்படுகிறது.**

**ஒதுக்கீடு என்ற சோளப்பொறியே போதுமானது என ஒப்புக் கொள்ளப்படுகிறது.**

**மொத்தத்தில் தலித்துகளின் போராட்ட நடவடிக்கைகள் முடக்கப்படுகின்றன.**

லாற்று துரோகத்தை ஈடுசெய்யும் வகையிலும், வளங்களைப் பகிர்வதன் அடிப்படையிலும் அதிக ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசியம். முதலில் சேரிகளுக்கு புதிய பெயரிட்டு போராட்டத்தை துவக்க வேண்டியுள்ளது.

- தலித்துகள் அதிகம் இல்லாத தொழில் துறைகளிலும் சர்வீஸ் துறைகளிலும், அவர்களுக்கு சம வாய்ப்பு அளிக்கும் வண்ணம் தொழில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

உரிமங்கள் வழங்குதல், ஒப்பந்த வேலைகளில் பங்கு கேட்டு அரசை நிர்ப்பந் திக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் தொழில்துறையில் தலித்துகளை உரிமையாளர்களாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பத்து வருடங்களுக்குமுன் ஈரோடு மாவட்டத்தில் முதலிப்பாளையம், ஈங்கூர் ஆகிய இடங்களில் இரண்டு தொழில் / வணிக வளாகங்கள் துவக்கப்பட்டன. இது சுமார் முப்பது கோடி செலவில் கட்டப்பட்டது. முதலிப்பாளையத்தில் 100 கூடங்களும், ஈங்கூரில் 200 கூடங்களும் உள்ளன. தலித்துகளில் 300 பேர் தொழிலதிபர்களாக உருவாகியிருக்க முடியும். ஒவ்வொருவருக்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் ஒரு கோடி ரூபாய் குறைந்த வட்டியிலான கடன் வழங்கப்படும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் முதலிப்பாளையத்தில் 54 தொழிலதிபர்கள் மட்டுமே. பின்னலாடைத் தொழில் தொடங்கியுள்ளனர். மீதியுள்ளவருக்கு கடன் வழங்குவதில் நிர்வாகச் சிக்கல் காரணமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்க முடியவில்லை. தேக்க நிலையில் உள்ளது அத்திட்டம்.

எனினும் இதை குறுகிய அளவில் முன்னுதாரணமாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு தொழில்களுக்கு விரிவுப்படுத்தும் பட்சத்தில் பயன்பெற வாய்ப்புண்டு. முன்பு போக்குவரத்து வாகனத்துறையில் இந்திய அளவில் உரிமங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. மாநில அரசுகளும் இதைப் பின்பற்ற வேண்டும். ஒப்பந்த வேலைகளிலும் ஆதி-திராவிடர் வீட்டு வசதி வாரியக் கழகம் தலித்துகளுக்கு மட்டும் கட்டுமானப் பணிகளில் ஒப்பந்தப் பணி வழங்கி வருகிறது. இக்கழகம் மாநில



படிப்பகம்

www.padippakam.com

அரசிடம் பங்குத் தொகையாக 3.5 கோடி பெறுகிறது. தற்போது மானியம் எதுவும் பெறுவதில்லை. மத்திய அரசிடமிருந்து ரூ. 30-40 கோடி மட்டுமே பெறுகிறது. இதில் கட்டுமானப் பணிகள் மிகக் குறைவு. கட்டு மானப் பணிகள் உள்ள பொதுப் பணித்துறை, நெடுஞ் சாலைத்துறை, வீட்டு வசதி வாரியத்துறை ஒப்பந் தங்களை தலித்துகளுக்கும் முறையாக வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆகவே இதுவரை தலித்துகள் இத்துறையில் குறைந்த அளவிலேயே உள்ளதால் இவற்றை மற்றவர்க்கு சமமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

## வலுவான இயக்கம்

எனவே இந்தச் சமூகம் நாட்டுப்புறத்தில் எந்த ஒரு தீவிரமான எதிர்ப்பு இயக்கத்தைத் தொடங்க வேண் டும் என்றாலும், நாட்டுப்புற இந்தியாவில் உள்ள எஸ்சி/எஸ்டி - களுக்குள் ஒரு வலுவான நடுத்தர வகுப்பு வர்க்கம் உருவாகாமல், அந்த இயக்கம் வெற்றிபெற முடியாது என்கிறார் சந்திரபான் பிரசாத். வேறு வார்த்தைகளில் சொன்னால், ஒரு வலுவான இயக்கம் கிராமப்புற மக்களை அடித்தளமாகவும் மையமாகவும் கொண்டு உருவாகவேண்டும். அத்தகைய இயக்கத் திற்கு காரணியாக நடுத்தர வர்க்கம் செயல்பட முடியும் என்கின்றார். நடுத்தர வர்க்கம் யார்? இது அரசு ஊழியர்களிலிருந்து தோன்ற முடியாது. ஏனெனில் அவர்கள் முதுகெலும்பில்லாதவர்கள் என்கிறார். இதனுடன் வேண்டுமானால் சுயநலமிகுந்தவர்கள் என்று சேர்த்து கூட எழுதலாம். ஆனால், "கல்வி, கலை-பண்பாடு, தகவல் தொடர்பு, சமூக சேவை, வணிகம் மற்றும் தொழிற்துறைகளிலிருந்தே இத் தகைய நடுத்தர வர்க்கம் பரிணமிக்கிறது" என்னும் அவர் கருத்து ஏற்புடையதில்லை. ஏனெனில்,

- கல்வியாளர்களும் ஒரு வகையில் அரசு மற்றும் தனியார் உடமைகள்தான்.
- கலை இலக்கிய பண்பாட்டுத் தளங்களில் பல போராளிகள் இருக்கின்றனர். எனினும் அவர்களில் பெரும்பாலோர் அரசு ஊழியர்களே. அங்கீகாரம் தேடி நாசகாரர்கள் வலையில் வீழ்பவர்களும், இத்தளங்கள் தலித் முன்னேற்றத்திற்கான ஊடகங்கள் எனப் பாவிக்காது கலை-கலைக்காக எனும் போக்கில் உழல்பவர்களும், அறைக் கதவை சாத்திக் கொண்டு புத்தகங்களை தேடிப்பிடித்து கட்டுரைகளும், கதைகளும் படைப்போம், அதுவே போராட்டம், மக்களை சந்திக்க வேண்டிய அவசியமில்லை என்பவர்களும், தலித்துகள் தனி இயக்கமாவதின் அவசியத்தை உணராது பொதுமை பேசி சுயலாபம் அடைபவர்களும், வாழ்வியல் காரணமாக தங்களைக் குறைந்த விலைக்கு NGO-க்களிடம் விற்றுக் கொள்ளும் கலைஞர்களும் இத்தொகுதியில் அடக்கம்.
- சமூக சேவை என்பது பெரும்பாலும் மக்களை அரசியல்படுத்தாத, எடுத்தோம் துடைத்தோம் NGO அமைப்புகளின் தயவில் உள்ளது.
- வணிகர்கள் புரட்சியை விற்பார்களா அல்லது வாங்குவார்களா என சரியாகத் தெரியவில்லை.
- மிகப் பெரிய போராளிகளாக வடிவம் எடுத்த கன்சிராம் ஒரு அரசு ஊழியராக இருந்தவர். புது தில்லியை தளமாகக் கொண்டு உதித்ராஜ் என்னும் முன்னாள் அரசு ஊழியர் இயக்கம் கட்டி வருகிறார்.

**தலித்துகள் அதிகாரம் பெறும் இடங்கள் காலியாக வைக்கப்பட்டு வயிற்றுப் பசி போக்கும் குறைந்த சம்பளத்திலான பதவிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதானது, ஒதுக்கீடு என்பது தலித்துகள் அதிகாரத்தில் பங்கு பெறுவதன்றி வேலைவாய்ப்பு என்பதாகவே மத்திய மாநில அரசுகளால் கையாளப்பட்டு வருகிறுது.**

ஆகையால், அடிப்படையில் அரசு ஊழியரோ, எழுத்தாளரோ, ஓவியரோ, NGO-வோ, கல்வியாளரோ அல்லது வணிகரோ, பாட்டாளியோ யாராயிருப் பினும் போராளிகளாக இருக்கும் பட்சத்தில் இயக்கத் தில் பங்குபெற முடியும். இதை குறிப்பிட்ட பிரிவில் அடக்கிவிட வேண்டியதில்லை. இவர்கள் குழுவாக கிராமம் நோக்கி நகர்ந்து அறிவுப் பரவல் பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய குழு மட்டுமே இயக்கமாகாது. எப்போது இத்தகையக் குழுக்களுடன் தங்கள் தேவையை உணர்ந்த அடித் தட்டு மக்கள் சேர்கின்றார்களோ அப்போதுதான் இயக்கமாகும். அடித்தட்டு மக்களை ஒன்று திரட்ட அவர்கள் சார்ந்த பிரச்சினைகளைத்தான் முன்னெடுக்க வேண்டுமேயன்றி சிறு குழுக்களின் பிரச்சினைகளை அல்ல. நடுத்தர வர்க்கம் போராட்டங்களை முன் னெடுக்கும்போது அதற்கான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இயல்பு எனினும், அதை மீறி பெரும்பான்மையினரை மய்யப்படுத்தி போராட வேண்டியுள்ளது.

எனவே, தனியார் துறையில் ஒதுக்கீடு எனும் கோரிக்கையை மீறி வளங்களில் பங்கு என தலித்து களின் உண்மையான முன்னேற்றத்திற்கும், அம்பேத்கர் விழைந்த சமூக சமத்துவத்திற்கும் வழிகோலும் வகையில் தொடர்வோம் பயணத்தை. ●



படிப்பகம்

www.padippakam.com

■ ஆ. வெங்கடேஷ்

# சாதியம் காக்கும் கருவி

**ஒரு தலித்தின் உடலானது வர்ண சாதிகளின் உடலுக்கு அச்சுறுத்தலாக அவர்களின் சாதியமைப்பை சிதைவை உண்டாக்கக் கூடியதாக அமைந்து விடுவதால், சிலர் தலித்துகளை எங்கள் சகோதரர்கள், சகோதரிகள் என்று சொல்லலாமே தவிர, மாமன் மச்சானாய் ஏற்றுக் கொள்வது அவர்களின் வர்ணங்களுக்குள் வரையறுக்கப்பட்ட புணர்தல் உரிமைக்கு ஆபத்து நேர்வதாய் அவர்களால் உணரப்படுகிறது.**

இந்த உலகமய காலகட்டம் வரை சாதியத்தின் பரப்பு வெளிகள் விரிவடைந்து கொண்டிருக்கும் வேளையில் சாதியத்தின் அடர்த்தியான நிலைப்புத் தன்மையை நம் மீது நிறுவியுள்ளது. இந்த நிலைப்புத் தன்மையை தாங்கி நிற்கும் களமாக மனித உடல்களை மனுவின் பிறப்பிடக் குறிகளின் ஏற்றத் தாழ்வின் மூலம் இந்த அமைப்பின் உருவாக்கமும், அமைப்பின் அடிக்கட்டுமானமும் எழுப்பப் பட்டுள்ளது.

மனுவின் சாதிய பிறப்பிடக் குறிகளின் வரிசைப்படுத்தலானது அவை அமைந்திருந்த பகுதிகளின் பயன்பாடு, உறுப்புகளின் மதிப்பு ஆகியவற்றை வைத்து வர்ண சாதிகளை வடிவமைத்த இந்த செயலானது, அந்த குறி ஒழுங்குகளை வைத்து மையப்படுத்தப்பட்ட புணர்தலை அந்தந்த வர்ண உடல்கழுக்கேயான ஏகபோக உரிமையாக்கினான். குறிப்பாக வேதகால கலப்பு மணங்களாகக் கருதப்பட்ட அனுலோமா, பிரதிலோமா திருமணங்கள்கூட தலித்துகளுக்கு தொடர்பற்ற நிலையிலேயே நடந்துள்ளன. மனுஸ்மிருதியில் தலித்துகளுக்கு பெரிய தண்டனைத் தொகுப்பு ஏதும் வழங்கப்படாமலும், வர்ணங்களுக்கு அப்பாற்பட்டு நிறுவியதன் வரலாற்று மர்மங்கள் இன்னும் இருண்மையாகவே உள்ளன.

பிறப்பிடக் குறிகளின் வரிசைப் படுத்தலானது மனுவின் செயலாக அமைந்திருந்தாலும், அவன் நிறுவிய வர்ண சாதிகளின் உடல்களானது மனுவின் கருத்தியலை ஏற்று இன்று வரை குறிகளின் மூலம் சாதியத்தை பத்திரமாக பாதுகாத்து வருதலானது நீடித்த வர்ண சாதிகளின் வரலாற்றுக் கேவலமாக உணரலாம். ஒரு தலித்தின் உடலானது வர்ண சாதிகளின் உடலுக்கு அச்சுறுத்தலாக அவர்களின் சாதியமைப்பை சிதைவை உண்டாக்கக் கூடியதாக அமைந்து விடுவதால், சிலர் தலித்துகளை எங்கள் சகோதரர்கள், சகோதரிகள் என்று சொல்லலாமே தவிர, மாமன் மச்சானாய் ஏற்றுக் கொள்வது அவர்களின் வர்ணங்களுக்குள் வரையறுக்கப் பட்ட புணர்தல் உரிமைக்கு ஆபத்து நேர்வதாய் அவர்களால் உணரப் படுகிறது.

சாதியத்தின் செயல்வடிவ காரணிகளாய் உள்ள துல்லியத்தன்மை மற்றும் கூர்மைத் தன்மையானது சமுகத்தின் எல்லா செயல்முறைகளிலும் கண்டிப்பான முறையில் கையாளப்படுகிறது. சமூக வாழ்விடச் சூழலில் சாதி அதிகாரத்தை சிதைவுறாமல் துல்லியமாகப் பேணுவது, சாதி அதிகாரத்தை கூர்மையாக பார்த்துக் கொள்வது போன்ற வர்ண சாதிகளின் செயலானது தலித்துகளை எளிதில் அடையாளப்படுத்தும் வகையில் சில சேரித்தனங்களை (slumhood) வரையறுத்துள்ளது. அந்த சேரித்தனங்கள் ஏழ்மையானதாகவும், அசுத்தமானதாகவும், கோபமானதாகவும், களவானதாகவும், புனிதத்தை சிதைக்கும் கூறுகளை உள்ளடக்கியதாகவும் பொருள் கொள்ளப் படுகிறது.

குறிப்பாக மதப்படு கொலையை ஆராய்ந்தால், அவை முழுக்க ஒரு கருத்தியல் சாராம்சத்தை கொண்டதாகவே உள்ளது. அதாவது, ஒரு சிறுபான்மை கருத்தியல் பெரும்பான்மை கருத்தியலுக்கு அடிபணிய மறுக்கும் போதும் அல்லது சிறுபான்மை கருத்தியல் விரிவடையும் தளத்தில் பெரும்பான்மையினரின் தாக்குதல் தொடங்குகிறது. ஆனால் சாதியப்படு கொலைகளை எடுத்துக் கொண்டால், ஒரு இறையாண்மை மிக்க வர்ணசாதிகளின் உடல்களுக்கு நிகராக வர்ணத்திற்கு வெளியே உள்ள ஒரு உடல் போட்டியாக வரும்போது அந்த வர்ண உடலின் அதிகாரத்திற்கு ஆபத்து நேருவதாய் நினைத்து சாதிய தாக்குதல் உருவாகிறது.

மத ரீதியான மற்றும் சாதிய வன்கொலைகளை ஆராய்ந்தால் மத ரீதியான வன்கொலைகளை விட சாதி ரீதியான வன்கொலைகளே அதிக வன்மம் கொண்டதாய் உள்ளது. மதக் கலவரத்தில் சிறுபான்மை உடல்களை கொடூரமாக வெவ்வேறு விதத்தில் கொலைப் படுத்தல் மட்டுமே நடக்கிறது. ஆனால் சாதிய வன்கொலைகளை ஆராய்ந்தால் தலித்துகளின் உடல்களை கொலைப்படுத்தல் மட்டுமின்றி இறந்த உடல்களை இழிவுப் படுத்தி கேலி வதை செய்வது உலக வன்கொடுமை வரலாற்றிலேயே தலித்துகளின் மீது நிகழ்வது மட்டுமே கொடூரமானதாக உள்ளது. (கற்பழிக்கப்பட்ட பெண்ணுறுப்புகளில் கட்டையைச் சொருகுவது, ஆண் குறிகளை அறுத்தெடுத்து



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் வாயில் திணிப்பது - ஆதனூர் பொண்ணருவி, கொடியங்குளம் படுகொலை).

மார்க்சியத்தில் உடைமைகளை சமநிலை செய்வதுபோல், தலித்தியத்தில் உடல்களை சமநிலை செய்வதன் அவசியத்தை உணரலாம். நகர்மய சூழலில் இந்திய குடும்ப அமைப்பின் பெரும் பகுதி பூர்சுவா குடும்ப அமைப்பின் அலகுகளாக மாறி இருந்தாலும் சுரண்டலுக்கு உள்ளாகும் குடும்பங்களாக, தலித்துகளின் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. பூர்சுவ குடும்ப அமைப்பின் அலகுகளாக செயல்பட்டாலும் அவற்றின் அடிக்கட்டுமானம் சாதியத்தினாலேயே எழுப்பப்பட்டுள்ளது. ஒரு வர்க்கத்திலிருந்து, இன்னொரு வர்க்கத்திற்கு கடப்பதற்கு உடைமை தடையாக இருப்பதுபோல் ஒரு சாதியிலிருந்து இன்னொரு சாதிக்கு கடப்பதற்கு உடல் ஒரு தடையாக உள்ள நிலையில், வர்க்க அமைப்பில் எளிதாக மாறுபடும் தன்மை கூட சாதியத்தில் உள்ள இறுக்கமான நிலையானது ஒரு கீழ்ப்படுத்தப்பட்ட உடலை ஒத்துக்கொள்ளாததே அகமண முறையின் ஆதாரப் புள்ளியாகிறது.

பொதுவாக தன்னுடைய செல்வத்தை சொந்த குழந்தைகளுக்கு விட்டுச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்திலிருந்து ஒருதார மணம் தோன்றியதாக ஏங்கல்ஸ் கூறியதைப் போல், தன் உறுப்பினராக உள்ள ஒரு சாதியிலிருந்து தன் சொந்த குழந்தைக்கு அந்த சாதியின் பிறப்பு மாண்புகளை விட்டுச் செல்ல வேண்டும் என்ற விருப்பமே அகமண முறைக்கு அடிகோலியதாக கருதலாம்.

மார்க்சிய இயக்கவியல் விதிப்படி பார்த்தாலும் உள்ளடக்கமும் வடிவமும் என்பது சேரி என்ற வடிவத்தில் ஒடுக்குமுறை மட்டுமே உள்ளடக்கமாக உள்ளது. இங்கு சசூரின் மொழிவழி உலகம் கூடமுடமாக்கப்பட்டு, உடல்வழி உலகம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. மார்கன் கூறுவதைப் போல் குடும்பம் இயக்கம் உள்ளதாகவும், இரத்த உறவு இயக்கமற்றது என்பது இந்திய குடும்ப முறைக்கு பொருத்தமானது.

தலித்தியத்தின் வாழ்வியல் கூறுகள் பௌத்தத்தின் பகுதிகளாக கூறப்பட்டாலும் மீதமுள்ள சரிபாதி வாழ்க்கை முறை, இந்துத்துவ மரபுகளை உள்ளடக்கியதாகவே உள்ளது. கிரிக்கெட், சினிமா, தேசப்பற்று போன்றவை இந்து தன்னிலையின் உருவாக்க மையங்களாக மாறியுள்ளன. காட்சி ஊடகங்களான MTV போன்றவை இந்து கலாச்சார அடையாளங்களான மடிசார் போன்ற மரபுகளை உடைத்திருந்தாலும், அவற்றிற்கு மாற்றாக அமெரிக்க அடையாளங்களை முன் வைக்கின்றன. இந்துத்துவ அடையாளம் சாதிக்குள் அடைப்பதைப்போல், அமெரிக்க அடையாளங்கள் வணிகத்தனத்தால் வயிற்றில் அடிப்பதைப் போல் உள்ளது. குறிப்பாக அமெரிக்கா தன்னிலை உருவாக்கும் முயற்சிகள் இந்து தன்னிலையைப் போல் ஆபத்தின் அறிகுறிகளாக உணரலாம்.

இவ்வாறு உடல்களை சாதியம் மறைந்தொதுங்கும் இடமாக வைத்துள்ள வர்ணங்களை கடந்து மனுவை மறுத்து, நிகழும் காதல் திருமணங்களுக்கு பேராதரவு தருவதோடு மட்டுமின்றி, உடல்களை சாதியத்தின் தற்காப்பியமாக கருதும் வர்ண சாதிகளை கிண்டலடிக்கும் படைப்புகளை கொடுக்க முன்வருவது ஒரு சமநிலை விரும்பும் சமூகத்தின் ஏக்க நிலையாக இருக்கும்.

---

# ஹைக்கூ

■ பொன். குமார்

மறைந்துள்ளது
உழைக்கும் கையில்
அதிர்ஷ்ட ரேகை.

❑❑

மூன்று வரி
ஏழு வார்த்தை
ஒரு ஹைக்கூ.

❑❑

யாரை ஏமாற்ற
முதுகில் நாமம்
சின்ன அணிலே

❑❑

பூவின் வாசம்
பட்டுப்பூச்சிக்கான
அழைப்பு.

❑❑

ஊழலுக்கு விருது
கொடுத்த விருதை
திரும்ப பெறுதல்

❑❑

நாடு தள்ளாடுகிறது
ஆட்சி செய்கிறார்கள்
முதியோர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# காரி கலை இயக்கத்தின் வெளியீடான ஒலி நாடா முரண்

■ டாக்டர் கே.ஏ. குணசேகரன்

## விமர்சனம்

காரி கலை இயக்கம் வெளியிட்டுள்ள 'முரண்' எனும் ஒலிநாடா, இவ்வியக்கத்தின் முதல் வெளியீடாகும். இது 9 பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் இடையே பாடல்களின் விளக்கவுரை அமைகிறது.

ஒரு கலைப்படைப்பு என்பது அதனை நுகர்பவரை தன்வயப்படுத்திவிடக்கூடாது, மாறாக நுகர்பவரை படைப்பிலிருந்து விலக்கி வைக்க வழி செய்வதோடு சிந்தனையைத் தூண்டிச் செயற்பாட்டுக்கான உந்து சக்தியை விதைக்க வழி செய்ய வேண்டும்.

இதற்கு, கலை வெளிப்பாடானது ஒற்றைப் பரிமாணத்தில் நுகர்பவர்களைச் சென்றடையாமல் பன்முகத் தன்மையோடு முன்னிறுத்தும் வல்லமையை கலை பெற்றிருக்க வேண்டும். மக்கள் கலைக்கும், மக்கள் கலைஞர்களுக்குமான கலைப்படைப்பு மேற்குறிப்பிட்ட தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும். இத்தகைய தன்மைகளை நமது மண்ணின் மரபுக் கலைகள் பெற்றுள்ளன. மண்ணின் மரபுக் கலைகளில் மணம் குன்றாமல் அதாவது குறிப்பிட்ட பல்வேறு இடையீடுகள் உள்ளன. இந்த இடையீட்டுக் கூறுகளே நமது மண்ணின் மரபுக் கலைகளில் கலைப் படைப்பில் தோய்ந்து, வாய்பிளந்து கிடந்து விடாமல், அக்கலைப்படைப்பிலிருந்து விலகி நின்று சிந்திக்க வழி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. நமது கூத்துக்களில், ஆட்டங்களில், கோமாளி அல்லது கட்டியக்காரன் முதன்மைக் கதாப்பாத்திரங்களைக் கேள்விக்குள்ளாக்குவதும், பல வேளைகளில் முதன்மைக் கதைப் போக்கிலிருந்து துண்டித்து நடப்பு செய்திகளை வேடிக்கையாகப் பேசுவதும், பாடுவதும், நடித்துக் காட்டுவதுமான கலைக்கூறுகளை அமைத்து பன்முகத்தன்மை அமைந்திட காரணமாகின்றான். நமது மண்ணின் மரபு கலைகளில் தகவல்களை பரப்புவதற்கான பேசும் மொழி (Verbal language), பேசாத மொழி (Non Verbal language), எனும் இருவிதத் தன்மைகள் அமைந்துள்ளன.

மண்ணின் இசை மற்றும் இசைக்கருவிகள், பாணி (Method) போன்றவைகளைக் கைக்கொண்டு இந்த முரண் என்னும் ஒலிநாடா தயார் செய்யப்பட்டிருப்பது மனதிற்கு இதம் தருவதாக உள்ளது. கலைக் கூறுகளைச் சரிவரக் கையாண்டிருப்பதில்தான் ஒரு கலைப்படைப்பு வெற்றி பெறுகிறது. இது குறித்த பார்வையுடன் 'முரணை' அணுகுவோம்.

பறை வாசிப்புடன் ஒலி நாடா தொடங்குகிறது.

*"தப்பியது சிலப்பேர் தப்பாதோர் பலப்பேர்*
*இந்து மத சிறையுடைத்து*
*தப்பிக்க காத்திருப்போர் நூறாயிரம் பேர்"*

எனும் சுப்பையாவின் பாடல் இந்து மதத்தை தோலுரித்து காட்டுவதாக 'பளிச் பளிச்' என்று கருத்துச் செறிவான பாடல் வரிகளைக் கொண்டுள்ளது.

*பாடகர்: "மக்களை சாதிகளாகப் பிரித்தது*
*எந்த மதம்? எந்த மதம்?"*

*குழு: இந்து மதம், இந்து மதம்*

*கோவை படுகொலைக்கு காரணம்...*

*கிறித்தவ கன்னியரை அழித்தது....*

*உயிரோடு பாதிரியாரை எரித்தது....*

என தற்கால நடைமுறைப் பிரச்சினைகளைத் தொட்டுச் சொல்லும் பாடல். மண்ணின் மரபிசைப் பாடல் வகையில் ஒன்றான 'ஏசல்' எனும் கேள்வி பதில் கொண்ட வடிவத்தைப் இப்பாடல் பெற்றுள்ளது. முன் பாட்டுக்காரர் எந்த மதம் என கேள்வி கேட்கும் போது இந்து மதம் என பதில் சொல்ல வரும் குழுவினர் எரிச்சலோ, கிண்டலோ, எதிர்ப்புணர்வோ வெளிப்படாமல் இனிமை தரும் இதமான கூட்டுக் குரலில் பாடுவதை கவனிக்கும் போது இசையமைப்பில் கவனம் போதாமை என மனம் கொள்ள வைக்கிறது. 'தப்பியது சிலப்பேர்' எனும் பாடல் அடி தப்பியவர் சிலப்பேர் என இருந்திருக்க வேண்டும்.

### இரண்டாவது பாடல்

"அரசாங்க அதிகாரம் யாருக்கானது. சாதி ஆண்டைகளின் ஏவல் நாயாய் சேவை செய்யுது" எனும் பாடல் துவங்குவதற்கு முன்பாக வானொலி, தொலைக் காட்சிகளில் இடம் பெறும் இந்திய இசையை அடையாளப்படுத்தி 'கீ -போர்டு'



படிப்பகம்

www.padippakam.com

வாசிக்கிறது. இதைத் தவிர்த்திருக்கலாம். மாறாக சொந்த இசைப் படைப்பினை தந்திருக்கலாம்.

- அரசு திட்டமெல்லாம் மலம் துடைக்கும் பேப்பரானது
- இருபது அம்ச திட்டம் யாரு மசுரப் புடுங்குது
- சேமநல அரசு என்றால் கிடைக்கும் செருப்படி

எனும் அரசின் மீதுள்ள வெறுப்புணர்வை காட்டும் வரிகளாக அமைகின்றன. பொருள் மிகுந்த இப்பாடல் பாடியோர் குரலில்தான் "கனம்" அற்றும் குரல் அலைவுகள் (Vibration) இன்றியும் வெளிப்படுகிறது. பாடலின் கடைசியில் தாளப்போக்கு வேகத்திற்கு பாடும் குரல்கள் தேக்கமடைந்து போயுள்ளது.

மூன்றாவது பாடல்

"பெண் விடுதலை இல்லையென்றால்
மண் விடுதலை இல்லையடி"

என உற்சாகமான குரல்களில் தொகையறா அமைகிறது.

"ஆண்களின் உலகமடி - பெண்கள்
அதிகாரம் பெறுவதெப்படி
ஆணாதிக்க சமூகமடி - இந்த
அமைப்பை மாற்றி காட்டுவோமடி"

எனத் தொடங்கும் பாடல் உற்சாகம் குறைந்து ஒலிக்கின்றது. பல்லவியும் சரணமும் இசைப்படி நிலையை இலாவகமாக வளர்த்துச் சென்றுள்ள முறைமைக்கு இசையமைப்பாளருக்கு ஒரு பாராட்டுத் தெரிவிக்கலாம். இடையிடையில் கீ போர்டு வாசிக்கும் இசை குறிப்பானது, மேல் தளம், கீழ் தளம் என உத்தி முறையை கையாண்டு கேட்போருக்கு சுவை தருவதாக உள்ளது. வேளாவின் குரலில் இனிமையுள்ள அளவுக்கு கம்பீரம் (கணம்) தேவைப்படுகிறது. மாணவியின் குரலைப் போன்று தெம்பு இல்லாமல் ஒலிக்கிறது. அச்சமில்லை, வீரத்தோடு வாழ்வோமடி, புது மனுஷியாக வாழவேண்டும் எழுந்து வாங்கடி என்று பொருள் பொதிந்த பெண்ணிய விடுதலைக்கான குரலில் ஆண் குரல் சேர்ந்திருப்பது தேவையில்லை எனப்படுகிறது.

நான்காவது பாடல்

வீரத் தாலாட்டு என நான்காவது பாடல் வருகிறது. 'அனித்ரா அறக்கட்டளை' கிட்டத்தட்ட 260 கிராமங்களை தத்தெடுத்து சமூகப் பணிகளை செய்துவருகிறது. இவர்களது அரவணைப்பில் உள்ள புலவன்பாடி என்னும் கிராமம் ஆரணியிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. அண்மையில் அங்கு நடந்த சாதியப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களும், பிரச்சினைகளை எதிர்க்கொண்டு போராடி வெற்றிப்பெற்ற ஆவேசக் குரல்களும் வீரத்தாலாட்டில் நினைவுக்கொள்ள வைக்கிறது. மாரியம்மாவின் வசமான குரல் வீரத்தாலாட்டு சம்பவங்களை நினைவு கொள்ள வைக்கிறது. பாடலின் இடையில் இடம் பெறும் போராட்டத்தை சித்தரிக்கும் கருத்துக்கள் கொண்ட குரல்கள் ஒலிப்பது நடந்த சம்பவத்தை கண் முன் காட்சிப்படுத்துவதாக அமைகிறது. பல்வேறு வகைகளின் சிறப்பு பொருந்திய இப்பாடல் வசனங்களை வெளிப்படுத்தும்போது பாடிய பாடலின் சுதி, தாளம் இவ்விரண்டையும் மனம் கொள்ளாமல் அமைந்துள்ளது.

ஐந்தாவது பாடல்

மதவாதத்தைச் சாடும் பாடலாக புனிதா பாடியுள்ளார். புனிதா இந்த ஒலி நாடாவில் முதன் முதலாக குரல் தந்துள்ளார் என்பது தெரிகிறது. இவரைப் போலவே மகிழினி, வேளா, ரத்னா இவர்கள் யாவருமே ஒலிப்பதிவு நாடாவில் முதன் முதலாகப் பாட முன்வந்தோர் எனத் தெரிகிறது. தொடர்ந்து களங்களில் பாடப் பாட இயல்பாகப் பயிற்சி அமைந்துவிடும். இவர்களது குரல் மக்கள் பணிக்கு உகந்த குரலாக அமையும் என நம்பலாம். இந்த இளம் பாடகர்களுக்கு நமது வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரிவிக்கலாம்.

ஆறாவது பாடல்

மாரியம்மாவின் குரலில் சுப்பையாவின் மதவாதத்தை எதிர்க்கும் பாடல் இது. பாடலின் தொடக்கத்தில் நாகுவின் நாதஸ்வரம் சரியான கிண்டல் தளத்தில் (Mockery) ஒலித்து பாடலை மதவாதத்திற்கு எதிர்ப்பான உணர்வோட்டத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. எந்த மதம் நல்ல மதம் எனக் கேள்வி எழுப்பி அதற்கு விடை தருவதான நோக்கில் அமைவதான கருத்துள்ள பாடல் இது.

ஏழாவது பாடல்

'ரகுபதி ராகவ சீதாராம்' எனும் இசையை கீ போர்ட் வாசிக்க 'சூடு சொரணை இல்லாம வாழுறோங்க' எனும் தலித் கவிஞர் N.T. ராஜ்குமாரின் குரலில் அமைந்த பாடல் எழுதுவதற்கு பயன்படுத்தாமல் போனது ஒரு இழப்பாகவே தோன்றுகிறது.

எட்டாவது பாடல்

மண்ணை மீட்கனுங்க - தன்
மானத்தை காக்கனுங்க
நிலத்தை இழந்ததாலே - நம்
பலத்தை இழந்தோமுங்க

எனும் நல்ல பாடலில் இடையிடையே பறை வாசிப்பு நடை வகை வகையாய் இடம் பெறுகிறது. பாடும் குரலின் சுதி வேறு, பாட்டுக்கு அமைந்த தாளம் வேறு என் பதை கணக்கில் கொள்ளாமல் பாட்டில் சேராத பறை, நடை இடம் பெற்றுள்ளது. சுதியும் தாளமும் பறை நடைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் போகின்றது.

ஒன்பதாவது பாடல்

"இந்து இல்லடா - நான்
இந்து இல்லடா"

எனும் பாடலின் பல்லவி கொண்டுள்ள மெட்டு



படிப்பகம்

www.padippakam.com

அருமையாக உள்ளது. சரணம் சிறுவர் விளையாட்டுப் பாடல் போன்று எளிய முறையில் அமைந்துள்ளது. சனங்களின் சாமி கலாச்சாரத்தை உயர்த்திப்பிடிப்ப தாகவும், இந்துத்துவ கடவுளின் கலாச்சாரம் எந்த வகையில், சனங்களின் சாமிகளின் கலாச்சாரம் எந்த வகையில் உயர்ந்தது என்று பாடல் விளக்குகிறது. "ஆடு தலையாட்டிடுச்சி, வெட்டறா" எனும் வசனப்பகுதி பாடலின் ஊடாக இடம்பெறுகிறது. சுதியும், தாளமும் பாட்டுக்கு உள்ளதை வசனமும் கொண்டிருக்குமெனில் சிறப்புப் பெற்றிருக்கும்.

சுப்பையாவின் இரு பாடல்கள் பெற்றுள்ள கருத்துச் செறிவு பாடல் வடிவம் பிற பாடல்களில் குறைந்து காணப்படுகிறது. வீரத்தாலாட்டு விதிவிலக் காக உள்ளது. ஒலிநாடாவின் முகப்போவியம் செய்துள்ள யாக்கனுக்குப் பாராட்டு தெரிவிக்கலாம். 'தப்பியது சிலப்பேர்' 'இந்து இல்லடா' எனும் இரு பாடல்களும் மனதில் அசைப்போட வைக்கின்றது. இசையறிவு கொண்டோரின் பாராட்டுதலைப் பெற இவ்வொலிநாடாவை கொண்டுவர முயற்சி எடுத்த கலைஞர்கள் கூடுதல் சிரத்தை எடுத்திருக்க வேண்டும். எனினும் மக்கள் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் இந்த 'முரண்' ஒலிநாடா சாமானியப்பட்ட மக்களிடம் வரவேற் பைப் பெறும் என வாழ்த்தலாம்.

மக்களை இரசனைத் தளத்தில் உயர்த்திட நமக்கு மிகுந்த பொறுப்பு உண்டு என்பதை களப்பணி வழியாக உணர்ந்துள்ள 'காரி கலை இயக்கம்' எதிர்காலத்தில் கூடுதல் மதிப்பினைப் பெறத்தக்க செயல்பாட்டினை செய்யும் என வாழ்த்துவோம். இப்படியான ஒரு நீண்ட விமர்சனம் இதுபோன்ற ஒரு ஒலி நாடாவுக்குச் செய்யப்படுவது நமது கலை விமர்சன உலகில் புதியதாக தோன்றலாம். ஆனால் இது தேவை. ஊடகங்கள் வளர்ந்து வரும் வேளை ஐயப்ப சாமிக்கும், அருணாச்சலேஸ்வரருக்கும், கரு மாரிக்கும், மருவத்தூருக்கும் என விதவிதமான ஒலி நாடாக்கள் இந்துத்துவத்தை பரப்பிட வெளியாகும் இன்றைய சூழலில் மக்கள் விழிப்புணர்வுக்காக படைக்கப்படும் இதுபோன்ற முயற்சிகள் பன்மடங்கு பெருக வேண்டும் எனும் நோக்கில் இந்த விமர்சனம் தேவைப்படுகிறது. ஒலிநாடாக்கள் எவ்வாறு படைக் கப்பட வேண்டும், படைக்கப்படக் கூடாது என்று விளங்கிக்கொள்ளவும், மண்ணின் கலைகளை மக்களிடம் பயன்படுத்திக் கொள்ள கற்றுக் கொடுப்பதற்காகவும், இத்தகைய (Applied folk, Arts, Dalit arts) விமர்சனங்கள் உதவும். எண்ணிக்கையற்ற கலைப்படைப்புகள், மக்கள் கலைகள் என உருப்பெற வேண்டும். அத்தகைய நோக்கிற்கு இது துணை செய்ய வேண்டும்.

ஒலிநாடா கிடைக்கும் இடம்:

காரி கலை இயக்கம்
தீனபந்துபுரம், வழி - வெங்கல்ராஜுகுப்பம் - 517 599. (ஆந்திர மாநிலம்)
ஒலிநாடா விலை ரூ. 40/- குறுந்தட்டு விலை ரூ. 100.

## புரிதல்

■ வானதி சிவம்

உற்சவ தாண்டவத்தில்
உருக்குலைந்த தேகம்
போர்வை விலக்குகையில்
சுட்டுவிரல் நீட்டும் கடிகாரம்
பணிமுடிப்பு பின் காத்திருப்பு
பஞ்சு மூட்டையாய்
பேருந்து பயணம்
புற்றினை தேடும் பாம்பாய்
குறிகளின் குமைச்சல்
நேரம் கடந்த பரிதவிப்பில்
நிற்க, முறைப்பதாய்
முலையை வெறிக்கும்
மேலதிகாரி
தேக இறுதிகளின் வெம்மை
இருக்கையின் இம்சை
புட்டம் வலிக்க தொடைகள் துவள
நந்தையாய் நகர்கிறேன்
உடைந்த வளையல் துண்டுகளை
கோர்ப்பதாய்
மவுனத்தை கோர்க்கிறேன்
சமூக புரிதலை தேடி...



படிப்பகம்

www.padippakam.com

■ ஐ.ஜா.ம. இன்பகுமார்

# மத்திய பட்ஜெட் 2004 ஓர் அலசல்

அய்க்கிய முற்போக்கு கூட்டணியின் குறைந்த பட்ச பொதுச் செயல்திட்டத்தின் பெரும்பாலான அம்சங்களைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டான, முதல் வரவுசெலவுத் திட்ட அறிக்கையை, மக்களவையில், 8 சூலை 2004, வியாழக் கிழமை அன்று நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

## பட்ஜெட்டின் சிறப்பு அம்சங்கள்

- அனைவருக்கும் தண்ணீர் மற்றும் மின் வசதித் திட்டம்.
- ஏழைகளுக்கு உணவு உத்திரவாதம் மற்றும் பரம ஏழைகளுக்கு உணவு கிடைக்க மானியத் திட்டம்.
- வேலைக்கு உணவுத் திட்டம், சர்வ சிக்ஷான் அபியான், அடிப்படை சுகாதார, குடிநீர் திட்டங்களுக்காக கூடுதலாக ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கீடு.
- வருமான வரி, நிறுவன வரி, சுங்கவரி, கலால்வரி, சேவை வரிகளின் மீது 2% கல்வி வரி கூடுதலாக வசூலிக்கப்படும்.
- சேவை வரி 8% லிருந்து 10% மாக உயர்வு. மேலும் பல பிரிவுகளும் பட்டியலில் சேர்ப்பு.
- சென்னை அருகே கடல் நீரை குடிநீராக்க ரூ.1000 கோடி திட்டம்.
- முதியோருக்கு 9% வட்டியில் புதிய சேமிப்புத் திட்டம்
- எளிமையாகிறது கல்விக் கடன்
- சிறுசேமிப்புகளான பி.பி.எஃப், பி.எஃப், சிறப்பு முதலீட்டுத் திட்டங்களுக்கான வட்டியில் மாற்றமில்லை.
- கம்ப்யூட்டர்களுக்கு முழு கலால் வரி விலக்கு.
- பரம ஏழைகளுக்கும் உணவு கிடைக்க மானியத் திட்டம். ஏழைகளுக்கு உணவு உத்திரவாதத் திட்டம்.
- அனைவருக்கும் குடிநீர் திட்டம்.
- அனைவருக்கும் மின்வசதித் திட்டம்.

- ❑ சிறு தொழில் நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பட்டியலில் இருந்து 85 தொழில்கள் நீக்கம்.
- ❑ கோழி மற்றும் இதர இறைச்சி, மீன் ஆகியவை தயாரிப்புக்கான கலால் வரி 16% இருந்து 8% குறைப்பு.
- ❑ விரைவுபடுத்தப்பட்ட பாசன திட்டங்களுக்காக ரூ.2800 கோடி.
- ❑ கூட்டுறவு வங்கி முறையைச் சீரமைக்க பணிக்குழு அமைப்பு. அக்டோபர் 31 க்குள் இக்குழு தனது அறிக்கையை அளிக்கும்.
- ❑ தேசிய வேளாண் இன்சூரன்ஸ் திட்டத்தை இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மாற்றி அமைக்கும்.
- ❑ எய்ட்ஸ் தடுப்பு திட்டங்களுக்காக ரூ.259 கோடி ஒதுக்கீடு.
- ❑ தலித்துகளுக்கு வீடு தரும் சிறப்பு திட்டம்.

- ஊரகப் பகுதிகளில் 100 அல்லது அதற்கு மேற்பட்ட படுக்கை வசதிகளுடன் தொடங்கப்படும் மருவத்துவ மனைகளுக்கு வரி விலக்கு.
- அனைத்து குடிநீர் திட்டங்களும் ராஜீவ்காந்தி குடிநீர் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்
- எல்லாக் குழந்தைகளையும் எட்டாம் வகுப்புவரை படிக்க வைக்க உறுதி.
- ரூபாய் 6 ஆயிரம் கோடியில் கிராமப் பகுதியில் வேலைக்கு உணவுத் திட்டம்.
- குறைந்தபட்ச செயல்திட்டத்தை 5 ஆண்டுகளில் அமலாக்க செயல்திட்டம். மேலும் பல தொழிற்பயிற்சி நிலையங்கள் (ஐ.டி.ஐ)
- பீகாருக்கு சிறப்புத் திட்டமாக ரூ. 3,225 கோடி ஒதுக்கீடு
- மத்திய அமைச்சர்களின் சம்பளம், சுற்றுப்பயண செலவுக்கான நிதி ஒதுக்கீடு குறைப்பு



படிப்பகம்

www.padippakam.com

- அனைத்து ஆம்புலன்ஸ்க்கும் கலால் வரி ரத்து
- மத்திய அரசு கடனுக்காக மாநில அரசுகள் வழங்கும் வட்டிவிகிதம் 10.5% லிருந்து 9% ஆக குறைப்பு.
- ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு உதவித் திட்டம்.
- தொலை தொடர்பு துறையில் அன்னிய முதலீடு 49% லிருந்து 74% ஆக உயர்வு
- விமானப் போக்குவரத்துத் துறையில் அன்னிய நேரடி முதலீடு 40% லிருந்து 49% ஆக உயர்வு
- இன்சூரன்ஸ் துறையில் அன்னிய நேரடி முதலீடு 26% லிருந்து 49% உயர்வு
- புதிய முதலீட்டு கமிஷன் அமைப்பு
- அயல்நாட்டு நிதி முதலீட்டு நிறுவனங்கள், கடன் திட்டங்களில் முதலீடு செய்யும் உச்சவரம்பு 100 கோடி டாலர்களில் இருந்து 175 கோடி டாலராக உயர்வு.
- பங்கு சந்தையுடன் தொடர்புடைய பரஸ்பர நிதி நிறுவனங்களுக்கு ஈவுத் தொகை மீதான வட்டி விலக்கு தொடரும்.

## பட்ஜெட் விமர்சனப் பார்வை

சாமானிய மக்களுக்கான பட்ஜெட்டில், விவசாயத்துக்கும், கிராமப்புற வளர்ச்சிக்கும் ஊக்கம் தரும் பட்ஜெட் என்றெல்லாம் முதலாளித்துவ பத்திரிக்கைகள் புகழ்ந்து தள்ளுகின்றன. ஆனால் இந்த பட்ஜெட் எல்.பி.ஜி கொள்கைகளுக்கு மாற்றுப் பாதையோ, விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்கின்ற வளர்ச்சிப் பாதையிலான பட்ஜெட்டோ அல்ல.

தண்ணீர் மற்றும் பாசனம் போன்ற பிரச்சினைகள் குறித்து வரவேற்கத்தக்க அறிவிப்புகள் உள்ளதோடு ஊரக கடன் வசதி பற்றி மூன்றாண்டுகளுக்கான இலக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒதுக்கீடுகள் என்பதை கணக்கிலெடுத்துக்கொள்ளும்போது வேளாண்மை, பாசனம், ஊரக வளர்ச்சி ஆகியவற்றில் பெரிய அதிகரிப்பு இல்லை.

திட்ட ஒதுக்கீடு சென்ற ஆண்டின் பட்ஜெட் மதிப்பீடான ரூ. 1,20,971 கோடி ரூபாயைவிட கிட்டத்தட்ட 25,000 கோடி அதிகமாக, அதாவது 1,45,590 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள் வலுப்படுத்தும் முன் முயற்சியாக ஐ.ஐ.டி., தொலைபேசி நிறுவனம் ஆகியன ரூ. 508 கோடி பெறுகிறது. மேலும் பொதுத்துறை நிறுவனங்களை ஒழுங்குபடுத்த ஒரு வாரியம் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் ஒரு பொதுத்துறை நிறுவனத்தை மூடவோ, விற்கவோ பரிந்துரை செய்யும் அபாயம் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் பக்கமிருந்து பாதுகாக்கவும் வாய்ப்பு உள்ளது. மேலும் இலாபகரமாக செயல் பட்டுவரும் தேசிய அனல் மின்நிலையம், என்.பி.டி.சி பங்குகளில் 5% பங்கு சந்தையில் விற்பது என்ற முரண்பட்ட அறிவிப்பையும் காணமுடிகிறது.

பொதுவான பொருளாதார வேலைகள் என்பதற்கான ஒதுக்கீடு சென்ற ஆண்டில் ரூ. 2033/- கோடியாக இருந்தது. தற்போது இது ரூ. 9982 கோடியாக அறிவிக்கப்பட்டதோடு அறிவியல் தொழில்நுட்பம், சுற்றுச் சூழல், தொழில், வேளாண்மை, கனிமம் போன்ற துறைகளில் ஒதுக்கீடு உயர்ந்துள்ளது.

அட்டவணை பார்க்க

கோடியில்

| | | | |
|---|---|---|---|
| இராணுவம் | 60,300 | 77,000 | 16,700 |
| திட்டம் | கடந்த ஆண்டு பட்ஜெட் (2003-04) கட்சி : பா.ஜ.க. நிதிமந்திரி : ஜஸ்வந்த் சிங் | கடந்த ஆண்டு பட்ஜெட் (2003-04) கட்சி : அ.இ.கா.க நிதிமந்திரி : ப. சிதம்பரம் | பட்ஜெட் வித்தியாசம் |
| திட்ட ஒதுக்கீடு | 1,20,947 | 1,45,590 | 25,000 (+) |
| வேளாண்மை | 3,671 | 4,643 | 972 (+) |
| கிராமப்புற மேம்பாட்டு திட்டம் | 15,519 | 11,456 | 4,063 (-) |
| கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் | 9,640 | 4,590 | 5,050 (-) |
| பொருளாதார வேலைகள் | 2,033 | 9,982 | 7,949 (+) |
| இராணுவம் | 60,300 | 77,000 | 16,700 (+) |

மேற்கண்ட அட்டவணையை உற்று நோக்கும் போது கிராமப்புற மேம்பாடு மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புக்கான ஒதுக்கீடுகளை குறைத்துவிட்டு விவசாயத்திற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்கின்ற வித்தை புரிந்து கொள்ளலாம்.

CMP-யில் வறுமையில் உள்ள குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாக அறிவிப்பு உள்ள நிலையில், பட்ஜெட்டில் ஏற்கனவே இருந்த ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது. இதனை ஈடுகட்டும் வகையில் திட்ட கமிஷனுக்கு ரூ.10,000 கோடி சிறப்பு ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் இரண்டு பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றனர். CMP-யின் கொள்கைப்படி இலக்குகளுக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை தரவேண்டுமெனில், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ.45,000 கோடி தேவை. ஆனால் ரூ.4590 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டக் கமிஷனுக்காக ஒதுக்கப்படும் 10,000 கோடி, 2% மேல்வரி மூலம் திரட்டப்படுகிறது. இந்த ரூ. 10,000 கோடியில், ரூ.4910 கோடி கல்விக்காக ஒதுக்கப்படும் நிலையில் மீதம் உள்ள ரூ.5,100 கோடியில் மட்டுமே கிராமப்புற மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். சுருக்கமாகச் சொல்லின் ஒட்டுமொத்த கிராமப்புற மேம்பாட்டுக்கான ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட 39% குறைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

பாழ்பட்டு, தூர்ந்து போய்க்கொண்டு இருக்கின்ற நீர்நிலைக்கான வரி, குளம், கால்வாய் ஆகியவற்றை சீரமைக்க பல ஆயிரம் கோடி தேவைப்படும் நிலையில், வெறும் 100 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இவை 5 - 7 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், அனைவருக்கும் குடிநீர், இலவச மின்சாரம், பின்தங்கிய மாநிலங்களுக்கு சிறப்பு நிதி முதலியவை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான பணம் எங்கிருந்து திரட்டப்படும் என்று சொல்லப்படவில்லை.

விவசாயத்துக்குப் பதிலாக தோட்டக்கலை, உணவு பயிரிடுதல், வர்த்தகம் சார்ந்த விவசாயம் போன்றவற்றிற்கு சலுகையுடன் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை நசுக்குவதோடு ஏற்கனவே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பண்ணை விவசாயத்தில் ஊடுருவிய, பன்னாட்டு கம்பெனிக்கு மேலும் வாய்ப்பு அதிகரிக்கும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. உணவு தானியம், விதைக் கொள்முதல் ஆகியன அடியோடு நீக்கம், விவசாய உற்பத்தி பொருட்களின் விலை வீழ்ச்சி, இடு பொருள் செலவு உயர்வு எனக் கூறிவிட்டு விவசாயத்திற்கான கடனுதவி அறிவிக்கப்பட்டுள்ளது. இது பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டும் சிறுபிள்ளைத்தனம் போல் உள்ளது.

பாகிஸ்தானுடன் நட்புறவு, சீனாவுடன் பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் நட்புறவு என கூறிக் கொண்டு 'சுகோய்' 'ஹாக்' போன்ற போர் விமானங்களை வேண்டி இராணுவத்திற்கு ரூ.77,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ.16,700 கோடி அதிகம். இத்துடன் இராணுவத்திற்கான பென்ஷன், பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செலவுகளையும் சேர்த்தால் ரூ.89,082 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது தெரியவரும்.

இந்த பட்ஜெட்டில் அன்னிய நேரடி முதலீட்டை ஊக்குவித்தல் என்ற பெயரில் முக்கியமான மூன்று துறைகளில் அன்னிய முதலீட்டின் மீதான வரம்புகள் தளர்த்தப்பட்டுள்ளன.

உலக வர்த்தக அமைப்பில் இவைபோன்ற சேவைத்துறைகள் தொடர்பான பொது ஒப்பந்தங்கள்

| துறைகள் | பட்ஜெட்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அன்னிய முதலீட்டாளர்கள் பங்கு | |
|---|---|---|
| | கடந்த ஆண்டு பட்ஜெட் (2003-04) கட்சி : பா.ஜ.க. நிதிமந்திரி : ஜஸ்வந்த் சிங் | கடந்த ஆண்டு பட்ஜெட் (2003-04) கட்சி : அ.இ.கா.க நிதிமந்திரி : ப.சிதம்பரம் |
| தொலை தொடர்புத் துறை | 49% | 74% |
| பயணிகள் விமான போக்குவரத்துத் துறை | 40% | 49% |
| காப்பீட்டுத் துறை | 26% | 49% |

மீது விவாதம் நடத்தப்பட்டு வளரும் நாடுகள், ஒருங்கிணைந்து பின்னுக்கு தள்ளவேண்டிய, கான்குன் மாநாட்டிற்குப் பின்பான, இந்தச் சூழலில், இம்மாதிரி

**உணவு தானியம், விதைக் கொள்முதல் ஆகியன அடியோடு நீக்கம், விவசாய உற்பத்தி பொருட்களின் விலை வீழ்ச்சி, இடு பொருள் செலவு உயர்வு எனக் கூறிவிட்டு விவசாயத்திற்கான கடனுதவி அறிவிக்கப்பட்டுள்ளது. இது பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டும் சிறுபிள்ளைத்தனம் போல் உள்ளது.**

யான அன்னிய முதலீடுகள் தவறானவை மட்டுமல்ல மிகவும் ஆபத்தானவையும்கூட.

கடந்த 13 ஆண்டுகளாக பின்பற்றப்படும் LPG கொள்கையால் நாடு முழுவதும் 8.6 லட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் மட்டும் 1.41 லட்சம் சிறு தொழில் நிறுவனங்களில் இது 46% ஆகும். தற்பொழுதைய பட்ஜெட்டில் சிறுதொழில் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொழில்களில் இருந்து, 85 தொழில்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பன்னாட்டு நிறுவனங்களுடனும், உள்நாட்டு தரகு நிறுவனங்களுடனும் போட்டியிட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்து. CMP-யில் இரும்புக்கென, 'இரும்பு ஒழுங்குமுறை கமிஷன்' அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் இதனைக் குறித்து எவ்வித அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை.

மேலும் இரும்பு மீதான ஆயத்தீர்வை 8% லிருந்து 12% ஆக உயர்த்தப்பட்டுள்ளதோடு, இரும்பு உருக்கு உற்பத்திப் பொருட்களுக்கான இறக்குமதி வரி 15% லிருந்து 10% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அன்னிய இறக்குமதி அதிகரித்து உள்நாட்டு இரும்பு-உருக்கு சிறுதொழில் - குறுந்தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

### இறுதியாக

இந்த பட்ஜெட்டைப் பொருத்தவரையில் வேளாண்மை, பசுமை, கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை பரவலான கவனத்தைப் பெற்றுள்ளன. மேலும் பொதுத்துறையை வலுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், கைத்தறி மற்றும் விசைத்தறி தொழில்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வரி நிவாரணம், திட்ட ஒதுக்கீடு போன்றவை வரவேற்புக்குரியவை என்றாலும், அயல்துறை வர்த்தகம், முதலீடு ஆகிய துறைகளில் LPG கொள்கை தொடர்கிறது. இந்த பட்ஜெட்டில் வருவாய் பற்றாக்குறை 25%. கடந்த ஆண்டு இது 35% என இருந்தது. நேர்முக வரி உயர்வு, உள்நாட்டு தொழில் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு அதிகரித்தல், பாரம்பரிய விவசாயத்திற்கு முன்னுரிமை, நிலச் சீர்திருத்தம் என மக்கள் மன்றத்தில் முக்கியப்படுத்தும் பணி களப்பணியாளர்களாக நம் கண்முன்னே விரிவடைகிறது. நமது செயல்திட்டம் என்ன என்பதே நம்முன்னே இருக்கும் மில்லியன் டாலர் கேள்வி. •



படிப்பகம்

www.padippakam.com

# தனியார் துறையில் இட ஒதுக்கீடு

■ கு.மு. ஜவகர்




கடந்த ஆகஸ்டு 8, 2004 ஞாயிறு அன்று நெய்வேலியில் தனியார் துறையில் இட ஒதுக்கீடு பிரச்சார மாநாடு நடைபெற்றது. முக்கியமாக இட ஒதுக்கீட்டில் கிராமப்புற தலித் மாணவர்களுக்கு முன்னுரிமை, தனியார் துறையில் இட ஒதுக்கீடு, இட ஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்தாமைக்கு தண்டனையுடன் கூடிய சட்டப் பாதுகாப்பு குறித்த தலைப்புகளில் இரண்டு அமர்வாக நடைபெற்றது. மாநாட்டை திரு. எல். இளையபெருமாள் அவர்கள் துவக்கி வைக்க திரு. கே. நாகராஜன், பொதுச் செயலாளர், N.L.C. SC/ST நலச்சங்கம் அவர்கள் தலைமையில் கிராமப்புற தலித் மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து பேரா. திரு. பா. கல்விமணி (அ) கல்யாணி, பேரா. கோச்சடை, திரு. வி. கருப்பன் (இ.ஆ.ப. ஓய்வு) ஆகியோர் உரையாற்றினர்.

திரு. கருப்பன் அவர்கள் குறிப்பிடும்போது, அனுபவத்தில் கிராமப்புற மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் பாடங்களுக்கான சோதனைக் கூடங்களில் தலித் மாணவர்களின் இருப்பு மற்ற மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமான இடையூறாக கருதப்படுகிறது. அதனாலேயே பல பள்ளிகளில் அறிவியல், கணிதப் பாடங்களில் தலித் மாணவர்களுக்கு சேர்க்கை தருவதில்லை. 1971 அரசாணை எல்லாத்துறை பாடங்களிலும் ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்பதை யாரும் கண்டுகொள்ளவில்லை. அந்த அரசாணை குறித்து நாம் பள்ளிகளில் நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் மாநில அரசுகள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பொறியியல், மருத்துவப் படிப்பிற்கான இடங்களில் 15 சதவீதத்தை மத்திய அரசுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்றார்.

திரு. கல்யாணி அவர்கள் பேசும்போது இங்குள்ள மாதிரியான மோசமான கல்விமுறை உலகில் வேறெங்கும் கிடையாது என்று குறிப்பிட்டார். தனது கல்வி அனுபவத்தின்படி சமவாய்ப்பு வழங்கப்படும்போது நகர்புற மாணவர்களைவிட கிராமப்புற மாணவர்கள் விஞ்சி நிற்பதை பல்வேறு புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைத்தார்.

திரு. கோச்சடை அவர்கள் சமூக நீதிக்கான சமூகப் படை உருவாக்கப்பட வேண்டும் என்ற உதாரணத்தை எடுத்துக் கூறினார். இட ஒதுக்கீட்டுக்காக மீண்டும் ஒரு போராட்டத்தை நடத்தியாக வேண்டும். இது எல்லா அரசியல் கட்சிகளின் கடமையனெ குறிப்பிட்டார்.

இரண்டாவது அமர்வு திரு. ரவிக்குமார் அவர்கள் தலைமையில் நடந்தது. இவ்வமர்வில் பத்திரிக்கையாளர் திரு. ஞாநி, திருமதி. சிவகாமி இ.ஆ.ப., திரு. ஸ்டாலின் ராஜாங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். தலித் சிந்தனையாளர் திரு. சந்திரபான் பிரசாத் இறுதியுரை ஆற்றினார்.

தலைமை உரையில் ரவிக்குமார் பேசும்போது படித்த வாய்ப்புள்ள தலித்துகள் கிராமப்புற தலித் மக்களை மையப்படுத்தி அவர்களின் பிரச்சினைகளை முன்னெடுக்காவிட்டால் நமக்கும் அவர்களுக்குமான இடைவெளியில் நுழைய எத்தனிக்கும் இந்துத்துவ சக்திகள் குறித்த கவனத்தை முன்னிறுத்தினார். மேலும் இட ஒதுக்கீடு ஒரு வரையறைக்குட்பட்ட கோரிக்கை. 100% பூர்த்தி செய்யப்பட்டால்கூட இம்மக்கள் தொகையில் 10% மக்கள் மட்டுமே பயனடைவர். போபால் பிரகடனப்படி அரசின் பொதுச் சொத்துக்களில் பங்கு மற்றும் ஒத்தாசை நடவடிக்கைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பாகுபாட்டுக் கான சட்டம் தேவையென்றார். முன்னேறிய அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் பாகுபாட்டுக் கான காரணம் உறுதிசெய்யப்பட்டால் மிக மிக அதிகமான அளவில் நஷ்டஈடு பெறப்படுகிறது என்றார். சமூக தளத்தில் என்ன விதமான ஏற்றத் தாழ்வு நிலவுகிறதோ அதை மறு உற்பத்தி செய்புவையாகத் தான் அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் உள்ளன. கம்யூனிஸ்டு கட்சிகள், நக்ஸலைட் இயக்கங்களில் கூட இதுதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பறை அடிப்பதும், பாட்டுப்பாடுவதும், தலித்துகளின் இசைபற்றி ஆராய்ச்சிகட்டுரைகள் எழுதுவது அவர்களின் வேலையென்றிருக்கிறது. தமிழ் நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக திருமதி. சிவகாமி ஆதி திராவிடர்



படிப்பகம்

www.padippakam.com

துறையில் இருந்தபோதுதான் சிறப்புக் கூறு திட்டத் தின்படி துணை பட்ஜட் தயார் செய்யப்பட்டது. இப்படி செயல்படும் அதிகாரிகளுக்கு வெளியிலிருந்து ஒரு மக்கள் அழுத்தம் உருவாக்க தவறுகிறோம். இவர் கள் மேல் கைவைக்க அரசாங்கம் தயங்கும் ஒரு நிலையை நாம் உண்டாக்க வேண்டுமென்றார். மேலும் 1981 ஆண்டு புள்ளிவிவரப்படி 65% கூலி விவசாயி களாக இருந்த தலித்துகளின் நிலைமை 2001-லும் 64% தொடரும் நிலை கடந்த நாற்பது ஆண்டுகால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தலித்துகளின் நிலங்கள் பறிக்கப்பட்டு கூலிகளாக ஆக்கப்பட்டி ருக்கின்றார்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத் திலும் இல்லாத ஒரு நிலைமை இது.

திருமதி. சிவகாமி பேசுகையில் இட ஒதுக்கீடு என்பது இன்றைய அளவு நமக்கு ஒரே நேரத்தில் கிடைத்ததன்று. இடைவிடாத இட ஒதுக்கீட்டுக்கான நமது போராட்டத்தின் விளைவால்தான் இன்றைய 18/7.5 சதவீதம் அடைந்திருக்கிறோம் என்று விரிவான புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைத்தார்.

மத்திய அரசில் குரூப் - ஏ-யில் ஏறக்குறைய 5300 பதவியிடங்களும், குரூப் - பி-யில் 6093 இடங்களும் SC-களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. பொதுத்துறையில் குரூப் - ஏ-யில் 1981 இடங்களும் குரூப் பி-யில் 9840 இடங்களும் மறுக்கப்பட்டு வந்துள்ளன. தமிழக அரசு வெள்ளை அறிக்கையின் படி நிரப்பப்படும் எனக் கூறிய ஒரு இடம் கூட இதுவரை நிரப்பப்படவில்லை. இந்தியாவைப் பொருத்தவரை நிலமற்ற தலித் விவசாயிகளின் நிலை உயரவில்லை. இருக்கும் நிலத்திலும் 86% பயனற்றவையாக இருப்பதாக குறிப்பிட்டார். உழவுத் தொழிலில் உள்ள 63% மக்களை தொழில் மயப்படுத்த வேண்டிய விஷயங் களைக் கூறிய அவர், இந்திய சூழலில் அதற்கான வாய்ப்பு, முதலீடு பற்றி மிக விரிவான புள்ளிவிவரங் களுடன் தொகுத்து வழங்கினார். மேலும் சந்தை தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக அந்தந்த பகுதியின் தட்பவெட்ப உடலியல் தன்மைக்கேற்ப உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. வெளி நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் அதே பொருளை இங்கு விற்பனை செய்ய முடியாது என்றும், இந்தச் சூழலில் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டில் நாம் காண வேண்டிய எச்சரிக்கைகளையும் சுட்டிக் காட்டினார்.

இறுதியாக திரு. சந்திரபான் பிரசாத் அவர்கள் பேசுகையில் அமைப்புசாரா தலித் மக்களின் மேம் பாட்டை கூலி என்ற நிலையிலிருந்து அடுத்த கட் டமாக விற்பனை முகவர்களாகவும், கொள்முத லாளராகவும், உற்பத்தியாளராகவும் மாற்றுவதற்கான இந்தியச் சூழலை முன்னேறிய நாடுகளின் நடை முறைகளிலிருந்து எடுத்துரைத்தார். இதற்கான வாய்ப்புகளை இந்தியச் சூழலில் எவ்வாறு நடை முறைப்படுத்த முடியும் என்பதை விளக்கினார். இந்திய ஏற்றுமதி உலகளவில் 0.666% தான் என குறிப்பிட்ட அவர் குறைந்த காலத்தில் சீனாவின் 5% ஏற்று மதியை குறிப்பிட்டார். இந்திய ஏற்றுமதி கல்வியறிவற்ற, குறைந்த கல்வியறிவுடையவர்களின் மூலமாகத்தான் அதிகம் நடைபெறுகிறது. கணினி, மென் பொருள் என்பதைவிட கற்கள், நகைகள், பட்டை தீட்டப் படாத வைரம் இவைகளே சுமார் 12% ஏற்றுமதி யாகிறது என்றார். இந்துஸ்தான் லீவர் கம்பெனியில் இந்தியாவில் 30 ஆயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள். இந்தியா முழுவதும் 2 லட்சம் டீலர்கள் உள்ளனர். அதில் ஒருவர் கூட தலித் கிடையாது. ஒரு டீலர் டெல்லியில் மட்டும் 1 மாதத்திற்கு 1 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்கிறார். அரசு ஏலம் விடும் மதுபானக் கடை உரிமை தலித்துகளுக்கு வழங்கப்படுவதில்லை. இந்தியா முழுவதும் மேலும் பல்வேறு தலித்துகளின் பொருளாதாரம் குறித்து பல்வேறு விஷயங்களை தொகுத்துரைத்தார். இது குறித்த சந்திரபானின் கட்டுரை விரைவில் தமிழில் வெளியாக உள்ளது.

திரு. கே.ஏ. குணசேகரன் இசை நிகழ்ச்சியுடன் மாநாடு நிறைவுற்றது. பல்வேறு இடங்களில் இது தொடர்பான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்ய முயற்சி மேற்கொள்வதென்பது முடிவுற்றது.

# புதிய கோடாங்கியின் வாசகர் வட்டம்

**பெரம்பலூர்மாவட்ட அளவில் 'புதிய கோடாங்கி' வாசகர் வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புதிய கோடாங்கி வாசகர் வட்ட நிர்வாகிகள் பட்டியல் அமைப்பாளர் பொன். ஆனந்தராசு துணை அமைப்பாளர் கவிஞர் க. செய்சங்கர், செயலர் செ. சங்கர், இணைச் செயலர்கள் க. கென்னடி, கவிஞர் அகவி, ஆலோசகர் பாவலர் ஆடல், செயற்குழு உறுப்பினர்கள் க. துரைநாயகம், மு. செ. தங்கராசு, சு. வீரமணி, கவிஞர் காப்பியன், இரா. கோபால கிருட்டிணன், செ. கணேசன், இரா. மணி, சு. ஒளி ஓவியன், பூ. சீனிவாசன். பெரம்பலூர் மாவட்ட புதிய கோடாங்கி வாசகர் வட்டத்தின் முதல் கூட்டம் 17.8.2004 அன்று சனிக்கிழமை பாவாணர் நூலகத்தில் பாவலர் ஆடல் தலைமையில் நடைபெற்றது.**

**- ஆசிரியர்**



படிப்பகம்

www.padippakam.com

■ பாரி. செழியன்

# பூனா ஒப்பந்தம் ஒழிய வேண்டும்

“ எனது உயிர் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது. என்னைக் காப்பாற்றுவீர்களா? என் உயிர்மேல் உங்களுக்கு அக்கறை இருக்குமானால் அந்த உயிரைக் காப்பாற்ற நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நெருப்புக்குச் சமமான இந்த படுக்கையிலிருந்து உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ”

“சில நாட்களுக்கு முன்பு நான் ஓர் இக்கட்டான நிலைக்கு ஆளாகியிருந்தேன். அதுபோன்ற ஓர் இக்கட்டு வேறொருவர்க்கும் நேர்ந்திராது என நம்புகிறேன்” என்று டாக்டர் அம்பேத்கர் சொன்னார். அந்த இக்கட்டான சூழல், தலித்துகளுக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய இரட்டை வாக்குரிமையை (Seperate Electorate) எதிர்த்து சாகும்வரை காந்தி உண்ணாவிரதம் இருந்ததுதான்.

“எனது உயிர் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது. என்னைக் காப்பாற்றுவீர்களா? என் உயிர்மேல் உங்களுக்கு அக்கறை இருக்குமானால் அந்த உயிரைக் காப்பாற்ற நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நெருப்புக்குச் சமமான இந்த படுக்கையிலிருந்து உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். முடிவில் உங்களிடம் கூறுகிறேன் Five years or My life?”

காந்தியுடன் வெளிப்படையாக அறிவார்ந்த விவாதத்திற்கு தயாராக வந்திருந்த அம்பேத்கருக்கு காந்தியின் கெஞ்சல் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. காந்தி பகுத்தறிவிற்குப் புறம்பான, உணர்ச்சிவசப்பட்ட உண்ணாவிரதம் மூலம் பலவந்தப்படுத்தி காரியத்தை சாதிக்க வேண்டுமென, பிடிவாதமாக சாதித்துக் கொண்டார். இதன்மூலம் தான் பெற்றிருந்த இந்தியத் தலைமையை தக்க வைத்துக்கொண்டார். இந்த வீம்பில் காந்தி இறந்துபோனால் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு தலித்துகள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்படும் என அம்பேத்கர் அஞ்சினார். காந்தி உண்ணாவிரதத்தின் மூலமாக அம்பேத்கரின் போராட்டத்தை தோற்கடித்தார்.

இதுகுறித்து ராஜ்யசபையில் 22.9.1953-இல் அம்பேத்கர் பேசும்போது, “நான் தவிர்க்க முடியாத காரணத்தால், வேறு வழியின்றி பூனா ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டேன்” என கூறினார். இந்த முடிவுக்காக எஞ்சிய வாழ்வு முழுவதும் அம்பேத்கர் மிகவும் வேதனைப்பட்டார். ‘தலித் பந்து’ என்ற மராத்திய இதழுக்கு அம்பேத்கர் அளித்த பேட்டியில் (15.9.1948) “பூனா ஒப்பந்தம் ஒழிய வேண்டும்” என கருத்து கூறினார். நடைமுறையில் இருக்கும் தனித் தொகுதியில் (Reserved seats) தலித்துகளுக்கு நன்மை இல்லை. அதற்குப் பதிலாக இரட்டை வாக்குரிமை முறைதான் மீண்டும் வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தினார். “பூனா ஒப்பந்தம் நீக்கப்பட வேண்டும். அது 60 மில்லியன் தலித் மக்களின் உரிமைகளை பறித்து விட்டது. சர்வதேசச் சட்டத்தின்படி எந்தஒரு ஒப்பந்தமும் முற்று முடிவானதல்ல. மீறப்படாத படிக்கு புனிதத்தன்மை வாய்ந்ததுமில்லை” என கருத்து தெரிவித்தார். "According to International Law no treaty was final and sacrosant," (The Times of India 27.7.1946)

“பூனா ஒப்பந்தம் தலித் மக்களின் தன்னம்பிக்கை இயக்கத்திற்கு சாவு மணி அடித்துவிட்டது. காந்தியோ காங்கிரசோ தலித் வளர்ச்சியில் அக்கறையின்றி இருக்கின்றார்கள். அவர்களால் இந்த இனத்திற்கு நல்லது கிடைக்கும் என நான் நம்பவில்லை. தலித் சமூகம் சுயமரியாதையோடு வாழ வேண்டுமாயின் ‘மெக்டொனால்டு’ அவர்களின் சமுதாய பரிசான திட்டங்கள் மீண்டும் அறிவிக்கப்பட வேண்டும். ‘தனி வாக்காளர் தொகுதி’ முறை ஏற்பட்டே ஆக வேண்டும்” என அழுத்தமாக கூறினார். இதற்காக இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இரட்டை வாக்குரிமைக்காக ஆதரவு திரட்டினார். பூனா ஒப்பந்தத்தை ரத்து செய்து, தனி வாக்காளர் தொகுதி முறை மறுபடியும் கொண்டு வரப்பட வேண்டுமென பேசி, கோரிக்கை மனு ஒன்றையும் கொடுத்தார் அம்பேத்கர். இரட்டை வாக்குரிமை இழப்பை ஒருபோதும் ஈடு செய்ய முடியாது என்று மீண்டும் எச்சரித்தார்.

தமிழக தலித் தலைவர்கள் ஆரம்பத்திலிருந்தே பூனா ஒப்பந்தத்தை மாநாடு போட்டு எதிர்த்தார்கள். பூனா ஒப்பந்தத்தைக் கண்டித்து அக்டோபர் (1932) மூன்றாவது வாரத்தில் சென்னையில் மாநாடு நடத்தினார்கள். அதில் ஜே. சிவசண்முகம் பிள்ளை, எல்.பி.ஜி. பாலகுரு சிவம் போன்ற தலித் தலைவர்கள், பூனா ஒப்பந்தத்தை நிராகரிக்க வேண்டுமென பேசினார்கள். அம்பேத்காருக்கு துணையாக நின்று செயல்பட்ட தலித் தலைவர்கள் ரெட்டமலை சீனிவாசன், சிவராஜ் போன்றோர்கள், தனிவாக்காளர் தொகுதி முறைக்கு மாநாடு நடத்தினார்கள். ராவ்பகதூர் சிவராஜ் தலைமையில் சென்னையில் 23.9.1944-இல் நடந்த கூட்டத்தில் தனித்தொகுதி (Reserved seats) ஒழிக்கப்பட்டு தனிவாக்காளர் தொகுதி (Seperate Electrorate)



படிப்பகம்

www.padippakam.com

முறையை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை ஆதரித்து அம்பேத்கர் பேசினார். காந்திக்கு ஆதரவாக கையொப்பமிட்ட தலித் தலைவர் M.C. ராஜா அவர்கள். பூனா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதற்காக தன்னை ஒருபோதும் மன்னிக்கவில்லை. அதற்காக அவர் வருந்தினார் என ராஜாஜி வாழ்க்கை வரலாற்றை எழுதிய வரலாற்றறிஞர் H.R.H. copley பதிவு செய்துள்ளார்.

இப்போதுள்ள தனித் தொகுதி முறையில் தலித்துகளுக்கு எந்த பயனுமில்லை. சனநாயகத்தின் உயிர் நாடியே தேர்தல்தான். அதில் வாக்களிக்க மறுக்கப்படுகிறது. தேர்தலில் நிற்க அல்லது வெற்றி பெற்று ஆட்சி செய்ய அனுமதி இல்லை. தலித்துகள் விரும்புகின்ற பிரதிநிதிகளை விட சாதி இந்துக்கள் விரும்பும் வேட்பாளர்தான் வெற்றி பெறுகின்றார்கள். சிதம்பரம் தனித் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் தலித்துகள் ஒரு சதவிகிதம் கூட வாக்களிக்காமல் வெற்றி பெற்ற தலித் வேட்பாளர், தலித்துகளுக்கு நம்பகமான பிரதிநிதியாக செயல்படுவாரா? சாதி இந்துக்களுக்குத் தான் விசுவாசமாக இருப்பார்.

தீண்டாமையை, சாதியை அடிப்படையாகக் கொண்ட இந்து மதம் தலித் மக்களை அதிகார மற்றவர்களாக வைத்திருப்பதில் நிலை கொண்டுள்ளது. பூனா ஒப்பந்தம் முடிந்து 72 ஆண்டுகள் முன்பு என்னென்ன நியாயங்களுக்காக இரட்டை வாக்குரிமை கோரிக்கை முன்வைக்கப்பட்டதோ அதே நியாயங்கள் இப்போதும் இருக்கின்றது. அம்பேத்கர் அரசியல் வழிகாட்டலில் நடைபெறும் தலித் அமைப்புகள் 'தனி வாக்காளர் தொகுதி' முறையை மீட்புப் பணியில் செயல் திட்டங்கள் தீட்டி, கிளர்ச்சியிலும் ஈடுபட வேண்டும். தோழர் ரவிக்குமார் முயற்சியால் 'பூனா ஒப்பந்தம் நிராகரிப்பு மாநாடு' ஒன்றை 24.6.96 நெய்வேலியில் நடந்தது. இரட்டை குடியுரிமை (Dual Citizenship) இரட்டை உறுப்பினர் முறை கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்படும் இந்த நேரத்தில், அம்பேத்கர் முன்மொழிந்த இரட்டை வாக்குரிமை கொண்ட தனி வாக்காளர் தொகுதி முறையை கொண்டுவர வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் பொதுச்செயலாளர் தோழர் தொல். திருமாவளவன் கருத்து தெரிவித்தார். (தினமணி, மதுரை 24.7.2003) தலித் வாக்காளர் தொகுதியை மீண்டும் பெற தொடர்ச்சியான பிரச்சாரமும் மாநாடுகளும் நடத்த வேண்டும். பெரும் அரசியல் சக்தியாக தலித்துகள் திரண்டு வரும் இந்த சூழலில் தனி வாக்காளர் தொகுதி முறை சாத்தியமாகும்.

மேலும் விவரங்களுக்கு


1. வட்டமேசை மாநாடும் பூனா ஒப்பந்தமும் (1967) - பொன்னோவியம்.
2. The Flaming Feet (1993) Dr. D.R. Nagaraj
3. Gandhi's Campaign Against Untouchability (1996) Baren Ray
4. The life of Mahatma Gandhi (1951) Louis Fischer.


## தொடரும் தீவினைகள்

தேவதேவன்

தொன்னூற்று மூன்று பிஞ்சுகள் கதறியபடி
தீயில் வெந்து மறைந்து கொண்டிருக்கின்றனர்
என்கிறது,
மீளமுடியாத அதிர்ச்சி.

துக்கம்
துக்க அனுஷ்டானங்கள்
தொழுகைகள், பிரார்த்தனைகள்
தீர்மானங்கள்
ஈடுகட்டல்கள்
பின், மறத்தல்கள்
மரத்தல்கள்
-இவ்வளவுதானோ நம் வாழ்க்கை?

கேள்விப்பட்டபோது
வியப்போ அதிர்ச்சியோ அடையாது
முன்னிலும் பெருகுக் கொண்டு நிற்கும்
துயரார்ந்த மவுனத்தின் சொற்களையோ
நாம் செவிமடுத்துக் கொண்டிருந்தோம்?

தாங்கொனாத வேதனையில்
கதறும் தாயின் முகம்... முகங்கள்
நாளிதழ்கள் வெளியிட்ட
அந்த நிலைத்த காட்சிகள் எல்லாம்
நெஞ்சின் அடியாழத்திலிருந்து மேல்
வெளிப்பட்டு
இதயத்தைக் கிழிக்கும்
துயரப் பெருண்மைகள்தாமோ?

நம் நேசமின்மையின் தீவினைக்குள்தாமோ
நம் குழந்தைகள் அகப்பட்டுக் கதறின?
கதறிக் கொண்டிருக்கின்றன?



படிப்பகம்

www.padippakam.com

■ மா. வேலுசாமி

# பார்ப்பனியம் – பெரியாரியம்!

**பிராமணரல்லாதார், பிராமணர் எதிர்ப்பு என்ற களத்தில் தலித்துகளுக்குப் பின்னால் நுழைந்தவர்கள். தலித் மற்றும் பிராமணரல்லாதார் இருவரது போராட்டமும் கருத்தளவில் ஒன்றுபட்டதே. ஆனால் சமூக இழிவை, அடக்குமுறைகளை தலித்துகள் மட்டும் இன்றுவரை பிராமணர் பிராமணரல்லாதவர் ஆகிய இருவரிடத்தும் சந்தித்து வருவது ஏன்?**

## *சொல் வேறு – செயல் ஒன்று!*

பிரரமணர் எதிர்ப்பு? சாதிய அடக்குமுறைகள்? சமூக புறக்கணிப்புகளின் உண்மையான காரணம்? சமூக ஏற்றத் தாழ்வுகளும் - சாதியின் பெயரில் வன் முறைகள் ஏன்? என்ற தலித் தோழர்களின் கேள்வி களுக்கு பிராமணரல்லாதார், பகுத்தறிவுவாதிகள், சுயமரியாதைக்காரர்கள் மற்றும் திராவிட பாரம் பரியத்தினர் கூறும் ஒரே பதில் - ஆரியர்கள், அவர் களுக்கு உதவிபுரியும் இந்து மதம், ஆரியர்களான பிராமணர்களால் உருவாக்கப்பட்ட சாதிய படிம நிலைச் சமூகமே இதற்கெல்லாம் காரணம் என்பதே. ஏறக்குறைய 80 ஆண்டு காலமாக இரக்கம் இல்லாமல், கிராமப்புற ஒதுக்குநிலைக் குழுமங்களான தலித் மற்றும் ஆதிவாசிகளின் வளர்ச்சியின் மீது விசுவாச மில்லாமல் காதில் 'பூ' சுற்றிக்கொண்டு இன்னும் வலம் வரும் பெரியாரிஸ்டுகளுக்கு தெரிவிப்பது என்ன வெனில், சுயம் மறந்த தலித் தோழர்களுக்கும் தெரிவிப் பது என்னவெனில் வண்டலூர் மிருகக் காட்சி சாலை யில் மட்டுமே காணக்கூடிய அரிதான மிருகங்களைப் போல் கிராமப்புறங்களைவிட்டு முழுதாய் வெளி யேறிய பிராமணர்களே இன்னும் திராவிட கட்டுக் கதைகளில் வில்லன்களாக சித்தரித்து தலித்துகளை கழுத்தறுக்கும் திராவிடக்கட்சிகளையும், பெரியா ரிஸ்டுகள், பிராமணரல்லாதார் கூட்டத்தையும் இனங் கண்டு வெறுத்து ஒதுக்குவது இன்றைய காலகட்டத் தின் அவசியமே. அதற்கு முக்கியமாக நாம் உணர வேண்டியது தலித்துகள் தேசிய இனம் என்பதும் எந்தவொரு பிராமண - பிராமணரல்லாத கட்சியோ, இயக்கமோ தலித்துகளுக்கான உண்மையான விடு தலையினை முன்னெடுப்பது அவர்களின் சுயலாபத் திற்காக மட்டுமாகவே இருக்கமுடியும். எனவே தலித்துகள் தங்களது எதிரிகளை கண்டுணர்ந்து தங்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பது அவசியம். இதற்கு இந்தக் கட்டுரை தலித்துகளின் பொது எதிரி களையும் (பார்ப்பனியம்) மறைமுக எதிரிகளையும் (பெரியாரியம்) அவர்களுக்குள்ள ஒற்றுமைகளையும் வெளிப்படுத்துகிறது.

"தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மனித உரிமைகளைக் காந்தி மீட்டுத் தந்துவிட்டார் எனச் சொல்லிவிட முடியுமா? வெளிப்படையாகவே இல்லை எனச் சொல்லலாம். இன்னமும்கூட இந்த மனித உரிமைகளை இந்துக்கள் தங்கள் கைவசமே வைத்திருக்கிறார்கள். இவற்றை மீட்க காந்தி எதுவுமே செய்துவிடவில்லை அல்லது இதை மீட்டெடுக்க தாழ்த்தப்பட்டவர்கள் தங்களின் மனித உரிமைகளை, அதாவது இந்துக்களிடமிருந்து விடுதலையை அரசி யல் அதிகாரத்தின் மூலம் மட்டுமே பாதுகாக்க முடி யும் என்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனால் காந் தியோ தமது பேருரைகள், இந்துக்களின் கருணை, அக்கறை ஆகிய இவை மட்டுமே தாழ்த்தப்பட்டவர் களின் அனைத்துத் தீமைகளுக்கும் தீர்வாக அமைந்து விடும் என்று நம்பினார். இடையறாது பொங்கிப் பெருகும் இந்துக்களின் கருணை, அக்கறை ஆகிய இவைகளை மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள் நம்பி இருக்க முடியுமா? கோபம் கொண்டிருக்கும் கருணை விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். வஞ்சம் குடி கொண்டிருக்கும் அக்கறை நம்பிக்கைக்கு தகுதியான ஒன்றுதான் என்று எங்ஙனம் நாம் ஏமாற இயலும்?" (டாக்டர் அம்பேத்கர், 2002)[1] என்று சிங்கம்போல் அப்போதைய இந்திய தேசத்தின் கடவுளாக சித்தரிக் கப்பட்ட காந்தி அவர்களைப் பார்த்து கர்ஜித்த அம்பேத்கர் அவர்களின் துணிச்சலை பாராட்டும் அதே நேரத்தில் அவரின் வாரிசான தலித்துகள் பிராமணரல்லாத, பெரியாரிய, திராவிட கட்சிகளைப் பார்த்து கேட்க கடமைப் பட்டுள்ளனர். ஏனெனில் 80 ஆண்டு கால பிராமணரல்லாத அரசியலால் தமிழ் சமூகத்தின் புறக்கணிக்கப்பட்ட தலித் சமூகம் வெகுண் டெழவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்ட நிலையில் விடுதலை கிடைக்கும் என்று நம்பி விட்டில் பூச்சிகளாய் தங் களின் சுயத்தை அழித்து திராவிட சாயம் பூசிக் கொண்ட தலித்துகள் பார்ப்பனியமும்/ பெரியாரிய மும் சொல் மட்டுமே வேறு - செயல் பாட்டளவில் இரண்டும் ஒரே மாதிரியாகவே உள்ள தெண்ணி மனம் வெதும்பி குமுறுவதை இந்தக் கட்டுரை விரிவாக அலசுகிறது. கருத்தியலாய் இரு வேறு தன்மை கொண்டாலும் - தலித்துகளை ஒடுக்கு வதில் உள்ள ஒற்றுமைகளைக் காண்போம்.

## மனு நீதியும் – சாதிகளை நியாயப்படுத்தும் பெரியாரியமும்

மனு நீதியே பார்ப்பனியம் கட்டமைக்க உதவிய பழைய பண்பாட்டு மத சட்ட நூல். அவற்றுள்



படிப்பகம்

www.padippakam.com

பிராமணர்களை மையப்படுத்தியும், பாதுகாத்தும், பெருமைப்படுத்தியும், மற்ற சாதிகளை சிறுநிலைப் படுத்தியும் இருக்கும். ஆனால் இது வரையறுக்கப் பட்ட பிராமணர்களை பாதுகாக்கும் ஒரு வேதநூல். எனவே அது பிராமணர்களை எப்போதும் பிரதானப் படுத்தியே இருக்கும். உதாரணமாக,

"படைத்தலைமை, அரசாட்சி, அனைவரின் மீதான ஆட்சிமுறை ஆகிய அனைத்திற்கும் உரிமையும் அதிகாரமும் உடையவன் பார்ப்பனனே."[2] இந்தக் கேடுகெட்ட சூத்திரம், சாஸ்திரங்களை வெறுத்து எதிர்த்து இன்றுவரை சுயஅடையாளமாகவே வாழ்ப வர்கள் தலித்துகள் எனும் பூர்வீக குடிகள்.

ஆனால் சாஸ்திரங்களுக்கும், சம்பிரதாயங்களுக் கும் அடிபணிந்து ஊர்க்கட்டுபாட்டுக்குள் சூத்திரர் களாய் வலம்வந்த புரட்சியாளர்கள், பிராமணர்களின் நிரந்தர ஏவலாளிகளாக, காவலாளிகளாக இருந்த இந்த பிராமணரல்லாத கூட்டம் திடீரென்று ஏற்பட்ட தலைமை மாற்றம் அதாவது வெள்ளையர்களின் வரு கையினைப் பயன்படுத்தி அரசியல் அதிகார சுயலாபங் களுக்காக திடீரென்று பிராமண எதிர்ப்பு பிரச்சா ரத்தைத் துவக்கி பின்பு ஆண்டைகளை ஆரியர் களாக்கி, சூத்திரர்கள் திராவிடர்கள் ஆன கதை நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் ஊருக்கு ஒதுக்குப் புறமாய் சேரிகளுக்குள் சுயமாய் எவனுக்கும் அடிபணி யாமல் ஆரிய - திராவிட நாடகங்களை பார்த்துக் கொண்டிருக்கும் தலித்துகளுக்கு இன்றுவரை புரியாத ஒன்று பிராமணரல்லாதார் எதிர்த்துவரும் பிராமணர் களின் சாஸ்திரங்களும், சாதிய அடக்குமுறைகளும் அவர்களை மட்டுமே பாதுகாக்க வேண்டும் என்பதில் குறியாய் இருந்துள்ளனர். ஏனெனில் சூத்திரர்களின் ஒரு பிரிவினரின் சமீபத்திய அட்டூழியம் தமிழ் சமு தாயத்தில் பெரியாரியம் / பார்ப்பனியம் இரண்டும் வேறல்ல என்பதை நிரூபித்துள்ளது காண்போம்.

"...... இந்த பஞ்சாயத்தும் அதன் தலைவர் பதவியும் எங்களுடையது. எங்கள்... தேவர் அமர்ந்த நாற்காலி யில் தீண்டத்தகாத பறப்பயல்கள் அமர்வதா? இந்நாட் டின் ஜனாதிபதியாகக் கூட இவனுகளுக்கு வர உரிமை யுண்டு. ஆனால் எங்கள் பஞ்சாயத்தும், அதன் தலை மையும், அதன் ஆட்சியுரிமையும் போன்ற சகல உரிமைகளுக்கு உரிமையுடையவர் நாங்களே"[3] என பிராமணர்களால் இழிபிறப்பாளர்களாக சித்தரிக்கப் பட்ட இவர்கள் தலித்துகளை புறக்கணித்தபோது விந்தையாக இருந்த போதும், அவர்களின் செயல் பிராமணர்களைவிட கொடுமையாக இருந்தது. தலை இருந்தால் மட்டுமே நீ தலைவனாக முடியும் என்று ஏழு தலித்துகளை கொன்று குவித்தது வேதனை யாகவே இருக்கிறது. இதுபோலவே இன்னும் பாப்பா பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் போன்றவை இன்றுவரை அவமான சின்னங்களாய், தொடர்கதை யாகிக் கொண்டுள்ளது. மேலும்,

"சூத்திரன் ஒருவன், ஒரு பிறப்பாளன் ஒருவனை (பிராமணனை) கீழான வசைச் சொற்களால் புண் படுத்தினால், அவனுடைய நாவை துண்டிக்க[4] வேண் டும். காரணம் அவன் ஒரு கீழ்பிறப்பாளன் ஆவான்."

'பெரியார் உருவாக்கிய பகுத்தறிவு இயக்கம், சுயமரியாதை இயக்கம், கடவுள் எதிர்ப்பு, நீதிக்கட்சி, திராவிடர் கழகம் போன்ற பெரியாரிய கருத்துக் களினால் தமிழகம் தலைகீழாக புரண்டு சமூக எழுச்சி வந்துவிட்டது என்று பிரச்சாரம், நாடகம் மற்றும் பிழைப்பு நடத்தும் பெரியாரிஸ்டுகளுக்கு கூறிக்கொள் வது தலைவர் பதவிக்கு போட்டியிட்ட காரணத்தி னால் தலையிழந்தோம், உங்கள் அக்கிரமங்களை வெளிப்படுத்திய ஒரே காரணத்திற்கு தண்டனையாய் மலம் திணித்து மனித குலத்தை இழிவுபடுத்திய பின்பும் உங்களது இயக்கம் அரசியல் பிழைப்பிற்காகவே இருந்துள்ளது என்பதை உணர்ந்தோம்.[5]

நாங்கள் பிராமணர்களை எதிர்த்த ஒரே காரணத் தினால் வரலாறு இழந்தோம். ஆயிரமாயிரம் ஆண்டு களாய் வாழ்வுரிமைகளை இழந்தோம் அப்போதெல் லாம் எதிரிகளை எதிரிகளாய் மட்டுமே பார்த்தோம். ஆனால் அரசியல் சுயலாபத்திற்காக வேடமிட்டு திராவிடம், பெரியாரியம் பேசி சாதிவெறிபிடித்து திரியும் வெறிபிடித்தவர்கள் மத்தியில் வாழ்ந்து, சிதைந்து கொண்டிருக்கும்போதும் தலித்துகளின் நிலை உணராமல் கட்டாயம் தலித்துகளுக்கு பெரி யாரும், பெரியாரியமும் ஒரு தீர்வு எனில் வாயில் 'பீ' இருந்தும் "வாழ்க பெரியார்" என்றும் சொல்ல தலித்துகள் ஒன்றும் மானங்கெட்டவர்கள் இல்லை முன்போல?

## II

### கருத்தில் ஒற்றுமையும் / களத்தில் வேற்றுமையும்

தாழ்த்தப்பட்டவர்களின் துன்பத்திற்கு காரணம் அவர்களுக்கு குடிஉரிமைகள் இல்லாமல் இல்லை. அதற்கு சாதி இந்துக்களின் சதியே காரணமாகும். குடி உரிமைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் பயன்படுத்தத் துணிந்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என இந்துக் கள் அவர்களை அச்சுறுத்தி வருகிறார்கள். இது காந்திக்குத் தெரியும். தாழ்த்தப்பட்டவர்களின் குடி உரிமைகளைப் பாதுகாக்க அமைப்பு ஒன்றை ஏற் படுத்துவதே அவர்களுக்கு உதவும் உண்மையான வழி யாகும். தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கும் அல்லது அவர்கள் மீது சமூகப் பொருளாதாரத் தடைகளை விதித்து அவர்களின் குடி உரிமைகளைப் பயன்படுத்த முடியாமல் தடுத்து நிறுத்தும் இந்துக்களை தண்டிக் கும் கடமையை இவ்வமைப்பு மேற்கொள்ளும் அரிசன சேவை சங்கத்தின் இலட்சியங்களில் ஒன்றாக இவ்வழிமுறைகளை ஏன் காந்தி இணைத்துக் கொள் ளவே இல்லை?[6] என்ற அண்ணலின் இக்கேள்வியினை தமிழக அளவில் தன்னுடைய அரசியல் நுழைவால் சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி என்ற பல்வேறு பிராமணரல்லாத இயக்கங்களுக்கு தலைமையேற்று நடத்திய ஈ.வெ. ராமசாமி அவர்களைப் பார்த்து தலித் மக்கள் கேட்க கடமைப்பட்டுள்ளனர்.

சாதிக்கொடுமைகளால் அதிலும் பிரர்மணர் அல்லாதவர்களின் சாதிவெறிச்செயல்களால் தினசரி வாழ்க்கையே கேள்விக்குறியாக ஆக்கப்படும்போது



படிப்பகம்

www.padippakam.com

அதைத் தடுக்க முன்வராமல் இந்துமதத்தை ஏன் ஒழிக்கவேண்டும்; ராமனை ஏன் செருப்பால் அடிக்க வேண்டும்; ராமாயணத்தை ஏன் கொளுத்த வேண்டும்' என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள தலித் அல்லாதவர்களின் பெரும் ஆதரவோடு பத்திரிக்கை நடத்தும் பத்திரிக்கையாளரும் எழுத்தாளரும் ஆன திரு. புனித பாண்டியன் அவர்கள் தன்னுடைய தலித் முரசு என்கிற பெரியார் முரசில் "சிறீராமனை செருப்பால் அடித்ததால் அத்வானியிலிருந்து அத்தனை ஆர்.எஸ்.எஸ். காரர்களும் தங்களை அடித்தது போலவே இன்று வரை அலறுகிறார்கள். பெரியார் என்கிற பெயரை பெயரளவில் உச்சரிக்கக்கூட மறுக்கிறார்கள்" என்று கேட்ட கேள்விக்கு பதிலளிக்காமல் பெரியாரைப் போலவே தெளிவாக குழப்பியிருக்கிறார் இந்த நவீனப்பெரியார்.

பிராமணர்களையும், அவர்களது தலைவர்களையும், அரசியலையும் அச்சுறுத்த பிராமணரல்லாதவர்களுக்கு சிறீராமனை செருப்பால் அடிப்பது ஒரு தீர்வு எனில், பிராமணரல்லாதவர்களின் சாதி வெறியாட்டங்களால் பாதிப்பிற்குள்ளாகிய தலித் மக்கள் என்ன செய்ய வேண்டும்? அல்லது தீர்வு என்ன?

தமிழ்ச் சமூகம் பிராமணர்களின் அடக்குமுறையினைச் சந்தித்தபோது வெகுண்டெழுந்தவர்கள் இந்த பெரியாரிஸ்டுகள் என்கிற பிராமணரல்லாதவர்கள் மட்டுமல்ல தலித்துகளும் கூடத்தான் என்பதைப் பார்ப்போம்.

"பகுத்தறிவு பகலவன் என்று திராவிடர் கழகத்தால் அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஈ.வெ. ராமசாமி அவர்கள் பிறப்பதற்கு முன்பே, 1875 ஆண்டுகளில் பகுத்தறிவு சமதர்மம் பிரச்சாரத்தைத் தொடங்கியவர் தலித் மக்களின் பெரியாரான அயோத்திதாச பண்டிதர் ஆவார். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகாலமாகத் தாழ்த்தப்பட்ட மக்களை உரிமையில்லாதவர்களாக, பாவிகளாக, மனிதர்களிலும் குறைந்தவர்களாக சாசனப்படுத்திய பார்ப்பன - பார்ப்பனிய ஆதிக்க மையங்களின் புனிதங்கள், அறம், ஒழுங்கு, வேத இலக்கியம் அனைத்தையும் முதன் முதலில் கேள்விக் குள்ளாக்கியவர்"[4]

எனவே பெரியார் என்பவரின் பிறப்பிற்கு முன்பே பிராமண எதிர்ப்பை விதைத்தவர்கள் தலித்துகள். ஆனால் அப்போதெல்லாம் வெகுண்டெழுந்து ஆதரவளிக்காத பிராமணரல்லாதார் கூட்டம். ஈ.வெ. ராமசாமி நாயக்கர் என்ற பிராமணரல்லாதார் வந்தபோது மட்டும் வெகுண்டெழுந்ததன் நோக்கமென்ன? ஆக பெரியார் மற்றும் பெரியாரிஸ்டுகளுக்கு முன்பே பிராமணர்களை தலித்துகள் எதிர்த்துவந்தாலும் தலித்துகளைவிட திடீரென்று பிராமணர்களிடம் எதிர்ப்பு பிராமணரல்லாதவர்களுக்கு வந்ததன் காரணம் என்ன என்பதை பெரியாரே இவ்வாறு விளக்கியுள்ளார். அவை,

"...... சமீப காலமாக நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் கட்சி) அரசியலில் பார்ப்பனர்களிடமிருந்து உத்தியோகங்களைப் பிடுங்கி எல்லோருக்கும் (பிராமணரல்லாதவர்களுக்கு) பங்கிட்டுக் கொடுக்கும் வேலையில் மாத்திரம் ஒருவாறு வெற்றிபெற்று வந்ததே ஒழிய, மற்ற வகையில் தாராளமாய் முன்னேற முடியாதபடி தடைபட்டே வந்திருக்கிறது.

மேலும் பிராமணர் எதிர்ப்பு என்ற களத்தில் தலித்துகளுக்குப் பின்னால் நுழைந்தவர்களெனினும் **இருவரின் போராட்டமும் கருத்தளவில் ஒன்றுபட்டதே. ஆனால் அரசியல் களத்தை கடந்து சாதி ஒழிப்பு? இழிவுபடுத்துதல்? சமூக இழிவு? என தலித்துகள் மட்டும் இன்றுவரை பிராமணர் பிராமண**ரல்லாதவர் ஆகிய இருவரிடத்தும் அடக்குமுறைகளை சந்தித்து வருவது ஏன்? என்ற கேள்வியின் **பதிலாக நாம் கருதுவது அதிகாரத்தை கையகப்படுத்துவதில் ஏற்பட்ட போராட்டமே பகுத்தறிவு / சுயமரியாதை இயக்கம் / திராவிடம் என்பவை. ஆக கருத்தியலில் ஒற்றுமையாக பிராமண எதிர்ப்பு என்பதே இன்று தலித் எழுச்சிக்கு முரண்பட்டு நிற்கின்றன** என்பது நிதர்சன உண்மை.

தொடர்வோம்.

**கட்டுரைக்கு துணைநின்ற நூல்கள்**


1. அண்ணல் அம்பேத்கர்: தாழ்த்தப்பட்டவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? 2002, அலைகள் அச்சகம், சென்னை பக்: 57.
2. டாக்டர் அம்பேத்கர் : பார்ப்பனியத்தின் வெற்றி, 1998, அலைகள் அச்சகம், சென்னை - பக்: 25.
3. மா.வேலுச்சாமி : தலித் மக்களின் இன்றைய நிலை, 2001 மறுமலர்ச்சி, அனித்ரா வெளியீடு, சென்னை - பக்: 27
4. டாக்டர் அம்பேத்கர், பார்ப்பனியத்தின் வெற்றி - பக் : 101
5. தொல் திருமாவளவன் மற்றும் மீனா கந்தசாமி தலிஸ்மேன், தலித் விடுதலையின் உரிமை வெளிப்பாடுகள், 2003, பாப்புலர் பிரகாசம், சென்னை - 119.
6. டாக்டர் அம்பேத்கர், பார்ப்பனியத்தின் வெற்றி - பக்: 28
7. புனித பாண்டியன் : பெரியாரை திரிக்கும் புரட்டுகளுக்கு மறுப்பு, தந்தை பெரியார் திராவிடர் கழகம், சென்னை - பக்: 73
8. ஏபி. வள்ளிநாயகம் : உரிமைப்போராளி ரெட்டமலை சீனிவாசனார், 2001, ஜீவசகாப்தன் பதிப்பகம், சென்னை - பக்: 36.




படிப்பகம்

www.padippakam.com

■ குடியரசன்

# கணிதம் நம் உடைமை

நம்மில் பலர் இயல்பாய் அறிந்த உண்மை, அரேபிய மொழி வலம் இருந்து இடம் நோக்கி எழுதப்படுவது. புனித குரான் தன் எழுத்துக்களை வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் நோக்கி எழுதப்பட்டே மக்களின் கருத்துக்குச் சென்றடைகிறது. இதை விநோதப் பழக்கமாக சிலர் அணுகுகின்றனர். நாம் பயன்படுத்தும் எண்களின் மதிப்பை கணக்கிடும் போது, 4,321 என்ற எண்ணை நான்காயிரத்து முன்னூற்று இருபத்தொன்று என்று குறிக்கின்றோம். இந்த 4,321-இல் நான்கு முதல் எண்ணாக இருந்தாலும் அதன் மதிப்பை ஒன்றின் அளவில் குறிப்பிடாமல் ஆயிரத்தில் குறிப்பிடுகிறோம். அடுத்துவரும் மூன்றை நூறாகவும், இரண்டை பத்தாகவும் இறுதியில் வரும் ஒன்றை மட்டுமே ஒன்றின் அளவாகவும் குறிக்கிறோம்.

மேலும் 6,54,321 என்ற எண்ணின் முதல் எண்ணின் (6) மதிப்பு லட்சத்தில் குறிக்கப்படுகிறது.

8,76,54,321 என்ற எண்ணின் முதல் எண் (8) கோடியில் குறிக்கப்படுகிறது. நாம் எழுதும் முதல் எண், எதன் மதிப்பில் எதன் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது என்பது அதைத் தொடரும், மொத்த இலக்கங்களையேச் சார்ந்துள்ளது. இதன் காரணம் என்னவாக இருக்கும்?

4321; 6,54,321 மற்றும் 8,76,54,321 ஆகிய எண்களின் துவக்க இலக்கத்தின் மதிப்பு வெவ்வேறாக இருந்தாலும் இறுதி இலக்கத்தின் மதிப்பு 'ஒன்றின் மடங்காகவே' இருப்பதைக் காணலாம். எண்களின் இலக்கம் ஒன்றின் மடங்காகவே அறியப்படுவதன் காரணம் என்ன?

இந்த மேற்கண்ட இரண்டு வினாக்களுக்கும் அடிப்படையான காரணம் இவ்வாறு காணலாம். 523 என்ற எண்ணில் 5-இன் மதிப்பு 500-யும் 2 என்ற எண்ணின் மதிப்பு 20-யும் குறிக்கிறது. ஆனால் 3-இன் மதிப்பு 3-ஐ மட்டுமே கொண்டுள்ளது. எண்ணின் இறுதி இலக்கம் எண்ணின் வெளிமதிப்பும், உட்மதிப்பும் ஒன்றாகவே கொண்டுள்ளது. இதன் காரணம் இதுதான். எண்கள் வலமிருந்து இடமாக மதிப்பிடப்படுகிறது. இதன் மூலக் காரணம் என்னவாக இருக்கும்?

தங்கள் எழுத்துக்களை மொழி ரீதியில் வலமிருந்து இடமாக பயன்படுத்தும் அரேபியர்களின் கண்டுபிடிப்புகளே இன்று நாம் பயன்படுத்தும் எண்கள். எனவேதான் அரேபியத்தின் எண்ணும், எழுத்தும் வலமிருந்து இடமாக மதிப்பிடப்படுகிறது. நமது எழுத்துக்கள் இடமிருந்து எழுதப்பட்டாலும், நாம் பயன்படுத்தும் எண்கள் மட்டும் இவ்வாறு இருப்பதற்குக் காரணம், எண்கள் நமதல்ல. அவை அரேபியர்கள் தந்த கொடை. இந்த அரேபியர்களின் கொடையை நாம் சற்று விரிவாகக் காண்போம்.

நபிகள் நாயகம், மெக்காவில் இருந்து மெதினா வரை 350 கி.மீ. பயணப்பட்டு புனிதம் நிகழ்த்தப்பட்ட ஆண்டு கி.பி 622. இந்த புனிதப் பயணத்தின் தொடர்ச்சியாக இஸ்லாம் வட ஆப்பிரிக்கா, பிரான்சு பகுதிகளின் மேற்கு, பெர்ஸியாவின் மையப்பகுதி, மத்திய ஆசியா, சீனாவின் கிழக்குப் பகுதி, வட இந்தியாவின் சிந்து பகுதிவரை பரவியது.

நபியின் அரசியல் - இராணுவ வாரிசுகளாக வந்தவர்கள் 'காலிபா' எனப்பட்டனர். இவர்களின் வழியாக இஸ்லாமிய அரசு உலகெங்கும் தொடரப்பட்டது. இஸ்லாமியர்களின் 'காலண்டர் முறை' சூரியன், சந்திரன் மற்ற கோளங்கள் விண்வெளி அசைவுகள் உலகின் இஸ்லாமிய கலாச்சாரத்துடன் இணைக்கப்பட்டு மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. இஸ்லாமியர்களின் படைப்பு உலக அறிவியல் தேடல்களை பூர்த்தி செய்வதாக மட்டுமல்லாமல், புதிய அறிவியல் சிந்தனைகளை மக்களின் அறிவுத்தளத்தில் உருவாக்கியது. இதன்மூலம் இஸ்லாம் பரவுவதற்கு முன்பிருந்த கண்மூடித்தனமாக நம்பிக்கைகள், வானவியல் சாஸ்திரம் பற்றிய தெளிவின்மை, கோள்களின் மூலம் நிகழ்த்தப்படும் செயல்களுக்கு அப்பகுதி மக்கள் கொண்டிருந்த மூடநம்பிக்கைகள் கேள்விக்குட்படுத்தப்பட்டன.

நாட்காட்டிகள் (calendars) மற்றும் மத விரத நந்தினங்கள், அசுப தினங்கள் இஸ்லாமிய கணித விளக்கப்படியே துவக்கப்பட்டன. இவை அறிவால் ஆழமானதாக இருந்ததாலும், தினங்களைக் கணக்கிட வசதியாகவும், எளிமையாகவும் இருந்ததாலும் மக்களிடம்



படிப்பகம்

www.padippakam.com

எளிதாக நடைமுறைக்கு வந்தன.

"தாபிட் இபின் குரா" என்ற சிந்தனைக் கருத்தியல், வடிவ இயற் கணிதத்திற்கும், அல்ஜீப்ரா வகை கணிதத்திற்கும் பல புதிய அடிப் படைத் தத்துவங்களை தோற்று வித்தது. இப்பள்ளியின் சிந்தனைத் தொடர்ச்சி கிரேக்க கணிதத் தத்து வங்களுடன் பெருமளவு பொருந்து வதாக உள்ளது. உமர் கயாம் மற்றும் அல் காஷி ஆகிய பெரும் கணித மேதைகளின் பங்களிப்பு இன் றைய கணித வளர்ச்சியில் அரபு நாட்டு மக்களின் பெரும் கொடையை நாம் சுகிக்கிறோம்.

அரேபிய நாட்டின் காற்று அந்நாட்டு சுகந்தத்தைச் சுமந்து இந்தியர்களுக்கு குளிர்ச்சியையும், இதத்தையும் வழங்குவது போல, அரேபிய நாட்டு பகுத்தறிவு இந்திய நாட்டு நிலத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சியது. பதிலுக்கு இந்திய நாடு தன்னகத்தே கொண்டுள்ள வர் ணம் - சாதி பாகுபாடுகளை மக்க ளால் ஏற்றுக் கொள்ளவியலாத கடும் சூத்திரமாக உலக நாடு களுக்கு வழங்கிக் கொண்டுவருகிறது.

கிரேக்க தத்துவங்களையும் விஞ்சி, நவீனமாக விளங்கிய அரே பிய இயற் கணக்குகளை இந்தியர் கள் பலர் கற்றுத் தேர்ந்தனர். அவற்றை நல்லன என உணர்ந்தே தன்னகத்தே பூட்டி வைத்து மகிழ்ந்து களித்தனர். ஆனால் வர்ணம் - சாதி மட்டும் எப்படி ஒரு சாரரால் உருவாக்கப்பட்ட கருத்தியல் நாடு முழுவதும் விரவிப் பரவியது?

மக்களை இணைக்கும் விஞ் ஞானத் தத்துவம் ஏன் குழுக்களி டம் முடங்கிப் போனது? குறுகிய எண்ணத்துடன் துவக்கப்பட்ட பிரித்தாளும் வர்ண - சாதி கருத்தி யல் எப்படி நாடு முழுமையும் எந்த ஒரு மனிதனும் விலக்கின்றி மேவிப் படர்ந்தது? இது ஆய்வுக்குரிய வினாவாக இருப்பினும் வேத னையை பதிவில் கலந்து நமக்க ளிக்கும் கேள்வி என்பதை நாம் உணர்கிறோம்.

இயற்கணிதம், எண்ணியல், வானவியல், பூகோளம் போன்ற துறைகளில் அரேபியர்களின் பங் களிப்பு மனித கூட்டம் என்றும் நன்றி கூறும் அளவிற்கு தந்தவர் கள் அரேபியர்கள். இன்றும் அல் ஜீப்ரா வகைக் கணிதம் மாணவர் களுக்கு சிரமமான பாடப் பிரிவாக உள்ளதையும் அதில் நிபுணத்துவம் பெறுதல் அரியது போலவும் நம் நாட்டில் காணப்படுகிறது. ஆனால் கி.பி. 780 இல் முகமது இபின் முசா அல்-குவாரிஸ்மி என்ற அரேபிய கணித மேதையால் வடிவம் தரப் பட்டதுதான் இந்த அல்ஜீப்ரா வகைக் கணிதம்.

எண்களை பகுத்து புதிய வடி வங்களின் தொகுப்பாக அறிவது, ஆசியாவில் வழங்கப்படும் கணித தத்துவங்களை தமது அல்ஜீப்ரா வகைக் கணிதத்தால் எளிமையாக விளக்குவது ஆகிய இரு வகை களில் முகம்மது இபின் கண்டு பிடிப்பு விஞ்சி நின்றது. இன் றைக்கு லத்தீன் கணிதப் புதிர்களை யும் விவரிக்கும் - தீர்வைத் தரும் வகையில் இவரது தத்துவக் கோட் பாடு உள்ளதை கண்டுபிடிப்புக்கள் தெரிவிக்கின்றன. பாபிலோனியா, கிரேக்க மற்றும் இந்தியக் கணிதத் தத்துவங்கள் அரேபியத் தத்துவங் களோடு ஒத்துப் போகின்றன. எனினும், அரேபிய கணிதத் தத்து வங்களின் உட்கணங்களாகவே இந்த வகைகள் உள்ளன.

சில நூற்றாண்டுகளுக்கு முன் னர் நம்மால் நடைமுறையில் கொண்டுவரப்பட்ட நிலைத் தசம எண்களைப் பற்றிய விரிவான விளக்கங்கள் இபின் மூஸா அவர் களால் கி.பி. 800-களிலேயே நன்கு விவாதிக்கப்பட்டுள்ளன.

இவரால் உருவாக்கப்பட்ட வான சாத்திர அட்டவணை இன் னும் 500 ஆண்டுகள் வரை நமக்கு விவரம் தரும் களஞ்சியமாக இருக் கும். இதற்கு இவர் "ஜிஜ்" (zij) என பெயரிட்டுள்ளார்.

நமது நாட்காட்டி கிபி மற்றும் கிமு என்று கிருஸ்துவின் பிறப் பைச் சார்ந்து மட்டுமே கணக் கிடப்படுகிறது. உலகிற்கே காலண் டர் முறையை அறிமுகப்படுத்திய முகலாயர் ஆண்டு (The Muslim era), தன் கணிப்புப்படி கிபி. 622-ஐ துவக்கமாகக் கொண்டு BH மற்றும் AH என்று இன்றும் நடைமுறையில் உள்ளது. கிபி. 622-இல் ஹிஜிரா என்ற புனிதப் பயணம் நிகழ்த்தப் பட்ட ஆண்டு என்பதால் Before Hejira (BH) எனவும் After Hejira (AH) எனவும் இவ்வாண்டு முதல் குறிக் கப்பட்டது. முகலாயர் காலண்டர் சந்திரனின் பயணத்தை அடிப் படையாகக் கொண்டு வரையறுக் கப்படுவதால், மேற்கத்திய காலண் டரைவிட வருடத்திற்கு 11 நாட்கள் ஓர் ஆண்டிற்கு குறைவாக இருக் கும். எனவே மேற்கத்திய காலண் டர் வருடத்துடன் நேரடியாக 622-ஐ கூட்டி முகலாயர் வருடம் கணக் கிட இயலாது. முகலாயர் வருடம் ஆண்டிற்கு 355 நாட்கள் மட்டுமே கொண்டது. இந்த வருட வேறு பாட்டை கணக்கில் கொண்டே மேற்கத்திய - இஸ்லாமிய வருடங் களை ஒப்பிட இயலும். (பின்வரும் கட்டுரைகளில் பவுத்த வருட காலண்டர் முறையை இதனுடன் ஓர் ஒப்பாய்வைக் காணலாம்)

சமன்பாடுகளில் நாற்படிச் சமன்பாடுகளின் தீர்வையும், முப் படிச் சமன்பாடுகளின் தீர்வையும் நோக்கிய ஆய்வுகள் அரேபிய கணித வல்லுனர் "தாபித் இபின் குரா" ஆல் தொடரப்பட்டது. இன்றைக்கு கணித உலகம் அறுதி யிட்டுத் தீர்க்கும் முறை இருபடிச் சமன்பாடுகள் வரை மட்டுமே இன்று உள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

முப்படிச் சமன்பாடுகளை நேரடியாகத் தீர்க்கும் வழியை நமது கணித உலகம் இதுவரை கண்டு பிடிக்கவே இல்லை. முப்படிச் சமன்பாடுகள் மற்றும் அதற்கு மேலான மூலங்களைக் கொண்ட சமன்பாடுகளின் தீர்வுகளை நம் விஞ்ஞானம் இன்றுவரை அறியா மலே உள்ளது.

வட மெசபடாமியாவில் ஹர்ரன் என்ற இடத்தில் கிபி. 836-இல் பிறந்தவர் அபுல் ஹஸான் தாபித் இபின் குரா மர்வான் அல்-ஹர்ராணி என்ற கணித வல்லுநர். இவர் தாபித் இபின் குரா என்று கணித உலகத்தால் அறியப்படு கிறார். இவர் கிபி. 901-இல் மரண மடைந்தார். இளவயதில் மத விசயங்களில் இவர் கூடுதல் கவனம் செலுத்தும் பிரிவில் இருந்தாலும்,



படிப்பகம்

www.padippakam.com

இவரின் கணிதம் நோக்கிய ஆர்வம் இவரை பிற நாட்டு கணித வல்லுனர்களின் படைப்புகளை அறிய அரபி, கிரேக்கம் மற்றும் சிரிய மொழிகளை கற்றுத் தேறத் தூண்டியது. அந்த மொழியின் புலமையை நிரூபிக்க இவர் யூக்லிட் படைப்புகளை மொழியாக்கம் செய்தார்.


இதைப்போலவே தபீத்தின் மொழியாக்கங்கள் இன்றும் பயனுள்ள வையாக உள்ளன. பரவளையம்

| ஆசிரியர் | படைப்பு |
|---|---|
| யூக்லிட் | தனிமங்கள் |
| ஆர்க்மிடிஸ் | அப்போலோனியஸின் வடிவ கூம்பு வெட்டிகள் |
| தாலமி | அல்மாகஸ்ட் |
| கெரர்டோ | கிரிமோனா |

மற்றும் தொகை நுண் கணிதம் போன்றவற்றில் இவர் ஆற்றிய பணி இன்றும் நம்மை மலைக்கவைக்கிறது.

தபீத், கணிதத்தில் ஒரு வல்லுனர் போல, மருத்துவம், வானசாஸ்திரம், தத்துவம், இயற்பியல், புவியியல், தாவரவியல், விவசாயம் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். ஆனால் தன்னுடைய கணிதத் திறமையால் மட்டுமே இன்று நம்மால் நினைவு கூறப் படுகிறார்.

படத்தில் காணும் முக்கோணத்தில் AB - ன் நீளம் 6 செ.மீ; BC-ன் நீளம் 8 செ.மீ. AC-யின் நீளம் 10 செ.மீ. A-யிலிருந்து C-ஐ அடைய 14 செ.மீ. தூரம் கடக்க வேண்டியுள்ளது. இந்த தூரங்களை இணைநிலை செங்கோண முக்கோணத்தில் பித்தாகரசு தேற்றம் பயன்படுத்தப்படுகிறது. இதன் நிரூபணம் சிறப்பானதாகக் கொள்ளப்படுகிறது.




கோளவகை முக்கோணம், யூக்லிட்-ன் இணைகோடுகள் தத்துவம், அளவியல் வகைகளில் சதுரம், செவ்வகம், உருளை, கூம்பு, கோளம் மற்றும் அரைக் கோளம் ஆகிய வடிவங்களில் தபீத்தின் ஆய்வு மற்றும் கொடை நமக்கு இன்றும் புதுமையாக உள்ளது. இவருடைய கணித தத்துவங்களை மட்டுமே நம்மால் கவலியேரி, கெப்லர் மற்றும் வல்லிஸ் ஆகிய கணித வல்லுனர்களின் தத்துவங்களை இணைத்து ஒரு தொடர்பை அறிய இயலுகிறது. புவியியல் அளவுமானி அரேபியர்களின் பங்களிப்பு என்னும்போது, அதன் அடிப்படைத் தத்துவத்தை வரைந்தளித்த தபீத்தின் பங்களிப்பு மானுடத்தின் அடுத்த நகர்வாகக் கொள்ளப்படுகிறது.

இந்திய நாட்டில் ஆர்யபாட்டா I, ஆர்யபாட்டா II, பாஸ்கரன், பாஸ்கராச்சார்யர், பிரம்மகுப்தர், ராமானுஜன் போன்ற கணித மேதைகள் வாழ்ந்து பல கண்டு பிடிப்புகளை உலகத்திற்கு ஈர்த்ததாக இந்திய வரலாறு பெருமைப்பட்டுக் கொள்கிறது.

**இஸ்லாமியர்களின் படைப்பு உலக அறிவியல் தேடல்களை பூர்த்தி செய்வதாக மட்டுமல்லாமல், புதிய அறிவியல் சிந்தனைகளை மக்களின் அறிவுத்தளத்தில் உருவாக்கியது.**

உண்மையில் இவர்களின் பங்களிப்பு என்ன என்பதினையும், இந்த கணிதத்தில் பவுத்தத்தின் ஆளுமை பற்றியும் பின்வரும் கட்டுரைகளில் காணலாம்.

பார்ப்பனியம் கணிதம் பற்றிய நீண்ட ஆய்வை உண்மையிலேயே நிகழ்த்தியிருந்தால் அல்லது ஏதேனும் ஒரு பார்ப்பனராவது கணித கண்டுபிடிப்புகளை வழங்கியிருந்தால், அது உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தால் பார்ப்பனியத்திற்கு உலகளாவிய முகம் கிடைத்திருக்கும்.

அம்பேத்கர் கூற்றுப்படி, இந்திய நாடு தாண்டி, இந்தியாவில் பிறந்து தத்துவம் தந்த ஒருவரின் பெயர் உலகமெங்கும் விரவிப் பரவியுள்ளது என்றால் அவர் புத்தர்தான். புத்தரின் தத்துவம் பல பயன்தரு கலைகளால் வெகு நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இன்றைய பவுத்தக் கலாச்சாரம் மருத்துவம், கணிதம், வானசாஸ்திரம் விஞ்சிய கலைகளின் ஊடகமாக வழங்கப்பட்டதால், அப்பயன்தரு படைப்புகளின் ஊடகமாக பவுத்தம் பரவியது. பவுத்தம் என்ற தத்துவம் மொழியைத் தாண்டி உலகம் முழுவதும் வியாபித்திருப்பதற்குக் காரணம் பவுத்தத்தில் உள்ள மருத்துவ, கட்டடக்கலை, கணித பயன்தரு தத்துவங்களே. இந்நிலை இஸ்லாம் மற்றும் பிற யூத மதங்களுக்குப் பொருந்தும். இந்திய நாடு புத்தரின் துவக்கத்திலிருந்து பத்து நூற்றாண்டுகளுக்கு உலக நாட்டறிஞர்களால் தங்கி தத்துவங்கள் பயின்ற தளமாக இருந்து வந்தது. யுவான் சுவாங், பாகியான் இந்த நாட்டின் தத்துவங்களாக பயின்றது பவுத்தத் தத்துவங்களே. ஆனால் இன்று இந்திய நாட்டினர் அறிவுத் தெளிவு பெற வெளிநாடுகளுக்குச் சென்று பவுத்தம் பயின்று வருகின்றனர்.

இந்த பேதமை நிலையே பவுத்தத்தின் மாட்சிமையையும், பார்ப்பனியத்தின் மூடத்தனத்தையும் நமக்கு ஒளியூட்டிக் காட்டுகிறது.

இஸ்லாம் உலகெங்கும் பரவியதற்கான மூலம், அம்மார்க்கத்தில் நம்பிக்கை கொண்டோர் அளித்த விஞ்ஞான, மருத்துவ பயன்தரு படைப்புகளே. இதை ஏதும் கைக் கொள்ளாமல் பார்ப்பனியம் மனிதர்களில் பேதம் மட்டுமே படைத்து விரிவாக்கப்பட்டதால் அதன் கருத்தியல் சர்வதேச அரங்குவரை எட்டவில்லை. இதையும் மீறி சிலர் ராமானுஜன் போன்றவர்களால் கணிதம் விரிவாக்கம் பெற்றது போல் காட்டுகின்றனர்.

வரும் கட்டுரைகளில், இஸ்லாமியர்களின் கணிதத்தின் தொடர்ச்சியையும், பார்ப்பன சதியினையும் ஒப்பிட்டுக் காண்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்

■ முனிமா

☑ திருமாவளவனும் பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸும் தமிழின் பெயரால் இணைந்திருக்கிறார்கள் என பத்திரிக்கைகள் தெரிவிக்கின்றன. இனிமேல் தலித்துகள் எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை அல்லவா?

*- வெற்றிச்செல்வன், கடலூர்.*

இருவர் இணைப்பிலும் தமிழ்தான் முதன்மை. சினிமாவில் தமிழ், பெயரில் தமிழ், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என ஒலித்துக் கொண்டிருக்கிறதே அன்றி நாம் பங்காளிகள் வளங்களைப் பகிர்ந்து கொள்வோம் என்றோ, சாதியின் கருவறுப்போம் என்றோ ஒலிக்கவில்லை. பொறுத்திருங்கள், அவசரப் படவேண்டாம்.

☑ மக்கள் அறியாத அம்பேத்கரை இனி மக்கள் அறிந்து கொள்வார்களா?

*- இப்ராஹிம், பெரியகுளம்.*

தலித் மக்களின் வரலாற்றுத் திருப்புமுனையாக, தலித் போராளிகளுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்குகின்ற அம்பேத்கரை அறிந்து கொள்ளாவிட்டால் விடுதலை தள்ளிப்போகும். ஒவ்வொருவரும் அவரை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

☑ அரசு 2001-இல் அறிவித்தபடி திட்டங்களை நிறைவேற்றியுள்ளதா?

*- வின்செண்ட், பாளையங்கோட்டை.*

ஆறாயிரம் காலியிடங்கள் நிரப்பப்படும் என அறிவித்திருந்தது அரசு. இன்னும் ஒரு இடம் கூட நிரப்பப்படவில்லை.

தலித் ஆய்வு மய்யம், தலித் நுண்கலை மய்யம், நிகழ்கலை மய்யம், தலித் ஆவணக் காப்பகம், தலித்துகளுக்கான தனி பதிப்பகம் ஆகிய பல அறிவிப்புகள் செய்தது. இதற்காக ஒரு அரசு ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணை மிகவும் வேடிக்கையானது. இந்த எல்லாத் திட்டங்களுக்கும் ரூ. 50 லட்சம் ஒதுக்கியுள்ளது. இதை வங்கியில் போட்டு அதில் வரும் வட்டியை வைத்து இத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமாம். தலித்துகளுக்கு ஒதுக்க வேண்டிய ரூ. 1700 கோடியை எங்கோ மடைதிருப்பிக் கொண்டிருக்கிறது. இதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கினால் குறைந்தா போய்விடுவார்கள்? கேட்க நாதியில்லை!

☑ இறுதியாக தலித்தல்லாதவர்கள், தலித் இலக்கியத்தை தலித்துகள்தான் படைக்க முடியும் என ஒத்துக் கொண்டார்கள் போலத் தெரிகிறதே!

*- மணிமேகலை, காஞ்சிபுரம்.*

ஒரு பொருளின் இருப்பு என்பது பார்வையாளர்களின் நிலையைப் பொறுத்து மாறக்கூடியது. தலித்தல்லாதாருக்கு சாதிக்கொடுமை அருபமானதாக, காணாமற் போகுமளவு தூரத்தில் இருப்பதாக உள்ளது. தலித்துக்கோ எப்போதும் அருகாமையிலும் பருப்பொருளாகவும் உள்ளது. சாதிக் கொடுமையை எழுதுகிறோமென தலித்தல்லாதார் மறுப்பது அதை அனுபவிக்கும் தலித்துகளின் இருப்பை. தலித்தல்லாதார் தாங்கள் அதுவாகவே (தலித்தாகவே) மாறிவிடும் ரசவாதத்தில் தலித்துகளை மறுப்பதும் நிகழ்கிறது. இது விஞ்ஞானம். இலக்கியத்துக்கு பொருந்தாது என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களும் ஓய்ந்து போனார்கள்.

☑ அகவி எழுதிய 'சும்மாடு' நூல் வெளியீட்டு விழாவிற்கு புதிய கோடாங்கி குழுவினர் சென்றதாக அறிந்தோம். எப்படியிருந்தது?

*- பெரியசாமி, திருப்பூர்.*

முற்போக்கு இலக்கிய வட்டமும், புதிய கோடாங்கி இளைஞர் வட்டமும் அவரவர் தரப்பிலிருந்து 'சும்மாடு' கவிதையை விமர்சித்தார்கள். முதல் நூலின் சுவடுகளோடு சும்மாடு சிறந்த கவிதைகளைக் கொண்டிருந்தது. கவிஞரின் தனிவழி என்பது தனது வாழ்க்கையை உற்று நோக்குவதன் மூலமே சாத்தியம். தத்துவங்களின் தலையிலேறி தாண்டிக் குதித்துப் போவதல்ல. கவிஞரின் உற்று நோக்கல் அநேகம் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது.

☑ புதிய கோடாங்கி, கிறிஸ்தவ குழுக்களுடன் இணைந்து செயல்படுவது தவறென எழுத்தாளர் இமையம் சுட்டிக்காட்டினார், பெரம்பலூர் புதிய கோடாங்கி எழுச்சி முகாமில். இது பற்றி உங்கள் பதில் என்னவோ?

*- ஏழுமலை, சென்னை.*

நாடார் கல்யாண மண்டபங்களிலும், முதலியார் சத்திரங்களிலும், தேவநாயப் பாவணர் அரங்கிலும் இன்னும் பல இடங்களிலும் கூட்டங்கள் நடைபெறுவதைப் போலத்தான் கிறிஸ்துவப் பள்ளிக்கூடங்



படிப்பகம்

www.padippakam.com

களிலும், அவர்கள் பராமரிப்பிலுள்ள அய்க்கஃப் கூடங்களிலும் கூட்டம் நடக்கிறது. குறை சொல்ல வேண்டும் என முடிவு செய்து விட்டால் உண்மை எதுவென அறிந்துகொள்ள வேண்டிய அவசிய மில்லை என்பதையே அவர் விமர்சனம் உணர்த்துகிறது.

**அஞ்சல் தலையில் மாறன் உருவப்படம் வெளியிட்டதில் மத்திய அரசு பாரபட்சம் காட்டியுள்ளது. நாட்டிற்கு உழைத்த எத்தனையோ தலைவர்களின் படங்கள் அஞ்சல் தலைகளாக ஆவதற்கு வரிசையில் காத்திருக்கும்போது மாறன் மீது ஏன் திடீர் கரிசனம்?**

*- கவியரசு, கும்மிடிப்பூண்டி.*

மூன்று லட்சம் கொடுத்தால் வரிசையை முந்தலாம் என்று அஞ்சல்துறை கருத்துத் தெரிவித்துள்ளது. ஆகையால் யார் யாருக்கு தங்களது தலை அஞ்சலாக வேண்டுமோ, அவர்கள் ரூ. 3 லட்சத்தை விழாச் செலவுக்காக அஞ்சல் துறைக்கு அனுப்பி வைத்தால் போதுமானது.

**2004 ஒலிம்பிக் ஹைலைட்ஸ் கூறுங்கள்?**

*- மனோகரன், கன்னியாகுமரி.*

ஒலிம்பிக் நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடப்பது. இந்தியா நூற்றாண்டு காலம் கலந்து கொண்டும் தங்கம் இன்னமும் வாங்கவில்லை. 2004 மட்டும் விதிவிலக்காக முடியுமா? வசதி படைத்தவர்கள் சுயசாதி அபிமானங்களுடன் ஒலிம்பிக் போட்டிக்கு வீரர்களைத் தேர்வு செய்யுமுறை மாறும்போது, இந்தியா நிச்சயம் தங்கம் வெல்லும். மற்றபடி குறிப்பாக சொல்ல ஏதுமில்லை.

**பிஷப் ஹீபர் கல்லூரியில் நடைபெற்ற 'ஒடுக்கப்பட்டோர் நிலையும் மேம்பாடும்' என்ற கருத்தரங்கில் தலித் தல்லாத ஒரு தமிழ்ப் பேராசிரியை, சாதி உணர்வே இல்லாமல் தான் வளர்க்கப்பட்டதாகவும், கருத்தரங்கின் போதுதான் இதைப்பற்றித் தெரிந்து கொண்டதாகவும் கூறினார். இது சாத்தியமா?**

*- கார்த்திகேசன், புதுக்கோட்டை.*

சாத்தியமா, சாத்தியமில்லையா என்பதைவிட இது பொது அறிவு மற்றும் இந்திய சமூகம் பற்றிய அறிவு சம்பந்தப்பட்டது என்பதே நமது கருத்து.

**கருணாநிதி பிஜேபி-க்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்தை சாத்வீக முறையில் நடத்தப் போகிறாராமே?**

*- தமிழ்வேந்தன், குளித்தலை.*

இப்போது காங்கிரசுடன் கூட்டணி. எனவே பிஜேபி-யை எதிர்க்கிறார். அதுவும் காகிதத்தில். இதைத் தவிர அவருக்கு பாவம் வேறு நோக்கம் எதுவும் கிடையாது.

●

# அறிவிப்பு

**எழுத்தாளர் திரு. கி. ராஜநாராயணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வரும் 'கதைசொல்லி' இதழானது ஒவ்வொரு வருடமும் சிறுபத்திரிக்கைகளை ஊக்குவிக்கும் விதமாக சிறந்த சிறுபத்திரிக்கைகளை தேர்ந்தெடுத்து சிறப்புப் பரிசாக ரூ.5000 வழங்கி வருகிறது. இந்த வருடத்திற்கான சிறந்த இதழாக 'புதிய கோடாங்கி' தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது என்பதனை வாசகர்களுக்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தேர்ந்தெடுத்த 'கதைசொல்லி' இதழின் குழுவுக்கு எங்களது நன்றி!**

■

**திருச்சி தூய வளனார் கல்லூரியின் தமிழ் துறை ஆய்வு மாணவர் தனது முனைவர் பட்ட ஆய்வுக்கு புதிய கோடாங்கியை தேர்ந்தெடுத்துள்ளார் என்பதனை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.**

■

**'புதிய கோடாங்கி' இதழில் வெளியிடுவதற்காக கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள், வாசகர் கடிதங்கள் வந்த வண்ணம் இருப்பது மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. இடப்பற்றாக் குறையின் காரணமாக அனைத்தையும் இந்த இதழில் வெளியிட முடியவில்லை.**

■

**எழுத்தாளர் சிவகாமி அவர்கள் புதிய கோடாங்கியில் எழுதிய 'அப்னா பஞ்சாயத்து' என்னும் கட்டுரை புதிய கோடாங்கி பதிப்பகத்தின் மூலம் சிறு புத்தகமாக வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை ரூ.10. (தபால் செலவு தனி) பிரதிகள் வேண்டு வோர் புதிய கோடாங்கியின் தொடர்பு முகவரிக்கு எழுதவும்.**

**- ஆசிரியர்**



படிப்பகம்

www.padippakam.com

# கலைக்கப்பட்ட கனவுகள்

■ பிரேம் சந்திரன் ஜான்

தமிழில்
ராஜா

"நமது அரசியல்வாதிகள் அதிகரித்து வரும் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி பெருமை பேசி வரும் வேளையில், இந்தியா வேறு சில சிறப்புக்களையும் பெற்றிருப்பதைப் பற்றிக் கூற மறந்து விடுகிறார்கள். சுகாதாரமின்மை காரணமாக 5,19,500 குழந்தைகள் ஆண்டுதோறும் இறக்கிறார்கள். இதற்குக் காரணம் 72% அளவிலான மனிதக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் ஒழிக்கப்படுவதில்லை. இந்த பாதுகாப்பற்ற மனிதக் கழிவுகளை நிரப்ப வேண்டுமென்றால் தினமும் 14,70,308 பீப்பாய்கள் தேவைப்படும். மாசுபட்ட குடிநீர் மற்றொரு பிரச்சினை. இதன் காரணமாக தினமும் 6000 குழந்தைகள் செத்து மடிகிறார்கள்."

(இந்தியன் எக்ஸ்பிரஸ் - 22.3.2004)

சுகாதாரம் என்பது மனிதனின் அடிப்படை உரிமை. இது அரசியல் சாசனத்திலேயே கட்டமைக்கப் பட்டு அரசின் முதன்மைக் கடமையாக அறிவுறுத்தப் பட்டுள்ளது. 2000 ஆண்டில் அனைவரும் உடல் நலம் பெற்றிருக்க வேண்டும் என்று உறுதிகூறி உலக அளவில் ஜனாதிபதிகளும், பிரதம மந்திரிகளும் கையெழுத்திட்டார்கள் (செப்டம்பர் 1978- Alma Ata). ஏழை மக்களுக்கான பொதுச் சுகாதாரம் இதில் வலியுறுத்தப்பட்டது. இங்கு பேசிய இந்தியப் பிரதிநிதி "நகரத்திற்கும் கிராமத்திற்கும் நடுவில் உள்ள இடைவெளியையும், 'உள்ளோர்'க்கும் 'அல்லாதார்'க்கும் நடுவில் உள்ள இடைவெளியையும் குறுக்கி, கிராமப் புறங்களில் அடிப்படைச் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அடிப்படை சுகாதாரத்தினை கிராம மக்களின் வாசற்படி வரை எடுத்துச் செல்லும் வண்ணம் எங்கள் சுகாதாரத் திட்டங்கள் அமைந்துள்ளன" என்று முழங்கினார்.

அதற்குப் பிற்பாடு பதினைந்து ஆண்டுகள் கழிந்தும், 1993-இல் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவர சேகரிப்பின் பகுப்பாய்வு கூறுகிறது. "நாட்டின் சுகாதார நிலவரம் அதளபாதாளத்தில் உள்ளது. பாராளுமன்றம் தேசிய சுகாதாரக் கொள்கையை 1983-இல் உருவாக்கிய பிற்பாடும், சுகாதார நிலவரம் கவலையளிப்பதாகவே இருக்கிறது."

## தற்போதைய நிலவரம்

● 19-ஆம் நூற்றாண்டு நோய்களான Leismaniasis-உம், Leptospirosis-உம் மீண்டும் அறிமுகமாயுள்ளன. Leismaniasis இந்தியாவை முதன்மையாகக் கொண்ட மூன்று நாடுகளில்தான் அதிக அளவில் பரவியுள்ளது. Leptospirosis-இனால் 125 பேர் இந்தியாவில் இறந்துள்ளனர்.

● தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தினால் ஒரேயடியாக ஒழித்துக்கட்டப்பட்டதாகக் கூறிய மலேரியா மீண்டும் தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளது. வருடத்திற்கு இரண்டரை மில்லியன் நபர்கள் மலேரியாவினால் பாதிக்கப்படுகிறார்கள்.

● காச நோயும் அதேநிலையே. ஒவ்வொரு நாளும் 20,000-க்கும் மேற்பட்டவர்களை காசநோய் பீடிக்கிறது; 1200 போர் இறக்கிறார்கள்.

● 2010-ஆம் ஆண்டை ஒட்டி இந்தியாவில் 20-55 மில்லியன் நபர்களை எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தாக்கியிருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

● டைபாய்ட், ஹெபாடிடிஸ், பேதி, காலரா மற்றும் இதர நீர்வழித்தாக்கு வியாதிகள் கிராமப் புறங்களிலும், நகர குடிசைப் பகுதிகளிலும் உள்ள ஏழை மக்களிடையே அதிக அளவில் காணப் படுகின்றன.

● சிசுமரண விகிதாச்சாரம் நிலமற்ற தலித்துகளிடையே 1000-க்கு 94 என்ற அளவில் நிலவுகிறது. தேசிய சராசரி விகிதாச்சாரம் 1000-க்கு 65 தான்.

70% இந்தியர்கள் உயிர்வாழ்வதற்கு இன்னமும் நிலத்தையும், விவசாயத்தையும்தான் நம்பியிருக்கிறார்கள். கடந்த 15 ஆண்டுகளில் 35 மில்லியன் மக்கள் அடிப்படை வசதிகளுக்கான திட்டங்களினால் இடப் பெயர்ச்சி செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் 40% பழங்குடியினர், 25% தலித்துகள். 90% வேலைவாய்ப்புகள் முறைப்படுத்தப்படாத பிரிவில்தான் இருக்கின்றன. கூலித் தொழிலாளிகளும், நிலமற்ற தலித்துகளும் தான் இங்கு அதிக அளவில் பணிபுரிகிறார்கள். இவர்கள்தான் அதிக அளவில் நோயுற்று இறப்பவர்கள்.

ஏழ்மைக்கும், நோய்க்கும் உள்ள தொடர்பு வெகு காலத்திற்கு முன்பே நிலைப்படுத்தப்பட்டு விட்டது. ஏழ்மைக்கு முக்கிய காரணம் வள ஆதாரங்களை கையகப்படுத்தி தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் இல்லாமைதான். இந்தியாவில் இந்த வள ஆதாரங்களில் 80%, இருபது சதவிகிதத்திற்கும் குறைவானவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இன்றும் இந்தியாவில் ஏழ்மை அதிக அளவில் பரவியிருப்பதற்குக் காரணமாக உலக வங்கி தனது சமீபத்திய ஆவணம் ஒன்றில் பின்வருமாறு கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

"ஏழ்மை மிக மெதுவாகத்தான் குறைந்து வருகி றது. ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே வாழும் 37% கிராம மக்களிடையே ஏழ்மை அதிக அளவில் பரவி யிருக் கிறது. உலக அளவில் இந்தியாவில்தான் ஏழை மக்கள் அதிகம் குவிந்து கிடக்கிறார்கள். ஐந்து வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை விகிதாச் சாரம் உலக நாடுகள் அனைத்தையும்விட இந்தியாவில் தான் அதிக அளவில் இருக்கிறது. கிராமப்புற பெண்களின் இறப்புகளில் 12% குழந்தை பிறப்பின் போது நிகழ்கிறது. இது சீனாவைவிட நான்கு மடங் கும், உலக நாடுகள் அனைத்தையும் ஒன்றாக எடுத்துக் கொண்டால் இரண்டரை மடங்கும் அதிகம். ஐந்து வயதிற்குக் கீழுள்ள குழந்தைகளில் 50 சதவிகிதத்தினர் ஊட்டச்சத்து குறைவானவர்கள்; பிறக்கும் குழந்தை களில் மூன்றில் ஒரு பங்கினர் எடை குறைந்தவை. 50 சதவிகிதத்திற்கும் அதிகமான குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில்லை. பெண்களில் மூன்றில் ஒரு பங்கினரும், ஆண்களில் ஐந்தில் இரண்டு பங்கினரும் கல்வியறிவற்ற வர்கள். அட்டவணைச் சாதிப் பெண்களில் 19 சதவிகிதத்தினர்தான் கல்வியறிவு பெற்றவர்கள்" என்று கூறும் இந்த ஆவணம் தொடர்ந்து பால், கல்வியறிவு, நிலவுடைமை, பணிநிலை, சாதி ஆகியவற் றிற்கும் ஏழ்மை-நோய்த் தன்மை-இறப்புத் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கிறது.

## பொருந்தா மருத்துவ முறை

இந்தியா சுதந்திரமடைந்தபொழுது மக்களை அடிப்படையாகக் கொண்ட, பெரும்பாலான மக்க ளுக்கு உபயோகப்படத்தக்க, மக்களுக்கு அறிமுகமான, முழுபலன் அளிக்கக்கூடிய இந்திய மருத்துவ முறை களை செயல்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருந்தன. ஆனால் அப்போதிருந்த மேற்கத்திய மோகம் கொண்ட, உயர் வர்க்க, உயர்சாதி ஆட்சியாளர்கள் நமக்குக் கொஞ்சமும் பொருந்தாத மேற்கத்திய முறைகளை அறிமுகப்படுத்தினர். இந்த மேற்கத்திய மருத்துவமுறை தன் பிறப்பிடமாகிய இங்கிலாந்தி லேயே இப்போது புறக்கணிக்கப்படுகிறது என்பது கவனிக்கத்தக்கது.

## ஆல்மா ஆட்டா

1978-இல் இந்தியா ஆல்மா ஆட்டா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு '2000-இல் அனைவருக்கும் சுகா தாரம்' என்று உறுதியளித்தது. புதிய நம்பிக்கைகள் தோன்றின. துரதிருஷ்டவசமாக இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் நாம் தோல்வியடைந்துவிட் டோம். எந்த அளவிற்கு நாம் வழிதவறிவிட்டோம் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், ஆல்மா ஆட்டாவின் சில முக்கியப் பிரிவுகளைப் பார்க்க வேண்டும்.

ஆர்டிக்கிள் I : சுகாதாரம் என்பது அடிப்படை மனித உரிமை. சுகாதாரத்தில் முடிந்த அளவு உச்சத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் என்பது உலக அளவில் அதிமுக்கியமான சமூக நோக்காக இருக்கிறது.

ஆர்டிக்கிள் II : தற்போது இருக்கும் சுகாதார நிலையில் சமனின்மை, குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் நாடுகளிடையே நிலவும் சமனின்மை மற்றும் நாடு களுக்குள்ளேயே இருக்கும் சமனின்மை அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதி யாகவும் ஒத்துக்கொள்ள இயலாதது. எனவே அனைத்து நாடுகளுக்கும் இது ஒரு பொதுவான விஷயமாகும்.

**ஒவ்வொரு குழந்தையின் வாழ்விற்கும் உத்திரவாதம் கொடுக்கப்பட்டால், தேவையான உணவும் தாராள வருமானமும் இருந்தால், கருவுரு அளவு எந்தவித குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமும் இல்லாமல் குறையும்.**

ஆர்டிக்கிள் III : அனைவரும் முழுமையாக சுகாதார வசதிகளைப் பெற வேண்டுமானால், புதிய சர்வதேச பொருளாதார சாசனத்தின் அடிப்படையில் பொருளாதார - சமூக முன்னேற்றத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட வேண்டும்.

ஆர்டிக்கிள் IV : சுகாதார நலனைத் திட்டமிடு தலிலும், செயல்படுத்துதலிலும் தனியாகவும், கூட்டா கவும் பங்கு கொள்வதற்கு மக்களுக்கு உரிமையும், கடமையும் இருக்கிறது.

ஆர்டிக்கிள் V : தனது மக்களின் சுகாதார நலன் அரசின் பொறுப்பாகும்.

ஆர்ட்டிகிள் VI : நாட்டின் சுகாதார அமைப்பில், அடிப்படை சுகாதார பாதுகாப்பே மையப்பணியாக வும், முக்கிய நோக்காகவும் இருக்கிறது.

ஆல்மா ஆட்டா எவ்வளவு சிறப்பாக வரையப் பட்டுள்ளது. 'மக்கள்'தான் மையப்புள்ளி என்பது எவ்வளவு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது இதில். ஆனால் கடந்த 25 ஆண்டுகளில் என்ன நடந்துள்ளது என்பது நம் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும்.

## இந்தியாவின் சுகாதாரமின்மைக்குக் கார ணங்கள்

இந்தியாவின் மோசமான சுகாதார நிலைக்கு பல்வேறுபட்ட காரணங்கள் இருந்தாலும், சாதி-வர்க்கம், ஆட்சிமுறை, பொருளாதாரக் கொள்கைகள் ஆகிய மூன்று மட்டுமே முதன்மைக் காரணங்கள்.

சாதி : விஸ்வ இந்து பரிஷத்தின் கிரிராஜ் கிஷோர் கூறுகிறார்: "ஒருவரிடமிருந்து மற்றொருவரை வேறுபடுத்திக் காட்ட வேண்டும் என்று சாதியாரிட மும் சொல்லவில்லை. இந்துக்களிடையே சாதிவேறு பாடு கிடையாது. ஒரு மனிதன் எந்தத் தொழிலைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறான் என்பதைத்தான் சாதி சுட்டிக் காட்டுகிறது. காலங்காலமாக இது உபயோகத் தில் இருந்து வருகிறது. இதை எந்த நீதி மன்றமும் ஒழிக்கக்கூடாது; ஒழிக்க முடியாது." மேலும் தொடர்



படிப்பகம்

www.padippakam.com

கையில் அவர் தன்னிலையில் மாறுபட்டு "முகலாயர்களின் படையெடுப்பினால்தான் இந்தியாவில் சாதி வேற்றுமை நாடறியப்பட்டது. அட்டவணை சாதியினரும், பழங்குடியினரும் இடைக்காலத்தில்தான் தோன்றினார்கள்" என்று கூறுகிறார். இவர் கூற்று முற்றிலும் உண்மைகளுக்குப் புறம்பானது. சாதி வேறுபாடுதான் பல நூற்றாண்டு காலமாக ஒருசாரார் சொத்து சேர்க்கையை உருவாக்கியது என்பதும், இன்று இந்தியாவில் நாம் எதிர்கொள்ளும் கொடுமையான வேறுபாடுகளுக்கு அதுதான் மையமானது என்பதும் நிலைப்படுத்தப்பட்ட உண்மை. நிலங்களும், இயற்கை ஆதாரங்களும் சமமான முறையில் பங்கிடப்படாமைதான் புறக்கணிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

ஏழைகளின் துயரிற்கு தன் பங்களிப்பை அளிப்பதில், வர்க்கக் காரணியும் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. அதிகாரப் பிரிவில், குறிப்பாக உயர்மட்ட அதிகாரப் பிரிவில் உயர் வர்க்கத்தினரும், உயர் சாதியினருமே முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். இந்தத் தவற்றை ஒரு உதாரணத்தின் மூலமாகப் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவைச் சேர்ந்த - நீரிழிவு நோய், இதய நோய் போன்ற ஒரு குறிப்பிட்ட நோய்களால் துயருருவோர் ஒன்று சேர்ந்து, வேறு சமூகக் குழுவைச் சேர்ந்த - காச நோய், இரத்த சோகை, வாந்தி-பேதி போன்ற முற்றிலும் மாறுபட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட மற்றொரு பிரிவினருக்காக சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்த முற்பட்டால் அதன் பலன் என்னவாக இருக்கும்? இந்தத் திட்டம் செயல்படக்கூடாது என்ற முறையில் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இத்தகைய தவற்றினால், தேவையானவர்களுக்கு எந்தவித பலனும் ஏற்படுவதில்லை.

"இந்தியாவையும் உள்ளடக்கிய முன்னேறும் நாடுகளில் வளர்ச்சியடைந்த சுகாதாரச் சூழலைப் பெறுவதற்கு முக்கிய தடையாக இருப்பது அவற்றின் மோசமான சுகாதார அமைப்புகள்தான்" என்கிறார் சாண்டர்ஸ். நம்மிடம் பணமோ, மனித ஆற்றலோ, அடிப்படை வசதிகளோ கிடையாது என்பதில்லை. இவை அனைத்துமே தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றன. "சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டும், அவற்றை செயல்படுத்துவதில் அரசு காட்டும் மெத்தனம் தான் இத்தனைக்கும் காரணம்" என்கிறார் கன்னர் மிர்டால்.

## ஆட்சிமுறை

டெல்லியில் இருக்கும் முடிவுகளை எடுப்பவர்கள் நமது சமீபத்திய பொருளாதார வளர்ச்சியைப் பற்றி மிகப் பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் பல ஆண்டுகளாக சமூக முன்னேற்றத்திற்கான செலவழிப்பில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வருவதை இவர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள். இந்தியாவில் பொதுச் சுகாதார மூலதனம் உலக நாடுகள் அனைத்தையும்விட மிகக்குறைந்த அளவில் இருக்கிறது. 1990-லேயே 1.3% என்று மிகக்குறைந்த அளவில் இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி, 1999-இல் மேலும் குறைந்து 0.9% என்ற அளவிற்குச் சென்றது. பல்வேறு

**கடந்த சில ஆண்டுகளின் மத்திய அரசின் பட்ஜெட்டை அலசிப் பார்த்ததில் சமூக முன்னேற்றத்திற்காக அரசு போதுமான நிதியினை ஒதுக்குவது இல்லை என்பது மட்டுமல்லாமல், ஒதுக்கிய நிதியிலும் பெரும்பான்மை நிதியை செலவு செய்வதில்லை என்பதும் புரிகிறது.**

மாநிலங்களில் சுகாதாரத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் 7 சதவிகிதத்திலிருந்து 5.5 சதவிதமாக குறைந்தது.

தற்போதைய தனிநபர் பொது சுகாதாரச் செலவு ரூ. 160 இது அதிக நலம் பயக்காத சுகாதார வசதிகளைக்கூட அதிக அளவில் பயன்படுத்தும் ஏழைகளுக்குச் செய்யப்படும் துரோகமே. அனுபவமே அற்ற, திரைப் பட நடிகரை திடீரென்று லட்சக்கணக்கான இந்திய மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கவனிக்கும்! அமைச்சராக்கிய ஆட்சியாளர்களிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்.

கடந்த சில ஆண்டுகளின் மத்திய அரசின் பட்ஜெட்டை அலசிப் பார்த்ததில் சமூக முன்னேற்றத்திற்காக அரசு போதுமான நிதியினை ஒதுக்குவது இல்லை என்பது மட்டுமல்லாமல், ஒதுக்கிய நிதியிலும் பெரும்பான்மை நிதியை செலவு செய்வதில்லை என்பதும் புரிகிறது. ஏழைகளுடன் தொடர்புடைய அமைச்சகங்களைஉதாரணத்திற்கு எடுத்து ஜான் சாமுவேல் தனது Social Watch-இல் பின்வருமாறு விளக்குகிறார்.

மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 340 மில்லியன் டாலர்களையும், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் 293.5 மில்லியன் டாலர்களையும் செலவு செய்யாமல் திருப்பிச் செலுத்தியுள்ளன. இக்கட்டுரையுடன் தொடர்புடைய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் 1,107 கோடி ரூபாயை (235.5 மில்லியன் டாலர்) செலவு செய்யாமல் திருப்பியளித்திருக்கிறது. 2001-ஆம் ஆண்டின் பொருளாதார ஆய்வு 'கிராமப்புற இந்தியாவின் 90% பகுதிகளில் துப்புரவு வசதிகள் அறவே இல்லை' என்று தெரிவிக்கிறது. கிராமப்புற துப்புரவுக்காக ரூ. 336 கோடி (71.5 மில்லியன் டாலர்) மூன்றாண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதுவே குறைந்த தொகையாகும். ஆனால் அரசோ இதிலும் ரூ. 51 கோடியை (10.8 மில்லியன் டாலர்) செலவு செய்ய வில்லை. 5,19.500 குழந்தைகள் துப்புரவு/சுகாதார வசதிகள் இல்லாமை காரணமாக இறந்து போயிருப் பதை இதனுடன் தொடர்புபடுத்திப் பாருங்கள் - யார் குற்றவாளி, எவ்வளவு பெரிய குற்றவாளி என்பது புரியும்.



படிப்பகம்

### புதிய தாராளமயக் கொள்கைகளும் நல் உணர்வுக் கூறுகளும்

வளர்ச்சி விகிதம் பற்றிய அட்டவணை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | மொ.உ.உ. | தொ.உ.கு. | விவசாயம் | உ.தா. | மொ.வி.கு. | வே.வா. | சேமிப்பு | முதலீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1990-1991 | 5.6 | 8.2 | 3.8 | 3.1 | 12.1 | 1.44 | 23.1 | 26.3 |
| 1999-2000 | -- | -- | -- | -- | -- | 0.04 | 22.3 | 23.3 |
| 2000-2001 | 6.0 | 5.7 | -3.5 | -4.7 | 6.6 | -- | -- | -- |

*மொ.உ.உ. - மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொ.உ.கு. - தொழில் உற்பத்திக் குறியீடு, உ.தா - உணவு தானியம் / நாளொன்றுக்கு, மொ.வி.கு. - மொத்த விற்பனை விலைக் குறியீடு, வே.வா. - வேலை வாய்ப்பு*

இது ஒரு கலவையான அட்டவணையாகும். ஏழைகளுடன் மட்டும் தொடர்புடைய விவரங்களைப் பார்ப்போம். 1990-91-இலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியடைந்திருக்கிற போதிலும், வேலை வாய்ப்புகள் குறைந்திருக்கின்றன; விவசாயம் அதிகமாக குறைந்திருக்கிறது; உணவு தானியக் கிடைப்பு மிக மோசமாகக் குறைந்திருக்கிறது. இதனால் பீகார், ஒரிசா, ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களும் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நிலமற்றோர், தலித்துகள், பெண்கள், குழந்தைகள் போன்றோரும் ஊட்டக் குறைவினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இந்தியா ஒளிர்வதுமில்லை. நல்லுணர்வுக் கூறுகள் இவர்களைத் தீண்டுவதுமில்லை.

பொருளாதார தாராளமயமாக்கத்தின் காரணமாக சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்ட மாநில ஆதாரங்கள் குறைந்துவிட்டன என்று மத்திய அரசே ஒத்துக்கொண்டுள்ளது. உலகமயமாக்கம், கட்டுமான ஒழுங்குசெய் திட்டங்கள், உலக வர்த்தக நிறுவனத்தால் வழிநடத்தப்படும் வர்த்தக ஆட்சிமயம் ஆகியவற்றின் எதிர்மறைத் தாக்கங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

- தொழில் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி
- குறைந்த அளவு அடிப்படை வசதி முன்னேற்றங்கள்
- பன்னாட்டு வர்த்தகப் பங்கெடுத்தலில் இறங்கு முகம்.
- வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பு
- சேமிப்பில் வீழ்ச்சி
- அதிகரித்த அரசு கடன்
- உலக வர்த்தக நிறுவனத்தின் கொள்கைகளின் காரணமாக சந்தைகள் திறந்து விடப்பட்டு விவசாயம், சிறுதொழில்களில் ஈடுபட்டுள்ள கோடிக்கணக்கான இந்தியர்களின் வாழ்நிலை பாதிப்பு
- ஏழ்மையில் பெண்கள் - 85.4% பெண்கள் விவசாயத் தொழிலாளிகள். விவசாயப் பிரிவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி கிராமப்புற ஏழைப் பெண்களை அதிக அளவில் பாதிக்கிறது.
- ஏழ்மை மற்றும் ஊட்டச்சத்து குறைவு காரணமாக அதிகரித்த இறப்புகள்

### ஏழ்மையின் உலக மயமாக்கம்

வளர்ச்சி சார்ந்த முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள பலர் சற்றே வரலாற்றைத் திரும்பிப் பார்க்க மறுக்கிறார்கள். 1996-ஆம் ஆண்டின் மனித அபிவிருத்தி அறிக்கை கூறுகிறது: சமீபத்திய சில பத்தாண்டுகள் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமிடையே தன்னிச்சையான தொடர்புகள் எதுவும் இல்லை என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. உலக அளவில் 100 நாடுகளில் பொருளாதார வளர்ச்சி குறைந்து வருகிறது. 1990-க்கும், 1993-க்கும் இடையில் 21 நாடுகளில் சராசரி வருமானம் 20 சதவிகிதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

1979-க்கும், 1985-க்கும் இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 40% அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் ஏழைகளின் எண்ணிக்கையோ 17% அதிகரித்துள்ளது. 1963-இல் உலக அளவில் ஏழை → பணக்காரர்களின் விகிதாச்சாரம் 1:30 என்று இருந்தது; ஆனால் 1993-இல் இதன் அளவு 1:60.

ஆல்மா ஆட்டாவில் வரையறுக்கப்பட்ட அடிப்படை சுகாதார நலன் செயல்படாமல் போனதற்கு முக்கியக் காரணம் 'திறந்தவெளி சந்தை' என்ற தாரக மந்திரத்தின் தாக்கமே. இது ஜனநாயகத்திற்கு எதிரானது; நியாயப்படுத்த முடியாதது. பணம் படைத்தோரின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமே இது உதவி புரியும்.

### உலக ஆட்சி முறை - நிறுவனப்படுத்துதல்

வர்த்தக ஒப்பந்தக் கூட்டங்களில் தேசிய கூட்டாண்மை நிறுவனங்களின் இருப்பு பரவலானதாகவும், முக்கியமானதாவும் மாறிவிட்டது. அவை வர்த்தகக் கொள்கைகளோடு மட்டும் நின்றுவிடாமல் சர்வதேசக் கொள்கைகளை வடிவமைப்பதிலும் முக்கியப்பங்கு வகித்து வருகின்றன. உலக வங்கி/ பன்னாட்டு நிதி இணையம் மற்றும் SAP இல் உள்ள மேற்கத்திய நாடுகள் வைக்கும் கோரிக்கையிலிருந்தே இவற்றின் ஆதிக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம். அவற்றுள் ஒரு சில:

- சுகாதாரம், கல்வி போன்ற சமூகப் பிரிவிற்கு அரசு செலவிடும், அளித்து வரும் உதவித் தொகைகளைக் குறைத்தல்.



படிப்பகம்

www.padippakam.com

● ஏற்றுமதி பலன் அடைவோம் என்ற பெயரில் உள்ளூர் நாணயத்தை மதிப்புக் குறைத்தல்; அதன் காரணமாக சில்லறை விலைகளின் அதிகரிப்பு.

● ஆட்கள் குறைப்பு; ஊதியக் குறைப்பு.

● பொருளாதாரக் கட்டுப்பாடுகளை நீக்குதல் - அயல்நாட்டு செயல்பாட்டாளர்களின் சுதந்திர நுழைவு.

● உள்ளூர் சந்தைகளுக்குக் கிடைக்கும் பாதுகாப்பினை நீக்குதல்.

● வர்த்தகத்தை தாராளமயமாக்குதல்

● வர்த்தகம் மற்றும் பரிமாற்றக் கட்டுப்பாடுகளை நீக்குதல்.

● விலைக் கட்டுப்பாடுகளை ஒழித்தல்.

மேற்சொன்ன ஒவ்வொரு நடவடிக்கையும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருளாதாரத்தின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன் பிரதிபலிப்பு ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களின் சுகாதாரத்தில் பிரதிபளிக்கிறது.

## முடிவாக

சுகாதார நலன் என்னும் இம்மிகப்பெரிய பிரச்சினையை சமாளிப்பதில் எனில் சமூகக் குடிமை நிறுவனங்கள் (Civil Society Organisations) மாபெரும் பங்கினை வகிக்கின்றன. இக்குடிமை நிறுவனங்கள் அர்த்தமுள்ள வகையில் செயல்படக்கூடிய, செயல்பட வேண்டிய எட்டு பிரிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### 1. குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகள்

தற்போது கிராமப்புறங்களில் 70% வீடுகளுக்கும், நகர்ப்புறங்களில் 85% வீடுகளுக்கும் குடிநீர் வசதி கிடைக்கிறது. துப்புரவு வசதிகள் கிராமப்புறங்களில் 17% வீடுகளுக்கும், நகர்ப்புறங்களில் 45% வீடுகளுக்கும் கிடைக்கிறது. குப்பை சேகரிப்பு தனியார்மயப் படுத்தப்பட்டிருப்பதையும் (சிங்கப்பூரின் ஒனிக்ஸ்), குடிநீர் தனியார்மயப்படுத்தப்பட்டிருப்பதையும் (பிரான்சின் விவேந்தி) நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோல் 80% வியாதிகள் குடிநீர் சம்பந்தப்பட்டவை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 2. உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து

45 மில்லியன் டன் உணவு தானியம் நமது கையிருப்பில் உள்ளது. ஆனால் ஊட்டக்குறைவும், பட்டினிச் சாவுகளும் கூடவே இருக்கின்றன. 360 மில்லியன் மக்களால் குறைந்தபட்ச ஊட்டச் சத்து அளவைக்கூட எட்ட முடியவில்லை. தாய்மை ஊட்டக்குறைவினால் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறக்கின்றன.

### 3. முதன்மைக் கல்வி

முதன்மைக் கல்வியை ஒரே மாதிரியாக மாற்றுவதுதான் குழந்தைத் தொழிலாளிகள், ஊட்டக்குறைவு, போதை மருந்து உபயோகம் போன்ற அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழி (தற்போதைய கல்வியறிவு விகிதாச்சாரம் : ஆண்கள் 64% - பெண்கள் 39%). கல்வியை அணுகுவதை எளிதாக்கி, மாணவர்கள், குறிப்பாக பெண்களை பள்ளியில் தக்க வைத்தல் மிக முக்கியமானது.

### 4. பெண்கள், குழந்தைகளின் உடல் நலம்

ஏவுகணைகளை ஏவி, ஒலிம்பிக்சில் கலந்துகொள்ளும் இம்மாபெரும் நாட்டில், சிசுமரணங்களும், சிறு குழந்தை மரணங்களும் அதிக அளவில் நிகழ்கின்றன. இதில் அதிகம் பாதிக்கப்படுவது புறந்தள்ளப்பட்டவர்களும், நிலமற்றவர்களுமே.

### 5. வேலை வாய்ப்பு

இந்தியாவின் சமீபகால வளர்ச்சி என்பது 'வேலையின்மை வளர்ச்சி'யே, இங்கு பொருளாதார வளர்ச்சிகள் வேலைவாய்ப்பினை உருவாக்குவதில்லை என்று ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டத்தின் (UNDP) அறிக்கை ஒன்று கூறுகிறது. இந்தியா ஒளிர்வதெல்லாம் 15% மக்களுக்கு மட்டுமே. இவர்கள் மட்டுமே 'நல் உணர்வுக் கூறு'களை அனுபவிக்கிறார்கள்.

### 6. பால் (Gender) சமத்துவம்

நம்மிடையே ஐந்து பெண் முதல் மந்திரிகள் இருக்கிறார்கள் என்பதை வைத்து இறுமாப்பு அடைந்து விடாதீர்கள். நமது பாலியல் சமத்துவமின்மை 1000 ஆண்களுக்கு 927 பெண்கள் என்ற எதிர் பாலின விகிதாச்சாரத்தையே பிரதிபலிக்கிறது. பெண் குழந்தைகள் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வேற்றுமை பாராட்டப்படுகிறார்கள். சமுதாயத்திலும் அவர்களுக்கு உரிய மரியாதை தரப்படுவதில்லை. தரக்குறைவாகவே நடத்தப்படுகிறார்கள்.

### 7. ஜனத்தொகையை நிலைப்படுத்துதல்

1.1 பில்லியன் மக்கள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். 2015-இல் இது 1.45 பில்லியனைத் தொட்டிருக்கும். இதைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (கட்டாய கருத்தடை ஒரு வழியல்ல). ஒவ்வொரு குழந்தையின் வாழ்விற்கும் உத்திரவாதம் கொடுக்கப்பட்டால், தேவையான உணவும் தாராள வருமானமும் இருந்தால், கருவுரு அளவு எந்தவித குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமும் இல்லாமல் குறையும்.

### 8. சுற்றுப்புறச் சூழல்

மாசுபட்ட குடிநீர், மாசுபட்ட காற்று, திடக்கழிவுகளின் குவிப்பு, ஊரெங்கும் சிதறிக்கிடக்கும் பிளாஸ்டிக் பைகள், காடுகள் அழிப்பு, இயற்கைவள ஆதாரங்களின் அளவுக்கு மீறிய உபயோகம், வெள்ளம், நில அரிப்பு ஆகியவை வாழ்சூழல், சுகாதாரம், உற்பத்தித் திறன் மற்றும் இதர சமூக பொருளாதாரக் கூறுகளை வெகுவாய்ப் பாதித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இவற்றையெல்லாம் அரசுதான் செய்யவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். சுகாதாரத்தின் மீதான செலவினத்தை 1991-92 மொத்த உற்பத்தியின் 1.4 சதவிகிதத்திலிருந்து 2001-02இல் 0.9 ஆகக் குறைத்த அரசிடமிருந்து இதை எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? அவர்கள் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுதல், ஆளும் வர்க்கத்தினருக்கு உபயோகமாகும் வகையில் சட்டங்கள் இயற்றுதல், சுகாதாரம், கல்வி, பொது விநியோகம் போன்ற பொதுநலத் துறைகளி லுள்ள ஊக்குதவித் தொகையினைக் குறைத்தல், அரு வருக்கத்தக்க அரசியல் கூட்டுக்களை ஏற்படுத்துதல் என்று தங்களின் நலன் சார்ந்த ஆட்சி நடத்துகிறார்கள்.

எனவே, நாம்தான் தன்னாட்சி நிறுவனங்கள் என்ற முறையில் மேலே குறிப்பிட்ட எட்டு பிரிவு களையும், குறிப்பாக பால் - பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சமூக-பொருளாதார விளிம்புநிலை ஆகியவற்றை கையாளும் வகையில் திட்டங்கள் தீட்ட வேண்டும். ஆனால் தன்னாட்சி நிறுவனங்கள் போன்ற குடிமை சமூக நிறுவனங்கள் தங்களது கடந்த சில பத்தாண்டுகளின் செயல்பாட்டினை பரிசீலனை செய்து, தங்களது திட்டங்களையும், சாதனைகளையும் பகுப்பாய்வு செய்ய வேண்டும். அதனடிப்படையில் தமது தற்போதையே திட்டங்களை கூர்மைப்படுத்தி அவற்றை மேலும் திறமையானதாகவும், அர்த்தமுள்ள தாகவும் மாற்றுவோம்.

## நம்பிக்கை தரும் வேறு சில முயற்சிகள்

நாடுகளுக்கிடையேயான செயல்பாடுகளை கண்காணிக்கும் நிறுவனங்கள் (உ-ம்) Multinational Monitor, Third Wold Network, Oxfam போன்ற செய்திகளைப் பரப்பி, பொதுமக்களின் விழிப்புணர்ச்சியையும் ஆதரவையும் கட்டுமானம் செய்யும் தன்னிச்சைக் குழுக்கள், உலக சுகாதார நிறுவனத்தின் மக்கள் சுகாதார இயக்கம் போன்ற கொள்கைகளை கண்காணித்து, கொள்கைகளை உருவாக்குவோருடன் பேச்சுவார்த்தை நடத்தும் குழுக்கள், World Social Forum, Asian Social Forum, People's Health Assembly ஆகியவற்றைப்போல் சம்பந்தப்பட்டவர்களை ஒன்று திரட்டி பொதுமக்கள் விழிப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டும்.

இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி இங்கு பேசவேண்டும். ஒன்று சுமார் பத்து வருட தூரத்தில் இருக்கும் மக்களியக்கங்களை கட்டுவித்தல். டிசம்பர் 2000-இல் நடைபெற்ற Peole's Health Assembly ஒரு சமீபத்திய உதாரணமாகும். சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் ஆல்மா ஆட்டாவிற்குப் பிற்பாடு நடத்தப்பட்ட கூட்டங்களில் இது மிகப் பெரியதாகக் கருதப்படும். இதில் 91 நாடுகளிலிருந்து வந்திருந்த 1500 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். கல்வியாளர்கள், செயல்வீரர்கள், மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர் கள், மருத்துவச்சிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று வாழ்க்கையின் அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் வந்தவர்கள் இவர்கள். இக்கூட்டத்தின் விளைவுதான் சுகாதாரத்திற்கான மக்கள் சாசனத்தின் பிறப்பு. கூடவே இன்று உலகின் பிற பகுதிகளில் பரவியுள்ள மக்கள் சுகாதார இயக்கமும் பிறந்தது. ஆல்மா ஆட்டாவின் உட்கருவை மீண்டும் கொணரும் வகை யில் மக்கள் சுகாதார இயக்கம் தன்னிச்சையாகவும், மகளிர் இயக்கம் ஒடுக்கப்பட்டவர் இயக்கம் போன்ற சிறு குழுக்களுடன் இணைந்தும் தொடர்ந்து செயல் பட வேண்டும்.

இத்திட்டங்கள் அடிமட்டத்திலேயே ஜனநாயகப் படுத்தப்பட்டு உள்ளூர் அமைப்புகள் உள்ளூர் மக்க ளுக்குப் பதில் சொல்லும் வகையில் செயல்பட்டு, அதிகாரச் சமன்பாட்டை பெரும்பான்மையோருக்கு சாதகமாக்கவேண்டும். இதற்கு மக்கள் அமைப்புகளின் கூட்டு அடிமட்ட நிலையிலேயே இருக்கவேண்டும்; சம்பந்தப்பட்ட செய்திகள் தெரிவிக்கப்பட வேண்டும்; இதர மக்கள் சம்பந்தப்பட்ட செயல்களில் பயிற்சி யளிக்கப்பட வேண்டும். இதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணி முக்கியமானதாகும்.

இரண்டாவதும், மிக முக்கியமானதுமான கேள்வி, கிறித்தவர்களைப் போல நாம் என்ன செய்கி றோம். ஆல்மா ஆட்டா அறிவிப்பு முழுக்க முழுக்க ஒரு கிறித்துவ செயலறிக்கையாகும். அடிமட்டத்தினர் மீது கவனக் குவிப்பு, நீதி, சமத்துவம், மக்களின் மையத் தன்மை, பாதுகாப்பு, செல்வந்தர்கள் வள ஆதாரங் களைப் பகிர்ந்து கொள்ளுதல், வாழ்க்கையின் முழுமை என்று விவிலியக் கூற்றுகள் ஒவ்வொரு ஆர்டிக்கிளி லும் பிரதிபலிக்கின்றன. இவையல்லாமல் நீதிக்குப் போராடு, அநியாயத்திற்கு எதிராக அறைகூவல் விடு, ஆட்சி புரிவோர் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற வகையிலும் கருத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நமது கல்வி நிறுவனங்கள் - பள்ளிகள், கல்லூரிகள், செவிலியர்/மருத்துவக் கல்லூரிகள், சேவை நிறுவனங் கள் - தங்களது நிறுவன முன்னுரிமைகளை தியாகம் செய்து, அதற்குப் பதிலாக மக்களின் முன்னுரிமை களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தங் களின் நிகழ்ச்சி நிரலை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கின்றனவா? சுகாதாரத்தில் சமனின்மையைத் தோற்றுவித்து வளர்க்கும் நியாயமற்ற அமைப்பு களுக்கு எதிராக ஒரு தெளிவான முடிவை நம்மால் எடுக்க இயலுமா? சரி என்று சொல்வது எளிதாக இருக்கும். ஆனால் நமது கடந்தகால செயல்பாடுகள் நம்பிக்கையைத் தோற்றுவிப்பதாக இல்லை.

மனித வரலாற்றை புரட்டிப்பார்த்தால் ஆட்சி அமைப்புகள் - கிறித்துவ அமைப்புகள்கூட - மனித உரிமைகளை தன்னிச்சையாக அளித்ததே இல்லை. அவை எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இது ஒருமைப்பாட்டின் மூலம்தான் சாத்தியப்படும். நம்மைக்கொண்டோ நாமில்லாமலோ அல்லது நம்மையும் மீறியோ, மக்களின் சக்தி எழுச்சி பெறும். நாம் எங்கிருப்போம் - வசதியாக நம் நிறுவனங் களுக்குள்ளேயோ அல்லது தடைகளுக்குப் பின்னால் அவர்களுடனா? மாற்றங்கள் காலடியில் இருக்கின் றன என்ற நம்பிக்கையும், மக்கள் சார்ந்த முயற்சிகள் அளவிலும், செயலூக்கத்திலும் உலககெங்கும் வளர ஆரம்பித்துவிட்டன என்ற நம்பிக்கையும் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. புதிய உலகம் தோன்றலாம்; - 2015 இல் அனைவருக்கும் சுகாதார நலன் கிடைக்க லாம். ●



படிப்பகம்

www.padippakam.com

# என்னைப் பெத்த அம்மாா ஆ...

■ புதிய மாதவி

"எப்ப வந்த தாயி...?" மாட்டைப் பத்திக் கொண்டு போகும் கோனார் மாமா கேட்டார்.

"வந்து பத்து நாளு ஆவுது மாமா..."

"என்ன இன்னும் அப்படியேதான் கிடக்காளா..."

"யோவ் கோனாரு... சாகப்போறவக்கிட்ட ஏன் போட்டிப்போடுதேரு.. உள்ள வந்து நாடிப் பிடிச்சுப் பார்த்துதான் சொல்லப்பிடாதா.. மூவடையா இன்னும் எத்தனை நாளைக்கு இந்தப் பிள்ளைய இப்படிக் காக்கப் போடப் போறாளோ தெரியலையே..." சின்னம்மா அழுது கொண்டே அலுத்துக்கொண் டாள்.

கோனாரும் மூவடையாளும் ஒரே கிணத்தில் குளித்தவர்கள். ஒரே குளத்தில் அயிரை மீனைப் பிடித்து விளையாண்டவர்கள்... என்ன இரண்டு பேருக்கும் ஒருவித சண்டை நேசம் உண்டு. அந்தக் காலத்திலிருந்தே அப்படித்தான். ஒருமுறை இரண்டு பேருக்கும் அப்படித்தான் சண்டை வந்தது. ஆண் பிள்ளை இல்லாதவர்களுக்கு அரசு மானியமாக அறுபதோ எழுபதோ மாசா மாசம் கொடுக்கின்றது. "உனக்கென்ன கொடுத்து வெச்சவ. மாசா மாசம் பொண்ணு வேற பணம் அனுப்பறா... கவர்மெண்ட் பணம் வேறு..." என்று சொல்ல பிடி பிடி என்று பிடித்துக் கொண்டாள் மூவடையா... மூவடையாளுக்கு யாரும் அவளைக் கொள்ளி வைக்க ஆண்பிள்ளை இல்லாதவள் என்று சொல்லிவிட்டாள் போதும்... அவ்வளவுதான். அன்னிக்கு பூரா ஊர்ச்சனம் தூங் கினப்பிறகும் அவள் குரல் அடங்காது. சகட்டு மேனிக்கு எல்லாரையும் ஏக வசனத்தில் அறுத்து வாங்குவாள். மூவடையா வாய்க்குப் பயந்தே பலர் அவளிடம் அதிகம் பேசமாட்டார்கள்.

ஆனா மூவடையா கடும் உழைப்பாளி. எல்லோ ரும் கிணத்தில் தண்ணீரில்லை, எப்படி விவசாயம் செய்வது என்று கவலையிலிருக்க இவள் மட்டும் பஞ்சாயத்து போர்டில் கொடுத்த இரண்டு ஆட்டை வைத்து வியாபாரம் ஆரம்பித்துவிட்டாள். வேறென்ன. ஆட்டுப்பாலில் நல்ல இஞ்சி கலந்த டீ போட்டு காலையில் மலையாளத்து மார்க்கெட்டுக்குப் போகும் லாரி டிரைவர்களுக்கு வண்டி லோடு ஏற்றும் இடத் திற்குப் போய் விற்றுவிட்டு வருவாள். அரை மணி நேரம் நடந்து போய் இவள் விற்கின்றாள் என்பதை விட இவள் எப்போதடா நமக்கு இஞ்சி சாயாக் கொண்டுவருவாள் என்று லாரி டிரைவரிலிருந்து ரிக்ஷா டிரைவர் வரை காத்திருப்பார்கள். எப்படியும் ஒரு நாளைக்கு பத்து முதல் இருபது வரை லாபம் கிடைக்கும். அதுபோதும் அவளுக்கு. அவள் என்ன ஒத்தக் கட்டை.

இப்போது படுக்கையில் விழுந்து பதினைந்து நாளாகின்றது. பெரிய டாக்டர் எல்லாம் "சரி... சொல்ற வுங்களுக்கு சொல்லிடுங்க. ரொம்ப நாளு தாக்குப் பிடிக்காது" என்று சொல்லிவிட்டார். மூளைக்குச் செல்லும் ரத்தக்குழாய்களில் அடைப்பு. பணம் செலவு செய்தால் சுகமாக்கக்கூடிய வியாதி தான் அறுவைச் சிகிச்சைக்கே இரண்டு லட்சம் ஆகும். இவர் களால் முடியாது என்பது டாக்டருக்கும் தெரியும். அதுதான் கையை விரித்து விட்டார். அது தெரியாமல் அவர் முடியாது என்று சொன்னதையே அவருக்குரிய சிறப்பாக அந்த ஊர்ச்சனங்கள் பேசிக்கொண்டி ருந்தார்கள்.

"சும்மா சொல்லப்படாது. அவுங்க அப்பா கோட்டையிடி வைத்தியரு மாதிரிப் பதான் இவரும். நம்மளை ஏமாத்தி பைசாப் பிடுங்க மாட்டாரு. முடி யாட்டா முடியாதுனு கரைக்கட்டா சொல்லிப்புடு வாரு. இப்படித்தான் போன மாசம் பால்தேவர் அப்பாவுக்கு நாள் குறிச்சுக் கொடுத்துபுட்டாராம். பிறகென்ன? பால்தேவரு அக்கா தங்கச்சினு எட்டு பேருல்லே அத்தனை பேருக்கும் சொல்லிவிட்டு எல்லா ஆளுவளும் வந்து பாலு ஊத்திதான் காரியம் முடிஞ்சிருக்குனாப் பாத்துக்காங்களேன்."

கோனாரு கைகாலை கழுவிவிட்டு, தாழ்வாரத்தில் கயித்துக் கட்டிலில் கிழிந்த தலையணை மாதிரி, ஒரு சின்ன ஓலைக் கூடையில் வச்சி எடுத்துக்கிட்டுப் போற பருத்திப் பஞ்சு மாதிரி கிடக்கின்ற மூவடையா கையை தூக்கி நாடி பிடித்துப் பார்த்தார். ஒரு நிமிடம் அமைதி. எல்லோரும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"எல்லா நாடியும்தான் அடங்கிபோச்சே... ஏ மூவடையா... என்னத்தை நெனச்சிக்கிட்டு இருக்கே..."

"அதுதானே... அந்தப் பிள்ளையும் பிள்ளை குட்டி களை விட்டு போட்டது போட்டபடிக் கிடக்க ஓடி வந்திருக்கு. அவ மாப்பிளை நல்ல அமந்த குணம். அதுதான் பேசாமா இருக்கு. இவ இப்படிக் கிடந்து கடைசியிலே பால் ஊத்த யாருமில்லாமலே காய்ஞ்சிப் போகப் போறாளா..."

"எப்படியும் ரெண்டு நாள்ளே அடிச்சிடும். வெள் ளிக்கிழமையிலே அமாவாசை வருது. இழுத்துட்டுக் கிடக்கிற உசிரை எல்லாம் அடிச்சிட்டுப் போறதுக் குத்தான் இந்த வெள்ளிக்கிழமை அமாவாசைனு சொல்லுவாங்க. ம்... பார்ப்போம்."



படிப்பகம்

www.padippakam.com

கூட்டம் கலைந்தது.

"ஏ மைனி... கோனாரு என்ன சொன்னாரு...?"

"அவரு என்னத்தை சொல்லறதுக்கிருக்கு. இப்ப பத்து நாளா இந்தக் குளுகோஸ் தண்ணியை நாக்கிலத் தொட்டு வைக்கிறதில்தான் அவ உசிரு ஆடிக்கிட்டு கிடக்கு. என்னத்தை நெனைச்சுக்கிட்டு கிடக்காளோ. அவ மவளும் மருமவனும் வந்து காத்துக்கிடக்காவா"

"என்ன தம்பி... நீங்கதான் மூவடையா மருமகனா...?"

"ஆமாய்யா..."

"ஒன்னுமில்லே... மூவடையா எங்கிட்டே ஒரு சீட்டுப் போட்டா பாருங்க. ரெண்டாவது சீட்டு எடுத்திட்டா. இன்னும் 13 சீட்டு பாக்கி இருக்கு. மாசமாசம் 250 ரூபா. பண விசயம். எதுக்கும் அவ உயிருடனிருக்கும்போதே சொல்லிட்டா நல்லதுனு தான்..." மூவடையா இவர்கள் சொல்கின்ற பணக் கணக்கு, சீட்டு நாட்டு கணக்கை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிற மாதிரி அவர் சொன்னார். அவர் மட்டுமல்ல... இரண்டு மூன்று பேர் இப்படி அவனிடம் மட்டும் கணக்கு சொல்லியிருக்கின்றார்கள். அவனும் எல்லோரிடமும் சொல்வதுபோல் இவரிடமும் பதில் சொன்னான்.

"அதனால் என்னய்யா... நானு மாசமாசம் உங்க பேருக்கு மணியார்டர் பண்ணிடறேன்."

மாமியார் ரொம்ப சமாளிப்புள்ளவள் என்று அவன் கேள்விப்பட்டிருக்கின்றான். அவர்கள் மாதா மாதம் அனுப்புகின்ற 100 ரூபாயில் இதை எல்லாம் செய்ய முடியாது. இதெல்லாம் அவள் எப்படியும் சமாளித்து விடலாம் என்கின்ற துணிச்சலில் செய்திருக்கும் காரியங்கள். எதற்குமே எழுத்து கணக்கு கிடையாது. கேட்கவும் முடியாது. நம்பித்தான் ஆக வேண்டும்.

மூவடையாவுக்கு அவர்கள் ஊர் அம்மனின் பெயர் என்று அவர்களின் சின்னம்மா சொல்லியிருக்கின்றாள்.

'மூன்று யுகம் கொண்டாள்' அவர்கள் ஊர் அம்மனின் திருநாமம். அந்த அம்மனின் பெயர்தான் இவளிடம் வந்து மூவடையாளாக மூக்கு வடித்துக் கொண்டு நின்றது.

மூவடையாவுக்கு ரஞ்சிதம் ஒரே பெண்தான். அதுவும் அவள் வெள்ளி செவ்வாய் தவறாது ஊர் அம்மனுக்கு விரதமிருந்து ரஞ்சிதத்தை உண்டானாள். ரஞ்சிதம் பிறந்தவுடன் மூன்று யுகம் கொண்டாளுக்கு தனியாக ஆடுவெட்டி கொடை விட்டுக் கொடுத்தாள். தனக்கு குழந்தை இல்லை என்பதை விட அம்மனின் பெயர் வைத்த தன்னை யாரும் மலடி என்று சொல்லி விட்டால் அது அம்மனுக்கே இழுக்கு என்று எண்ணி அழுதிருக்கின்றாள்.

"அம்மா தாயே... உன் பேரைச் சொல்லி என்னை யாரும் மலடின்னு சொல்லலாமா? நீ அதுக்கு இடம் கொடுக்கலாமா?" தினமும் அம்மனிடம் இப்படித் தான் பேசிக் கொண்டிருப்பாள்.

அவள் விரதங்களும் நம்பிக்கையும்தான் அவளுக்கு ரஞ்சிதத்தைத் தந்ததாக அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

எந்த நல்ல காரியத்திற்கும் அம்மனிடம்தான் ஓடுவாள். எல்லா முடிவும் அம்மன் முன்னால் பூப் போட்டுப் பார்த்துதான் முடிவு செய்வாள். ஒரு வெள்ளைப் பூவையும் சிவந்தி, கேந்தி பூவரசம் என்று ஏதாவது கலர் பூவையும் சேர்த்து வைத்து விளக்கு ஏற்ற வரும் பூசாரியை எடுக்கச் சொல்லுவாள். அவர் வரும் நேரத்தைத் தவறவிட்டால் அங்கே வேப்ப மரத்தடியில் விளையாண்டு கொண்டிருக்கும் சின்னப் பிள்ளைகளை பூ எடுத்து தரச் சொல்லுவாள்.

அவள் நினைத்த மாதிரி பூ வந்துவிட்டால், அன்று அவள் துட்டுப் பையில் சில்லறைப் புழங்கினால் அடித்தது யோகம் அந்தப் பிள்ளைகளுக்கு. கடலை மிட்டாய் வாங்கிச் சாப்பிட பைசாக் கொடுப்பாள். ரஞ்சிதத்தை இந்த உறவில்லாத பையனுக்கு கொடுக்க ரொம்பவும் தயங்கினாள். எல்லோரும் சொன்னார்கள் சொந்தத்தில் கொடுத்தால்தானே நாளை உன்னை அக்கறையாகக் கவனித்துக் கொள்வான் என்று. அவர்கள் சொல்வதும் சரியாகப்பட்டது. ஆனால் இந்தப் பையனுக்கு நல்ல வேலை என்று வடக்குத் தெரு வாத்தியாரப்பா சொன்னதும் யோசிக்க வைத்தது.

பூ கட்டிப் போட்டுப் பார்த்தாள். அம்மன் "சரி" என்று உத்தரவு கொடுத்தவுடன் துணிந்து திருமணம் செய்து கொடுத்தாள். அவள் வளர்ப்பில் ரஞ்சிதத்திற்கும் ஊர் அம்மனின் மேல் எப்பேதும் தனியான பக்தி உண்டு. பரீட்சைக்கு போகும்போது அவள் படிக்காத கேள்வி வரக்கூடாது என்று அம்மனிடம் வேண்டிக்கொள்வாள். வரவில்லை என்றால் "அம்மனே எல்லாம் உன் அருள்" என்று மனதில் உருகிப் போவாள். எப்போதாவது அவள் படிக்காதது வந்துவிட்டால் அம்மனைப் பற்றி அவளுக்கு வருத்தப்படவே தோன்றியதில்லை.

ரஞ்சிதம் கை காலைக் கழுவிவிட்டு புடவையை சரி செய்து கொண்டாள். தலைமுடி சரியாக வாராமல் சிக்குப் பிடிக்கத் துவங்கிவிட்டது. அப்படியே எடுத்து ஒரு கொண்டையாக போட்டுக் கொண்டாள். நேராக அம்மன் கோவிலுக்குப் போனாள். அம்மனிடம் போக வேண்டும் என்றுதான் தோன்றியதே தவிர அதற்கு மேல் அம்மனிடம் என்ன கேட்பது என்று தெரியவில்லை. எல்லாம் அறிந்தவள்தானே அவள். என்ன வேண்டி அவள் முன்னால் வந்திருக்கின்றோம் என்பதை அவளுக்குச் சொன்னால்தான் புரியுமா என்ன?

அவள் மௌனமாக கோவில் பண்டாரம் பூசை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மாவுக்கு உடல் நலமில்லாமல் ஆகும்போதெல்லாம் எத்தனை தடவை இதே அம்மனிடம் ஓடிவந்து "சாமி என் அம்மாவைக் காப்பாத்து" என்று கண்ணீர் விட்டிருக்கின்றாள்.



படிப்பகம்

www.padippakam.com

திருமணமாகி ஒரு வருடத்திற்குள் இப்படித்தான் அம்மா நெல் காயவைத்துவிட்டு ஏணியிலிருந்து இறங்கும்போது கீழே விழுந்துவிட்டாள். டிரெயின் பிடித்து வந்து மறுநாள் ஊரிலிறங்கி அம்மாவைப் பார்க்கும் வரை எத்தனை வேண்டுதல்கள்.

இதுவரை அவள் அம்மாவுக்காக வேண்டியதிலிருந்து இன்றைய வேண்டுதல் எவ்வளவு வித்தியாசமானது. அதனால்தான் அவள் வார்த்தைகள் வராமல் ஊமையைப் போல... மனதில் நினைப்பது சொல்லாகப் பிறக்கும் முன்பே அவள் மௌனத்தில் கருக்கலைப்பு செய்துகொண்டு... வாழ்க்கையின் யதார்த்தப் படுக்கையில் மனக்கண் மூடி நின்றாள்.

கோனார் சொன்ன வெள்ளிக்கிழமை அமாவாசை வந்துவிட்டுப் போய்விட்டது. ரஞ்சிதத்தின் கணவன் பொறுமை இழக்க ஆரம்பித்துவிட்டான்.

"ரஞ்சிதம்... மூத்தவனுக்கு இது பத்தாம் கிளாஸ். இன்னும் பத்து நாளையிலே பிரிலியம் டெஸ்ட்." அவளுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. அவள் கணவன் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகவே பட்டது. கோனாருக்கு நம்பவே முடியவில்லை. எப்படி தொண்டைக் குழியில் மட்டும் அவள் உயிர் துடித்துக் கொண்டிருக்கின்றது என்று யோசித்துக் கொண்டிருந்தார். வாத்தியாரப்பா வந்து பார்த்தார்.

"ஏ மூவடையா... என்னத்தை நினைச்சுக்கிட்டு இப்படி பிள்ளையைக் காக்கப் போடுதே தாயி. ரஞ்சிதம்... இன்னிக்கு சாயந்திரம் அம்மன் கோயில் பண்டாரத்திட்டே போயி திருநீறு வாங்கி நீ கொடுக்கிற குளுகோஸ் தண்ணியிலே கரைச்சுக் கொடு... ஆங்... அப்டியே மறக்காம நம்ம நாத்தங்காலுக்குப் போயி மண் எடுத்து... கிணத்துத் தண்ணி கீழே கொஞ்சமா கிடக்கு... அதையும் நம்ம கோனாரு கிட்டச் சொல்லி எடுத்து தரச்சொல்லு. கிணத்துத் தண்ணிலே அவ நாத்தங்காலு மண்ணைப் போட்டு கலக்கி வாயிலே ஊத்து தாயி. உங்க அம்மா எப்பவும் துட்டுப் பையிலே துட்டு இல்லாம இருக்கவே மாட்டா. அவ துட்டுப் பையிலே கொஞ்சம் பைசாவைப் போட்டு அவக்கிட்டே சொல்லு தாயி... எம்மா, உன் துட்டுப் பையிலே பைசா இருக்குனு..." அவர் சொன்ன எல்லா வற்றுக்கும் ரஞ்சிதம் தலை அசைத்தாள். அவர் போனவுடன் வாத்தியாரப்பாவின் மனைவி வந்தாள்.

"ஏ ரஞ்சிதம்... இங்க பாரு... இப்படி கயித்துக் கட்டிலிலே மெத்தையிலே போட்டா அவ இழுத்துக்கிட்டு கிடந்துதான் அவஸ்தைப் படுவா... ஆமா சொல்லிப்புட்டேன். அவளை எடுத்து நடு வீட்டிலே தலையிலே கிடத்து தாயி... அவ கட்டின வீட்டிலே அவ நல்லா உருண்டு பிரளட்டும்"

சொன்னது மட்டுமில்லாமல்... யாருடைய உத்தரவுக்கும் காத்திருக்காமல் அவளே எல்லாம் செய்ய ஆரம்பித்து விட்டாள். அவள் போகும்போது ரஞ்சிதத்தை தனியாகக் கூப்பிட்டுப் பேசினாள். ரஞ்சிதம் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"ஏ ரஞ்சிதம்... இப்படி நீ அழுதேனா அப்புறம் இருக்க வேண்டியதுதான்... எத்தனை நாளு தாயி இப்படிக் காத்துக் கிடக்கப்போறே...?"

அன்று முழுவதும் ரஞ்சிதத்திற்கு தூக்கமே வரவில்லை. கூரையில் கோழி கூவியச் சத்தம்... எழுந்து வந்து அப்படியே கயித்துக் கட்டிலில் அம்மாவைத் தூக்கிப் படுக்க வைத்தாள். நைந்து போன பழந்துணி மாதிரி அவள் இவள் கைகளில்...

அவள் தலையில் குளிரக் குளிர நல்லெண்ணெய் வைத்தாள். அப்படியே கட்டிலை நகற்றி வைத்துக் கொண்டு ராத்திரிப் பிடித்து வைத்திருந்த சிமிண்ட் தொட்டி தண்ணியைக் குடம் குடமாக அவள் தலையில் கொட்டினாள். நன்றாக அம்மாவின் உடம்பை தண்ணீர்விட்டுக் கழுவினாள். அம்மாவின் உடலைப் பார்க்கும்போது தன் உடலைத் தானே பார்ப்பது போல் பிரமை. அவள் கைகள் நடுங்கியது. கால்களை... துடைப்பக்கத்தை... மார்பை நடுங்கிய தன் கைகளால் துடைத்துவிட்டாள். முகத்தை அழுத்தி துடைக்கும் போது அம்மா கண் திறந்து இவளைப் பார்த்தது போலிருந்தது.

"அம்மா... அம்மா" அவள் குரல் உடைந்து அந்த இருட்டில் அவளுக்கே அந்நியமாகக் கேட்டது.

அம்மாவை கட்டிலுடன் நகர்த்திக் கொண்டுவந்து நடுவீட்டில் தரையில் கிழிந்தப் பாயில் கிடத்திய போது அம்மா இவளுடைய புடவையின் முந்தானையைப் பிடித்திருப்பது தெரிந்தது. எப்போது என் புடவையின் முந்தானையைப் பிடித்தாள். அவள் கைகளை எடுக்க முடியாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அம்மாவும் அவளுமாய், அவள சேலையில் முந்தானி விரிப்பில் படுத்திருந்த இடம். அவள் சின்னவளாக இருக்கும்போதே இறந்துபோன அப்பாவைப் பற்றி, அவரின் வீர பிரதாபங்களைப் பற்றி அவள் கதை கதையாகச் சொன்னதற்குச் சாட்சியாக நிற்கும் நடுவீட்டின் சுவர்கள். "அவர் வண்டி அடிச்சிட்டு வந்தாரினா, ஊருக்குள்ளே நுழையும்போதே எனக்குத் தெரிஞ்சிடும். அவரு கையாலே காளை மாடுக ரெண்டும் அப்படி ஒரு குதியாட்டம் போட்டுக்கிட்டு 'ஜல் ஜல்'னு வரும்."

காலையில் குளித்தவுடன் அப்படியே செவ்விளநீரை (தேங்காய்) உடைத்து தண்ணீரைக் கொடுத்தாள். குளுகோசு தண்ணீருக்கெல்லாம் கைகளால் தட்டிவிடும் அம்மா மடக் மடக்கென செவ்விளநீரைக் குடிப்பதைப் பார்த்து ஓவென அழ வேண்டும் போலிருந்தது. அழுகையைத் அடக்கிக் கொண்டாள்

இரண்டு நாட்கள் இது தொடர்ந்தது. மூன்றாவது நாள் மூவடையாளின் மூச்சு அடங்கியது.

"அம்மா...... என்னப் பெத்த அமமா......: என்னை விட்டுட்டுப் போயிட்டியே அம்மா..." ரஞ்சிதத்தின் அடிமனதிலிருந்து கதறலுடன் வெளிப்பட்ட அழுகையின் குரல் அம்மன் கோவிலில் இருந்த மூன்று யுகம் கொண்டாள் செவிகளிலும் விழுந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# கதை

■ ஸ்ரீதர கணேசன்

சின்ன மச்சான்
பெரிய மச்சான் -'எனக்கு
சீப்பு வாங்கித் தந்த மச்சான்
சீப்பு வாங்கித் தந்துப்புட்டு;
குத்துனானே டாப்பாக்குத்து!

மதுரை வெள்ளையம்மாளின் குரல் கரகரப் பானதுதான். இல்லன்னு யார் சொன்னா? ஆனாலும் ராகத்தை இழுத்து, இறக்கி, ஒடுக்கி, அழுத்தி, நிமிர்த்தி பாடும்போது ஒரு வகையான ஈர்ப்பு இருக்கத்தான் செய்தது. அதை மெருகூட்டுற மாதிரி மேளக்காரர் நின்னு, 'முக்குங்கு முக்குங்கு'ன்னு இசை எழுப்புகிறார். அதுதான் பரவசத்தைக் கூட்டியது. உடனே கோவில் பட்டி டிங்கி பிச்சை உன்னி உன்னி விசில் அடிச்சான். பெறவு நெறைய விசில் சத்தம். பையமார்கள் ஆ... ஊ...ன்னு துள்ளுறாங்க. நிகழ்ச்சிகளை கட்டிற்று. தாம ரைக் குளம் பட்டுராஜாவும், அவந் தம்பியும் அதே பாட்டை நாகஸ்வரங்களில் வாசிக்காங்க. 'ரூரு... ரூரு... ரூரு...'ன்னு உறுமி சத்தம். எல்லா சத்தம் ஒன்னு போல எழுந்தது. "அப்டி போடு!" - டிங்கு பிச்சை குரல் கொடுத்தான். அவன் 'டப்பா குத்து' ஆடினான். இருக் கிறதுலேயே இந்தாட்டம் கஷ்டமானது. தரையில கால்படக் கூடாது. உக்காந்துக்கிட்டு, எழும்பக் கூடாது. ஆனால் விரசலாக ஆடனும். முடியுமா? இருந் தாலும் அந்த அதிரடி ஆட்டத்துக்கு ஈடுகொடுத்து வெள்ளையம்மாள் ஆடினாள். தரையில் விரல்களை பதித்து, அந்த காலை ஒன்ன நீட்டி ஒன்ன மடக்கி, கைகளை அசைத்து அசைத்து ஆடுறாங்க. ஆட்டம் சூட்டிபா இருக்கிறதைப் பார்த்ததும், விசில் சத்தம் 'குப்'ன்னு எழுந்தது.

ஆட்டம் முடிந்ததும் அமைதி நிலவியது. வெள்ளையம்மாள் கைகளை வீசி, ஒய்யாரம்மாய் நடை நடந்து வந்தாள். ஒலி வாங்கி முன்னால் நின்னு கொண்டாள். சருகை இழைகளால் பின்னப்பட்ட குட்டைப் பாவாடை. அதன் நிறம் குளு குளுன்னு இருக்கு. தொப்பில் வயிற்றை இறுக்கலாய் கட்டி யிருந்த துண்டு கலர் கலராய்த் தெரியுது. அதுல பூரா சின்ன சின்ன பாசி மாலை. அவள் வெள்ளை நிறத்துல சிலுக் ரவுக்கை அணிஞ்சி இருக்க, அதுக்கு மேல தங்க மாய் மின்னுகிற பாடி. தலை முடியை அழுத்தி சீவி வட்டுக் கொண்டை. கொண்டையை சுத்தி காகிதப்பூ. முகத்துல கத்தையாகப் பூசப்பட்ட ரோஸ் பவுடர். கன்னத்துல ஜிகினா பளிச் பளிச்னுத் தெரியுது. கழுத்துல மட்டும் ஒரு மஞ்சக் கயிறு. அதுவும் நிறம் மங்கி என்னமோ மாதிரி இருக்கு. வெள்ளையம்மாள் புருஷன் காத்தவராயனும் கூட்டத்தோடுதான் உக்கார்ந் திருந்தான். ஒரு அழுக்கு வேட்டி. சுருக்கு விழுந்த சட்டை. சம்மியம் கூட்டி உக்கார்ந்திருந்த அவன் மடியில கும்பம் இருக்கு. அது கைக்கு அடக்க மான வெங்கலக் கும்பம். கும்பத்தைச் சுத்தி பூந்தாள் ஜோடனை. அது மேல கலர் கலராய்த் தெரிகிற மாதிரி அட்டைக் கிளி. யாரும் கிழிச்சிடக் கூடாதுன்னு பத்திரமாக வைத்திருந்தான். பொஞ்சாதி கேட்கும் போது கும்பத்தைக் கொடுக்கனும். பெறவு வாங்கி வச்சுக்கிடனும். அதுதான் அவன் வேலை. மத்தபடி அவன்தான் வெள்ளையம்மாளின் புருஷன்னு சொன்னா, யாரும் நம்ப மாட்டாங்க. நாலு பக்கமும் வயரிங் இழுத்து தொங்க விடப்பட்ட மெர்க்குரி பல்புகளின் ஒளியில், ஒப்பனை முகத்தோடு இளமையாக இருந்தாள் வெள்ளையம்மாள். ஆனாலும் காலையில எல்லாம் வெளுத்துப் போகும். இதுல ஆச்சரியம், அதிர்ச்சி, கவலைப்பட ஒண்ணுமில்லை. எல்லாம் வயித்துப் பாட்டுக்கு. அதுக்காக கலைஞன் தெருவுல ஆடுனாப்பல தரம் கொறைஞ்சு போவானா என்ன?

"ஓய் இங்க வாரும்மையா?"ன்னு வெள்ளையம் மாள் கூப்பிட்டாள். டிங்கி பிச்சை ஒண்ணும் தெரியாத மாதிரி, அசடு வழிகிற மாதிரி, 'என்ன?' எங்கிற மாதிரி அவள் முன் வந்து நின்றான். "ஏய்யா... என்னையே சுத்தி சுத்தி வாரீயே. உம்மனசுல என்ன நெனச்சுக்கிட்ட?" என்று வெள்ளையம்மாள் கேட்டதும், டிங்கி பிச்சை 'கெக்கெக்கெ'ன்னு சிரித்தான். ஆடி சிரித்தான். நிமிர்ந்து சிரித்தான். பிறகு கூட்டத்தைப் பார்த்து, "பாருங்கையா ஒரு ஆம்பள பொம்பளையச் சுத்தி வாராம, பெறவு யாரையாச் சுத்தி வருவான். நீங்க சொல்லுங்கையா..." என்றான். "அவுங்கச் சொல்லுறது இருக்கட்டும். நீ என்னத்துக்கு சுத்தி வாரே. அதச் சொல்லு?" "ஓமேல இஸ்சு" "அது என்ன இஸ்சு குஸ்சு. ஒழுங்கச் சொல்லுயா?" "அது தான் இது" "அதுதான் இதுன்னா எது?" "கா...தல். உன்னக் கெட்டிகிடப் போறேன்" "அடி செருப்பால" வெள்ளையம்மாள் அடிக்கப் போகிற மாதிரிபோனாள். டிங்கி பிச்சை, அந்த கதம்ப நிகழ்ச்சி நடக்கிற சின்ன மைதானத்தையே ரெண்டு சுற்று சுற்றி வந்தான். பிறகு வெள்ளையம்மாள் ஒலி வாங்கி முன் வந்து நின்னுக் கொண்டாள். "நீ ஒன்னுமில்லாத பரதேசி. ஒனக்கு நான் எப்டி வாக்கப்பட முடியும்?" என்று கேட்டாள். அதற்கு அவன், "ஏகப்பட்ட சொத்திருக்கு" என்றான். "சூத்திருக்கு" "அய்யையோ என்னச் சொல்லிட்டா பாருங்க" என்று டிங்கி பிச்சை திரும்பவும் கூட்டத்தை சுத்தி சுத்தி வந்தான். அதையும் கூட்டம் ரசித்து சிரித்தது.

அப்பம் வெள்ளையம்மாள், டிங்கி பிச்சையை ஓங்கி ஒரு இடி இடிச்சாள். அதுக்கு டிங்கி பிச்சை


படிப்பகம்

www.padippakam.com

ரெண்டு கைகளையும் தொடைக்குள் வைத்துக் கொண்டான். குனிஞ்சி, "அய்யோ... குத்திட்டாளே... குத்திட்டாளே"ன்னு குரல் எழுப்பி, ஓடி சின்னப் பயமார்கள் மத்தியில் போய் 'பொத்'ன்னு விழுந்தான். கூட்டம் கலகலப்பு அடைந்தது. திரும்பவும் ஆர வாரம் கேட்டது. அவன் எழுந்து டவுசர்ல உள்ள மணலத் தட்டிக் கொண்டான். அவனுக்கு சித்து உடம்பு. கருத்த திரேகம். ஆனாலும் வளர்த்தியாக இருந்தான். மஞ்சள் நிற முண்டாப் பனியன். பும்பத் தலை கலையாமல் இருக்க சிவப்பு ரிப்பன் கட்டியிருந் தான். மத்தபடி பிரம்மாதமான ஒப்பனை ஒன்னும் கிடையாது. ஆட்ட அசைவு, பேச்சுத் திறன், கற்பனை நடிப்பு இதுதான் அவனது பலமாக இருந்தது. அப்படித்தான் மட்ட மல்லாக்க குட்டிக் கர்ணம் அடித்தான். அவன் உடம்பு வில்லாக வளைந்தது. தனது கைகளை மட்டும் தரையில் உண்டி ஒரு சுத்து சுத்தி திரும்பவும் வெள்ளையம்மாள் முன் வந்து நின்றான். அந்த நேரம் பார்த்து, ஒரு மேளக்காரரு, 'டக டக டக'ன்னு அடிச்சிக்கிட்டு வந்து வெள்ளையம் மாளை ஒரு இடி இடிச்சார். அவருக்கு எப்படியும் வயசு அம்பதுக்கு மேல இருக்கும். வெள்ளை ரோமங்கள் நிறைந்த மார்பில் ரோல்டு கோல்டு கவரிங் செயின் தொங்கியது. மிஞ்சி மிஞ்சிப் போனா அது நூறு, நூத்தம்பது ரூபாய் இருக்கும். யாரும் லைட் வெளிச்சத்தில் பார்த்தால் அஞ்சு பவுன் இருக்கும்னு சொல்வாங்க. அப்படி பளபளப்பாக இருந்தது. அந்த 'பவுஸ்சு'ல அவுரு இடிக்க, பதிலுக்கு வெள்ளையம் மாளும் இடித்தாள். கூட்டம் கெக்கல் விட்டு சிரிச்சது. பெறவு அவுருக்கும் சிரிப்பாணி பொத்துக்கிட்டு வந்தது. அவர் திரும்பவும் குடு குடு குடுன்னு ஓடி வந்து தன்னிடத்தில் நின்னுக்கிட்டார்.

வேப்பமரத்துக் காத்து,
கதவக் கொஞ்சம் சாத்து.
ஆலமரத்து காத்து,
ஆத்துப் பக்கம் போகலாம் பாத்து.
ஆளக் கொஞ்சம் பாத்து,
ஆச வந்தது நேத்து.

டிங்கி பிச்சை ஒலி வாங்கி முன் வந்து கம்பீரமாக பாடினான். பாட்டு முடிந்ததும் ஆட்டம். அதே பர பரப்பு. பிறகு வெள்ளையம்மாள் ரெண்டு கைகளை யும் இடுப்பில வச்சுக்கிட்டு, "ஏய்யா உமக்கு வேப்ப மரத்துக் காத்து கேட்குதோ. கதவைச் சாத்துன்னு சொல்லுறீய. யாரப் பார்த்து சொன்ன?" என்று கேட்டாள். "ஒன்னத்தான்" என்றான். "என்னக் கெட்டிக்கிடனும்னு உமக்கு ஆச இருக்கா?" "இருக்கு" "ஏய் வெங்கப் பயல. என்னக் கெட்டிக்கிட ஒங்கிட்ட என்னயிருக்கு?" "எங்கிட்டையா என்ன இருக்குன்னு கேட்டுட்ட? உனக்கு திருச்செந்தூர் தெரியுமா?" "தெரியும்" "அதுக்கு பின்னால என்ன இருக்கு?" "கடல்" "அந்த கடல் பூரா எனக்குத்தான் சொந்தம்!" "ம்" "உனக்கு ராமேஸ்வரம் தெரியுமா?" "தெரியும்" "அதுக்கு பின்னால என்ன இருக்கு?" "கடல்" "அந்த கடலும் எனக்குத்தான் சொந்தம்!" "ஆமா இந்த கடல வச்சி நான் என்னையா செய்ய?" "என்ன அப்டிக் கேட்டுட்ட. இந்தா உக்கார்ந்திருக்காங்களே நம்ம நாட்டாமை நாயக்கரு அய்யா, அவுங்கக்கிட்ட இந்த கடல பூரா வித்து, பணத்த வாங்கி உன்னக் கட்டிக் கிடப் போறேன்!"

ஸ்பெசல் ஸ்டூல் நாற்காலியில் உக்கார்ந்திருந்த நாட்டாமை நாயக்கருக்கு திக்கென்று இருந்துச்சு. மறு கணம் இது வேடிக்கை வினோத கதம்ப நிகழ்ச் சின்னு நினைவு வர, அவரும் ஆளோடு சேர்ந்து சிரிச்சுக் கிட்டார். அவருடைய தலையின் ரெண்டு பக்கமும் நரைத்திருக்க, தனது கனத்த உடம்பைத் தூக்கி நிமிர்த்தி உட்கார்ந்து கொண்டார். புத்தம் புதிய பாலிஸ்டர் வேட்டி சிலுசிலுத்தது. முறைப்பா இருந்த சிலுக் வெள்ளைச் சட்டைக்கு மேல பருமனாக இருந்த அசல் தங்கச் சங்கிலி பளிசின்னு தெரிஞ்சது. அதுக்கு கீழவுள்ள நரிப் பல் டாலர் பளபளத்தது. அவருக்குப் பின்னால சல்லிப்பட்டி நாயக்கமாரு பையங்க கூட்டமாக நின்னு வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தாங்க. பொதுவாக கீழத்தெருவு பறச்சேரிக்கு, மேலத்தெருவு நாயக்கமாரு யாரும் சாமானியமாக வர மாட்டாங்க. அப்படியே வந்தாலும் தெரு முக்குல நின்னுக்கிட்டு, "ஏலே... ஒங்கப்பன வரச் சொல்லு" என்பாங்க. இப்பம், எலே வாலன்னுக் கூப்பிட்டால போதும், பையமாறு முறைச்சிப் பார்க்க ஆரம்பிச்சி டுறாங்க. அப்பக்காரன் நம்மக்கிட்ட வேலைச் செஞ்சி கூலி வாங்குறான். நின்னா வேட்டியை இறக்கி விடுறான். நேத்துப் பெறந்த பயல்வ. நின்னு சாமானப் புடிச்சி மோளத் தெரியாது. என்ன பார்வை பார்க்கா னுவ? என்ன செய்ய? கக்கவும் முடியல. விழுங்கவும் முடியல. முணுமுணுக்கத்தான் முடியுது. அதிலையும் நாட்டாமை நாயக்கருக்கு எட்டூர் காடு கரை உண்டு. பஸ்சு லாரின்னு அது தனியா ஓடுது. நாலு மினி பஸ்சுக ரூட்களை இப்பந்தான் வாங்கினார். ஓட்டுனர், நடத்துனர் பூரா பறத்தெரு பையமார்களையே எடுத்துப் போட்டார். அவுங்க கிட்ட பாரத்தில் மட்டும் கையெழுத்து வாங்கிகிட்டார். ஒரு நாள் தாட்கோ அலுவலகத்துக்கு கூட்டிக் கொண்டு போனார். அங்க அவுருக்கு ஏகப்பட்ட மரியாதை. அங்க உள்ள பெரிய அதிகாரி 'பெப்சி' வாங்கிக் கொடுத்தான். உடனே சேங்ஷன். பாதி மானியம். நீண்ட நாள் கடன். அவருக்கு பஸ்சுகள் சும்மாக் கிடைச்ச மாதிரி கிடைச்சது. அவருக்குத் தெரியும் பறச்சேரி பணம் காயக்கிற மரம்னு. இல்லன்னா உள்ளங்கை வெத்தலைக்கு சுண்ணாம்பு கொடுக்க மறுக்கும் நாயக்கரு, பறைச்சேரி அம்மங்கோவில் கொடை விழாவுக்கு 1000 ரூபாய் டொனேஷனும் கொடுத்து, விழாவுக்கு வந்துட்டார்னா சும்மாவா?

டிங்கி பிச்சைக்குத்தான் சங்கடமாக இருந்தது. ஏதோ, நாட்டாமையை புகழ்ந்து 'கதை வுட்டு,' அவுரு மனசுக் குளிர்ந்து, நூறு எரனூறு தரமாட்டாரான்னு நினைத்தான். அதுதான் தப்பாப் போச்சு. அவன் ரெண்டு வார்த்தைதான் சொன்னான். அதுக்குள்ள ஒரு இளவட்ட பையன், நா.மா.ச. பாசறை சார்பாக சால்வை போர்த்தினான். நாயுடு மகாசபை சார்பாக இன்னொரு பொன்னாடை விழுந்தது. ஒலி வாங்கி முன்ன நின்னு ஆட்கள் புகழ்ந்தார்கள். ஒரே கைத்



படிப்பகம்

www.padippakam.com

தட்டு. நிறைய ரோஸாப்பூ மாலைகள். டிங்கி புகழ் எடுபடாமலே போயிற்று. இருந்தாலும் அவன் நாயக்கரு அருகிலேயே நின்னான். மாலைகளையும் துண்டுகளையும் வாங்கி வாங்கி வச்சான். அதுவும் கொஞ்ச நேரம்தான். பெறவு பீடி பத்த வைக்க வெளி யில் போய் விட்டான். அவனை யாரும் கண்டுக் கிடவேயில்லை. இப்பம் அவனுக்கு 'கிராக்கி' இல் லாம போச்சு. அதைப் பத்தி அவனுக்கென்ன கவலை? திரும்பி வந்து காத்தவராயன் பக்கத்துல சக்னு உக்கார்ந்தான். வெள்ளையம்மாளும் அங்ஙனதான் இருந்தாள். இவ்வளவு நேரம் ஆடி, ஓடி, அலைந்த கால்களுக்கு கொஞ்சம் ஓய்வு கிடைச்ச மாதிரி இருந்தது.

நாட்டாமை நாயக்கருக்கு மாலை, மரியாதை, சடங்கெல்லாம் முடிந்த பிறகு, 'குப்'ன்னு தீ பிடிச்ச மாதிரி ஓர் பரபரப்பு ஏழுந்தது. நாயக்கர் கழுத்துலக் கிடந்த செயினை எவனோ ஆத்திக்கிட்டுப் போயிட் டான். நாயக்கருக்கு செயினைக் காணோம்ன்ன வுடனே படபடன்னு வந்தது. யார் எடுத்தான்னு தெரியல. ஆட்களெல்லாம் விலகிப் போன பெறவு, சாவகாசமாக நாற்காலியில் உக்கார்ந்தாரு. அப்பந் தான் பார்த்தாரு. செயினைக் காங்கல. கள்ள வெலைக்கு வித்தாலும் எவனும் கண்ண மூடிக்கிட்டு பதினைந்தாயிரம் கொடுப்பான். சுத்த தங்கம். அளவு எடுத்து, பார்த்து செஞ்சது. அஞ்சு பவுனுக்கு கூடவே இருக்கும். "அடேய், செயினைக் காங்கலடா. எவனோ எடுத்துக்கிட்டான்டா. பாருங்கடா!" என்று அதிர்ச்சி யில் குரல் கொடுத்தார். ஆட்கள் சூழ்ந்து கொண்டார் கள். கீழ எங்கையும் கிடக்குமான்னு பார்த்தார்கள். மண்ணக் கிண்ணக் கிண்டிப் பார்த்தும், ஊகும், காங்கல. வேற எங்கையும் கிடந்த மாதிரியும் தெரியல. எல்லாரும் அங்ஙனதான் சூழ்ந்து நின்னார்கள். ஒரே கவலை. ஆட்டம் பார்க்க வந்த ஆட்களும் கலைஞ் சிட்டாங்க.

அப்பந்தான் ஒருத்தன் சொன்னான். "இந்த பறச்சேரி சாவாசமே வேண்டாம்ன்னேன். நாட் டாமை நாயக்கரு கேட்டாரா. இப்பம் கழுத்துல உள்ள சங்கலியை களவு எடுத்துட்டானுவே. பெறவு குண்டி வேட்டியையும் உறிஞ்சிடுவானுவே." விழா கமிட்டித் தலைவர் முட்டப்பா என்ற முருகப்பா கேட்டார். "ஏய் நாயக்கர, பார்த்து பேசும். அனாசி யமா வார்த்தைகள விட்ட, மருவாதை கெட்டுப் போகும்..." "என்ன லேய் மருவாதை கெட்டுப் போகும்?" என்று அவர் சொல்லி முடிக்கங் காட்டிலும், ஒரு இளவட்டப் பையன் முன்னுக்கு வந்து, "இறங்கிப் பார்ப்போமா. எப்டி மருவாதை கெட்டுப் போகுதுன்னு" என்றான். உடனே இன் னொரு பறைப் பையன் உரத்து சொன்னான்: "அதையும் பாப்போம். வெட்டுன்னா வெட்டு, குத்துன்னா குத்து!"

அப்பம் விக்கவும் வெள்ளவும் முடியாம இருந்த நாட்டாமை நாயக்கருதான், நிலைமை மோசமா வதைப் பார்த்ததும் எழுந்தார். "இருங்கப்பா. எம் பொருள் களவு போயிருக்கு. நட்டம் எனக்கு. இத வச்சு ஊருக்குள்ள சண்டைய இழுத்திடாதீங்கப்பா" என்றார். பிறகு அமைதி ஏற்பட்டது. ரொம்ப தயவாக முருகப்பா சொன்னார்: "நாட்டாமை அய்யா, எங்க சாதி சனங்க யாரும் உங்கப் பக்கமே வரல. ஒங்களைச் சுத்தி உங்க ஆட்கதான் நின்னாங்க" "ஏலேய் அப்பம் எங்கல களவுச் சொல்லுறீயா?" என்று இன்னொரு நாயக்கர் கேட்டதும், ஒரு பெரிய மனுஷி, "நாங்க யாரையும் களவு சொல்லல. பக்கத்துல உங்காட் கத்தான் நின்னுக்கிட்டிருந்தாங்கன்னு சொல்லுறோம்" என்றாள். "நீ சொல்லுறதப் பாத்தா நாயக்கமாருக திருடன்கங்கிற மாதிரில இருக்கு?" "தப்பா நெனச்சுக் கிடாதீங்கையா. எங்கத்தெருக்கொட நாட்டாமை அய்யா வந்திருக்காங்க. எங்கள அய்யா பக்கத்துல வுட்டிங்களா? மாலை போடக் கூட வுடல. அதத்தான் சொல்லுறோம்" என்றாள். "போலீஸ்க்கு போனா என்ன?" என்று ஒரு குரல் எழுந்தது. உடனே நாட் டாமை நாயக்கர் அலுத்துக் கொண்டார்: "போலீஸ்க்கு போறது சரிதான். பெறவு எல்லாரும் தான் உள்ளப் போகனும். நம்ம பல்லக் குத்தி நம்மலே மோந்து பார்க்கக்கூடாது. அசிங்கம்" என்று எழுந்து கொண் டார். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் எல்லாம் அதோடு சரி. அப்பம் மணி மூனு. கொஞ்ச நேரம் கொட்டு சத்தம் கேட்டுக்கிட்டுருந்தது.

காலையில் பணத்தை குறைத்துக் கொடுக்கும் போது டிங்கி பிச்சை வாங்க மறுத்தான். ரொம்ப சாதுவா அவனும் கேட்டான்: "என்னண்ணாச்சி இப்டி கொறைக்கிங்க. நாங்க என்ன ஆறு மணி முட்டும் ஆட மாட்டோம்ன்னியா சொன்னோம். நீங்கதான் ஆட் டம் வேண்டாம். கொட்டு மட்டும் அடிங்கன்னிங்க. அதுக்கு நாங்க என்ன செய்வோம். பேசின தொகை யைக் கொடுங்க அண்ணாச்சி." அவன் பக்கத்துலதான் காத்தவராயன் இருந்தான். அந்த பேச்சு கொஞ்சம் ஏந்தலாக இருந்தது. வெள்ளையம்மாள் வரல. புரு ஷனை விட்டு பணத்தை வாங்கி வரச்சொல்லி இருந்தாள். தாமரைக்குளம் பட்டுராஜா பேசுனத் தொகையை வாங்கிட்டு போயிட்டான். பிறகு டிங்கி பிச்சையோடு பேச்சுவார்த்தை இழுத்துக்கிட்டு கிடப் பதைப் பார்த்ததும், கமிட்டில உள்ள ஓராளு, "ஏய் முருகப்பா... டிங்கி பிச்சை நம்மாளு. பக்கத்து கோவில்பட்டி. கூப்பிட்ட உடனே வருவான். பேசுனத் தொகையை கசராமக் கொடு" என்றார். பிறகு யாரும் மூச் காட்டல. அந்தத் தொகையை எண்ணிக் கொடுக் கும் போது, டிங்கி பிச்சை ரெண்டு கைகளை ஏந்தி வாங்கிக் கொண்டான். ஒரு கும்பிடு போட்டான்.

சல்லிப்பட்டியில் இருந்து விளாத்திக்குளம் வரும் போது மணி பதினொன்னு. வெய்யில் சுள்ளுன்னு உரைக்கி. காத்தவராயன் வெள்ளை வேட்டி, முழுக் கைச் சட்டை போட்டிருந்தான். வெள்ளையம்மாள் பக்கத்துலதான் நின்னாள். பச்சை, மஞ்சள் கோடு போட்ட வாயல் புடவையும் பச்சை நிற ரவுக்கையும் அணிந்திருந்தாள். ராத்திரி பூரா முழிச்சு நின்னு ஆடுன்ன கிறக்கம் இப்பம் தெரிந்தது. அதோடு வீட்டுக் கவலையும் சேர்ந்த முகம். அவளுக்கு எதி லையும் பிடித்தமில்லை. என்ன சவத்துப் பய ஆட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

ஊர் ஊராய் நாயாய் அலைஞ்சுக்கிட்டு, பெட்டியை தூக்கிட்டு, இது என்ன தொழிலா? பொட்டப் புள்ளைக்கு கலியாணம் முடிக்கனும். அடுத்தவன் இருக்கான். எஸ்.எஸ்.செல்சி. முடிச்சுட்டான். ஐடிஐ-ல சேரப் போறானாம். டூவீலர் மெக்கானிசம் படிச்சுட்டு கடை வைக்கப் போறானாம். அவன் சொல்லுறதும் வாஸ்தவம்தான். துட்டு பிறட்டனும். இந்த நினைவுக் குழப்பத்துக்கிடையில் தான், டிங்கி பிச்சை, 'இந்தா வாரேன்'ன்னு சொல்லிட்டு போனவன், ரெண்டு அவுன்ஸ் பிராந்தியை குடித்து விட்டு வந்து நின்றான். அந்த நெடி வீசியது.

அவன் கையில் உள்ள பொட்டணத்தை காத்த வராயன் கையில் கொடுத்தான். "இதெல்லாம் எதுக் கண்ணே" என்றாள் வெள்ளையம்மாள். "அண் ணன் வாங்கித் தரேன். கொண்டு போ!! புள்ளைகளுக்கு கொடு" என்றான். அவன் சாரத்தை மடித்து கட்டி யிருந்தான். தொள தொளன்னு நீல நிற சட்டை. பம்பைத் தலை அப்படியே இருந்தது. அதை மடிச்சு வைக்கிற மாதிரி வெள்ளைத் துண்டால் தலைப்பாயக் கட்டியிருந்தான்.

"ஏலே... உம் பொண்டாட்டி மூவாயிரம் ரூபாய் உழைச்சி இருக்கு, நீ என்னல புடுங்கின?" என்று காத்தவராயன் வாயைக் கிளறினான் டிங்கி பிச்சை. அதற்கு காத்தவராயன், "இதெல்லாம் பாதுகாக்கம் முல. அவளுக்கு துணையா இருக்கம்ல. இது போதாது" என்றான். டிங்கி பிச்சையும் சிரிச்சிக் கிட்டே சொன்னான்: "ஆமா... ஆமா.. உங்க பாதீ காப்பு எங்களுக்குத் தெரியாது. அன்னைக்கி இந்த துணையெல்லாம் எங்கல போச்சு." "என்னைக்கி?" "குலசை தசராவுக்கு பெரியசாமிபுரம் தசரா செட்ல ஆடுனோம்ல. அப்பம் ஒரு நாடான், உம் பொண்டாட் டியை கையை புடிச்சி இழுத்தான்ல. அப்பம் உன் வீரம் எங்கல போச்சி" "என்ன மச்சான் இப்டிக் கேட்டிட் டிங்க. எம் பொண்டாட்டி எங்க ஆடப் போனாலும், நான்தான் உங்களையும் கூப்பிடச் சொல்லி இருக்கேன். எங்களுக்கு பாதுகாப்பே நீங்கதான்." உடனே டிங்கி பிச்சைக்கு பதில் சொல்ல முடியல. அந்த இடைப் பட்ட அமைதியில் வெள்ளையம்மாள் கேட்டாள்: "என்னண்ணே, இன்னும் ஒரு கலியாணத்த முடிக்காம இருக்கீங்க" "பொண்ணு வச்சிருக்கியா. இப்பம் முடிச்சுக்கிடுறேன்" "பொண்ணு இருக்கு. அதுக்கு கலியாணம் பேசில வச்சு இருக்கேன்" "நெஜமாவாச் சொல்லுற?" "இதுல பொய் என்னயிருக்கு" "எப்ப கலியாணம்?" "அதுதான் தெனறிக்கிட்டிருக்கேன்." "எதுக்கு?" "பத்து பவுன் நகையும், அய்யாயிரம் ரூபாய் ரொக்கமும் கேட்காங்க. கையில மூனு பவுன் இருக்கு. ரொக்கத்தை தெரட்டிடலாம். மத்தபடி கலியாணச் செலவு இருக்கு. அத நெனச்சாதான் கண்ணுமுழி பிதுங்குது" "உம் மவளுக்கு நகையை பூராச் செஞ்சி கிட்டின்னா, மத்தப்படி கலியாணச் செலவுக்கு பணத்த பிறட்டிக்கிடுவியா?" "ம்" "சரி எங்கூட வா. ஒங்கிட்ட தனியா பேசனும்."

வெள்ளையம்மாளுக்கு முகம் மாற்றம் கண்டது. உடல் அதிர்வதை உணர்ந்தாள். புருஷனை பக்கத்துல வச்சுக்கிட்டு, தனியா என்ன ரகசியம் வாழுது? இருந்தாலும் சொன்னாள்: "இல்லண்ணே. என்னன்னாலும் இங்கன வச்சு பேசுங்க. அவுரும் கேட்டுக் கிடட்டும்." "இல்லம்மா. இப்பம் ஒங்கிட்டச் சொல்லு றேன். பெறவு உம் புருஷனுக்குச் சொல்லு" தனிந்த குரலில், கனிவாக டிங்கி பிச்சை சொல்வதைக் கேட்ட தும் காத்தவராயன், "உங்க அண்ணன்தானே கூப்பிடு றாரு. என்னன்னுதான் கேட்டுட்டு வாயேன்" என்றான். வெள்ளையம்மாள் அர மனசோடுதான் போனாள். என்னதான் அண்ண அண்ணன்னு பழகினாலும், டிங்கி பிச்சை ஒரு மாதிரி ஆளுன்னு கேள்விப்பட்டி ருக்கிறாள். ராத்திரி நடந்த கூத்து மாதிரி ஆகிவிடக் கூடாது. அது நடிப்பு. இப்பம் நெஜமாகவே உம் புருஷனை விட்டுட்டு எங்கூட வா ன்னா..! நினைக்கும் போதே நடுக்கம் ஜாஸ்தியாகுது அவளுக்கு.

அதிலும் டிங்கி பிச்சை ஆளில்லாத இடமாகப் பார்த்துத்தான் அவளைக் கூப்பிட்டுக் கொண்டு போனான். அவனும் யாரும் வாராங்களா, தெரிஞ்ச ஆட்க இருக்கான்னு நாலாப் பக்கமும் பார்த்துக் கிட்டான். அப்படி ஒருத்தரும் இல்லை. எல்லாரும் பஸ்சைப் பிடிச்சு, ஊர் போகிற அவசரத்துல இருந் தாங்க. யாரு எங்கப் போனா, எங்க வந்தான்னு யாருக்கு கவலை? அவுங்க அவுங்க ஜோலி அவுங்கவுங் களுக்கு. இருந்தாலும் திரும்பவும் ஒரு தடவை பார்த் துக்கிட்டுதான் முடிச்சை அவுத்தான் டிங்கி பிச்சை. அவன் நைய்சாய் அந்த செயினை எடுத்தான். அது கொத்து மணி போல கைக்கு வந்தது. நகையை பார்த் ததும் வெள்ளையம்மாள் பதறினாள். "இது நாட் டாமை நாயக்கரு நகையில்ல?" என்று கேட்டாள். உடனே டிங்கி பிச்சை உஷாராகி, "இது நாட்டாமை சங்கலிதான். யாரு இல்லன்னா. உம் புள்ளக்கி நகைக் குறையுதுன்னியே. இதப் போட்டு கெட்டிக் கொடு" என்று அவன் கொடுக்கும் போது, வெள்ளையம்மாள் வாங்க மறுத்தாள். "எனக்கு பயமா இருக்கு" என்று சொன்னாள். " நீ ஏம்மா பயப்புடுற. நம்ம மாதிரி உழைச்சி சேர்த்த துட்டா இது. நாட்டாமை சுரண்டி சேர்த்திருப்பான். இல்லன்னா, கிழவனுக்கு இவ்வளவு பெரிய நகை எதுக்கு?" "என்ன இருந்தாலும்..." "என்ன... என்ன இருந்தாலும்? இந்த பல்ல வெட்டி தூர எறி. மத்த நகையோட இதையும் சேர்த்து, புதுசா செய். எல்லாம் சரியா போகும்" என்றான். அதற்குப் பிறகு வெள்ளையம்மாள் சத்தம் காட்டவில்லை. கையை நீட்டி நகையை வாங்கிக் கொண்டாள்.

மதுரைக்குப் போகிற 'ஜெயவிலாஸ்' நின்னது. காத்தவராயன் டிரங் பெட்டியை தூக்கி பஸ்சில் வச்சுட்டு, பொண்டாட்டியை எதிர்ப்பார்த்து நின்றான். வெள்ளையம்மாள் வருவது தெரிந்ததும், கை சைகை காட்டிக் கூப்பிட்டான். அவள் வந்ததும் ரெண்டு பேரும் பஸ்சில் ஏறிக்கிட்டாங்க. அவள் ஜன்னல் ஓரம் உக்கார்ந்தாள். டிங்கி பிச்சை, "போயிட்டு வாரிங் காளா" என்றான். வெள்ளையம்மாள் கண்களில் நீர் கட்டியது. "எண்ணா நீங்க எப்பம் ஊருக்கு போ வீங்க?" என்று கேட்டாள். "இன்னா இருக்கு கோவில் பட்டி. நான் எப்பம் வேணும்னாலும் போவேன்" என்றான். ●



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

■ ஹரிகிருஷ்ணன்

'பெத்தவங்களுக்கும், பொறந்தவளுக்கும் சீருபாரு செய்யரதுக்கு கணக்கேப் பார்க்கக் கூடாதுன்னு சொல்றவங்களுக்கென்னா வாயா வலிக்குது? அதும் போவ சட்டியில இருந்தாத்தானே ஆப்பயில வரும்? இங்க அஞ்சிப்பத்து சம்பாரிக்கிறதுக்குள்ள அவனவன் படற கயிட்டம் கட்டிப்பீயி தண்ணி பீயாவிப் போவுது! பண்ணயத்துல இருந்து வருசம் முன்னூத்தி அறுவத்தி அஞ்சி நாளும் மாடா ஒழச்சாலும் நாலாயிரமோ இல்ல அஞ்சாயிரமோ ஆளுக்காரஞ் சம்பளம். அல்லு சல்லுப் பொருத்திக் கிட்டு துண்டு துண்டா குடுக்கிற நூறு எர நூறு உருவாயிக்கி கொஞ்சத்தப் பேச்சா? கொஞ்சத்த ஏச்சா?

ஏதோ மவராசமூட்டு சிஸ்காலு கம்பினி பொட்னேரியில வரங்காட்டியும் பெட்டியிலிருந்து கரி எறக்கறதுல காண்ரேட்டுக்கார கம்மனாட்டிங்க தின்னதுபோவ, வாயக்கட்டி வவுத்தக் கட்டி கையச் செத்த இறுக்கிப்புடுச்சா கண்ல நாலுக்காசு காங்கலாம்...ம்.. அப்பிடிச் சேத்தது நாலம்பது, கங்கானியூட்டு முத்தாயி பண்ணாடிச்சிக்கிட்ட கந்துக்கு வாங்கனது பத்திருவது! நானூறு உருவா இப்ப போன பொங்கலுக்கு தெச்ச காக்கி டவுசருல கனமா கனக்குது.'

பொந்தியோடப் பொலம்பிக்கிட்டே சீரங்கன் போற எடம் மறந்து மேட்டுரு சின்னபார்க்கு வேலு துணிக்கடயவுட்டு அந்தாட்ட மாதா கோயிலாண்டையே போயிட்டான். நெனவு சட்னு திலும்பி 'அக்காங்... இதடா... நெம்பத் தொலவு தாண்டி வந்துட்ட'முன்னு வந்த தடத்துல திலும்பி மறுக்க ஒருவாட்டி நடந்தான். துணிக்கட தாண்டனதுக்கூட தெரியாம நெனப்பு பொழப்புக் கெடுக்க அவனுக்கு இருக்குற வெசனம் ஒண்ணா ரெண்டா? ஏருவாடி அரிசனத் தெருவு செம்மூஞ்சிக்கி மவனாப் பொறந்த சீரங்கன் வெவரந்தெரிஞ்ச நாளுமொதலா மலையா மூட்டுக் காட்டுலதான் பண்ணயக்காரனாயிருந்தான். அவனுக்கு ஆறேழு வருசமா இருந்தப்பவே செம்மூஞ்சி கட்ட சாஞ்சி ரெட்டி ஏரிக்கரைக்குப் போயிச்சேர, ஆயக்காரி மந்தி, தங்கச்சிக்காரி வெள்ளச்சியையும் அவந்தான் வெச்சி மாரடிக்க வேண்டியதாப்போச்சி.

அப்பாரம் அவனுக்காச்சி வயசு இருபத்தி மூணு! ச்சேரி, காலாகாலத்துல பையனுக்கு காலுக்கட்டு போடலாமுன்னு எல்லக்குட்டையூரு மல்ரிப்பட்டி ஆறுமொவம் மவ சின்னோடத்தியப் பொண்ணுப் பாத்து நிச்சியம்பண்ணி கொமுருக்கவுண்டருக்கிட்ட ஏழ் நூத்தம்பது உருவா கடம்பட்டு மேச்சேரி ஈஸ்வரங்கோயில்ல பாண்டு வாத்தியத்தோட மவனுக்கு கண்ணாலஞ் செஞ்சி வெச்சா மந்தி. மூணு பேருச் சம்பாரத்துல நாலு ஆளு ஆனாங்க. பொறவு நாளு - கெழம, நல்லது - கெட்டது, ஊரு - சேதின்னு ஒரு ஊட்டு செலவு ரெண்டுட்டு செலவா உண்டுன்னா ஆச்சி. பாடுபட்டு களச்சி வர்றவனுக்கு நாக்குக்கு ஒணத்தியா ஒண்ணுத்துக்கும் வக்கில்லாம கெதியத்துப் போச்சி.

அவன் நல்லச்சோறு - சாறு தின்னு நாலஞ்சி மாசமே ஆயிருக்கும். மருமூச்சிப் போனப்ப மாமியா சுட்டுப்போட்ட கச்சாயத்தான் அவங் கடசியா தின்ன பலகாரம்! தெனம் களியும் பூளிச்ச ரெக்கிரியுந்தான் விருந்து. ஏதோ ஆடிப்பதினெட்டு, தீவாளி, பொங்கலுன்னா ஒரு நாளைக்கி பச்ச நெல்லஞ்சோறு திங்கலாம். கண்டங் கண்டன்னு இதா இந்த வருசம் பொங்கலு எட்டிப் புடிச்சாப்புல ஓடியாந்திரிச்சி. பகல்ல கூட கயிட்டப்பட்டு இராவுலச் சொவங்குடுக்கறப் பொண்டாட்டிக்கி அஞ்சிப் பவுனு, பத்துப் பவுனுன்னு நவ மாட்டி அழவுப் பாக்காட்டிப் போவுது! அட வொரு நோம்பி, நொடிக்கி ஒடம்புக்கு எடுப்பா ஒரு சீலயாச்சும் எடுத்துக்குடுக்கலாமுன்னா ஆயாளும், அவளும் வூட்ல இருந்துக்கிட்டு எல்லாத்துக்கும் முட்டுக்கட்ட மொடக்கு. கண்ணாலங் கட்னமா, ஊட்டுக்காரியோட சந்தோசமா இருந்தமான்னு இல்லாம ரெண்டு சனியனுங்கள வெச்சிக் கிட்டு, நம்ம வேருக்கு வெந்தண்ணி ஊத்தனாப்புல ச்சை...

இப்பிடி இல்லாத கொடும, புதுப்பொண்டாட்டி பெருமயில அவம்மனசு சொணங்கி, 'வள் வள்'ளுன்னு அப்பப்பக் கொரைப்பான். 'ஓராளுச்சம்பாத்தியம், வூட்ல எதுவொண்ணூம் இருந்தூம் இருக்கும் எல்லாமியும் இருக்கும், வுவுத்துக்குப் போடறவன் பாவம் அவனுக்கென்னாச் சிறுமயோ, வாயாலதானக் கத்தறான், கத்திப்புட்டு போவட்டுமுன்னு சீரங்கம் பேச்சக் காதுலப் போட்டுக்காம மந்தியும், வெள்ளச்சியும், அப்பிடி நேத்து நெறவி ஊட்ல சண்டச் சச்சரவு இல்லாம காலத்த ஓட்னாங்க. அவனும் அப்பனில்லாத குடும்பத்த நாம்பதானக் கரச்சேத்தனம்னு ஓரோருச் சமயம் மோவாத நெஞ்சிக்கி தப்ப வெச்சிக்கட்டிக் கிவான்.



படிப்பகம்

www.padippakam.com

கடய நப்புனாப்புல நாலஞ்சி பொண்டுவ நின்னுக்கிட்டு அத ஒடிப்பாக்கறதும், இத் ஒடிப்பாக்கறதும் ஒருத்தியும் ஒண்ணும் எடுக்காமச் சும்மா வெத்து ஒரியாட்டம் போட்டுக்கிட்டிருந்தாளுங்க. சச்சிக்கு அந்த கொச வழக்கு முடியற மாதிரியில்ல. அவங்கள இடிச்சித்தள்ளிக்கிட்டு கடைக்காரிக் கிட்டப் போனவன் “ச்சாமீ சீல எடுக்கணுமுங்க” மின்னான். “எவ்வள வெலயிலப்பாக்கிறீங்க”ன்னா கடக்காரி. “நூறு எர நூறுக்கு இருந்தா காட்டுங்க” “ஹூம்… அந்த வெலப்பொடவயெல்லா இங்க கெடைக்காது, ஸ்கொயரு மார்க்கெட்டு சப்தரிஷி மண்டபத்துலத் தள்ளுபடிச் சீல விக்கிறாங்க. அங்க போங்க, அம்பதுக்கு கூட கெடைக்கும்” வெடுக்குன்னு ஒரு எளக்காரமா அந்தப் பொம்பள சொல்லும் புடி, இதென்னடா எலவு பொட்டச்சி முன்னாலப் பங்கப்பட்டுப் போயிருவமாட்டயிருக்குதுன்னு வறட்டு கௌரதி யோட

“எடுத்துப் போடுங்க ஒரு எரநூறு முன்னூறுல”ன்னான் கெத்தா. ரூவா எரநூத்தம்பதுன்னு கனகாம்பர நெறத்துல சிறுஞ்சிறு பூப்போட்டச் சீலய கடக்காரி எடுத்து மாராப்புப் போட்டு காமிக்க அவனுக்கு, சின்னோடத்தியே எதுக்கால நின்னு சிரிக்கறமாதிரி இருந்தது. ஆனால மடியில கனமில்லியே! சீலய வுடவும் மனசொம்பல. அவங்கையி சீலையையும் டவுசரு சோபியையும் திண்டாட்டமா தடவுது.

“ஏங்க ஒரே வெளதானா? பத்தஞ்சி தள்ளிக் குடுக்க மாட்டீங்களா”

“இந்தாப்பா இதெல்லாம் ஒஸ்தி வெல கம்பெனிப் பொடவைங்க. இந்த வெல கட்டுப்படியானா எடுத்துக்க, இல்ல நடயக்கட்டு. வேவாரத்தக் கெடுக்காத” கடக்காரி அதட்டும்பிடியும் இவனுக்கு வாயடச்சிப் போச்சி ‘ஊ…ம்… இல்லாதவன கண்டா எங்கியும் ஒரு எளக்காரமுன்னு நெனச்சிக்கிட்டு’

“சரீங்க…பை போட்டு குடுங்கன்னு” வத்துன மன சோட வாங்கிக்கிட்டு வெளிய வந்து காச எண்ணிப் பாத்தான். எரநூத்தம்பது போவ சொச்சம் நூத்தம்பது.

தாயக்கெழவிக்கு, தங்காச்சிக் கொமுரிக்கி என்னாப்பண்றதுன்று யோசனப் பண்ணிக்கிட்டே முத்துச்சாமி ஆசுபத்திரிச் சந்துல பூந்து காந்தி செல வழியா மண்டபத்துக்கு வந்தான். அங்க கூட்டமுன்னாலும் கூட்டம் அப்பிடியே எள்ளுப் போட்டா எள்ளு எறங்காது. எனத்துக்குடா இந்த மந்தைங்க இப்பிடி மொய்க்கிதுங்கன்னு பாத்தாஞ் சீரங்கன். ஒருச்சீல எடுத்தா இன்னோருச்சீல எலவசமாம். அவராடி, இவராடி முட்டி மோதி எப்படியோ மொண்டியடிச்சி உள்ள பூந்துட்டான். நூத்தி முப்பது குடுத்து சல்லுசா அவங்கம்மாளுக்கும் தங்கச்சிக்கும் சீல எடுத்துக்கிட்டான். பொண்டாட்டிக்கி வெறுஞ் சீல மட்டும் எடுத்ததுல அவம்மனசு நொம்பவேயில்ல

இந்த நூத்தி முப்பதும் இருந்திருந்தா ஊட்டுக்காரிக்கி லவுக்கத்துணி, உள்ளுத்துணி, உள்ளுப் பாவாட வாங்கியிருக்கலாம். தரித்தினியம் புடிச்சு பாமமனைங்க அட்ட மாதிரி ஒட்டிக்கிட்டு நம்ப உசுர வாங்குதுங்க,

உள்ளாற சடஞ்சிக்கிட்டே அவன் பசுடேண்டு வரவும் குட்டப்பட்டி பதினொண்ணு வரவும் செரியா இருந்திச்சி. பள்ளியோடத்துப் புள்ளைங்க கூட்டம் பஸ்சுல ஒட்கார எடங்கெடைக்காதுன்னு பையப் போட்டு சீட்டப்புடிச்சிக் குந்திக்கிட்டான். பஸ்சு போவ இன்னும் பத்து நிமிசமிருக்குதுன்னு கண்ரேட்டு மணி சொல்லும்புடியும், சீரங்கன் சோபியில குதிக்கிற சில்லரைக்கி பொண்டாட்டிக்கி கண்ணாடி வெளயலு வாங்குனா என்னான்னு ஆசைப்பட்டாம் பாவி!

கவிதா பலகாரக் கடைக்கிப் பக்கத்துல தள்ளு வண்டிமேல வகவகையா வெளயலுங்க மின்றத வரக்குள்ளப் பாத்தானே. பைமேல துண்டப்போட்டு மூடிபுட்டு பக்கத்து சீட்டுக்காரங்கிட்ட “பாத்துக்க சாமீ இதா அந்தக்கட முட்டும் பொய்யிட்டு வாரேன்”னு சொல்லிப்புட்டு, வெச வெசயா தள்ளு வண்டிகிட்ட ஓடினான். ‘அடோச்சாமீ எத்தன தினுசு, எமுட்டு நெறம், பாக்க ரெண்டுக் கண்ணும் பத்த லியே’ன்னு அரிசயப்பட்டுகிட்டே வெளயலுக் கடக்காரிக்கிட்ட “சாமீ வெளயலு எப்படிங்க”ன்னான் “டசனு இருபத்தி ரெண்டு ரூவா”ன்னா அவ. “என்னாச் சாமீ, ஆன வெளச்சொல்ற. எதோ வாங்கறாப்புல நாயமா ஒரு வெலய பாத்துச் சொல்லுங்கச் சாமீ”

“எடு எடு பேசிக்கலாம்”

மறுக்க ஒருவாட்டி டவுசர தொட்டுப் பாத்துக்கிட்டான். எப்பிடின்னாலும் பஸ் சார்க்கு போவப் பத்தோ பண்ணன்டோ தேறும்.

“ஒரு அர டசன் குடுங்க சாமீயோவ்”

உரூவா பத்தக் குடுத்து அத வாங்கி வெத்தல பாக்கு பையில வெச்சிக்கிட்டான். திரும்பிப் பாத்தா பஸ்சு தாலுக்கா ஆபிசுக்கிட்ட போயிக்கிட்டுருக்குது. மேமுச்சி கீமுச்சி வாங்க ஓடிப்போயி ஏறிக்கிட்டான். எக்கி எக்கி நவுத்து போயி துண்ட தொறந்துப்பாத்தா அவனக் காறித்துப்பி வெறுஞ்சீட்டு பல்லக்காட்டுது.

“அய்யய்யோச் சாமீ… ஈ… ஈ… அய்யோ எஜ்ஜா!” சீரங்கனுக்கு திகுத்திகுன்னு வவுறுப்பத்தி எரிய வாயி வாயாஅடிச்சிக்கிட்டான். ரவுசுல பஸ்சு நிக்க மணி கண்ரேட்டு “யோவ் ஆருய்யா அது? என்னாய்யா ஆச்சி”ன்னு அவசரம் அவசரமா நெண்டிகிட்டு வரவும் கூடவே சீரங்கங்க கூட்டாளி சின்னப்போடியும் ஓடியாந்தான். சீரங்கனுக்கு அழுவாச்சி ஆத்தரத்த அடக்கமுடியல. அவன் ஏமாந்தக் கதயச் சொல்லி ஆத்தமாட்டாம பெணாத்து பெணாத்துன்னு பெணாத்தனான். அவனுக்கு விரும்புத்தி புடிச்சாப்புல ஆயிப்போச்சி. ஆளாளுக்கு ரெண்டு தேறுதலச் சொல்ல.

“அடப்போடா, திருவாத்தான்னு” திட்டவுந் திட்னாங்க. அட அவனுக்கு ஆறுன்னாலும் ஆறல! தீருன்னாலும் தீரல! நரி தன்னக்கோழி கூவுமா?



படிப்பகம்

www.padippakam.com

பையன் வெசனத்தச் சட்ட பண்ணாம வண்டி தொண்ணூறுலப் பறக்குது. கடப்பாரைய முழுங்கிப் புட்டுவெளக்கெண்னைய வேதிக்கி குடிச்சவனாட்டம் வூட்டுக்கு வந்தவன் தகர கதவ அடிச்சிச் சாத்திப்புட்டு தொப்புனு கட்லுமேல வுழுந்து கவுந்துப்படுத்துக் கிட்டான். சின்னோடத்தி எங்கியோ பல்லுக்கு போயிட்டாளாட்டமிருக்குது. வாசத்தடுக்க தொறந் துக்கிட்டு அவம்பொறந்தவ வெள்ளச்சிதான் பொற னையே ஓடியாந்தா. 'படியச் சோத்துத் தண்ணிக் கூட குடிக்காம காத்தாலங்காட்டியும் எங்கியோப் போனான். வந்து இப்பிடித் தொறப்பு போட்டுக் கீட்டாபனேன்னு' "ரே யெண்ணல தழுப்புத்த தெறிடா? ஏமீ ஆயா இல்ல தழுப்புத்த மூசி படுக்கின்த் துவி" அங்கலாப்புல அவ கேட்க "ஒரு மசுரு ரேது மூசிக்கினு நீ பணி சூசிக்கினு போ பொடுசா" காதுல ஈயங்காச்சி ஊத்தனாப்புல அவங்கத்த, வெள்ளச்சி மொவற அப்பிடியோ இஞ்சித் தின்ன கொரங்காட்டம் சூம்பிப் போச்சி. 'ச்சேரி, சேரி இதுக்குமேல இவனக் கேட்டு வாயில நல்ல வார்த்த வாங்கமுடியாது'ன்னு அவ சலிச்சிக்கிட்டாலும் மனசுக்குள்ள அண்ணாங் காரனுக்கு என்னாவோ! ஏதோன்னு சின்னத் திகிலு. மக்கேரிய எடுத்துக்கிட்டு சாணப்பொறுக்க போனவ எதுக்க, வெறவு சொமயோட அங்க அவங்காயா மந்தியும் வந்துட்டா, வெள்ளச்சி கண்ல சாட பண்ணி பொறந்தவம் பொணங்கிட்டு இருக்கறத மந்திக்காதுல குசு குசுன்னு சொன்னா. அப்புறம் ரெண்டு பேரும் தொரசங்கட்டிக் கிட்டு அந்தச் சீமத்தொரய வேண்டு வேண்டுன்னு வேண்டனாங்க.'

"ரே கண்ணு சீரங்கா! தழுப்புத் தெறிடா சாமீ" மந்திக்கி மவன நெனச்சி ஏனோ தொண்டயக் கட்டிக்கிச்சி.

"ஏ பொம்பள இந்தேமி ஒச்சி ஏடிசினி உண்டேவு? மரியேதி இந்துண்டுப் போக்காடு"

"கொடுக்கா சீரங்கா ஏட்டிக்கி வெசனப்பெட் டாது. சாமீ தொலச்சேத்தி போனா போச்சேத்தி நஸ்சா பதுக்கிவுண்டத்தா அதிமாதிரி இங்க ஆயிரம் பட்ட தீயாசுமு. கண்ணு மா எஜ்ஜாவே கொச்ச தழுப்பு தெறி சாமீ" அவந்தாந்தோணித்தனம் தம்பட்டம் ஆயிப் பேச்சேன்னு வந்த நோப்பாளத்துல வெற எடுத்தப் பன்னியாட்டம் தொறந்தான்.

"அத்தக்கெத்தாள ஏ குக்க வொச்சி நீக்கி குசலம் செப்ப?"

"கோப்பமு சேசிக்குனாதுறா கொடுக்கா நீக்கூட பஸ்சுல சின்னப்போடி வொச்சினா வாடுதா எல்லானு செப்ப கண்ணு இந்து ரா சாமி, நேனு செப்பேதி வினு."

"கெம்மாட்டுண்டேனிக்கு ஏமி காவாலு அனேவு"

"ஓ கட்டி அடுக்கலேது, இந்த ராரா மா ராஜானு"

"ஏமீ"

வேண்டா வெறுப்பா கதவத்தள்ளிக்கிட்டு வங்குலியிருந்து பெருக்கான் முட்றாப்புல முட்னான் சீரங்கன்.

"இந்தா தீன்த்திப்பெட்டு"

மஞ்சத் துணிக்குள்ளாரயிருந்த உண்டிச்சொம்ப அவங்கைல வெச்சா மந்தி. பதுமாரு கெட்டமாதிரி நின்னாஞ் சீரங்கன். "கண்ணு நேனு, நீ தங்க, கொச்ச கொச்சமா சேர்சி முன்னூறு ரூவாலு தீன்ல் பெட்டிட் டுண்டேமு. நூவு பொய்யி கோடலுக்கு மச்சிதெனக்கி சூசி ஒகு நஸ்ச பட்ட எத்தின் ரா. மணிக்கு என்ட்டிக்குத் தா பஞ்ச்சமு. அதிவேசி உண்ட சேசி. ஒச்சின்ராலு மச்சுப்புடியா பெட்டிக்கினு உண்டத்தாரி. அவ்வுடுதா மணெ தங்க இங்கொகு இல இட்லப் பொய்யி நஸ்சா பதுக்கு".

("கண்ணு நானும் தாயும் சிறுவ சிறுவச் சேத்தி முன்னூறு ரூவா இதுல வெச்சிக்கறம். நீ போயி எம்மருமவளுக்கு நல்லதாப் பாத்து சீல ஒண்ணு எடுத்துக்கிட்டுவா. நம்புளுக்கு என்னைக்குந்தான் பஞ்சம்! அதுக்கோசரம்? நம்ப ஊட்டுக்கு வந்தவள நல்லபடியா சந்தோசமா நெறக்க வெச்சிக்கணும் அப்பந்தாஞ்சாமீ நாளக்கி நம்பப்புள்ள இன்னோ ரத்தமுட்ல பொய்யி நல்லா பொழப்பா")

கண்ல தண்ணிவுட்டுக்கிட்டு மந்தி பேசும்புடியும் அந்தச் சொல்லு ஒவ்வொண்ணும் சீரங்கன் அங்கத்துல இஞ்சிச்சாரா எறங்கிச்சி. பையனுக்கு கும்பியுங் கொழயும் வெட வெடன்று பதறி, அவங்கம்மா மடியிலச் சாஞ்சி "மா யெம்மாவே!"ன்னு சீரங்கன் வடிச்ச கண்ணீரு! மந்தி மடி கொளமாச்சி.

•

# மிச்சப்படும் வாழ்வு

■ அகவி

தசைநார்கள் அழுக்கேற
முழுமையாய் முடிவதில்லை கழுவ!

வேர்வையில் குளித்த மினுமினுப்புதான்
எங்களின்
காலாகால அழகியல் சொலிப்பு!

உச்சியில்
இறக்கப்படும் விசை செறித்து
சாய்த்த பொழுதில் நடந்து...
வீடு புகயில்...

அது இல்லை இது இல்லையென
இதம் மாறும் இல்லறம்
முள்ளம் பன்றியாய்ச் சிலிர்த்து நிற்பதை
வெல்லும் போதுதான் வாய்க்கிறது
மிச்சப்பட்ட
மாறுநாள் வாழ்வு

•



படிப்பகம்

www.padippakam.com

# நாய்க்குட்டிகள்

■ நீலவன்

உள்ளாட்சித் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே ஊருக்கு ஜுரம் பிடித்துவிட்டது. மற்ற தேர்தலை விட உள்ளாட்சித் தேர்தலில்தான் காலனி மக்களுக்கு மதிப்பும் மரியாதையும் உச்சத்தில் போகும். மூன்றில் ஒரு பங்குதான் காலனி ஓட்டுகள் என்றாலும் வெற்றி பெறுபவரை தீர்மானிப்பது அவைகள் தான். காலனி மக்களின் ஓட்டு கணிசமாக யாருக்கு விழுகிறதோ அவர்கள்தான் வெற்றி பெறுவார்கள் என்பது இவ்வூரின் தலையெழுத்து.

வழக்கத்திற்கு மாறாக நான்கு பேர்கள் தேர்தலுக்கு வேட்புமனு செய்திருந்தார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அதிகமாக்கப்பட்டதுதான் இதற்கு காரணமாக இருந்தது. இதில் போட்டா போட்டி என்றால், நல்லு கவுண்டரா, பரமேஸ்வர நயினாரா என்றுதான் இருந்தது.

நல்லு கவுண்டர் ஊரில், பாதி நிலத்துக்கு சொந்தக்காரர். காலனியில் அவரிடம் கடன் வாங்காத ஆட்களே கிடையாது என்று சொல்லலாம். சாத்திரத்தைப் போலவே சாதியையும் விடாப்பிடியாக பார்ப்பவர். காலனி ஆட்கள் யாராவது கொஞ்சம் கௌரவத்திற்கு ஆசைபட்ட மாதிரி நடந்து கொண்டால் அவ்வளவுதான். வயிற்றுப் பாட்டிற்கே வழியில்லாமல் செய்து விடக்கூடிய சாமார்த்தியப் பேர் வழி. என்னதான் காலனி மக்களுக்கு வெறுப்பு இருந்தாலும் எதிர்த்துக் கொள்ள மாட்டார்கள். விடிந்தால் அவர் காட்டில் வேலை செய்தால்தான் கஞ்சி குடிக்கக் கூடிய நிலைமை இருந்தது. தொப்ளான் வீட்டு வகையறா - காலனியில் அதிக வீடுகளைக் கொண்டிருப்பது அவர்கள்தான் - கவுண்டருக்கு அடிமை ஆட்களாக இருந்தார்கள். அவ்வப்போது தேங்காயோ, மாங்காயோ திருடி மாட்டிக்கொள்ளும் காலனி ஆட்களை அவர் வீட்டு முற்றத்தில் வளர்ந்திருக்கும் பூவரச மரத்தில் கட்டி வைத்து உதைப்பதற்கும் அவர்கள்தான் பயன்பட்டார்கள். காலனியில் ஒரு கட்டுமானத்திற்கும் வளைந்து கொடுக்கமாட்டார்கள்.

இன்னொரு முக்கியப் போட்டியாளரான பரமேஸ்வர நயினார் காலனி ஆட்களோடு ரொம்பவும் அந்நியோன்யமாக நடந்து கொள்பவர். எந்நேரமும் போதை தலைக்கேறி சிவந்து போன வெறித்த கண்களுடன் ஒன்றிரண்டு காலனி ஆட்களின் தோள்மீது கை போட்டுக் கொண்டு சுற்றி வருவார். பொம்பளை சோக்கும் அதிகம். இதை காரணமாக வைத்து நயினார் ஆட்களிலேகூட இவரை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் 'எலே பறையனுவோ குடியானவனுவோன்னு என்ன வித்தியாசம்? உங்க தாத்தாவுடைய தாத்தாவும் எங்க தாத்தாவுடைய தாத்தாவும் அண்ணன் தம்பிதான்டா' என சிரித்துக் கொண்டே மீசையை நீவுவார்.

அவருக்கு உள்ள ஒரே தைரியம், எப்படியென்றாலும் தன்னுடைய சாதியான்கள் ஓட்டு தனக்குத்தான் விழும். அதோடு காலனி ஓட்டும் சிதறாமல் விழுந்தால் வெற்றி நிச்சயம் நமக்குத்தான் என்ற கணக்கில் போட்டிக்குத் தயாரானார்.

மற்ற இரண்டு போட்டியாளர்களில் பரமேஸ்வர நயினாரிடம் ஒருவரும், நல்லு கவுண்டரிடம் இன்னொருவரும் பணம் வாங்கிக் கொண்டு போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்கள். கடைசியில் நயினாரா, கவுண்டரா என்று முடிவானது.

நல்லு கவுண்டர் எப்படியும் ஜெயித்தே ஆக வேண்டும் என பல பல சித்து வேலைகளெல்லாம் செய்தார். தினமும் நான்கைந்து காலனி ஆட்களை வண்டியில் ஏற்றிச் சென்று 'ஒயின் ஷாப்' சரக்கு வாங்கித் தந்தார். பட்டை சாராயத்திற்கே படாத பாடுபடும் பறையர்களுக்கு ஒயின் ஷாப் சரக்கு உற்சாகத்தைத் தந்து அப்படியே நமக்கு ஓட்டுகளையும் தரும் என்று நினைத்துக் கொண்டார். அப்படியே குடிபோதையில் தோள் மேல் கை போட்டு 'பேய் அடிக்கிற கை தாண்டா அணைக்கும்' என்றார்.

அவரோடு சேர்ந்து அவரின் உறவுக்காரர்களும் ஆளுக்கொரு வண்டியில் காலனியில் ஒவ்வொரு வீடாகச் சென்று 'எங்களுக்கு ஓட்டுப் போட்டீர்கள் என்றால் வட்டிக் காசு வேணாம், அசல மட்டும் தந்தாலே போதும்' 'ஒன்னும் இல்லாத ஓட்டாண்டிய தலைவராக்குனா என்னத்த ஒங்களுக்கு செய்வான். குடிக்கவும் பொம்பளைக்கிட்ட போவவுமே அவனுக்கு சரியா இருக்கும்' என்றனர். இன்னும் ஒருபடி மேலே போய், 'நீங்க ஓட்டு போடலைன்னா எங்களுக்கு ஒன்னும் மோசமில்ல, நாளைக்கி வேல வித்திக்கின்னு எங்க காட்ல வந்து குனிய முடியாது. மேற்கத்தி ஆளுவல கொண்டு வந்து எறக்கி வேலய செஞ்சிக்குவோம்' என்று மிரட்டவும் செய்தனர்.

தேர்தல் நெருங்க நெருங்க பரமேஸ்வர நயினாருக்கு கிலி பிடித்துவிட்டது. இருந்த கொஞ்ச நஞ்ச சொத்தையும் குடித்தே அழித்து விட்டிருந்தார். வட்டியின் பேரில் கடன் வாங்கித்தான் காலனி ஆட்களுக்கு சாராயம் வாங்கிப் போட்டுக்கொண்டிருந்தார். இந்த லட்சணத்தில் தன் சாதிக்காரர்களே தனக்கு எதிராக ஓட்டுப் போட்டு கழுத்து விடுவார்களோ என்ற பயத்தில் காலனிக்காரர்களை விட்டால் வேறு வழியே இல்லை என்று காலில் விழாத குறையாக காலனிக்கு மத்தியில்



படிப்பகம்

www.padippakam.com

உள்ள புளிய மரத்தடியில் தினமும் வந்து உட்கார்ந்து கொண்டு முக்கியஸ்தர்களை வசப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தார்.

காலனி முக்கியஸ்தர்களுக்கு ஒரே தலைவலியாக இருந்தது. ஒருபுறம் கவுண்டர் 'காலனி பொதுவுக்கு ஐம்பதாயிரம் பணம் தர்றன், ஓட்டுக்கு இவ்வளவுன்னும் தர்றன். ஓட்டு எனக்குத்தான்' என்றார். இன்னொரு புறம் 'பணம் என்னால முடிஞ்சத நானும் செய்றன். எனக்கென்ன புள்ளயா, குட்டியா, வர்ற சலுகையெல்லாம் நா வாயில போட்டுக்குற ஆளு கிடையாது. என்னை நம்புங்க' என்றார் நயினார்.

சரி, பஞ்சாயத்து கூடி முடிவெடுப்பதுதான் வழி என்று புளிய மரத்தடியில் கூடி உட்கார்ந்தார்கள். இரவு 10 மணி அளவில்தான் எல்லோரும் வந்து சேர்ந்தனர். மூத்த கரைக்காரர் பஞ்சாயத்து கூடிய காரணத்தை சம்பிரதாயத்தின்படி சொல்ல ஆரம்பித்தார்.

"நாம இங்க கூடியிருப்பது வர்ற தலைவர் தேர்தல்ல யாருக்கு ஓட்டுப் போடலாம் என்பதை முடிவு செய்வதற்குத்தான். கவுண்டர் பணம் தர்ரங்கறாரு. நயினாரு 'உங்கள விட்டா எனக்கு யாரு. நான் உங்களில் ஒருவன், வர்ற சலுகையை அப்படியே செய்வன்' என்கிறார். இதுல யாருக்கு நம்ம ஓட்டு என்பதை நீங்கதான் முடிவெடுக்கனும். இதனால நமக்குள்ள எந்தப் பிரிவினைக்கும் இடம் இருக்கக் கூடாது. நமக்கு இப்ப இருக்கிற வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தப் பஞ்சாயத்து நோக்கம்" என்றார்.

"எலக்ஷன்ல யாருக்கு ஓட்டு போடனுங்குறது அவங்க அவங்க விருப்பம். இத ஒருத்தருக்குத்தான் போடனும்னு கட்டுமானம் பண்றது மகாப்பெரிய குற்றம்" என வாய் திறந்தான் இராமசாமி. அவன் எல்லாரும் ஒரு திசையில் பேசிக் கொண்டிருக்க, பஞ்சாயத்தினுடைய போக்கையே மாற்றுவதில் கெட்டிக்காரன்.

"அட யாருய்யா நீ, இன்னிக்கி நம்மள உசந்த சாதிக்காரங்க ஊடு தேடி வந்து மரியாத கொடுத்து பேசுறாங்கன்னா, நம்மகிட்ட இருக்கிற கட்டுக்கோப்புதான் அதுக்குக் காரணம். இதுல நாம ஒத்துமையா இருந்து நம்மகிட்ட அனுசரணையா இருக்கிற ஒருத்தர ஜெயிக்க வைக்கிறதுலதான் நம்முடைய பகரே இருக்குது" என்றார் அரசன்.

"ஆமா பகரு என்ன பகரு. இது எல்லாம் ஓட்டு போடற வரைக்குந்தான்யா. அப்புறம் நம்மள மசுருக்கு சமானமாக்கூட மதிக்க மாட்டாங்க. நாம என்னைக்கும் அவர்களுக்கு அடிமை அடிமைதான். அது எத்தன எலக்ஷன் வந்தாலும் மாறப்போறது ஒன்னுமில்ல" என்றார் நடேசன்.

"சரி அப்டி இப்டியெல்லாம் பேச வேணாம். நா வேணா போட்டிக்கு நிக்கறன். எனக்கு எல்லாம் சேர்ந்து ஓட்டு போடுவீங்களா" என ஒரு குண்டை தூக்கிப் போட்டான் நாகராஜ். அவன் எப்போதுமே இடக்கு மடக்காகப் பேசி ஊர்க்காரங்கள கலக்க வைப்பவன்.

"எலே, பின்ன இல்ல. நீ வேணா நில்லன். பறையனுக்கு எதிரி பறையன்தான்டா. ஒருத்தன் முன்னேற பாத்தா அவன வாரி விடறதில கில்லாடிவோ இல்ல நம்ம ஆளுவோ" என்றார் கந்தன். அவருக்கு நாகராஜ் ஒன்றுவிட்ட பங்காளி.

"எலேய், நீங்க பேசறதுல எதனா அர்த்தம் இருக்குதா. இவன் தலைவருக்கு நின்னு போட்டி போடுவான். குடியானவனுவோ நின்னு வேடிக்கை பாப்பானுவளா. அப்படியே அவனுவக்குள்ள ராசியாகிக்கிட்டு ஒண்டிக்கு ஒண்டி நிக்க பாப்பானுவோ. அப்புறம் உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணாங்கற கதைதான்" என்றார் ரெங்கன்.

"எங்கயாவது நடமொறக்கி ஒத்து வர்றதாவா பேசுறீங்க. விஷயத்துக்கு வாங்க" என்றார் மூத்தவர்.

"சிவனேன்னு கவுண்டர் குடுக்குற பணத்த வாங்கிக்கிட்டு அவருக்கே ஓட்டு போடறதுதான் நல்லது. அவன் நயினான் சரியான தண்ணி வண்டி. பொம்பள சோக்குலயே பொயப் போனவன். அவனுக்கு சப்போர்ட் பண்ணறது நல்லதே இல்ல" என்று முதன் முதலாக வாயெடுத்தான் தொப்ளான் வீட்டு வகையறாவைச் சேர்ந்த சின்னசாமி.

"மனசாட்சிக்கு விரோதம் இல்லாம சொல்லுடா, கவுண்டன் நம்மள கா காசுக்கு மதிக்கிறானா. செருப்பா கூட நெனக்கிறதில்ல. ஓட ஓட விரட்டுறான். அவனையெல்லாம் பழிவாங்க இதுதாண்டா சான்ஸ்" என்றான் மூக்கன்.

"ய்யோவ்... நான் என்னா கூமுட்டையா. நீங்கல்லாம் நயினானுக்குத்தான் ஓட்டுப் போடனும்னு ஒத்துப் பேசிக்கிட்டு பஞ்சாயத்து கூட்டியிருக்கீங்க. இவனுவோ வாயில என்ன வருதுன்னு கேக்கத்தான் இந்தப் பேச்சுவோ எல்லாம். ஆமாய்யா, நாங்க கவுண்டருக்குத்தான் ஓட்டு போடுவோம். ஏன்னா எங்க வயித்துப்பாட்டுக்கு நீங்க போடுவீங்களா, இல்ல நயினாந்தான் போடுவானா. மொதல்ல வயிறு முக்கியம். அப்புறம்தான் எல்லாம்"

"எலே ஏந்திரிங்கடா. மசுறானுவ, பஞ்சாயத்து பேசுறானுவோ, ஒரப் பஞ்சாயத்து" என துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு நடந்தான் சின்னசாமி. அவனுடைய ஆட்களும் புறப்பட்டார்கள்.

பஞ்சாயத்துன்னு வந்துவிட்டால் அந்த ஆட்களை வழிக்குக் கொண்டு வருவதில் எப்போதுமே சிக்கல்தான். அன்று ஒரு முடிவும் இல்லாமலேயே பஞ்சாயத்து கலைந்தது.

மறுநாளும் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. சங்கக் கெட்டவன் தான் பெரிய மனிதன் என்பது போல மூத்தவர்தான் அன்றும் முதலில் துவங்கினார்.

"எலே சின்னசாமி, நீ சொல்றதுலேயும் நியாயம் இல்லாம இல்ல. ஆனாலும் நமக்குன்னு ஒரு வாய்ப்பு கெடைக்கும்போது. நம்மள கீழ போட்டு மிதிக்குற ஆள



படிப்பகம்

www.padippakam.com

ஒருமுறை மிதிச்சாதான் என்னா. பணம் வா-ன்னா வரும், போ-ன்னா போவும். மனுசாளுவ அப்படி இல்ல. கவுண்டன் இன்னக்கி தர்ற பணத்த வாங்கிட்டு ஜெயிக்க வச்சம்னா, நாளைக்கி ஒரு சலுகைன்னு போய் நின்னா செய்வான் இங்குற. அட பணத்த வாங்கிட்டு தான்டா ஓட்டு போட்டீங்க. அப்புறம் என்ன செத்த சலுகை அது இதுன்னு, போய் வேலையப்பாருங்கன்னா என்ன பண்றது" என்றார்.

பதில் சொல்ல சின்னசாமி வாயை எடுப்பதற்குள் அரசன் முந்திக் கொண்டு,

"நீ அவர் காட்ல வேல செய்யற தாலதான் ஒனக்கு சோறு போடறான், நல்லது கெட்டதுக்கு பாத்துக்குறான். நாலு நாளக்கி ஒடம்புக்கு முடியலன்னு படுத்துக் கிட்டா ஒன்ன வந்து சீந்தி பாப்பாங்க இங்குற. நீயே படுத்து நல்லா யோசிச்சுப் பாரு புரியும்" என்றார்.

"நீங்க சொல்றதுலாம் கேக்க நல்லாத்தான் இருக்கு. இன்னிக்கி ஒங்க பேச்ச கேட்டு நா ஓட்டு போடறன்னு வச்சிக்க. நாளைக்கு நயினாரே ஜெயிச்சு வந்தாலும், எம் பொழப்புக்கு வேல கொடுக்குறது கவுண்டர்தானே. என்னால துரோகம் பண்ண முடியாதுய்யா" என்றான் சின்னசாமி.

"ஏ... இவன் ஒத்துக்கு வரமாட்டான். ஊர உட்டு இவமுட்டு வகையறாவை ஒதுக்கி வச்சாதான் வேல புரியும். நாளக்கி எதனா ஒன்னுன்னா, கவுண்டன் வந்து மோளம் கொட்டுவான். பாடை தூக்குவான்" என்று கோபமாகப் பொரிந்தான் நாகராஜ்.

"அதுக்கு நாங்க ஒன்னும் கவலப்படலடா, உங்களால என்ன பண்ண முடியுமோ அத பண்ணிக்கிங்க. இருக்கற வரைக்கும் வராத சொந்தம் எறப்புக்கு பின்னால வருதான்னு நாங்க ஒன்னும் மூச்சி மூச்சி பாக்கப் போறதுல்ல. போங்கடா டேய்..." என சின்னசாமி சொல்லிக் கொண்டே எழுந்தான்.

"ஏ வாத்தய வகை தெரிஞ்சி உடுறா, பஞ்சாயத்து மொறம தெரியாம வாத்தய வாரி கொட்டுனா ஒன்னுமே சாதிக்க முடியாது" என நாகராஜை எகிறிய மூத்தவர் "நீ ஒக்கார்றா சின்னசாமி. கோபப்பட்டா எப்டி" என்றார்.

"சின்னசாமி, நாங்களும் ஒன்னும் நயினாருக்குத்தான் ஓட்டு போடப்போறம்னு வெளிச்சமா சொல்லப் போறதுல்ல. அவங்க அவங்க இஷ்டத்துக்கு உட்டுப் புட்டம்னு சொல்லிக்கத்தான் போறோம். அதனால, நமக்கு ஒரு வாய்ப்பு கெடச்சிருக்கு, கவுண்டர அசைச்சி பாப்பமே. நம்ம சாதின்னா எளக்காரமா நெனக்கிற ஆளுக்கு ஒரு பாடம் புகட்டுவமே. நீ எப்பவும் போல வேல வித்திக்கு போ. ஓட்டு உங்களுக்குத்தான்னு சொல்லிக்க. இதுல ஒன்னும் துரோகம் இல்ல. நம்மள மனுசனா நெனச்சி மதிக்கிற ஒருத்தருக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பமே" என்றார் மூத்தவர்.

ஒரு வழியாக நயினாருக்குத் தான் ஓட்டுப் போடுவது என முடிவெடுக்கப்பட்டது. எல்லோருடைய வீட்டிலும் இது ரகசியமாக சொல்லி வைக்கப்பட்டது. எல்லோருக்கும் அவரவர்கள் வெற்றி பெறப் போவதைப் போல சந்தோசம். சின்னப் பிள்ளைகள் கூட, நயினார் காலனிக்கு வரும் போது 'தலைவரே வணக்கம்' என பெரியவர்களைப் போல கையெடுத்தனர்.

தேர்தல் நாளும் வந்தது. ஓட்டு சேதாரம் இல்லாமல் வாக்களிப்பது காலனி மக்கள்தான் என்பது போல நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். ஓட்டு போட்ட பின்பு காலனிக்குள் நுழையும்போது புளிய மரத்தடியில் உள்ள தண்ணீர் பாத்திரத்தில் கை நனைத்து 'சாமி மேல சத்தியம். நயினாருக்குத்தான் ஓட்டுப் போட்டேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

ஆண்களை ஓட்டு போடப் போவதற்கு முன்பாகவே சாராயப் பாக்கட்டை வாங்கிக் கொள்ளும் படி கட்டாயப்படுத்தினர் கவுண்டர் ஆட்கள். பெண்களுக்கு புடவை; பணம் என்று வழங்கினர்.

ஓட்டுப்பதிவு முடிந்து எண்ணிக்கை நாளன்று காலனி மக்கள் எல்லோரும் குண்டியில் குருணி நெருப்பு வைத்திருப்பதைப் போல தவித்துக் கொண்டிருந்தனர்.

பெண்களில் சிலர் விளக்கு மாறு குச்சிகளாலும், வேப்ப இலைகளாலும் பூப்போட்டு பார்த்துக் கொண்டிருந்தனர்.

அறிவிப்பு வெளியானதுதான் தாமதம். காலனி தெருக்கள் அமர்க்களப்பட்டன. நயினார் ஜெயித்து விட்டார், நாமும் ஜெயித்து விட்டோம் என்றார்கள் இளைஞர்கள். வெடி வெடித்து சந்தோசப்பட்டனர். அத்தனை பேர் முகத்திலேயும் பூரிப்பு பூத்திருந்தது.

தலைவர் பரமேஸ்வர நயினாரைப் பார்த்துவர மூத்த கரைக்காரர்களும் இன்னும் சிலரும் அவரின் வீட்டிற்குச் சென்றிருந்தனர்.

வீட்டில் ஒரே கூட்டம். தேர்தலில் அவருக்கு எதிராக வேலை செய்தவர்கள் கூட உட்கார்ந்து பேசி சிரித்துக் கொண்டிருந்தனர். தலைவரே நம்மை கவனிக்கட்டும் என்று கரைக்காரர்கள் ஒதுங்கி நின்று கொண்டிருந்தனர்.

"ய்யோ... பரமேஸ்... ஒன்னு சொன்னா கோவிச்சிக்க மாட்டியே. ஏதோ பறப் பயலுவல அண்டுன, ஜெயிச்சுபுட்ட. அதுக்காக அவனுவல தலையில தூக்கி வச்சிக்கிட்டு ஆடாத. இருக்க எடம் கொடுத்தா, படுக்க எடம் கேப்பானுவோ, ஆமா சொல்லிட்டேன்" என்றான் குடிபோதையில் ஒருவன்.

"எலே எனக்குத் தெரியாதாடா. கவுண்டன் மாதிரி அவனுவல மிரட்டுறதால ஒன்னும் ஆகப் போறதில்ல. அவனுவ நாய்க் குட்டிவ மாதிரி. கொஞ்சம் எலும்பத் தூக்கிப் போட்டா காலம் முழுக்க வால ஆட்டிக்கிட்டு கெடப்பானுவ. அவ்வளவுதான். அதுக்காக, நாய அடிச்சி நடு ஊட்ல வச்சா அது வளச்சி மூஞ்ச நக்க வருங்குறது எனக்கு மட்டும் தெரியாதா" என்று அவர் அன்று குடிக்காமல் நிதானமாகவே தான் பேசினார்.

●



படிப்பகம்

www.padippakam.com

■ சிவக்குமார்

# அதி(க)காரம்



மலை முகட்டில் சூரியன் மெல்ல மறையத்தொடங்கியது. பகலின் பரபரப்பு கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக் கொண்டிருந்த நேரத்தில், 'திருமாறன போலீசு சுட்டுட்டாங்களாம்' - திடீரென வந்த செய்தி கேட்ட கொளத்தூர் சேரியே அதிர்ச்சியில் மூழ்கி புயல் ஓய்ந்தது போல் உறைந்து கிடந்தது.

'பற நாய்கள கூண்டோட சுட்டுப் பொசுக்கிட்டாங்க போலீசு. ஊர்க்குருவி ஓசர பறந்தாலும் பருந்தாகாது. பருந்துங்க மேல இருக்குன்னு தெரியில' - ராஜி கவுண்டன் சொல்ல உடனிருந்தவர்கள் சிரித்துக் கொண்டனர். 'திரும்பி வருவேன் லட்ச லட்சமா... இப்ப விதையா விழுறேன்' சுடப்பட்டவுடன் திருமாறன் கடைசியாய் பேசிய வார்த்தை. அவ்வளவு வெறித்தனமா பொங்கி எழுந்த சிறுத்தை... எங்கிருந்து அந்த வெறி வந்ததுன்னு தெரியில...

அழகான ஊரு... கொளத்தூர், ரோட்டுக்கு வடக்குப் பக்கம் பறத்தெரு. தெற்குப் பக்கம் கவுண்ட தெரு, ஊருக்கு வரவுங்களுக்கு யாரும் சொல்லாமலே தெரியும் பறத்தெருவ. எல்லாம் கரும்பு தோகையால வேய்ஞ்ச கூர வூடுங்க. கவுண்ட தெருவுல மாடி வூடும், ஓடு போட்ட வூடும் கலந்து இருக்கும். பறப் பொம்பளைங்க, தோட்டங் கொத்தவும், களையெடுக்கவும், அறுப்புக்காகவும் போவாங்க. ஆம்பளைங்க பாத்திகட்ட, நெல்லடிக்க போவாங்க. வேலக்கி போயி சாயந்திரம் வரும்போதே சாராயம் ரெண்டு கிளாசு போட்டுகினு, ங்கோத்தா... ங்கொம்மான்னு ஒருத்தன ஒருத்தன் திட்டிக்கிவானுங்க. கொஞ்சம் கைகலப்புமா தெருவே ஒரு எரச்சலா இருக்கும்.

அந்த ஊரோட மஞ்சகாடு, சிவராமபுரம், கனிகாபுரி எல்லாம் சேர்ந்த பஞ்சாயத்துக்கு கொளத்தூர்தான் பஞ்சாயத்து. இந்த பஞ்சாயத்துக்கு எப்பவுமே மாரியா கவுண்டன்தான் தலைவரு. இந்த வருசத்து பஞ்சாயத்து தேர்தல் அறிவிப்புல 'கொளத்தூர் பஞ்சாயத்து தனித் தொகுதி ஒதுக்கீடு' வந்த செய்தி கேட்ட மாரியா கவுண்டனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

நம்ம கொல்லியில வேல செய்யறவனுங்க நமக்கு தலைவனா... என்று பொருமினான். மாரியாகவுண்டன் பஞ்சாயத்து தேர்தல் நடத்தாத முன்னே ஊரு மணிக்காரரா இருந்தவன். தேர்தல் வந்த பின்னும் ஆறு தடவ அவன் தான் தலைவரு. இப்ப செய்தி கேட்டு இடிஞ்சி போயிட்டான்.

போன எலக்சன்ல இவனுக்கு போட்டியா வேங்கியா கவுண்டன் நின்னாரு. பறத்தெரு முழுக்க மாரியா கவுண்டன் மேல வெறுப்பா இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

'தெருவுல இருக்குற கம்பத்துல ஒரு லைட் கூட எரியறதில்ல. கவர்மெண்டு கொடுத்த பொது டிவி அவர் வூட்டுலதான் இருக்குது. திரும்ப திரும்ப எதுக்கடா ஓட்டுப் போடனும்' - வேங்கியா கவுண்டன் வூட்டுல வேலை ஆளா இருக்குற கந்தன் சாராயக்கடையில பேசினான்.

'பற நாயிங்க தோட்டத்து வழியாதான் ஊரவிட்டு வெளியில போகனும். எந்த வழியா போறானுங்கன்னு பாத்தர்றேன்' - பறத் தெருவுல நடக்குற விசயத்த முனுசாமி சொல்ல மாரியாகவுண்டன் பொறுமினான்.

அவன் சொன்னபடியே பாதைய முள்ளுவச்சி அடச்சிட்டான். ஊர சுத்தி வேலிக்காத்தான் முள்ளு ரெண்டாளு ஒசரம் வளர்ந்து மூடியிருக்கும்.

வீட்டுல இல்லாத பொருள கடையில பக்கத்தூரு போய் வாங்கியாரனும். புள்ளைங்க பள்ளிக்கூடம் போக மாரியா கவுண்டன் தோட்டத்து வழியாதான் போகனும். பாதைய அடைச்ச பெறவு ஒண்ணும் பண்ண முடியாமஎல்லாருக்குமே கஷ்டம்.

அண்ணாமலை, கோயிந்தன், சாக்கன், மணி சமாதானம் பேச மாரியா கவுண்டன் வீட்டுக்குப் போக, தூரவே கால்ல இருந்த செருப்ப கையில புடிச்சிகினு 'கும்புடுறன் சாமி' என்று சொல்ல, சட்டென 'கூட்டு' சேர்ந்து குடிய கெடுத்துகுனு, கும்புடு போடறீங்களா கும்புடு...' என்று முகமதிர பல்லைக் கடித்தான் மாரியா கவுண்டன்.

'தலைமுறை தலைமுறையா நீங்க சொல்றாப்புலதான் நடந்திருக்கோம். இப்ப மட்டும் மாறிடுவோமா... ஏதோ நாயிங்க ரண்டு, குடிச்சிபுட்டு ஒளறுச்சாம். பெரிய மனுசரு... நீங்க அத பெருசா எடுத்துக்கிறதா...' இராகத்தோடு சொல்லியபடி மூவரும் குத்துக்காலிட்டு உக்கார்ந்து முழங்கையைச் சொரிந்துக் கொண்டனர்.

'இந்தா நம்ம கட்சியிலருந்து உங்களுக்கெல்லாம் உறுப்பினர் அட்டை வந்திருக்கு... வாசல்ல ஈச்சர்ல சாய்ந்தபடி, இது பொன்னுதுரை, இது அவன் பொண்டாட்டிக்கு, இது நடராஜ், சேட்டு... என்று பெயர் படித்து வீச வாசலில் மூவரும் பொறுக்கி எடுத்தனர்.

'உத்தரவு வாங்கிக்கிறோங்க முதலாளி. அந்த தடத்த கொஞ்சம்..' மூவரும் கையில செருப்புடன் பறத் தெரு நோக்கி நடந்தனர்.

அதிகாரத்த எப்படி விட்டுக் கொடுக்கறதுன்னு மனக் குழப்பத்தோடு வூடுவந்த மாரியா கவுண்டன், கவுண்ட தெரு பெரிய மனுசங்களோட கூட்டம் போட்டுப் பேசினான். 'கூலிக்காரப் பசங்க நம்ம நெலத்துலதான் வேல செய்யனும். நம்மள விட்டு எங்க போயிடப் போறானுங்க... நம்ம ஆளுக்காரனுங்கள்ல ஒருத்தன நிக்கவச்சி... பேருக்கு அவனுங்க இருக்கட்டும்.

நாலு பிச்ச காச விட்டெறிஞ்சா... சொல்லற எடத்துல கையெழுத்து போடுவானுங்க. அதிகாரம் நம்மிடம்தானே இருக்கும்' என்று ராஜி கவுண்டரு கடைசியா பேசினார்.

'என் ஆளுக்காரன் முத்துவ விண்ணப்பம் போட சொல்லிடுவோம்' என்ற மாரியா கவுண்டன், கடைசி முடிவையும் தனக்குச் சாதகமாக்கி அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொண்டான்.

அன்னப்போஸ்டா முத்துதான் ஜெயிச்சான். எப்பவும் மாரியா கவுண்டன் கூடவே சுத்தினு இருப்பான். எந்த திட்டத்துக்கும் விண்ணப்பிச்சி பணம்/செக் வாங்கறது எல்லாம் கவுண்டன்தான். முத்து கையெழுத்து போடறதோட சரி... பஞ்சாயத்துத் தலைவருக்கு கவர்மெண்டு தர்ற சம்பளத்தோட கூடுதலா பணம் சேர்த்து தருவான் கவுண்டன். தொகுப்பு வூடு திட்டத்துல வூட்டுக்கு ரெண்டாயிரம் வசூல் பண்ணி கவுண்டன் கையிலதான் கொடுத்தான் முத்து.

அடுத்து வந்த ரெண்டு எலக்சன்லயும் மாரியா கவுண்டன் தன் தோட்டத்துல வேல செய்யறவன போட்டியிட வச்சான். அவன் ஆள்தான் ஜெயிப்பாங்க. ஒரு தடவ பறையருல ஒருத்தன் மாரியா கவுண்டன் ஆளுக்கு எதிரா மனு தாக்கல் செய்தான். பறையருல பத்து பேருக்கு சாராயத்த ஊத்தி சண்டை கலவரம் நடந்தது.

பறத்தெருவே ரெண்டுபட்டு நிக்கும். ஊரு ரெண்டுபட்டா கூத்தாடிக்கு கொண்டாட்டம் மாதிரி. கவுண்டன் குடுக்கற பிச்சகாசுக்கும், சாராயத்துக்கும் பிரிஞ்சி பறையரு நிக்க, மாரியா கவுண்டனுக்கு சந்தோசமாகி நல்லவன் மாதிரி நடிச்சி பணங்கொடுத்து எலக்சன்ல ஜெயிப்பான்.

ஆனா கடைசியா வந்த எலக்சன்ல விவகாரம் விபரீதமாயிடுச்சி... மாரியா கவுண்டன் தோட்டத்துல வேல செய்யற ஆளு கோவிந்தசாமி. அவன்தான் இப்ப தலைவரா நிக்கறான். எல்லாம் விசுவாசந்தான். அவனோட பொண்டாட்டி காவேரியும் அங்கதான் வேலக்கிப் போகும். கோவிந்தசாமி இல்லாத நேரத்தில கரும்பு தோட்டத்துலே மாரியா கவுண்டன் மெதுவா பின்னே வந்து கழுத்த தொட்டான். திடுகிட்டவ திரும்பிப் பார்க்க கவுண்டன் மேல கோவமா வந்தது.

'பெரிய மனுசனா இருந்துகிட்டு இப்படி பண்ணறீங்க. வெளிய சொன்னா மானம் கப்பல் ஏறும்.' காவேரி பொரும, 'வெளியில சொன்னா உன் மானமும் சேர்ந்து போகும்; உன் புருஷன தூக்கு போட்டுட்டு, நீயும் நானும் இருக்கறத பாத்துட்டு தூக்கு போட்டுகிட்டான்னு சொல்ல வச்சிருவேன். ஒத்துக் கிட்டா அப்பப்ப பணம். அடுத்த எலக்சன்ல உன் புருசன் தலைவரு. என்ன சொல்ற' என்றான்.

மாரியா கவுண்டன எதித்துகிட்டு ஊர்ல இருக்க முடியாதுன்னு நினைத்து கண்ணை மூடி அழுதவளை கட்டியணைத்தான். அவள் எதுவும் சொல்லாததால் எல்லாம் நடந்தது.

கோவிந்தசாமிய எதிர்த்து திருமாறன் மனு தாக்கல் செய்தான். அம்பேத்கர் பிறந்த நாளுக்கு ஊர்ல மக்கள் பார்வையான எடத்துல அம்பேத்கர் படத்துக்கு மாலை



படிப்பகம்

www.padippakam.com

போட்டு அம்பேத்கர வாழ்த்தி கோஷம் போடுறவன் திருமாறன் தான். வேந்தியா கவுண்டன் தோட்டத்துல ஆளா இருந்தவன் பெறவு வெளிய வந்து எல்லாரு தோட்டத்துக்கும் கூலி வேலக்கி போனான்.

திருமாறன் யாருக்கும் சொல்லாம வயசுப் பசங்க பத்து பேரோட போயி மனு தாக்கல் செய்துவிட்டு வந்தப்ப வேலுவ அனுப்பி மாரியா கவுண்டன் வரசொன்னான்.

'வாபஸ் வாங்கிக்கோ... இல்லன்னா கலவரம் நடக்கும். கொலை யாவ... அதுவும் உன் தெருக்காரன் கையாலே' - கண் சிவக்க மிரட்டினான் மாரியா கவுண்டன். 'எது வந்தாலும் சந்திக்கிறேன். சிறு பொறி காட்டு தீயை உருவாக்கும். இறுதியில காட்டையே அழிக்கும்' என்ற திருமாறனைப் பார்த்து,

'மாரியா கவுண்டன எதிர்த்தவன் இருந்ததில்ல... நாள் குறிச்சிட்டேன்...' என்று தாடை அதிர சொன்னான்.

இரவு எட்டு மணி. கோவிந்தசாமி வீட்டுக்குச் சென்றான் திருமாறன்.

'கோவிந்தசாமி நீ நல்லவன். என் தெருவுக்காரன், ஒறவுக்காரன் நீ..' என்றான் திருமாறன்.

'களத்துல ரெண்டு பேரும் எதிரெதிர், அப்ப எப்படி உறவா இருக்க முடியும்' என்றான் கோவிந்தசாமி.

'மனுசன் பிறப்பது எதுக்காக... மானத்த விட்டு அடிமையா வாழ்ந்துதான் ஆகனுமா? நம்மள வாசல்ல நிக்ககூட அனுமதிக்காத, நாயை விட கேவலமா நம்மள நெனக்கிற நாயிகூட சேந்து, அவன் அதிகாரத்தோட நல்லாயிருக்க உறவுக்காரங்களுக்குள்ள ஒருத்தன சாவடிச்சிதான் உயிர் வாழனுமா? கிளர்ச்சி நடக்கனும்... ரத்தத்தைப் பார்க்கனும்' என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான் திருமாறன்.

அடுத்த நாளு காலையில மாரியா கவுண்டன் கோவிந்தசாமிய கூப்பிட்டு சொன்னதை யடுத்து, சாயந்திரமா எலக்சன் பத்தி பள்ளி கூடத்துக்கா பஞ்சாயத்து கூட்டமுன்னு கவுண்டன்கள்ல சிலபேர் மாரியா கவுண்டனோட வர, கலவரம் நடக்கப்போறத நெனச்சி சந்தோசப்பட்டு கோபால் கவுண்டன்கிட்ட சொல்லி சிரிச்சிகிட்டான் மாரியா கவுண்டன்.

திருமாறனோட வயசுப்பசங்க பத்துபேரு... கோவிந்த சாமியோட பத்துபேரு... சாராயம் குடிச்சி இளம் போதையில ஒவ்வொருத்தனும் மூனு ஆளு பலத்துக்கு இருந்ததைப் பார்த்து. ஏதோ நடக்கப் போகுதுன்னு சேரி தெருவே தெரண்டு நின்னுது. மாரியா கவுண்டனோட வந்த கவுண்டனுங்களப் பார்த்த கோவிந்தசாமி, திருமாறன பார்த்து கண்ணசைத்தான்.

திருமாறன் முன்னோக்கி வர, கோவிந்தசாமி பின்னோக்கி கவுண்டனுங்க இருக்குற திசைய நோக்கி நடந்தான். திடீரென 'ஒரு பறையன் இன்னொரு பறையன இனிமே வெட்டமாட்டான். உன் விளையாட்டெல்லாம் எனக்கு எல்லாம் தெரியும் - சேரி பொண்ணுங்களோட விளையாடறது உட்பட இப்ப எல்லாம் தெரிஞ்சிகிட்டேன். சிறு எறும்பு கூட தனக்கு பாதிப்பு வருதுன்னா கடிக்கும். நாங்க மனுசங்கதானடா...' பல்லைக் கடித்துக் கொண்டு அரிவாள திருப்பினான் கோவிந்தசாமி.

'டே.... உன்ன நான் தலை வராக்கப் போறேன்டா... நீதான் தலைவரு... என்னடா பேசற' என்ற மாரியா கவுண்டனை நோக்கி,

'நான் நியாயத்தை, உரிமையை பேச விரும்புறேன். இங்க இருக்குற எல்லாருக்காகவும் எல்லா விசியத்தையும் பேச விரும்புறேன்' என்ற கோவிந்தசாமி, திருமாறனைப் பார்த்தான்.

'இந்த நாலு பெருந்தலைகளை மொதல்ல வெட்டு... அப்பதான்... எல்லாம் இனிமே சரியா நடக்கும். வெட்டி சாய்டா' திருமாறன் சொல்லி முடிப்பதற்குள் அரிவாள்கள் கவுண்டனுங்க ரத்தத்தில் குளித்து சிவந்தது.

உடனே போலீசுக்கு தகவல் கெடச்சி, ஊர்முழுக்க போலீசு. திருமாறன், கோவிந்தசாமி உடனிருந்தவங்களோட பெரிய மலப் பக்கமா ஓடி ஒளிஞ்சிட்டாங்க. மூணு நாளா ஊர்ல போலீசு நாயி மாதிரி காவல் நின்னானுங்க... பதினஞ்சி வயசிலிருந்து அம்பது வயது வரை ஆம்பளைங்க பறத் தெருவுல யாரும் இல்ல. சாயந்திரம் ஆனா ஊரடங்கு உத்தரவு.

கட்சித் தலைவருங்க... குறிப்பா தலித் தலைவருங்க யாரும் பகல்ல கூட ஊருல நுழைய அனுமதியில்ல. செய்தித்தாள், டீவி-யில பரபரப்பு செய்தி.

அஞ்சி நாளு கழிச்சப்ப வடகத்தி பெரிய காட்டுல ஒளிஞ்சி இருந்த திருமாறன, அண்ண மவன் சுரேஷ் பார்த்து,

'நேத்தி ராத்திரி ஒன்னுக்கு போவ வூட்டலருந்து வெளியே வந்த ராணி அத்தய உன் அண்ணன் தான் தலைவனாமேன்னு துணியெல்லாம் கழட்டி என்னென்னமோ செய்துட்டாங்களாம் போலீசுகாரங்க' என்று சொன்னான்.

அன்னிக்கு ராத்திரி பன்னண்டு மணி இருக்கும். போலீசுகளெல்லாம் சேரிப் பக்கமா இருக்குற ராஜி கவுண்டன் காலி வீட்டுல படுத்திருந்தாங்க. திடீர்னு அங்க ஒரே அலறல், ரத்தம் ஓடுது. பிணங்களுக்கு மத்தியில திருமாறன் நின்று சிரிச்சான்.

அவசர அவரசமாக கிளம்பி, ராவோட் ராவா தோட்டங்க வழியா போய், விடியற்காலையில பொன்னையாத்துல ஆயுதத்தையெல்லாம் கழுவிகிட்டு இருந்தாங்க. தண்ணியெல்லாம் ரத்தம். அதிகார வெறி பிடிச்ச, பாரபட்சமா நடந்துக்கிட்டவங்களோட ரத்தம்.

சாப்பாட்டுப் பிரச்சினை, ஆத்துல தண்ணி இருந்ததால அங்கேயே தங்கிட்டாங்க. அங்கதான் திருமாறனுக்கும், கோவிந்தசாமிக்கும், ஜெகனுக்கும் எமன் வந்தான். போலீசு சுத்தி வளைச்சிசுட்டுச்சி.

திருமாறன் பையிலிருநது எடுத்த லட்டரை போலீசு கமிசனர் செய்தியாளர்களிடம் கொடுத்திருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

'மரியாதைக்காக கும்புடு போட்ட மக்கள், கூனி குறுகி நிக்கரதால நான் யாருக்கும் வணக்கம் சொல்ல விரும்பல. சாதி வெறிபிடிச்சி அதிகாரத் தோட சொல் றதுக்கெல்லாம் தலையாட்ட நாங்க செம்மறி ஆடுங்க இல்ல. உங்களால தாழ்த்தப் பட்ட நாங்களும் மனுசங்க தானே. இந்த மண்ணுல பிறந்த எல்லா மனிதரும் ஒன்னு தானே? ரத்தம், சதை, உடல் எதுல வேறுபட்டு இருக்கு றோம். ஆனா, ஏன் இந்த சமூகம் சாதிய உருவாக்கி ஒரு பிம்ப பிரதிபலிப்பா இருக்குற மனுசனை நாசமாக்கிடுச்சி. பஞ்சாயத்து தேர்தல்ல போட்டி யிட்டா தலைய வெட்டுறது, கொடுத்த பணத்த திருப்பி கேட்டா மலத்த வாயில ஊத்துறது, சிறுநீர் கழிக்கிறது, சேரி பொண்ணுங்கள கெடுக்கறது, ஏன் மனுசன நாயவிட கேவலமா பாக்குறீங்க.

ஆண்டாண்டு காலமா தாழ்ந் தவங்கன்னு அடக்கி ஆண்டீங்க. படிக்கக்கூட கஷ்டப்பட வச்சீங்க. நீங்க குற்ற பரம்பரைங்க. நாங்க திருடப்பட்ட தலைமுறைங்க. ஒரு கணம் யோசிச்சி பாருங்க, உலகம் ஒவ்வொரு நொடியும் மாற்றமடையுது, ஏன் நீங்க மட்டும் மாற மாட்டீங் கறீங்க. வெறிய உண்டாக்கி மனிதர மிருகமா ஆக்கிட்டீங்க. இனி அது எதுவும் நடக்காது.

தாழ்த்தப்பட்டவங்க எல்லாம் அரசியல புரிஞ்சி கிட்டு வெளியில வாங்க. அதிமுக, திமுக-ன்னு சிதறி சிதறி சாராயம் ஊத்துரவன் - சாப்பாடு கொடுக்கறவன் கூட பிரிஞ்சி எதிராளிய பலமாக ஆக்கிட்டீங்க. மரம் அமைதிய விரும்பினாலும் காற்று விடுகிறதில்ல. எந்த பக்கம் பலம் குறைஞ்ச பக்கமோ அங்க மனித உயிர் வீணாவுது. தாழ்த்தப் பட்டவங்க புரிஞ்சிக்குங்க.

திரும்பி வருவேன் லட்ச லட்சமாய், கோடி கோடியாய். இப்ப மண்ணில் விதையா விழுறேன்'

என்ற வரிகளுக்குக் கீழே திருமாறன் கையொப் பமிட்டு இருந்தான்.

மாலை மலரில் கடிதத்தோட வந்த செய்தியை படிச்சிட்டு சந்தோ சத்துல கலகலத்தது கவுண்ட தெரு.

அண்ணன் திருமாறன் செத்த துக்கத்துல உக்காந் திருந்த கனகராஜிக்கு, பறத்தெரு வயசுப் பசங்க ஆறுதல் சொன்னாங்க. அலமாரியில இருந்து விழுந்த திருமாற னோட அம்பேத்கர் புத்தகம் காற்றில் படபடக்க உற்றுப் பார்த்தான் கனகராஜி.

"இழந்த உரிமைகளை யாசிப்பதாலோ, கெஞ்சுவ தாலோ பெற முடியாது. இடைவிடாத போராட்டத் தின் மூலமே பெறமுடியும்"

என்ற அம்பேத்கர் வரிகள் கண்ணை உறுத்தியது.

## இடிமுரசாக அமையட்டுமே...

■ கோ. பாக்கியராஜ்

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொருமுறை
கும்பகோணத்தில்
மகாமகம் வரட்டும்...
நெருப்பே... எங்கள்
மனித இனமே மடியும் வரை
இனியொரு முறை உனது
'மகாக்கொலை' கும்பகோணத்தில்
வராதிருக்கட்டும்!

இறந்த பின்தான்
எங்கள் மேல் அரசாட்சி செய்வதற்கு
உமக்கு உரிமையுண்டு.
வாழும் போதே எங்களை வதைப்பதற்கு
யார் உமக்கு உரிமை தந்தது?
ஓ... நீயும் எங்கள் "அரசுகள்போல்"
ஒருதலைபட்சமாகி விட்டாயா...?!

மனிதர்களே...
தமிழக பெற்றோர்களே...
மழலைகளின் மரணத்திற்கு
மனமற்ற அஞ்சலி செலுத்துவது
உண்மை யென்றால்
ஒருநாள் அஞ்சலிகளாக
நம் உணர்வுகளை அடக்காமல்
விளம்பரங்களை தேடாமல்...

கல்வியினை
சந்தைப் பொருளாக்கி
விற்றுக் காசாக்கும்
விவஸ்தைக் கெட்ட
குள்ளநரிக் கூட்டத்தின்
கொட்டத்திற்கு
சாவுமணி அடித்திட வேண்டுமென்றால்...

நலமான கல்விக்கு
வளமான கல்விக்கு
முறையான பள்ளிகள் தேவையென
அரசிடம் முறையிடுவோம்...
இல்லையேல்... முரசடிப்போம்...
அதுவே... போராட்ட இடிமுரசாக அமையட்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும்

6

■ பு. ஜார்ஜ்

நீண்டதொரு பாரம்பரியம் மிக்க தத்துவார்த்த பின்னணி கொண்ட பிராமணியத்துக்குள்ளிருந்து தான் பாரதி தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கி றார். இந்துத்துவமே இந்தியா என்னும் ஓர்மையில் பாரதி நின்றுகொண்டு, இந்தியாவின் பன்முகத் தன்மையைப் புறக்கணிப்பது வெளிப்படையாக அவரது உரைநடைகளில் புலப்படுகிறது. இதே வகையில் அவர் பேசும் வேகமிக்க தூய இந்துப் பெண் விடுதலையும் ஓர்மையில் நின்று பிற பெண்களைப் புறக்கணிக்கும் தன்மையுடையதாக உள்ளது. இவர் பேசும் சர்வ சமய சமரசக் கொள்கையிலும், சர்வ சாதி சமரசக் கொள்கையிலும், சர்வ பெண்கள் விடுதலை யிலும் பிராமணியமே ஆதிக்கம் செலுத்துகிறது. எனவேதான் தூய இந்துத்துவவாதிகள் இன்றைக்கு பாரதியைத் தங்களுடையவராக அடையாளங்கண்டு கொள்ளுகின்றனர். அப்படி அவர்கள் கருதுவதற்கான தன்மைகள் பாரதியிடம் காணப்படுகின்றன.

சனாதன மார்க்சியர்கள் சிலர் பாரதி வாழ்ந்த காலச் சூழலை நாம் கணக்கிலெடுக்காமல் பேசுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். மார்க்சியத்தைக் கொச்சைப் படுத்தும் இவர்களுக்கு கோ. கேசவனின் பாரதிகாலச் சூழல் குறித்த விளக்கம் சரியான பதிலாக அமையக் கூடும்.

1905-1914-ஆம் ஆண்டுகளில் தீவிரவாதத் தலைவர் கள் இந்தியாவின் சுயராஜ்யப் பிரச்சினையை அகில உலகப் பிரச்சினைகளில் ஒன்றாகக் கொணர்ந்ததோடு மட்டுமின்றி தேசிய விடுதலையின் தேவையை உள் நாட்டில் ஊன்றினர். இத்தேவையை நிறைவேற்றுவதற் காக உறுதியாக நடத்த வேண்டிய போராட்ட விதை யையும் தூவினர். இதைத் தொடர்ந்து பாமரர்கள், குடியானவர்கள், பாட்டாளிகள் ஆகிய பிரிவின ரிடையே இயக்கம் வேரூன்றத் தொடங்கியது. இந் நேரத்தில் இத்தகைய வெகுஜன இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் இந்திய முதலாளிகள், பிரிட்டன் ஏகாதிபத்தியத்துடன் தங்களுக்கு இருக்கும் முரண் பாடுகளைத் தீர்த்துக் கொள்ள விரும்புகின்றனர். அதற்கு வெகுஜன இயக்கத்தைப் பேரத்துக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதே நேரத்தில் வெகு ஜன இயக்கம் தீவிரவாதத்துடன் கிளர்ந்தெழுந்து ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களையும் தம் நலன் களையும் சேர்த்து அழித்துவிடுமோ என்றஞ்சினர். எனவே வெகுஜன இயக்கம் அதனுடைய 'ஏகாதிநிலை யையும்' தாண்டிச் செல்வதாக நினைக்கும்போது அதற்கு 'மூடுகலன்' தேவைப்படுகிறது. வெகுஜன இயக்கத்தைப் பயன்படுத்தி தீவிரவாதம் பேசும் போது, அது உள்நாட்டு அரை நில மானியக் கொடுமை களையும் தோன்றியுள்ள முதலாளித்துவக் கொடுமை களையும் துடைத்தெறியக் கிளம்பும். எனவே இங்கே முதலாளித்துவத் தலைமையுடைய இயக்கத்திற்குப் பிரச்சினை வருகிறது. தன் தலைமையில் உள்ள வெகு ஜனங்களை விட்டுவிட்டால், வெள்ளை அரசின ரோடு, தமக்குள்ள பொருளாதார முரண்பாடுகளைத் தீர்க்க இயலாது. வெகு ஜனங்களை செயலில் இறக்கி விட்டால், அது தன் அரை நில மானியச் சுரண்டலை யும் உருவெடுத்த முதலாளியக் கொடுமைகளையும் துடைத்தெறியும். இத்தகைய நேரத்தில் - இடைக் காலப் போக்கும் தற்காலிகத் தன்மையும் கொண்ட தீவிர வாதத்தைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்ள முடி யாத அரசியல் நிலைமை இந்திய முதலாளிகளுக்கு ஏற்படுகிறது. இத்தகைய நேரத்தில் இவர்களுக்குப் புது தத்துவமும் புதிய தலைமையும் தேவைப்படுகிறது. காங்கிரசில் இருந்த இரு போக்குகளிலே ஒன்று மேலே முன்னேறிவந்து இந்தக் காலியிடத்தை நிரப்புகிறது.

இந்நேரத்தில் 1915-இல் காந்தி தென்னாப்பிரிக்காவி லிருந்து இந்தியா வருகிறார். தென்னாப்பிரிக்காவில் அவருக்கு ஏற்பட்ட முன் அனுபவத்தை வைத்துக் கொண்டு அகிம்சை, தனிநபர் சத்தியாக்கிரகம் என்ற இரண்டு தத்துவங்களை அரசியல் அரங்கில் வைக்கி றார். அதற்குமுன் இந்திய சமய ஆன்மீகத் துறை களிலே இவை பிரசித்தி பெற்ற போதிலும், இந்நேரத் தில் இவையிரண்டுக்கும் புதுமெருகு கொடுக்கப் பட்டது. தலைமையையும் தத்துவத்தையும் தேடிய நிலையிலிருந்த இந்திய தேசிய விடுதலை இயக்கத்துக்கு இவை இரண்டும் கவர்ச்சி நிலையில் இருந்தன என் பதில் ஆச்சரியமில்லை. அதே நேரத்தில் ஏகாதிபத்திய மும் உலகப்போரின் விளைவாக இங்கிருக்கிற முத லாளிகளுடன் ஒரு நல்லிணக்கச் சூழ்நிலையை உரு வாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருந்தது. பழைய தீவிரவாதம் குடிகொண்டிருந்த இடத்தில் புதிய அகிம்சை நெறி அமர்ந்தது. வெகுஜன இயக்கத் துக்குப் பதிலாக தனிநபர் சத்தியாக்கிரகம் முளைத்தது. பாமர மக்களிடம் பாமர வடிவில் சென்ற காந்தியின் கைத்தொழில் வளர்ச்சி, சுதேசியம் போன்ற திட்டங்கள் கோடிக்கணக்கான மக்களுக்கு தாகசாந்தி அளித்தது. அதே நேரத்தில் அகிம்சை, தர்மகர்த்தா முறைவழிகள் முதலாளிகளுக்குப் பிடித்தமாயிருந்தன.

பாரதியார் விரும்பியபடி தீர்வை மறுத்தல் போன்ற வற்றைக் (பாரதி தமிழ் - பக் 313) கடைப்பிடிக்காததும், மக்கள் தாங்களாகவே எழுச்சியுற்று தீர்வை மறுத்த போது, அதைக் கட்டும்படிக் கூறிய காந்தியத்



படிப்பகம்

www.padippakam.com

தலைமையும் நிலச் சொந்தக்காரர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதே நேரத்தில் சாத்வீகமான ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, தனிநபர் சத்தியாக்கிரகம் போன்ற நெறிகளும் வெள்ளை ஏகாதிபத்தியம் கலங்கும்படியான நெருக்கடிக்கு அதை உள்ளாக்கவில்லை.

*முதலாளித்துவ, நிலமானிய சுரண்டல் நலன்களுடன் இத்தத்துவம் மக்கள் போராட்டத்தைச் சமரசப்படுத்தி இணைக்க முயன்றதால், இவற்றை ஒழிக்க மக்கள் போராட்டம் உடனடியாக நடத்த இயலவில்லை.*

*மேலும் ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும் கடைசி போராட்டத்தையும் நடத்த இயலவில்லை. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலேயே தீவிரவாத தேசிய சகாப்தத்தில் இருந்த இந்திய விடுதலை இயக்கம், அதன் பிந்தைய ஆண்டுகளிலே மிதவாதப் போக்குள்ளே - சட்ட மறுப்பு, சாத்வீக முறை, ஒத்துழையாமை, தனிநபர் சத்தியாக்கிரகம், அகிம்சை போன்ற அணுகுமுறைகளுக்குள்ளே இயங்க ஆரம்பித்தது. இத்தகைய காலகட்டத்தில் இதனுடைய தொடர்ச்சியாகவேதான் பாரதியார் புதிய நோக்கில் எழுதுகிறார். "ஸமாதானமாக - சட்டபூர்வமாக ஸ்வராஜ்யம்" என்ற இக்கால அரசியல் கோஷத்தைப் பிரதிபலிக்கின்றனர். (இயக்கமும் இலக்கியப் போக்குகளும் : 23-26)*

பாரதியின் எழுத்துக்களில் மேற்கண்ட தேசிய இயக்கப் போக்குகளின் பலநிலைகளைக் காண முடிகிறது. எனவே பாரதி எழுத்துக்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இந்துத்துவக் கருத்துக்களில் முரண்பாட்டைக் காண இயலவில்லை. அதன் காப்பாளராகத் தொடர்ந்து அவர் இருந்துள்ளார். காந்தியைப் போன்ற சனாதனத்தின் மற்றொரு வடிவம்தான் பாரதி. காந்தி குறித்த அம்பேத்கரின் மதிப்பீடு பாரதிக்கு அப்படியே பொருந்தக் கூடியதாக உள்ளது.

*தீவிர வைதீக இந்து சமயத்தின் பண்டைக் காலப் பெயரே இந்த சனாதனம் என்பது. வைதீக இந்து சமயத்தில் இல்லாத வேறு என்ன காந்தியத்தில் இருக்கிறது? இந்து சமயத்தில் சாதி இருக்கிறது. காந்தியத்திலும் சாதி இருக்கிறது? பரம்பரைத் தொழில் சித்தாந்தத்தை இந்து சமயம் ஆதரிக்கிறது; அவ்வாறே காந்தியமும் ஆதரிக்கிறது. இந்து சமயம் பசுவழிபாட்டை மேற்கொள்கிறது; காந்தியமும் அவ்வாறே செய்கிறது. இந்த உலகில் மனிதனது நிலைமையை முன்கூட்டியே நிர்ணயிக்கும் கர்ம சித்தாந்தத்தை இந்து சமயம் விடாப்பிடியாகப் பின்பற்றுகிறது; காந்தியமும் அதையே செய்கிறது. இந்து சமயம் சாஸ்திரங்களின் ஆணை உரிமையை அங்கீகரிக்கிறது; காந்தியமும் அவ்விதமே செய்கிறது. இந்து சமயம் கடவுளின் அவதாரங்களை ஒப்புக் கொள்கிறது; காந்தியமும் அவ்வாறே செய்கிறது. இந்து சமயம் விக்கிரக ஆராதனையில் நம்பிக்கை வைத்திருக்கிறது; காந்தியமும் அவ்விதமே செய்கிறது. (திரு. காந்தியின் சமயக் கோட்பாடுகள் 1921 அக்டோபர் 6-ஆம் தேதிய யங் இந்தியா இதழில் விவரிக்கப்பட்டுள்ளன.) காந்தியம் செய்திருப்பதெல்லாம் இந்து சமயத்துக்கும் அதன் சித்தாந்தங்களுக்கும் ஒரு தத்துவார்த்த அடிப்படையை வழங்கியிருப்பதுதான். இந்து சமயம் சில கண்டிப்பான விதிமுறைகளைக் கொண்ட ஒரு தொகுதியாக சிறப்பற்ற முறையில் மொட்டையாக அமைந்திருக்கிறது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது பண்பற்ற, செப்பமற்ற ஒரு குரூரமான அமைப்பாகவே அது தோற்றமளிக்கிறது. காந்தியம் அதன் கரடுமுரடான மேற்பரப்பை வழவழப்பாக்கி, அதற்குத் தகைமையையும் ஆன்ற மதிப்புடைமையையும் அளிக்கக்கூடிய ஒரு தத்துவத்தை வழங்குகிறது. (அம். தொகுதி - 16:475)*

தேசியக் கவியாக பாரதி கருதப்படுவதற்குக் காரணம், அவர் தேசிய இயக்கத்தின் விளைவு என்பதேயாகும். இந்தியத் தேசிய இயக்கத்தை முன்னெடுத்த காங்கிரசின் அரசியல் குறித்து அம்பேத்கர் வருமாறு விளக்குகிறார்.

*காங்கிரஸ் என்பது இந்து முதலாளிகளின் ஆதரவு பெற்ற இந்து நடுத்தர வர்க்கத்தினரின் அமைப்பு என்பதையும், இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத் தருவது இந்து முதலாளிகளின் நோக்கமல்ல, மாறாக பிரிட்டிஷார் தற்போது வகிக்கும் அதிகார பீடங்களில் தாங்கள் சுதந்திரமாக, சுயேச்சையாக அமர்வதே அவர்களது நோக்கம் என்பதையும் இந்து சமூகத்து வெளியே தற்போது இந்தியாவிலுள்ள அனைவருமே அறிவர். காங்கிரஸ் எத்தகைய சுதந்திரத்தை விரும்புகிறதோ அத்தகைய சுதந்திரம் எய்தப் பெறுமானால், கடந்த காலத்தில் இந்துக்கள் தீண்டப்படாதவர்களை எவ்வாறு இழிவினும் இழிவாக, அடிமையிலும் அடிமையாக குரூரமாக நடத்தி வந்தார்களோ அவ்வாறே அவர்கள் இனியும் பரிவுக்கும் பச்சாதாபத்திற்கும் உரிய இந்த மக்களை நடத்தி வருவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. (அம். தொகுதி - 17:10)*

பாரதியின் சமகாலத்திலேயே அக்டோபர் 1907-ல் பாரதி குறித்த அயோத்திதாசரின் கருத்தும் கவனிக்கத் தக்கது.

*சருவ மக்களையுஞ் சோதரரென்றெண்ணி நல் வாய்மெய், நன்முயற்சி, நல்ஞானம், நற்கடைபிடியினின்று சீர்திருத்தத்தை நோக்குவோமாயின் சிறப்புற்று விளங்கும் விதவாப் பிரசங்க வேதாந்தியர்களாலும் சில்லரை பிரசங்க சித்தாந்தியர்களாலும் பாட்டுப் பிரசங்க பாரதியார்களாலுஞ் சொல்லும் பிரசங்கங்களால் சுதேசஞ் சீர்பெறுமோ, இல்லை. (அயோத்தி தாசர் சிந்தனைகள்)*

சனாதனியாக இருக்கிற ஒருவர் தன்னை ஏன் ஒரு ஜனநாயக வாதியாகக் காட்டிக்கொள்கிறார்?

*ஆதிக்கத்தில் இருந்து கொண்டிருக்கும் சக்தியை அகற்றி அந்த இடத்தில் தன்னை அமர்த்துவதற்காக முயலும் மற்றொரு சக்தி ஆதிக்கத்தால் ஆட்படுத்தப்பட்ட இதர சக்திகளைத் தன்னோடு இணைத்துக் கொள்ளும் ஒருவித ஆதிக்க அரசியல் இது என்று*



படிப்பகம்

www.padippakam.com

*கூறுவார்கள். ஆனால் பின்னை நவீனத்துவத்தின் நவ வரலாற்றியல் (New Historicism) இதற்கு வேறு ஒரு விளக்கம் தருகிறது.*

*பார்திக்கப்பட்டவர்களுக்கு சாதகமான கலகக் கூறுகளை (Subversive elements) ஆதிக்கச் சக்திகளின் ஒரு பிரிவு எடுத்துக்கொண்டதற்குக் காரணம், பாதிக் கப்பட்டவர்களிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்பைச் சமன் செய்ய - அந்த எதிர்ப்பிற்கு ஒரு மாற்று எதிர்ப்புச் சக்தியை வடிவமைக்க என்று நவ வரலாற்றியல் விளக்குகிறது. (ராஜ்கௌதமன், அறம்/அதிகாரம் - 1997:8)*

பறையர்களுக்குக் கல்வியும் தர்மமும் நாமே கொடுத்து ஆதரிக்க வேண்டும். ஆதரிக்காவிட்டால் அவர்களெல்லோரும் நமக்கு பரிபூர்ண விரோதிகளாக மாறிவிடுவார்கள் என்று பாரதி பேசியதற்கு மேற் கண்ட நுண்ணரசியலே காரணம். சனாதனி தன்னை ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த காலமது. வரலாற்றில் பல சந்தர்ப் பங்களில் இக்கட்டாயச் சூழல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நுண்ணரசியலை புரிந்து கொள்ளாததால் கைலாசபதி, "பாரதியிடம் இந்து மதாபிமானமும், பழமைப் பிடிப்பும், மிதவாதமும் குடிகொண்டிருந்த அதேவேளையில் சமரச ஞானமும் புதுமை வேட்கை யும், உணர்ச்சி ரீதியான அபேதவாதமும் பொங்கி கொண்டிருந்தன என்பதை எவரும் கண்டு கொள்ள லாம்" *(க. கைலாசபதி, பாரதி ஆய்வுகள் : 200, 2001)* என்கிறார். இதில் ஓரளவுக்கு உண்மையும் இருக்கிறது. ஆனால், இது உள்ளத்திலிருந்து பொங்கவில்லை என்பதுதான் நமது விவாதம். இந்துக்கள் இதயமற்றவர்கள் என்கி றார் அம்பேத்கர். எனவே அது இல்லாதவரிடத்தில் அங்கிருந்து இவை பொங்கி வர வேண்டும் என்று நினைப்பதில் நியாயமில்லைதான். ஆனால் சாதியர்கள் பாரதியை ஜனநாயகக் கவிஞனாக அடையாளப் படுத்துகிறார்கள். எனவே, உண்மையை அறிய ஜன நாயகம் என்றால் என்ன? ஜனநாயகம் இந்து தத்து வத்தில் உண்டா? போன்ற கேள்விகளுக்கு விடை காண வேண்டியது அவசியமாகிறது.

ஜனநாயகம் ஒரு அரசியல் யந்திரம் மட்டுமல்ல அது ஒரு சமூக அமைப்பு மட்டும் கூட அல்ல. அது ஒரு மனப்பான்மை அல்லது வாழ்க்கைத் தத்துவம் ஆகும்.

சிலர் ஜனநாயகம் என்றால் சமத்துவமும் சுதந்திர மும்தான் என்று கூறுகிறார்கள். சமத்துவமும் சுதந் திரமும் ஜனநாயகத்தில் ஆழ்ந்த அக்கறைக்குரியவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சமத்துவத்துக்கும் சுதந்திரத்துக்கும் ஆதாரமாயிருப்பது என்ன என்பதே முக்கியமான கேள்வி. நாட்டின் சட்டம்தான் இவற் றுக்கு ஆதாரமாயிருக்கிறது என்று சிலர் கூறலாம். இது உண்மையான விடை அல்ல. சமத்துவத்துக்கும் சுதந்திரத்துக்கும் ஆதாரமாயிருப்பது சக உணர்வே யாகும். இதைப் பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் சகோ தரத்துவம் என்று கூறினார்கள். சகோதரத்துவம் என்ற சொல் இதற்குப் போதுமானதாயில்லை. புத்தர் 'மைத்ரி' என்று கூறியதே சரியான சொல்லாகும். சகோதரத்துவம் இல்லையென்றால், சுதந்திரம் சமத்துவத்தை அழித்துவிடும். சமத்துவம் சுதந்திரத்தை அழித்துவிடும். ஜனநாயகத்தில் சுதந்திரம் சமத்து வத்தையும் சுதந்திரத்தையும் அழிக்கவில்லையென்றால் இரண்டுக்கும் அடிப்படையாக சகோதரத்துவம் இருப்பதே காரணம். எனவே சகோதரத்துவம்தான் ஜனநாயகத்தின் ஆணிவேராகும்.

மேலே உரைக்கப்பட்டதெல்லாம் பிரதான கேள் விக்கு ஒரு முன்னுரையே ஆகும். அந்தக் கேள்வி இது தான். ஜனநாயகத்துக்கு இன்றியமையாததான சகோதரத்துவத்தின் வேர் எங்கே உள்ளது? மதம்தான் அதற்கு ஊற்றுக் கண்ணான இடம் என்பதில் சர்ச் சைக்கு இடமில்லை.

ஜனநாயகம் எங்கிருந்து தோன்றக்கூடும் என் பதையோ அல்லது வெற்றிகரமாக செல்படு வதையோ பரிசீலிக்கும்போது மக்களின் மதமும் சகோதரத் துவத்தைப் போதிக்கிறதா இல்லையா என்பதையும் பார்க்க வேண்டும். அது சகோதரத்துவத்தைப் போதித் தால் ஜனநாயக அரசுக்கு வாய்ப்பு சிறப்பாக உள்ளது. இல்லை என்றால் வாய்ப்பு மிகக் குறைவே. வேறு அம்சங்களும் இந்த வாய்ப்பைப் பாதிக்கலாம் என் றாலும் சகோதரத்துவம் இல்லை என்றால் ஜனநா யகத்தை உருவாக்கியதற்கு அடிப்படையே இல்லாமற் போகிறது. இந்தியாவில் ஜனநாயகம் ஏன் வளர வில்லை? இதுதான் பிரதான கேள்வி. விடை மிக எளிமை யானது. இந்துமதம் ஜனநாயகத்தைப் போதிக்க வில்லை. மாறாக அது சமூகத்தைப் பல வகுப்புகளாக அல்லது வர்ணங்களாகப் பிரித்து, தனி வகுப்பு உணர்வைப் பராமரிப்பதைப் போதிக்கிறது. இத் தகைய முறைமையில் ஜனநாயகத்துக்கு எங்கே இடம் இருக்கிறது?

இந்து சமூக முறை ஜனநாயகமற்றதாக இருப்பது தற்செயலானதல்ல. அது ஜனநாயமற்றதாக இருக்கும் படியே திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. சமூ கத்தை வருணங்களாகவும், சாதிகளாகவும், புறச்சாதி களாகவும் அது பிரித்து வைத்திருப்பது தத்துவங் களால் அல்ல கட்டளைகளால். இவையெல்லாம் ஜனநாயகத்துக்கெதிராக எழுதப்பட்ட தடைகளாகும்.

இதிலிருந்து சகோதரத்துவக் கொள்கை இந்துமத தத்துவச் சிந்தனைக்கு முற்றிலும் அன்னியமானது என்று தெரிகிறது. ஆனால் இத்தகைய முடிவு சரித்திர உண்மைகளுக்கு முரணாகும். இந்து மத, தத்துவ சிந்தனை உருவாக்கிய ஒரு கருத்து, சகோதரத்துவம் என்ற கருத்தை விடவும் அதிகமாக, சமூக ஜனநாய கத்தை உருவாக்கும் திறனைக் கொண்டிருந்தது. அதுதான் பிரமாயிசம் என்ற கோட்பாடு. பிரமாயிசம் என்றால் என்ன என்று யாரேனும் கேட்டால் அதில் வியப்புக்கு இடமில்லை. இந்துக்களுக்கே கூட இது புதுமையானது. இந்துக்களுக்கு வேதாந்தம் என்பது மிகவும் பழக்கமானது. அவர்களுக்கு பிராமணியமும் பழக்கமானது. ஆனால் பிரமாயிசம் என்பது அவர் களுக்குப் பழக்கமானதல்ல. பிரமாயிசம் என்றால் என்ன என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

தலித் தேசியம் தொடர் - 14

# எதிர்மறை இந்தியா 2

■ கௌதம சன்னா

**துயரங்களைப் பகிர்ந்து துய்த்தல்**
**கடந்த காலப் புகழை மறக்காதிருத்தல்**
**தங்களை தேசிய இனமாகக் கருதிகொள்ளல்**

ஆகிய இம்மூன்றையும் ரெணன் அவர்களின் விளக்கங்களிலிருந்து அம்பேத்கர் வகுத்துக் கொண் டார். இந்த மூன்றையும் இந்திய தேசியத்திற்குள் பொருத்திப் பார்ப்போம்.

துயரங்களைப் பகிர்ந்து கொள்ளல்

இதை எப்படி விளங்கிக் கொள்வது. ஒரு தனி நபரின் துயரத்தை ஒரு குழுவானது பகிர்ந்து கொள் வதற்கு ஏதாவது சாத்தியமிருக்கிறதா? இல்லை என்றே கூற முடியும். ஏனெனில் நிகழ்ந்துவிட்ட நிகழ்வு ஒரு தனி மனிதனுக்கு மட்டுமானது எனும் போது அத்துயரை தணிப்பதற்கான, அல்லது தேற்று வதற்கான நடவடிக்கையிலேயே இறங்கும். இது அத்தனி மனிதனின் துன்பத்தை, துயரத்தை அங்கீ கரிப்பதாகும். ஆனால் இது ஒன்றாக துன்பத்தை துய்ப்பதாகாது. மாறாக குழுவிற்கு ஒட்டுமொத்தமாக நேரும் துன்பத்தை சேர்ந்து அனுபவிப்பது என் பதைத்தான் இங்கு கணக்கில் எடுக்க வேண்டும். நாம் கண்கூடாக காணும் விதத்தில், இந்தியாவில் இதற் கான சான்றுகளைத் தேட முடியுமா?

வரலாற்று காலம் முதற்கொண்டு இந்தியாவில் அந்நியர் படையெடுப்பு இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதேபோல இந்தியாவிற்குள் உள்ள பல அரசுகள் எப்போதும் சண்டையிட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் வெட்டிச் சாய்த்துக் கொண்டது தான் இந்திய வரலாறு. அசோகரின் ஆட்சிக்குப் பிறகு இந்திய துணைக் கண்டம் ஒரு பேரரசரின் கீழ் அமைதியாக இருந்ததே இல்லை. அதன்பிறகு போர்கள் நடைபெறாத நாட்களே இல்லை எனுமளவிற்கு சண்டைகள் மலிந்ததுதான் இந்திய வரலாறு. இஸ்லாமியர்களின் அலை அலையான படையெடுப்புகளின் போதும் கூட, ஒன்றுபட்டு அவர்களை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் எந்த இந்திய அரசர்களுக்கும் அன்று இருந்ததில்லை. மேலும், இந்திய துணைக்கண்டப் பகுதிகள் வீழ்த்தப் பட்ட போதும் சரி, லட்சக்கணக்கானவர்கள் போர் களில் கொல்லப்பட்டபோதும் சரி, இந்திய நாட்டு புறங்கள் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தது. இந்த பயங்கரங்கள் தங்கள் நாட்டு மீதுதான் நடை பெறுகிறது என்ற எந்த சிந்தனையுமற்று அமைதி யாகத்தான் கிடந்தது. அந்நியருக்கெதிரான ஒரு பேரெழுச்சி இதுவரை இந்தியாவில் உருவாகவில்லை.

இப்படி துயரங்களைப் பகிர்ந்து கொள்வதற்குப் பதில், இந்திய துணைக் கண்டம் தனக்குள் அடித்துக் கொண்டு அழித்து போன கதைகள் ஏராளம்.

அண்மைக்காலச் சான்றாக, இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை படுகொலைகளை எடுத்துக் கொள்ள முடி யும். இந்து-முஸ்லீம் இரு சாராரிலும் பல லட்சக்கணக் கானோர் கொல்லப்பட்டனர். இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற் கும் குடிபெயர்ந்தவர்கள் தாங்கள் விரும்பிய மண்ணை மதிக்கும் முன்பே கொல்லப்பட்டார்கள். இந்த படுகொலைகளில் முன்னணியில் இருந்த R.S.S. -ஸை கட்டுப்படுத்தும்படி உள்துறை அமைச்சரான பட்டேலி டம் பிரதமர் கூறியபோது அது தேசபக்தி வெளிப்பாடு என்று படேல் அமைதியாக இருந்தார்.

மிக அண்மைக்காலச் சான்று குஜராத் படு கொலை கள் என சான்றுகள் ஏராளமாய் இருப்பது மட்டுமல்ல, அது இன்றும் நடைமுறை வாழ்க்கையாக இருந்து வருகிறது. எனவே இந்த சோதனையில் இந்திய தேசியத் திற்கு இடமே இல்லை.

கடந்த காலப் புகழை மறக்காதிருத்தல்

இந்தியாவின் கடந்த காலப் புகழ் எது? எத்தனை ஆண்டு காலத்திற்கு முன்பு அந்த புகழ் தோன்றிய நிகழ்வு அல்லது சான்று நிகழ்ந்தது என்பவை இதன் துணைக் கேள்விகள். இதில் முக்கியமானது என்ன வெனில் தனது கடந்த காலப் புகழினால் ஒரு தேசம் பெருமிதம், பேருவகை கொள்வது மட்டுமல்ல, இப்புகழே தன் தேசிய உணர்வை தட்டியெழுப்பும் - கட்டிக்காக்கும் வலிமையை கொண்டதுமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த வகையில் இந்தியாவின் கடந்தகாலப் புகழில் நிகழ்ந்திருக்கும் ஏதாவது ஓர் வரலாற்று சம்பவத்தை நினைவுக்குக் கொண்டு வருவதென்பது இயலாத காரியமாக உள்ளது. சாம்ராட் அசோகனின் குடையின் கீழ் இந்தியா இருந்தபோது அதுவடைந்த மாட்சிமை குறித்து இன்றைக்கு யாரிடமாவது பெருமை உணர்வைக் காண முடியுமா? அல்லது பௌத்த மத ஆளுகைகளின் கீழ் இந்தியா முழுவதும் இருந்த நிலைகளை நினைத்து ஏதாவது பெருமிதம் உண்டாகியிருக்கிறதா? அல்லது பேரரசர் அக்பரின் பரிபாலனத்தில் முன்னிறுத்தப்பட்ட சமய ஒற்றுமை குறித்து ஏதேனும் உந்துதலை இன்றைக்கு காண்கிறோமா? அல்லது மிக அண்மைக் காலத்துச் சான்றான இந்திய சுதந்திரத்தைக் குறித்த பெருமிதத்தை ஒரு தேசியப் புகழாக கொண்டாடும் மனநிலையை நகர நடுத்தர வர்க்கத்து மக்களைத் தவிர, நாட்டுப்புற மக்களிடமோ, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலோ, எல்லைப்புற மாநிலங்களிலோ, மத்திய மாநிலங்களின் மலைவாழ் மக்களிடமோ, கஞ்சிக்கு வழியற்று கலங்கியிருக்கும் ஏழைகளிடமோ காண முடியுமா? இந்த புகழை இவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வதை விடவும், அதை மறக்கவும், வெறுக்கவும் முயலும் சான்று செய்திகளை நாம் கேட்டுத்தான் வருகிறோம்.

இதற்கு எதிராக இந்தியாவின் கடந்தகாலப் புகழ் என்பது தொடர்ச்சியாக மதப் புராணங்களோடு முன்னிறுத்தப்படுகின்றது. அதோடு இந்தப் புராணப் புகழினை வெறுப்பதற்கான பெரும்பான்மை மக்களும் இருக்கிறார்கள். இப்படி வகைவகையாக அடுக்கினாலும், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய, எழுச்சிப் பெறக் கூடிய புகழ் ஏதும் இந்தியாவிற்கு இல்லை. கடந்தக் காலத் துயரங்களோடு, நிகழ்காலக் கொடுமைகளைப் பெருமையாக எடுத்துக் கொள்ள முடியாதபடி இருக்கும்போது, இதன் தொடர்ச்சியாக மூன்றாவது கூறினைப் பார்க்கலாம்.

## தங்களை தேசிய இனமாகக் கருதிக் கொள்ளல்

இந்தியர்கள் என்ற உணர்வு மக்களிடம் இயற்கையாகவே உள்ளதா? அல்லது உருவாக்கப்பட்டதா என்பது இதில் முக்கியமானது. இதில் இந்தியர் என்ற உணர்வு உருவாக்கப்பட்டு உலவுவது நகரம், நகர் சார்ந்து வாழும் படித்த வர்க்கம் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில்தான் இவ்வுணர்வு இருக்கிறது. இந்த உணர்வினை அவர்களிடமும் உருவாக்க அரசு, எந்திர ஊடகங்கள் வழியாகவும், பல்வேறு தந்திரங்களை உபயோகித்தும் தூண்டி வருகிறது. கிரிக்கெட் போன்ற நடுத்தர வர்க்கத்தின் விளையாட்டுகள், சினிமா ஊடகங்கள் போன்றவற்றால் வளர்க்கப்படும் இந்திய உணர்வு இன்னும் செலவு பிடிக்கும் வேலையாக இருக்கிறது.

இன்றைக்கு தீவிரமடைந்திருக்கும் நதிநீர் சிக்கல் இதற்கு சிறந்த உதாரணம். தமிழ்நாடு - கர்நாடகா, தமிழ்நாடு - கேரளா, தமிழ்நாடு - ஆந்திரா, பஞ்சாப் - அரியானா என மாநிலங்கள் தனித்தனி நாடுகள் போல நதிநீரினை பங்கீட்டுக் கொள்வதில் செயல்படுகின்றன. மத்திய அரசும் இப்பிரச்சினையில் பன்னாட்டு நடுவர் போல செய்வதறியாது திகைத்து நிற்கிறது. உண்மையில் ஈராக் அமெரிக்கப் போரில் ஐ.நா. எப்படி செயலிழந்து நிற்கிறதோ, அப்படித்தான் நடுவண் அரசும் திகைக்கிறது. ஐ.நா. எப்படி உலக சமாதானம் பேசுகிறதோ, அது போன்ற தொனியில் தேசிய நதிநீர் இணைப்பை பேசுகிறது. தேசிய நதிநீர் இணைப்பு இந்திய ஒற்றுமைக்கு எடுக்கப்படும் முகாந்திரமான முயற்சி. ஆனால் இது கேட்கும் செலவோ ஒன்றரை லட்சம் கோடி. இந்த இந்தியப் பற்று உருவாக்கப்பட்டு 100 ஆண்டுகளுக்குள்தான் ஆகிறது. இப்படி உருவாகும்போதே அது பல எதிர்ப்புகளை சந்தித்தும், அவைகளை ஒடுக்கியும்தான் வந்திருக்கிறது. இன்றைக்கு மணிப்பூரிலும், நாகாலாந்திலும், அஸ்ஸாமிலும், மிசோரமிலும் இந்த வடிவத்தை காணமுடியும்.

எனவே இந்திய தேசியம் என்ற உணர்வு ஒரு போலி மனோபாவமாகவும், ஓர் இந்தியன் சக இந்தியனை வெறுத்து ஒதுக்கவும், ஒடுக்கவுமான ஒரு சூழல் இருக்கும்போது, தங்களை இந்தியராக முன்னிறுத்துவதற்குப் பதில் தன்னை ஓர் இந்தியனாக முன்னிறுத்துவது நடுத்தரத்து - சாதி மேட்டுக்குடிகளுக்கு எளிதாக இருக்கிறது. இது தேசிய உணர்வல்ல. எனவே எல்லா வகையிலும் தோல்விகண்ட ஒரு அம்சமாக இந்திய தேசியம் விளங்கிடும்போது, அது ஒரு கூட்டமைப்பாக இருந்தும் சிதறாமல் இருப்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும்.

இது குறித்து அம்பேத்கர் இந்திய-பாகிஸ்தான் பிரிவினை குறித்து கூறிய ஆலோசனைகளை இங்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்தியப் பிரிவினை குறித்து பல்வேறு அம்சங்களை முன்வைத்த அவர், இப்பிரச்சினைகளை புரிந்து கொள்ளத் தடையாக இருக்கும் மூன்று அம்சங்களை முன்வைக்கிறார்.

1. *வரலாற்று ரீதியான தேசியம் குறித்த தவறான உணர்வு.*
2. *குறிப்பிட்ட பிரதேசம் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குத்தான் சொந்தம் என்ற தவறான கருத்து.*
3. *எதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் விருப்பமின்மை.*

*இந்த தடைகளில் கடைசியாக குறிப்பிட்டத் தடைதான் வெற்றிக் கொள்வதற்கு கடினமானது. துரதிருஷ்டவசமாக சிந்திப்பதென்பது இந்தியாவில் அரிது; அதிலும் சுதந்திரமான சிந்தனை அரிதிலும் அரிது. இதுவும் குறிப்பாக இந்துக்களைப் பொருத்த வரையில் உண்மையானதாகும். (அ.எ.பே: 15:603)*

அம்பேத்கரின் இக்கருத்து துல்லியமானது. இந்திய மக்களின் உளவியல் கட்டமைப்பை சரியாக படம் பிடித்து காட்டுகிறது. ஏனெனில் இந்தியாவில் சிந்திப்பதற்கு என ஒரு சாதியை அங்கீகரித்திருக்கிறார்கள். அதுவே, தன்னைப் பற்றித் தவிர வேறெதையும் சிந்திப்பதில்லை.

இருந்தபோதிலும், இன்றைக்கு இந்தியா ஒரு நாடு போல இருப்பதற்கு இந்த சிந்திக்கும் அதாவது



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனர் கூட்டம் மட்டும் காரணமல்ல, நிலவி வரும் பல ஆயிரம் சாதிகள் தங்களை தனித் தனிக் குழுவாக கருதிக் கொள்வதும், இந்த குழுக்கள் இப்படி பிரிந்திருப்பதால் ஒன்றுக்கொன்றாகச் சிறுபான்மையாக சிதறியிருப்பதும், இவைகள் ஒன்றுபட்டு பெரும்பான்மையாய் கூடி ஒரு கருத்தின் கீழ் முடிவெடுக்கும் சாத்தியமில்லாததும்தான் இந்தியா ஒரே நாடாக விளங்குவதற்கான வாய்ப்பினை இன்றும் அளித்துவருகிறது. அதனால்தான் 'இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை உள்ள நாடு' எனப் போற்றப் படுகிறது. இந்த வாசகத்தை வெறுக்கலாம். ஆனால் இந்தியாவின் விதியை இந்த வாசகம் துல்லியப்படுத்தியிருக்கிறது என்பது யோசிக்கும் திராணியுள்ளவர்களுக்கு விளங்கும். எனவே, எல்லாவகையான கருத்துச் சோதனைகளினாலும் இந்திய தேசியத்திற்கு நிராகரிக்கக் கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது என்பதைப் போலவே, இதற்கு போட்டியாக நிற்கும் நடைமுறை உண்மையானது. இந்திய தேசியத்தை ஒரு புதிய பார்வையோடு அணுகுவதற்கான வாய்ப்பையும் தருகிறது.

இந்தியாவின் பரந்த நிலப்பரப்பும், அதன் பல் வேறு மக்களினமும் இந்தியாவை இன்னும் காத்து வருகின்ற அம்சமாக இருக்கிறது. இந்தியாவானது வடிவத்தில் இந்தியாவாகவும், உள்ளடக்கத்தில் வேறு வேறாகவும் இருக்கிறது. உவமானத்தில் சொல்வதெனில் வார்த்தையில் சொன்னால் உடல் இருக்கிறது உயிர் இல்லை. இனி, இந்தியாவிற்கு வைத்த சோதனைகளை நமது சூழலில் முன்வைக்கப்படும் தேசிய இனக் கோட்பாட்டோடு பொருத்திப் பார்க்கலாம்.

- தொடரும்.

# இறைவா நீ என்ன சாதி?

■ சுடலை மாடன்

மனிதனாய்ப் பிறந்தேன்...
உடையொட்டும் முன்னே
சாதியொட்டிக் கொண்டது!

பள்ளிக்கூடம் சென்றேன்...
பாடம் சொன்னது சாதியில்லையென்று,
படிப்பித்தவர் கேட்டார் நான் என்ன சாதியென்று!

கல்லூரிக்கு விண்ணப்பித்தேன்...
படிவம் கேட்டது என்ன சாதியென்று
கோபம் கொண்டேன் படிவத்தின் மீது!

பின்னால் அறிந்தேன் அது பாவியில்லையென்று
கோயில் சென்றேன், சொன்னார்கள்
நீதான் படைத்தாய் சாதியையென்று!

மறைந்த பெரியவர்களுக்கும், சாதியை
மறந்த தலைவர்களுக்கும் கூட
அடையாளம் காட்டினார்கள் சாதியுண்டென்று!

பிள்ளைமார் கூடினார்கள் வஉசியைக் கொண்டாட
நாடார்கள் சேர்ந்தார்கள் காமராஜரைப் புகழ்ந்திட
தேவர்கள் குழுமினார்கள் பசும்பொன்னரை
வணங்கிட!

முதலியார்கள் உயர்த்திய திருவிகவும்
பிராமணர் உயர்த்திய பாரதியும்
சாதியைச் சாடியதை ஏனோ மறந்தனர் அவர்கள்!

பங்கிட்டனர் மாவட்டங்களை பேருந்துகளை.
படித்தவர் எதிர்த்ததென்னவோ தலித்துகள்
கேட்டுப் போராடியபோது மட்டும்!

பிறந்த நாடுதான் காரணமென்றெண்ணி
பறந்தடைந்தேன் அமெரிக்க நாட்டை
சிறந்து விளங்கினேன் சாதியை மறந்தே!

பாழுமென் நாக்கு பசித்தது தமிழ் பேசாமல்
தஞ்சம் கொண்டேன் தமிழர் கூட்டங்களில்
தாய்மொழி புசிக்கலாமென்றெண்ணி!

நலமாய்க் கேட்டனர் கேள்விகள்
புளகாங்கித மடைந்தேன் சாதியில்லையென்று;
பின்னால் உணர்ந்தேன் கேள்வியிலும்
சாதியுண்டென்று!

சைவமா அல்லது அசைவமா என்றனர்.
அசைவமென்றால் பிறப்பிலா பழக்கத்திலா?
ஆடும் கோழியும் மாடும் சமைப்பேனாவென்று!

கும்பகோணமா கோயம்புத்தூரா?
திருநெல்வேலியா திருச்சிராப்பள்ளியா?
புரிந்துகொண்டேன் சாதிக் கூட்டங்கள் பற்றி!

எனக்கு வந்தது கவலை, நான் போற்றத்
தலைவனில்லையென் சாதிக்கு,
உடனே சொல்லு இறைவா
உன் சாதியென்னவென்று!



படிப்பகம்

www.padippakam.com

*சில ஆண்டுகளுக்கு முன்னர் பிள்ளையார் சிலை பால் குடிப் பதாக சென்னைப் பார்ப்பனன் கிளப்பிய பொய்யை இந்திய நாட்டு பார்ப்பனர்கள் வெகு வேகமாகப் பரப்பினர். அதனால் பால் ஒரு லிட்டர் ரூ. 150 வரை அன்றைய தினம் விற்றது. இதைவிட மோசம் என்னவென்றால், சென்னை பிள்ளையார் பால் குடித்தவுடன் லண்டன் பிள்ளையார் சிலை பால் குடிப்பதாக BBC செய்தி ஒளிபரப்பியது. லண்டனில் வசிக்கும் பார்ப்பனர்கள் வரிசையில் நின்று பிள்ளையார் சிலைக்கு பால் குடிக்கத் தந்ததை BBC ஒளிபரப்பியது.*

■ குடியரசன்
nalanda1956@yahoo.co.in

# மக்கள் அறியாத அம்பேத்கர்

சென்ற கட்டுரையில் தனஞ்செய் கீர் என்ற பார்ப் பனர் எழுதிய நூலான "Life and Mission of Ambedkar" என்ற நூலின் தகுதி பற்றி ஆராய்ந்தோம். அந்த நூலில் தான் முதன்முதலாக் அம்பேத்கர் என்றொரு பார்ப்பன ஆசிரியர் இருந்ததாகவும் இவர் நமது பீமாராவ் ராம்ஜி அவர்களை கருணையுடன் வழிநடத்தினார் என்றும் குறிப்பிடப்பட்டது. இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப் பட்டதால் இந்நூலின் பொய்க்கருத்து நாடு முழுமை யும் வேகமாக விரவிப் பரவியது. இந்தப் பொய்க் கருத்தை அம்பலப்படுத்தும் வகையில் தமிழில் ஏதும் நூல் வெளிவரவில்லை என்பதில்லை என்பதோடு பிற மாநில மொழிகளில் ஏதும் வெளி வந்தனவா என்பதை யும் நாம் அறியோம். மராத்தி மொழியில் இதற்கான மறுப்பு நூல்கள் பல உள்ளதாக ஜோதிபா காட் பூலே கூறுகிறார். அவர் இதுபற்றி ஆய்வு நூல் ஒன்றை ஆங் கிலத்தில் வெளியிட இருப்பதாக நாம் அறிகிறோம். அதற்கு முன்னர் தனஞ்செய்கீரின் வாதத்தில் உள்ள வலிமையை நம்மால் எளிதில் புரிந்து கொள்ளவியலு கிறது.

ஒரு பார்ப்பனன் பரப்பிய பொய்ச் செய்தியை சிந்திக்காது பாதுகாத்து தானும் பரப்புவதை சக பார்ப்பனர்கள் தங்கள் கடமையாகக் கொண்டுள் ளனர் என்பதை இந்த உலகம் நன்கறியும். குறிப்பாக சில ஆண்டுகளுக்கு முன்னர் பிள்ளையார் சிலை பால் குடிப்பதாக சென்னைப் பார்ப்பனன் கிளப்பிய பொய்யை இந்திய நாட்டு பார்ப்பனர்கள் வெகு வேகமாகப் பரப்பினர். அதனால் பால் ஒரு லிட்டர் ரூ. 150 வரை அன்றைய தினம் விற்றது. இதைவிட மோசம் என்னவென்றால், சென்னை பிள்ளையார் பால் குடித்தவுடன் லண்டன் பிள்ளையார் சிலை பால் குடிப்பதாக BBC செய்தி ஒளிபரப்பியது. லண்டனில் வசிக்கும் பார்ப்பனர்கள் வரிசையில் நின்று பிள்ளை யார் சிலைக்கு பால் குடிக்கத் தந்ததை BBC ஒளிபரப்பி யது.

இந்தியாவிலிருந்து லண்டன் சென்று வாழும் பிராமணர்களில் பெரும்பாலோனோர் அறிவியல் படித்தவர்கள். IIT-யில் படிக்கும் பெரும்பாலான பார்ப்பனர்கள் வெளிநாடுகளில் உத்யோகம் பெற்று வாழ்கின்றனர். உயர்ந்த விஞ்ஞானக் கல்வியைப் பெற்ற இந்தப் பார்ப்பனர்கள் லண்டன் பிள்ளையார் சிலைக்கு பால் தந்து பரவசமடைந்ததை மறுநாள் அனைத்து பத்திரிக்கைகளும் செய்தி வெளியிட்டன.

விஞ்ஞானம் படித்த லண்டன் பார்ப்பனர்கள் தங்கள் சக பார்ப்பானின் வார்த்தையை காத்து வழி நடத்திச் சென்றதை உலகமறியும். இரண்டு நாளில் இவர்களின் பொய்யை இன்னொரு பார்ப்பனன் பரப்பு இழுவிசை மற்றும் பாய்மத்தின் நகர்வுதான் காரணம் என்று அம்பலப்படுத்தினான். இதுபோன்ற இவர் களின் நாடகப் பொழுது போக்கு அசைந்து இன்றும் வளர்ந்து நம்மை ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறது.

இதைப் போலவே தனஞ்செய்கீர் பார்ப்பானின் அம்பேத்கர் பற்றிய பொய்யை இன்னொரு பார்ப்ப னன் வந்து அம்பலப்படுத்துவான் என்று நாம் காத்தி ருந்தால், நாம் ஏமாந்துதான் போவோம். காரணம் பார்ப்பனர்கள் நமக்கு உதவி செய்வது போல நடிக்க வருவார்களே தவிர, நாம் தன்னெழுச்சியாக உயர நம் பூர்விகத்தையோ; நம் களப்போராளி அம்பேத்கர் பற் றியோ நாம் அறிந்து கொள்ள இடம் தரமாட்டார்கள். இயன்றவரை நம் களப்போராளிகளை இருட்ட டிப்போ அல்லது வரலாற்றை திரித்தோதான் பதிவு செய்வார்கள்.

எனவே அம்பேத்கர் என்ற போராளியின் உண்மை வரலாற்றை பதிவு செய்ய வேண்டுவது ஆதிக்குடிகளின் கடமையாகிறது. அம்பேத்கர் பிறந்த ஊர் அம்பா வாடே என்ற கிராமப் பகுதியாகும். இந்தப் பகுதியில் பிறந்ததால், பள்ளியில் தன்னுடைய பெயரை பீமா ராவ் அம்பா வடேகர் என்று நமது அம்பேத்கர் வைத்



படிப்பகம்

www.padippakam.com

துக் கொண்டார். இதற்கான மூலக்காரணம் நமது தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்து பள்ளி ஆசிரியராகவும், குத்துச் சண்டை ஆசிரியராகவும் விளங்கிய தாதா கேலுஸ்கர் ஆவர். இவர் நமது பீமாராவ் ராம்ஜிக்கு இளமைக்கால ஆசிரியர் மட்டுமல்லாமல் அவரது தந்தை ராம்ஜி சக்பால்-க்கு குடும்ப நண்பரும் கூட. நமது அம்பேத்கர் இளமைக்காலத்தில் இவரிடமிருந்து கல்வியைக் கற்றுக் கொண்டதுடன், குத்துச் சண்டையையும் சேர்த்தே கற்றுக் கொண்டார்.

தன்னுடைய மெட்ரிகுலேசன் தேர்ச்சிக்குப் பிறகு நமது பீமாராவ் ராம்ஜி தன்னுடைய பெயரை பீம்ராஜ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றி வைத்துக் கொண்டார். இதை தாதா கேலுஸ்கர் பள்ளி வழக்கப்படி உறுதி செய்தார். அம்பாவடேவைச் சார்ந்தவர் என்ற பொருள்படவே அம்பேத்கர் என்ற சொல் உருவாக்கம் பெற்றது. இதுபோல நமது தமிழகத்திலும் ஊர்ப் பெயரை முன்வைத்து பெயரிட்டுக்கொள்ளும் வழக்கம் உள்ளதை நாம் அறிவோம்.

பூவையார், அனகையார், மதுராந்தகத்தார், ஆர்க்காட்டார் என்பன போன்ற பெயரிடுதல்களை இதற்கு சான்றாகக் குறிப்பிடலாம். ஒரு வாதத்திற்காக, அம்பேத்கர் என்ற பெயரில் ஒரு பார்ப்பனர் வாழ்ந்ததாகக் கருதினால் அதன் தொடர்ச்சியாக நம்முன் கீழ்கண்ட வினாக்கள் தோன்றுகின்றன.

1. சேஷாத்திரி, மாலாத்திரி போன்ற பெயர்கள் பார்ப்பனப் பெயர்கள் இந்த சேஷாத்ரி என்ற பெயரில் இந்திய அளவில் பல பார்ப்பனர்கள் உள்ளதை நாம் காண்கிறோம். அதுபோல அம்பேத்கர் என்பது ஒரு பார்ப்பனப் பெயர் என்றால், அதே பெயரில் வேறொரு பார்ப்பனர் கூட காணவில்லையே. அது ஏன்?

2. காந்தி, நேருவின் வாரிசுகள் இன்றும் நம்முடன் பெயரளவில் உள்ளதுபோல, அம்பேத்கரின் (பார்ப்பன) வாரிசுகள் இன்று ஏன் எவரும் காணப்படவில்லை? அப்படி இருந்திருந்தால், தலித் மக்களின் தலைவரையே உருவாக்கியது எங்கள் தந்தைதான் என்று மார்தட்டி வரும் வாரிசுகள் இன்று செய்யும் கோரிக்கைகள் பலமாகவே இருக்காதா?

3. அம்பேத்கர் தன்னுடைய சிறு நண்பர்களைக் கூட தன்னுடைய கட்டுரைகளில் குறிப்பிடுகிறார். தன்னுடைய பல நூல்களை தனக்கு உதவியவர்களின் பெயருக்கு அர்ப்பணிக்கிறார். உண்மையிலே அம்பேத்கர் என்றொரு பார்ப்பனர் நமது பீம்ராவ் ராம்ஜிக்கு உதவியிருந்தால், ஏன் அதுபோல ஒரு நூலும் அம்பேத்கருக்கு (பார்ப்பனர்) நினைவுகூறப்படவில்லை!

4. அம்பேத்கர் மேற்கத்திய கலாச்சாரத்தில் பல ஆண்டுகள் உயர்கல்வி பயின்றவர். மேற்கத்திய கலாச்சாரம் பதிவுகளில் மிகுந்த கவனம் செலுத்தும் கலாச்சாரம் என்பதை உலகறியும். இதில் நம்பிக்கை உள்ள அம்பேத்கர், உண்மையிலேயே தனக்கு ஒரு பார்ப்பனர் உதவியிருந்ததால் அவரது பெயரை பதிவு செய்யாமல் இருந்திருப்பாரா?

5. அம்பேத்கர் தான் வாழுங்காலத்தில் பார்ப்பன, பணியாக்களுடன் முழு அளவில் முரண்பட்டு தன் மக்களுக்கான அரசியலை நடத்தினார். இதில் ஒட்டு மொத்த பிராமண வர்க்கமும் அதிருப்தி அடைந்திருந்தது. அவர்கள் அம்பேத்கரை எதிர்க்கும் பொருட்டு, எங்கேனும் அம்பேத்கர் பிராமண ஆசிரியரால் பெயரிடப்பட்டவர் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

6. காந்தி, நேரு, அம்பேத்கரை விமர்சனம் செய்யும் போது கூட அம்பேத்கர் பார்ப்பனரின் பெயரால் அடையாளப்படுத்தப்படுகிறார் என்று குறிப்பிடவில்லை.

7. எல்லாவற்றிற்கும் மேலாக, பத்திக்ரிகைகள் உண்மையிலேயே அம்பேத்கர் என்றொரு பார்ப்பனர் வாழ்ந்திருந்தால், அவரின் புகைப்படத்தை வரைந்தாவது வெளியிட்டு - பார்ப்பன அதிகாரம் கொண்டாடியிருக்கும்.

இவையெல்லாம் அம்பேத்கர் உயிருடன் இருந்த போது நடந்திடவில்லை. அவர் மறைந்தவுடன் பார்ப்பன சதி தொடருகிறது. இதை அம்பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு ஆதிக்குடியின் கடமையாகிறது என்பதை நாம் உணரவேண்டும்.

நான் அடுத்ததாக திரு. மெயில் முனுசாமி பற்றி குறிப்பிட்டாக வேண்டும். இவர் சென்னை சேத்துப்பட்டில் வசித்து வந்தவர். சேத்துப்பட்டில் மக்கள் ஊழியர் மன்றம் ஒன்று உள்ளது. இதில் Youth General Knowledge Association (YGKA) என்ற அமைப்பினர் தங்களது ஆண்டு நிகழ்வை நடத்தினர். நானும் அதில் ஒரு உறுப்பினர் என்பதால் நிகழ்வை வாழ்த்திப் பேசச் சொன்னார்கள். இயல்பாகவே மேடை அச்சம் இருந்ததால், எழுதிவைத்து இரண்டு வரி பேசினேன். நான் அம்பேத்கரைப் பார்த்ததில்லை. அவர் மாபெரும் போராளி எனத் தொடர்ந்தேன். உடனே மெயில் முனுசாமி மைக்கை என்னிடமிருந்து பறித்தார்.

நான் அம்பேத்கரைப் பார்த்திருக்கிறேன். இதே சேத்துப்பட்டிற்கு, இதே மக்கள் ஊழியர் மன்றத்திற்கு அழைத்து வந்திருக்கிறேன். அப்பொழுது எடுத்த புகைப்படம் கூட என்னுடைய வீட்டில் உள்ளது என்றார். நிகழ்வு முடிந்ததும் அவருடைய வீட்டிற்கு நானும், சமூக உணர்வில் மிகுந்த நம்பிக்கையுள்ள என் நண்பர் திரு. அருள்மணி அரசும் சென்றோம். மிக அரிய புகைப்படங்கள், பத்திரிக்கைச் செய்திகளை அவர் சேகரித்து வைத்திருந்தார்.

அவர் வீட்டின் முகப்பிலே முனுசாமி பறையர் என்ற கல்வெட்டு பதித்திருந்தார்.

அவர் மீனாம்பாள் சிவராஜ் மற்றும் தந்தை சிவராஜுடன் அம்பேத்கரை சந்தித்து SC பற்றி நடந்த உரையாடலை எங்களிடம் பகிர்ந்து கொண்டார். இந்த அரிய விவரம் வரும் இதழில்.



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் முகம்

கடைசியாய் காளப்பட்டி என்னும் விழி.பா. இதயவேந்தனின் கவிதை ஒரு தலித்தின் நியாயமான கோபம். ஒவ்வொரு வரியும் வெடி. காளப்பட்டி நிகழ்வு கடைசியாகவே இருக்கட்டும். கும்பகோணம் குழந்தைகள் கருகியது குறித்தான கவிதைகள் நெஞ்சைச் சுட்டன. ஆலயம் 'வெண்மணியையும் குடந்தையையும்' ஒப்பிட்டு எழுதியது பாராட்டத்தக்கது. கல்விக்காகவோ கூலிக்காகவோ எரிக்கப்பட்டது உயிர்கள் ஆயிற்றே. ஆனால் பிஞ்சுகள் பரிதாபத்துக்குரியவை. ஓர் ஓவியனின் முழு பரிமாணமும் வெளிப்படுமிடம் கண்காட்சியே. ஓவியர் சந்ருவின் ஓவியங்களை காட்சிப்படுத்தி பேசச் செய்த புதிய கோடாங்கியின் செயல் போற்றத்தக்கது. அவ்விதழின் கலந்தாய்வுக் கூட்ட ஆலோசனைகள் சரி. முடிவு? என்ன எடுக்கப்பட்டது என எழுதவில்லையே! டாக்டர் கே.ஏ. குணசேகரனின் 'வேய்ந்திருக்கும் கூரைகளும் வெந்து மடிந்தோர் குரல்களும்' சிந்தனைக்குரிய கட்டுரை. குழந்தைகளை காப்பாற்ற பள்ளியின் கூரைகளை அகற்றுவது நல்ல முயற்சி. சேரியில் வாழும் குடிசைவாசிகளுக்கு என்ன செய்யப் போகிறது அரசு? சமீபத்தில் திருச்சியில் 50-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்தன. ஆகஸ்ட் இதழில் ஒரு சிறுகதையும் இல்லாதது வெறுமையாக உள்ளது.

பொன். குமார், சேலம்.

'புதிய கோடாங்கி' தவறாமல் படிக்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்கான உறுதியான குரலாகவும், அதே சமயத்தில், சமூக நீதி, சமுதாய முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள, சகல சக்திகளையும் ஒன்று திரட்ட முயலும் மாத இதழாகவும் இவ்விதழ் திகழ்கிறது. திறந்த மனத்துடன் விவாதங்களை அனுமதிக்கிறது. புரட்சிகர மாற்றங்களைக் கொணரும் சிந்தனைப் பலகணியாகவும் விளங்குகிறது. இதுவரை தனக்குக் கிடைத்திருக்கும் அனுபவங்களிலிருந்து, தேவையான படிப்பினைகளையும், தெளிவையும் பெற்றுக்கொண்டு, முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது; வறட்டுத்தனம் (Dogmatism), மேட்டுக்குடித்தனம் (Elitism), குறுங்குழுவாதம் (Sectarianism) எனும்நோய்களுக்கு இரையாகாமல், புதிய கோடாங்கிமென் மேலும் முன்னேற என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்! ஆகஸ்ட் இதழ் தலையங்கத்தின் கடைசிப் பாராவின் 4 வரிகளும் மிக முக்கியமானவை. கூலி விவசாயிகள், சிறு உழவர்கள் இவர்கள் பிரச்சினைகளை முதன்மைப்படுத்த வேண்டும் எனும் கொள்கையும், செயல்பாடும், திட்ட நிறைவேற்றமும் இன்று மிக மிகத் தேவை.

தி.க.சி., நெல்லை.

புதிய கோடாங்கியின் ஜூன் மாத இதழில் வெளியான தேவதேவன் கவிதை நூல் 'விடிந்தும் விடியாப் பொழுது' கிரேஸ் பிள்ளையின் மதிப்புரை - 'நவராத்திரி கொலு' கவிதை குறித்த அவரின் அவதானம் மிகக் கூர்மையானதாகும். இப்போது அக்கவிதையினை நான் திருத்திக் கொண்டுள்ளேன். இனி அது அச்சாகும் சந்தர்ப்பத்தில் திருந்திய பிரதியாகவே வெளிவரும். அவருக்கு எனது அன்பையும் பகிர்வையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

- பிச்சு, தூத்துக்குடி.

ஆகஸ்ட் தலையங்கம் படித்தேன். ஒடுக்கப்பட்டோருக்கான நாளிதழ், தொலைக்காட்சி மிக அவசியமானவை. பார்ப்பன இயக்கங்கள், திராவிட இயக்கங்கள், இடதுசாரி இயக்கங்கள் என நால்வகை பிரித்தது ஆய்வு முயற்சியாகும்.

ஒவ்வொரு இயக்கத்தின், உலகத்தின் (LOBBY) இருப்புக்கும், வெளிப்பாட்டுக்கும், பிரகாசத்துக்கும் மிகச் சரியான அறிவுப் பின்புலம் அவசியம். புரவலர் பங்களிப்பும் கூடுதல் வலிமையாகும்.

"என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன தருவாய்" என்ற அற்ப மனோபாவம் மிக ஆபத்தானது; அருவெறுப்பானது, அலட்சியமானது.

"நீ அவல் கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன். இருவரும் சேர்ந்து ஊதி ஊதி சாப்பிடலாம்" என்று சொன்னால் நீண்ட காலம் யாரும் சகித்துக் கொள்ளமாட்டார்கள். சுயநல, சுரண்டல் பிம்பமாகவே இது கவனத்தில் கொள்ளப்படும். பொதுஜன எதிர் கருத்தாகவே இது அமையும்.

நரசிம்மராவ் செய்த மகத்தான காரியம், இன்று தனியார் சேனல்கள் பெருகியுள்ளன., முன்பெல்லாம் வீணை, கர்நாடக இசை என ஒரு சிறு குழுவினரின் பரம்பரைப் பீடமாக கருதப்பட்டு இயங்கி வந்த மின்னியல் ஊடகங்கள் இன்று தள விரிவாக்கம் கண்டுள்ளதை மறுக்க முடியாது. ஒவ்வொரு குழுவும் ஆர்வம், வாய்ப்பு, பலம், தேவைக்கேற்றவாறு பயன்படுத்த முனைகின்றனர். இதனை தவிர்க்க இயலாது; கொச்சைப்படுத்தவும் கூடாது. ஜனநாயக உணர்வுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஊடகப் போட்டியும், குழுவினர்களிடையேயான போட்டியும் வலிமை சேர்ப்பதாகவும் கருதப்படுகிறது.

மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும். அதிகாரம் இருக்கும் வரை அதிகாரப் போட்டியும் இருந்தே தீரும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இன்று தலித்துகள் மிகச் சிறப்பாக எழுதுகின்றனர். தலித் எழுத்தாளர்களின் உதவியின்றி தமிழ்நாட்டில் எவரும் இனி இதழியல் நடத்தமுடியாது என்று பகிரங்கமாகவே சவால் விடப்படுகிறது.

நயமான, தரமான இதழியல் போக்கும் பரவலாக தென்படுகிறது. ஆய்வரங்கு, கருத்தரங்கு நிகழ்ச்சிகளுக்கும் பஞ்சமில்லை. சீரிய சிந்தனையாளர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது.

இதே போக்கில், இதே வேகத்தில் நாளிதழ் தொலைக்காட்சி முயற்சியும் தீவிரப்பட வேண்டும். அப்போதுதான் மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட கருத்தியல்புகள் வெளிச்சத்துக்கு வரும். பகிரங்கம் அதிகரிக்கும்.

எதிரியை திட்டுவதால், இகழ்வதால், குறைகாண்பதால் நிரந்தர பெரிய பலன் ஏற்படாது. சுயவலிமை பெருக துடிப்பாற்றல் வேண்டும். ஒடுக்கப்பட்ட இனம் தமக்கிடையேயான மூலாதாரம் மூளைபலம், மனித வளத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

மீடியா விவகாரத்தில் தாமதிக்கப்படும் ஒவ்வொரு வினாடியும், நிமிடமும், வாய்ப்பும் மிகப்பெரும் இழப்பாகவே முடியும். தாமதம் வளர்ச்சியை தராது. கீழ்வெண்மணி, பாப்பாரப்பட்டி, திண்ணியம், காளப்பட்டி மீண்டும் தொடர்கதையாகும்.

முதல் கட்டமாக, துவக்கமாக ஒரு மணி, இரண்டு மணி நேர நிகழ்ச்சிகளை தினமும் ஒளிபரப்ப கட்டமைப்பு ஏற்பாடு அவசியம். 50 ஆண்டுகளாக இட ஒதுக்கீட்டை நல்ல முறையிலிருந்து ருசித்து அறுவடை செய்தவர்களை (CREAMY LAYERS) இனம்கண்டு முதலில் வள்ளல்களாக (DONORS) மாற்ற வேண்டும். சுயபங்களிப்பே நிரந்தர வளம் சேர்க்கும்.

இப்போதைக்கு நான்கு அணி மிகவும் குறைச்சல் தான். 40 அணிகள் உருவாகட்டும். பாக்கெட்டில் உள்ள தமது சொந்த சில்லறையுடன் அணி உருவாகட்டும். தாராள சுய உழைப்பு, நிபந்தனையற்ற சுயமூலதனம், வீழ்ச்சியடையாத சுய ஓட்டம் தேவை. இது காலத்தின் நிர்ப்பந்தம். இரவல் உழைப்பு, இரவல் வெளிச்சம் 21-ஆம் நூற்றாண்டில் சாத்தியமே இல்லை. கடல் எதிரில் விரிந்து கிடக்கிறது. மீன்களுக்கும் பஞ்சமில்லை. வேண்டிய அளவு மீன் பிடிக்க என்ன தடை?

A.M. ரசூல் மொஹிதீன், சென்னை-93.

# நிலா முற்ற வீடு

■ எம். சிவகுமார்

ரிக்ஷா மிதித்த
உழைப்பும் சாராயமும்
சமம் செய்வார் அப்பா
மிஞ்சியதில்
கஞ்சி காய்ச்சிவோம்.
நடைப் பாதையில்
தெருபாடமெழுதி
ஊதக் காத்தில் உடலதிர தூங்கி
கார் மறைவில் குளித்து
துணிமாற்றி
கார்கண்ணாடி முன் தலைகோதி
பூவித்த காசில்
பஸ்ஸில் போயி படித்து வர
பாரீஸ் கடந்து என்வீடு
உனது வீட்டிற்கு போவோம்
கேட்கும் தோழிக்கு
எதைக்காட்ட வீடென்று?

நிகழ்கால போதாமையும்
எதிர்கால தேடலும்
கனமாய் / கனவாய் நகர்கிறது
கோபக்கனல் மனதை கவ்வ
இறுகிய முகத்தொடு
வெற்றுப்பார்வை நீள்கிறது.
சமூக சல்லாபங்கள் மனதை நெருட
செய்ததை செய்ய
மறுத்திடும் மனதால்
வெறுத்து சுருங்கும்
நட்பு வட்டம்
பேச மறுக்கும் மனம்
உதடு விலகலில்
கனலாய் தெரிக்கும் வார்த்தைகள்
தோழர்கள் சிரிக்க சிரிக்கிறேன்
பற்கள் மட்டும் தெரிகிறது.
சிரிக்க மகிழ்ந்திருப்பாயே
அம்மா
மீண்டும் சிரிக்க கற்றுக்கொடு.



படிப்பகம்

www.padippakam.com

# சாட்சி வைத்த கொலைக்கயிறு

நூல் மதிப்புரை

■ பொன். குமார்

ஆசிரியை : நா. சுப்புலட்சுமி
வெளியீடு : யாழினி, காஞ்சி
விலை : ரூ. 40

இருள் சூழ்ந்த பொழுதுகளில் எழும் கவிதை ஒன்று உண்டா? உண்டு என்கிறார் பெத்ரோ பிரெக்ட். அவ்வாறு எழுதப்படும் கவிதையே எந்நாளும் பேசப்படும். கவிதை வரலாற்றை ஆய்வு செய்யும் வேளை இருள் சூழ்ந்த பொழுதுகளில் எழுதிய கவிதைகளை சான்றுகளாகக் காட்ட இயலும். இவற்றுக்கு சாட்சியாக அண்மையில் வந்துள்ள தொகுப்பு 'சாட்சி வைத்த கொலைக்கயிறு.' எழுதியவர் கவிஞர் நா. சுப்புலட்சுமி. இவர் சிறுகதையாளரும் கூட.

சமூகத்தின் மிகக் கொடிய நோய் வரதட்சணை. இதுவொரு தீராத வியாதியாகும். வரதட்சணை குறித்து பாடாத கவிஞரேயில்லை. கவிஞர் நா. சுப்புலட்சுமியும் விதிவிலக்கல்ல.

"படித்தவன் லட்சியவாதியென்று
லட்சத்திற்கு வாங்கிவிட்டு மிச்சமும்
வரவில்லையென்று, கதவடைத்து
நெருப்பில் உடல் மூடி வேக வைக்கும்போது
கழுத்தில் சுற்றியது பொன் கயிறல்ல
சாட்சி வைத்த கொலைக் கயிறெனப் புரியும்"

என்கிறார். 'தாலி' என ஒற்றை வார்த்தையில் சொல்லியிருக்கலாம். ஆனால் அதன் பயங்கரத்தை ஒற்றை வரியில் விளக்கியுள்ளார்.

"விளக்கு பார்த்ததும்
துக்க சோறு, வயிறு நிறைய
சம்பந்தி சோற்றுடன் பருப்பும் சோறும்.
மனைவியை இழந்தவன்
மணமகனாக"

என கொந்தளித்து வஞ்சிக்கப்பட்ட பெண்களுக்காக வக்காலத்து வாங்கிய கவிஞர், தவறு செய்யும் பெண்களை கண்டிக்கவும் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது."

"வியர்த்து கிடக்கும் சமூகத்துக்கு விசிறியதால் குப்பைத் தொட்டியில் உயிரை வீசும் பிணமானாள்"

என கண்டித்து அவ்வாறான பெண்களை அடையாளம் காட்டியுள்ளார்.

"பாலியல் கொடுமையில்
உடலுடன் உள்ளமும் எரிந்த
என் உயிர் பெண்களுக்கு" 'சமர்ப்பணம்' செய்திருப்பதன் மூலம் தான் ஒரு பெண்ணியவாதி என தன்னை 'அடையாளம்' காட்டிக் கொண்டு உள்ளார் கவிஞர்.

தொகுப்பு நெடுக ஆங்காங்கே தன் தாய்மை உணர்வையும் வெளிப்படுத்தியுள்ளார். 'ஆசை' என்னும் கவிதையில்

"நான்
அம்மாவாக இருக்க
ஆசைப்படுகிறேன்" என்றவர் 'நினைவுகள்' இல்

"ஜன்னலைப் பிடித்தபடி கதையாய் சொல்கிறேன்
மகனுக்கு
எனதெல்லாம் எனதில்லை"யென்று கூறியுள்ளார்.

'அண்ணாவிற்கு' எழுதிய வரிகள் ஒவ்வொன்றும் எரிமலையாய் வெடிக்கிறது.

"கருப்பு, சிவப்பு வெளுத்து
காவியான கதையேன்?
நின் மீது போட்ட மாலை
பாபர் மசூதியில் நாமமாய்
விழுந்தேன்?" என வினவி சிந்தனையைச் சீண்டியுள்ளார்.

"கருத்த கனி சிவப்பாய் மாற
நீ இன்னுமொரு
நூற்றாண்டு இல்லையே" என வருந்தி 'பெரியாரே பெரியார்' என 'பெரியார்' குறித்து பாடியுள்ளார். இது தவிர "வடக்கே பீமாராவ் தெற்கே ஈ.வே.ரா. மறந்ததால் திண்ணியம், கவுண்டம்பட்டிகள் விளைகின்றன." என வருந்தியுள்ளார்.

"தாமிரபரணி எரிந்த போது
தாயுடன் குழந்தையும்
இன்முக மாறா இளைஞனும்
தப்பவில்லை" என்பதை 'தண்ணீர் எரிகிறது' என்னும் கவிதையாக்கியுள்ளார். இது வாசிக்கும் போது நெஞ்சே எரிகிறது.

"சாட்சி வைத்த கொலைக் கயிறு" இல் நிறைய கவிதைகள் இருப்பது பலம் என்றால் நிறைவாய் இல்லையென்பது பலவீனம். கவிதைகளை விட கவிதைகளுக்காய் எழுதப்பட்ட கவிஞரின் முன்னுரை வெகு சிறப்பு. இத்தொகுப்பில் அகம் குறித்தும் புறம் குறித்தும் கவிதை இயற்றி உள்ளார். முரண்பாடுகளை களைந்து சில கவிதைகளை நீக்கி இத்தொகுப்பு உருவாக்கப் பெற்றிருந்தால் உன்னதம் பெற்றிருக்கும். கவிஞரின் கவிதைகள் ஒருமுகத் தன்மை வாய்ந்தவை. எனினும் மக்களுக்கான கவிதைகள். கவிதைக்கு இரண்டு குரல்கள். ஒன்று உரத்தது. இரண்டு மெல்லியது. இத்தொகுப்பில் இரண்டு குரல்களும் ஒலிக்கின்றன.

'சாட்சி வைத்த கொலைக் கயிறு' இறுக்கம் சற்றே குறைவு.

Published, Printed and owned by Audrey Jannet Joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41. Printed at Sri Lakshmi Printers, 20, Big Street, Anakaputhur. - 600 070. Editor : AUDREY JANNET JOSEPJH

படிப்பகம்

www.padippakam.com





அயோடின் கலந்த

# அரசு உப்பு

IODISED

# ARASU SALT

அயோடின் கலந்த உப்பு!
அறிவுத் திறனை வளர்க்கும் உப்பு!

- முன் கழுத்துக் கழலையிலிருந்து காக்கவும்!
- கருச்சிதைவைத் தடுக்கவும்!
- கருவிலுள்ள சிசுவின் மூளை வளர்ச்சிக்கும்!
- குழந்தைகளின் அறிவுதிறனை வளர்க்கவும்!
- உடல் மற்றும் மனவளர்ச்சிக்கும் உதவும்!
- அயோடின் கலந்த உப்பை உபயோகிப்பீர்!




தயாரிப்பாளர்

தமிழ்நாடு உப்பு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
எல்.எல்.ஏ. கட்டிடம், 735, அண்ணாசாலை, சென்னை - 600 002.
தீண்டாமை ஒழிக! மத ஒற்றுமை ஓங்குக!


Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்